280

T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: LXVII No: 3

April 26 1984

V211,31 N84
N84.67-3;1
136268

2455/ஆ31/85

வெளியீடு 18-12-84]

[Issued 18-12-84

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
11 A...
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் ... 8

2803

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 26, 1984 - தொகுதி LXVII எண் 3

Thursday, the 26th April 1984 - Volume LXVII No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George.
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

V2:1.31 N84
N84.57-3;1
136268
சென்னை-600 008

## உள்ளடக்கம்.

26—4—1984


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 547—570 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 571—630 |
| 2 தகவல் கோரல்— | |
| திருச்சி கரூர் மில் தொழிலாளர்களது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவது .. | 631—633 |
| 3 உரிமைப் பிரச்சினை— | |
| தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது .. | 633—640 |
| 4 கவன ஈர்ப்பு— | |
| சிங்காநல்லூர் ஜனார்த்தனா மில் மூடப்பெற்றுள்ளது .. .. .. .. | 640—645 |
| 5 வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி) | 645—717 |
| (அ) கோரிக்கை எண் 7—மாநில சட்ட மன்றம் .. .. | |
| (ஆ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள் .. | |
| (இ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர்; அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | |
| (ஈ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. | |
| (உ) கோரிக்கை எண் 43—பல்வகை .. | |
| (ஊ) கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு .. .. | |
| (எ) கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. | 645—650 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் .. | 699—714 |
| திரு. அ. ரகுமான்கான் .. .. .. | 651—661 |
| திரு. ஏ. சி. சண்முகம் .. .. .. | 662—671 |
| திரு. கு. ரமணி .. .. .. | 672—683 |
| திரு. எம். ஆறுமுகம் .. .. .. | 684—688 |
| திரு. உ. சுப்பிரமணியன் .. .. .. | 688—699 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 6 | அறிவிப்பு—<br>நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1984 .. | 717 |
| 7 | அரசினர் சட்டமுன்வடிவு—<br>நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1984 .. | 717 |
| 8 | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 717—719 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

**1984, ஏப்ரல் 26, வியாழக்கிழமை.**

**சித்திரை 14, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு-2015.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

சொல்லும்போது கேட்டவரைத் தன்வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**வெள்ளலூர் பேரூராட்சிப் பகுதிக்கான குடிநீர்த் திட்டம்**

654—(*வினா எண் 17483) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அருகிலுள்ள வெள்ளலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீருக்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இப்பகுதிக்கு சிறுவாணி குடிநீர் வழங்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) இல்லை. ஆனால் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படவுள்ள கூட்டுக்குடிநீர் திட்டத்தின்கீழ் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் இப்பகுதிக்கு வழங்கப்படும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியோடு ஒட்டியிருக்கின்ற இந்த வெள்ளலூர் பேரூராட்சியில் சுமார் 15 ஆயிரம் என்ற அளவில் மக்கள் தொகை இருக்கின்றது. இவ்வளவு பெரிய பேரூராட்சியாக இருக்கின்ற இதற்கு எந்தக் குடிநீர் ஆதாரமும் இல்லாமல் மிக்க கஷ்டமான சூழ்நிலை இருந்துவருகிறது.

எனவே உலக வங்கி உதவியோடு நிறைவேற்றப்படுகின்ற திட்டம் வருகின்ற வரை சிறுவாணியிலிருந்து குறைந்தபட்சக் குடிநீர் தேவைக்கான நீரையாவது வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலித்து அங்கிருந்தும் வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் இன்னும் அங்கே மக்கள்தொகை 15 ஆயிரத்தை எட்டவில்லை. 13,838 பேர்தான் மக்கள்தொகை என்ற அளவிலே இருக்கிறார்கள். எனவே இதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 15 ஆயிரத்திற்குப் போகவேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

150 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட இருக்கின்ற உலக வங்கித் திட்டத்தின் மூலம் மதுரை, கோவை, மற்றும் சேலம் ஆகிய மூன்று நகரங்களுக்கும் குடிநீர் திட்டத்தை அபிவிருத்தி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. தவிர மேலும் 75 நகரங்கள் மற்றும் சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர மேற்படி திட்டத்தில் 14 நகராட்சிகளுக்குக் குறைந்த மதிப்பீட்டு அப்புறவுத் திட்டங்களும் இதில் அடங்கியுள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வெள்ளலூர் பேரூராட்சிக்குப் பவானி ஆற்றிலிருந்து அதாவது கேரளா-தமிழ்நாடு எல்லையின் அருகே இருந்து தண்ணீர் எடுக்கப்படும். ஆகவே சிறுவாணியிலிருந்து கொடுப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று கருதுகிறேன். எனவே உலக வங்கி உதவியோடு நிறைவேற்றப்படுகின்ற திட்டத்தில் சோர்ஸ் வேறு இடமாக இருக்கிறது. அதாவது பவானி ஆற்றிலிருந்து, கேரளா-தமிழ்நாடு எல்லை அருகே இருந்து தண்ணீர் எடுத்துக் கொடுக்கப்படும். எனவே அந்தத் திட்டத்தில் வெள்ளலூர் பேரூராட்சிக்கு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடையிலே ஏதாவது செய்ய முடியுமா என்றும் வேறு எங்கே இருந்தாவது தண்ணீர் கொடுக்க முடியுமா என்றும் கேட்கிறார்கள். குடிநீர் ஆதாரம் எங்கே இருக்கின்றது, மற்றும் அதற்கு என்ன செலவாகும் என்பன பற்றி எல்லாம் பரிசீலிக்கவேண்டும். அதைப்பற்றி கவனிக்கலாம்.

**திரு. மா. சின்னராசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு நிறைவேற்றப்படுகின்ற திட்டத்தைப் பொறுத்த வரையில் அது பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்கான அத்திக்கடவு குடிநீர்த் திட்டம். அந்தத் திட்டத்தில் இப்போது பல பஞ்சாயத்துக்கள் குடிநீர் வடிகால் வாரியத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றது.



2803



இந்தத் திட்டத்தின் பலனைப் பெறுவதற்கு வெள்ளலூர்ப் பஞ்சாயத்து ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றதா? மேட்டுப்பாளையத்திலிருந்து பல்லடம் வரை உள்ள பஞ்சாயத்துக்களில் இந்தத் திட்டத்தில் விடுபட்டுப் போன பஞ்சாயத்துக்களும் சேர்த்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். மதுரை, கோவை மற்றும் சேலம் ஆகிய மூன்று நகரங்களுக்கும் குடிநீர் திட்டத்தை அபிவிருத்தி செய்வதோடு மற்றும் 75 நகரங்களுக்கும் உண்டு என்று சொல்லியிருக்கிறேன். அதிலே வெள்ளலூர் பேரூராட்சியும் உண்டு என்றும் சொல்லி இருக்கிறேன். அந்தத் தகவலைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

### மரக்காணம் ஒன்றியம் வேங்கை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்

**655—(* வினா எண் 17764) திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மரக்காணம் ஒன்றியம் வேங்கை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன?

(ஆ) அது கட்டி முடிக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றுவதற்கு வெட்டப்பட்ட ஆழ்துளைக்கிணற்றில் போதிய குடிநீர் சுரக்கவில்லை.

(ஆ) மாற்று நீர் ஆதாரம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. அதற்கு பின் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டி குழாய்கள் பதிக்கும் பணி முடிக்கப்படும்.

### பாளையங்கோட்டை நகராட்சிக் குடிநீர் திட்டம்

**656—(* வினா எண் 19810) திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை நகராட்சிக் குடிநீர் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) இத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்:** (அ) பாளையங்கோட்டை நகராட்சிக் குடிநீர்த் திட்டத்திற்கு மதிப்பீட்டுத்தொகை ரூபாய் 67.58 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) இத் திட்டத்தின் அனைத்து வேலைகளும் முடிவடைந்து விட்டன.

**திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை நகராட்சிக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்து வேலைகளும் முடிவடைந்து விட்டன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் எப்போது அமலுக்கு வரும்? மதிப்பீட்டுத் தொகையான 67 லட்சம் ரூபாயில் அரசினுடைய பங்கு எவ்வளவு? பொது இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனில் வாங்கப்பட்ட கடன் எவ்வளவு? இப்படி கடன் வாங்கியதன் காரணமாக வீட்டு வரியை உயர்த்த வேண்டுமென்று நகராட்சியில் ஒரு நிலை இருக்கிறதே அதுபற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருத்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இப்போது அமலில் இருக்கிறது. இறுதியாக செலவான தொகை ரூபாய் 75.86 லட்சம் ஆகும். பொதுவாக இதற்குள்ள விதிமுறைகள்படி. இரண்டு பங்கு எல்.ஐ.சி யும் ஒரு பங்கு அரசும் கொடுக்கிறது. இதைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

**திரு. மு. அப்பாதுரை:** துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்திலிருந்து நெல்லையை மாநகராட்சியாக உயர்த்துவதற்கான அறிவிப்பு வந்திருக்கிறது. நான் நேற்றைய தினம் திருநெல்வேலிக்குச் சென்றிருந்தபோது இப்படி உருவாக்கக் கூடாது என்று போராட்டம் நடத்தி வால்—போஸ்ட்டர்கள் ஒட்டி இருக்கிறார்கள். அங்கு அப்படிப் பட்ட சூழ்நிலை இருக்கிறது. மேலப்பாளையம் நகராட்சிக்கும் ஒரு குடிநீர்த் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே மாநகராட்சியாக வருகிறபோது இந்தக் கடன்கள் மக்கள் மீது வரிச்சுமையாக உயருமாதலால் இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து இவைகளை ஒரே கடனாக மாற்றுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய கொள்கையைச் சொல்லி விட்டேன். அதற்கு மேலே தொகையை அரசு கொடுப்பதா என்பதையெல்லாம் உள்ளாட்சித் துறை முடிவெடுக்க வேண்டும்.

## சிவகாசிப் பகுதியில் தீப்பெட்டி, பட்டாசு தயாரிப்புத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் சிறுவர், சிறுமியர்

657—(*வினா எண் 21359) **திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தீப்பெட்டி, பட்டாசு தயாரிப்புத் தொழிலில் பெருமளவு சிறுவர், சிறுமியர் ஈடுபடுத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிலையை மாற்றி அக்குழந்தைகளுக்கு நல்வாழ்வு அமைத்துத் தர அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகாசி பகுதியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறார்கள் வேலையில் ஈடுபடுத்தப்படுவதை 1976 ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு கவனத்தில் கொண்டு தொழிற்சாலைகளில் சிறார்கள் ஈடுபடுத்தப்படுவதால் எழும் அனைத்துப் பிரச்சினைகளையும் ஆராய வருவாய் வாரியத்தின் முதுநிலை உறுப்பினர் திரு. அர்பன்சிங், இ.ஆ.ப. அவர்களைப் பணித்தது. அவரது பரிந்துரையின் பேரில் சிறார்கள் பணியில் அமர்த்தப்படுவதை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்த இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டு இயங்கி வருகிறது. சிறார்களை வெகு தொலைவிலிருந்து வேலைக்கு அழைத்து வருவதைத் தடுக்க தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் புதிய பிரிவுகளை சிவகாசி நகராட்சி எல்லையிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் ஆரம்பிப்பதற்கு உரிமம் வழங்கலாகாது என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைத் தொழிலாளர்களுக்கு கல்வி புகட்ட சிவகாசியில் 30 முறைசாராக்கல்வி மையங்களை அரசு ஆரம்பித்துள்ளது. மைய அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு மாநில ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டு குழந்தைத் தொழிலாளர்களுக்கு நன்மைகள் அளிப்பதுபற்றிப் பல பரிந்துரைகள் செய்து அவை மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 14 வயதுக்குக் குறைவாக

உள்ளவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்ற தொழிலாளர் நலச்சட்டப் பிரிவுகளை மீறுகின்ற நிர்வாகங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 15—7—1983 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள தீப்பெட்டி மற்றும் மத்தாப்பு தொழிலுக்கான மாற்றியமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய விகிதங்களின் படி வயது வந்தோருக்கும் சிறுவர்களுக்கும் ஒரே மாதிரியான சம்பள விகிதம் செயல்படுத்தப்படுகிறது. தொழிற்சாலைகள் ஆய்வகத்தைச் சார்ந்த ஒரு மருத்துவ அதிகாரி சிவகாசியில் சான்றளிக்கும் மருத்துவராகப் பணி புரிகிறார். சிறார்கள் சுரண்டப்படுவதைத் தடுக்க ஒரு துணைத் தலைமை தொழிற் சாலைகள் ஆய்வாளர் சிவகாசியில் பணிபுரிகிறார். இன்றைய சிறார் வேலை நிலை மற்றும் அதை சீர்படுத்துவது குறித்து அரசிற்கு பரிந்துரைகள் கூற முதுநிலை நிர்வாக அலுவலரும் நில சீர்திருத்த ஆணையருமான திரு. என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தொழிலாளர் மற்றும் சமூக நலத்துறை அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஜில்லா சிவகாசிப் பகுதியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் 14 வயதிற்கு கீழேயுள்ள சிறுவர், சிறுமியர்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை சம்பந்தமானது இந்தக் கேள்வி. அர்பன்சிங் கமிட்டியினுடைய பரிந்துரைப்படி சிறார்களை வேலைக்கு அமர்த்துவதைக் கட்டுப்படுத்த, நடவடிக்கைகளை எடுக்க இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. சிறார்களை வெகு தொலைவிலிருந்து வேலைக்கு அழைத்து வருவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. இதிலே அருகிலே வைத்து வேலை வாங்கலாம் என்று சொல்லப்படுகிறது. இது எப்படி பொருத்தமாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, அர்பன்சிங் கமிட்டியின் பரிந்துரைகளின்படி அமைச்சரவை எடுத்த முடிவை இங்கே படிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

(அ) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதன் தொடர்பான சட்டங்களின் விதிகளைக் கண்டிப்பான முறையிலே அமல்படுத்த வேண்டும் ;

(ஆ) தொழிற்சாலைகளில் நடைபெறும் வேலைகளை சிறுவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு மாற்றும் வகையில் வேலை கொட்டகைகளை அந்தந்த கிராமங்களிலே தொழில் அதிபர்களோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ ஏற்படுத்த உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1984 ஏப்ரல் 26]

(இ) சிறுவர்கள் பள்ளி செல்ல போதுமான ஊக்கங்கள் அளிக்கவும் இயன்றவரையில் வேலை செய்யும்போதே அந்த இடங்களிலே கல்வி கற்பிக்கவும் ஒரு விரிவான திட்டம் இயற்ற வேண்டும்.

(ஈ) தொழிலாளர்களின் சம்பாதிக்கும் திறமையை உயர்த்தும் வகையில் குறைந்த அளவு ஊதிய விகிதங்களை திருத்தியமைக்க வேண்டும். தொழிலாளர்களுடைய ஊதியங்கள் பெருகுமானால் அவர்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்பமாட்டார்கள் என்பதுதான் அதன் எண்ணம்.

(முற்பகல் 9-10)

(உ) தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை உறுதிப்படுத்தவும் மற்றும் சிறுவர்களை வேலையில் அமர்த்துவதில் ஏற்படும் பிரச்சினைகளைக் களைவதில் ஈடுபட்டுள்ள பல தரப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளை ஒருமுனைப்படுத்தவும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு, மற்றும் தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்படவேண்டும். இது அமைச்சரவையின் முடிவு.

14 வயதுக்குக் குறைவாக உள்ள சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது இப்போதுள்ள சட்டம். 14 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட நபர்களை நியமிப்பதைப் பொறுத்தவரையில், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 69-ல் சொல்லியுள்ளபடி இதற்கு என்று நியமிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் தகுதி சான்றிதழ் பெற்று, அவரை வேலைக்கு அமர்த்திக்கொள்ள, சட்டத்தின் பிரிவு 68 அனுமதிக்கிறது. அதாவது, 14 வயது முதல் 17 வயது முடிகிற வரை, அந்த மருத்துவர் அவர்களுடைய ஹெல்த் நன்றாக இருக்கிறது என்று சான்றிதழ் கொடுத்தால் தான் வேலைக்கு வைத்துக்கொள்ளலாம். அதுகூட பிலோ 14 வயது என்றால் முடியாது. இது ஒரு பெரிய—ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமானால்—டிக்லிஷ் ப்ராப்ளம்—இது ஒரு சுலபமான பிரச்சினை அல்ல. இதைப்பற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்கூட சொல்லி இருக்கிறார்கள். திடீரென்று இதை அடியோடு தடை செய்து விடமுடியாது.

அவ்வப்போது போய் பார்த்து விரட்டி, பிராசிகியூஷன் செய்து வேலைக்கு வைக்காதீர்கள் என்று மிரட்டி காரியங்களைச் செய்யலாம். அங்கே குழந்தைகள் போகாமல் இருப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யலாம். இந்த அறிக்கையைப் படிக்கிறபோதே கூட பார்த்து இருக்கலாம். குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கிறபோது, அடல்ட் அண்ட் சில்ரன், பெரியவர்

களுக்கும் சிறுவர்களுக்கும் ஒரே கூலியை நிர்ணயித்து இருக்கிறோம். அப்படி பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் ஒரே கூலியை நிர்ணயித்து இருப்பதால், சிறுவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளவேண்டும் என்று எண்ணம் வராது. ஏனென்றால் சிறுவர்களை வைத்து பெரியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலியைக் கொடுப்பது எதற்காக என்று எண்ணி, பெரியவர்களையே வைத்துக்கொள்வார்கள். இது ஒரு எய்ம் டிஸ்இன்செண்டிவ்.

அதேமாதிரி சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து இருப்பதன் காரணமாக இங்கே உணவு கிடைப்பதால், அதுவும் சத்தான உணவு கிடைப்பதால், வேலைக்குப் போகவேண்டும் என்று எண்ணம் இல்லாமல் போய்விடும். இப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

என்னுடைய தலைமையில் ஒரு குழு இயங்கி வருகிறது. நானும் கூட அந்த உறுப்பினர்களை எல்லாம் அழைத்து இதை எப்படி தடுக்கலாம், குழந்தைகளை வேலைக்கு வைப்பதை எப்படித் தடுக்கலாம் என்று பரிந்துரை செய்யலாம் என்று பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, அந்த வகையிலும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். நானே ஓரிரு தொழிற்சாலைகளுக்குச் சென்று, அங்கேயுள்ள தொழிலாளர்களை உங்கள் வயது என்ன என்று கேட்டேன். யாரைக் கேட்டாலும் 15, 16 என்று சொல்கிறார்களே தவிர 14-க்குக் கீழே உள்ள குழந்தைகள் யாரும் வேலை செய்வதாகச் சொல்லவில்லை. 13 வயது என்று யாரும் சொல்லவில்லை. எனவே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. எனவே குழந்தைகளுக்குச் சிரமம் இல்லாத அளவிலே ஒரே அடியாகக் கடுமையாக இல்லாமல் இருப்பதற்கு வழிவகைகளைச் செய்வதைப்பற்றி அரசு ஆலோசனை செய்து வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கமான பதிலை இங்கே தந்தார்கள். சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்ற வகையில் மதிய உணவு கொடுப்பதாகவும், சமமான ஊதியம் கொடுப்பதால் அவர்களை வேலைக்கு அமர்த்தமாட்டார்கள் என்றும் சொன்னார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, சிறுவர்களை வேலைக்கு அமர்த்தினால் 15 மணி நேரம் அவர்களை வேலை வாங்க வேண்டும் என்ற முறையில் அவர்கள் அதைச் செய்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதைப்போலவே, இந்த முறைசாராக் கல்வி நிலையங்களில் பயிலுகின்றவர்களுக்கு மதிய உணவு போடுவதாகச் சொன்னார்கள், அந்த மதிய உணவு பெறுகின்ற மாணவர்களில்





யாரேனும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்களா, அந்த விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன். மேலும், மத்திய அரசாங்கம் இது குறித்து அளித்துள்ள பரிந்துரைகள் என்னென்ன? அவைகளையும் அமைச்சர் அவர்கள் விளக்கினால் நல்லது. அதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரையில் குஜராத் மாநில தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் என்னையும் உறுப்பினராகக் கொண்டு ஒரு சப்-கமிட்டி நியமிக்கப்பட்டு இருக்கிறது. குறைந்த பட்ச வயது எவ்வளவு என்று வைக்கலாம், அதற்குக் கீழே வயதுள்ளவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்பதையெல்லாம் நிர்ணயிக்க அந்தக் குழு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. அந்தக் குழு விரைவில் கூட இருக்கிறது. நேற்றைக்கு முன் தினம் அந்தக் கூட்டம் நடைபெற இருந்தது. சட்டமன்றம் நடக்கிற காரணத்தால் என்னால் வர இயலாது என்று எழுதி இருக்கிறேன். அது விரைவில் கூடும். அந்த வகையில் மத்திய அரசும் இதில் செயல்பட்டு வருகிறது. எனக்குத் தெரிந்த வரையில், எனக்குக் கிடைத்த தகவல்படி, டெல்லியில் ஹோட்டல்கள், ரெஸ்டாரெண்டுகளில் 60,000 குழந்தைகள் வேலை செய்கின்றனர் என்றும், கல்கத்தாவில் சுமார் 40,000 முதல் 50,000 வரை வேலைசெய்கிறார்கள் என்றும், சிவகாசியில் குழந்தைகள் வேலை செய்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் குறைந்தபட்ச வயது இவ்வளவு இருக்க வேண்டுமென்று நிர்ணயித்து, அறிவித்திருக்கிறோம். அதற்குக் கீழே உள்ளவர்களை வேலைக்கு அமர்த்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு ஆலோசனை அமைச்சரவையின் முன்னால் இருக்கிறது. இந்தப் பிரச்சனையில் கூடியவரையில் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் இருக்க அந்த பெற்றோர்களே பார்த்துக்கொள்ளுகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்வதிலே இந்த அரசு அக்கறையாக இருக்கிறது. இன்ஸ்பெக்ஷன் செய்கிற போது தவறுகள் நடந்திருந்தால் ப்ராசிக்யூஷன் செய்யப்படுகிறது. சட்டங்களை மீறி இருந்தாலும், 12, 13 வயது குழந்தைகளை வேலைக்கு அமர்த்தியிருந்தாலும் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குறைந்த வயது குழந்தைகளை வேலைக்கு வைத்திருந்ததன் காரணமாக எவ்வளவு பிராசிக்யூஷன் செய்தார்கள் என்ற கணக்குக் கூட என்னிடம் இருக்கிறது. பொதுவாக இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் சாமர்த்தியமாக (டெக்ஸ்டராஸ்) கையாள வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1984 எப்ரல் 26

**திரு. செ. சிவசாமி :** துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு சிவகாசிப் பகுதியிலே 14 வயதுக்குக் கீழே இருக்கிற குழந்தைகள் ஏராளமாக வேலை செய்கிறார்கள் என்ற பிரச்சினை வந்ததன் காரணமாக அர்பன்சிங் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டது பற்றியும் மற்றும் ஒரு நீண்ட பட்டியலையும் கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். 14 வயதுக்குக் குறைந்தவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று தொழிலாளர் நலச் சட்டத்தை மீறுகின்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் சொன்னார்கள். அப்படி எத்தனைக் கம்பெனிகள்மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, குழந்தைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக 1978-ல் 37, 1979-ல் 217, 1980-ல் 154, 1981-ல் 96, 1982-ல் 364, 1983 அக்டோபர் வரையில் 405 வழக்குகள். இது தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பொறுத்தது. அடுத்து, பட்டாசுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், 1978-ல் 6, 1979-ல் 6, 1980-ல் 33, 1981-ல் 31, 1982-ல் 27, 1983-ல் 18 வழக்குகள். வெறும் பிராசிக்யூஷன் மட்டும் இந்தக் குற்றத்தைத் தடுத்துவிடும் என்று தயவுசெய்து யாரும் நம்ப வேண்டாம். இப்படிப்பட்ட நேர்வுகளில் அவர்கள் அபராதத்தைக் (ஃபைன்) கட்டிவிட்டு வந்துவிடுவார்கள். 14 வயதுக்குக் கீழே உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது என்று ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தியாவில் இருக்கிற எல்லா அரசுகளும், மத்திய அரசு முதற்கொண்டு இதிலே முனைப்பாக சிந்தனை செய்துகொண்டிருக்கின்றன. உறுப்பினர்கள் அவ்வப்போது சொல்லுகின்ற கருத்துக்களை எல்லாம் ஆலோசனை செய்து வருகிறார்கள். என் தலைமையில் கூட ஒரு குழு அதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வப்போது கூடுகிறோம். கடைசியாக கூடிய கூட்டத்தில் குழு உறுப்பினர் களுடைய ஆலோசனைகளைக் கேட்டேன். அவர்கள் நாங்கள் ஆலோசனை செய்துகொண்டு வரவில்லை ; எழுதி அனுப்புகிறோம் என்று சொல்லியிருக் கிறார்கள். மீண்டும் கூடும்போது இப்போது இங்கே சொன்ன கருத்துக்களை யும் சேர்த்து பரிசீலனை செய்வோம்.

**திரு. என். வரதராஜன் :** துணைத் தலைவரவர்களே, இந்த சிறார்கள் உழைப்பைச் சுரண்டுவது பற்றி அமைச்சரவர்கள் சொன்ன விவரங்களில் சில விவரங்கள் முற்றிலும் முரணான கருத்துக்களாக இருக்கின்றன. விசாரணை என்று சொல்லும்போது 13 வயது, 12 வயது என்று யாரும் சொல்லவில்லை என்பது அமைச்சரவர்கள் சொல்லியதில் ஒன்று. இரண்டாவதாக சம கூலி கொடுத்தால் இந்த உழைப்பை அதிகமாகச் சுரண்டுவது தடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் ஏற்கெனவே வந்திருக்கிற பல ஆய்வுகளில்



1984 ஏப்ரல் 26]

பெரியவர்களைவிட சிறுவர்கள் ஐந்து மடங்கு உழைப்பை நல்க முடியும் என்று தெளிவாகியிருக்கிறது. ஆகவே, சம கூலி என்று சொன்னாலும் உழைப்பை சுரண்டும் வேலை நடந்துகொண்டுதான் இருக்கிறது. அடுத்தபடியாக, பெற்றோர்கள் சம்மதிக்கிறார்கள் என்ற பிரச்சனை எழவில்லை. இன்றைக்கு நம் நாட்டில் ஒருவன் தானே தற்கொலை செய்துகொள்ளக் கூட சட்டம் அனுமதிக்கவில்லை. ஆனால் இங்கே சிறுவர்களை படுகொலை செய்கின்ற சுரண்டல் நடக்கிறது. இந்தப் பிரச்சனை பற்றி ஆராய்வதற்காக அர்பான்சிங் குழு ஒன்று இருக்கிறது. முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு இருக்கிறது. அரிபாஸ்கர் தலைமையில் ஒரு குழு இருக்கிறது. இப்போது அமைச்சர் தலைமையிலும் ஒரு குழு இருக்கிறது. அப்படியெல்லாம் இருந்தாலும் இந்தப் பிரச்சனைக்கு தீர்வுகாண முடியவில்லை ; தடுக்க முடியவில்லை. இது ஒரு சமுதாய நலன் என்பதைக் கவனத்திற்கொண்டு அமைச்சர் தலைமையில் இருக்கிற குழுவில் மக்கள் பிரதிநிதிகள், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோர் நியமிக்கப்பட்டு, அவர்களை எல்லாம் நல்லமுறையில் கலந்தாலோசித்து, மாதம் இருமுறையாவது அந்தப் பகுதிக்குச் சென்று, இந்தக் குற்றத்தைத் தடுக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ? இப்படி சிறுவர்கள் உழைப்பு கொள்ளையடிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா ?

(மூற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய வித்தியாசம் மாண்புமிகு திரு. வரதராஜன் அவர்களுக்கும் இந்தியாவிலே இருக்கிற மற்றவர்களுக்கும். அதாவது சிறுவர்களைக் கொள்ளை அடிக்கிறது என்பது திரு. வரதராஜனுடைய அப்ரோச். இந்தியாவிலே இருக்கிற மற்ற யாருமே 'ரைட் ஆனரபிள் பிரைம் மினிஸ்டர்' கொள்ளை அடிக்கிறது என்று சொல்லவில்லை. சிறுவர்களை வேலையில் வைக்கிறார்கள். அதுதான் வித்தியாசம். கொள்ளை அடிக்கிறதும் அல்ல, அதைச் சுரண்டுவதும் அல்ல. குழந்தைகளை வேலைக்கு வைக்கிறார்கள். 14 வயதுக்குக் கீழுள்ள குழந்தைகள் வேலையில் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. 14-க்கும் 18-க்கும் இடையில் இருப்பவர்களை சர்ஜன்ஸ் சர்ட்டிபிகேட் பண்ணினால் வேலைக்கு வைக்கலாம் என்று இருக்கிறது. நாங்கள் போய் இன்ஸ்பெக்ட் பண்ணிப் பார்க்கிறோம். நாங்கள் போய் கேட்கிறபொழுது பிள்ளையே சொல்கிறது, எனக்கு 15 வயது, சர்ட்டிபிகேட் வாங்கியாயிற்று, என்று. நீ இங்கே இருக்க பிரியப்படுகிறாயா என்று கேட்டால் நன்றாக இருக்கிறது என்கிறது. உனக்குக் கொஞ்ச வயது என்று சொல்கிறார்களே என்று கேட்டால், அது பொய் என்று இப்படி

யெல்லாம் சொல்வதை நானே பெர்சனலாகப் போய் இன்ஸ்பெக்ட் பண்ணினேன். ஆகவேதான் மாண்புமிகு திரு. வரதராஜன் சொன்னதுபோல என் தலைமையிலே பல்வேறு இன்டரஸ்ட்ஸ் ரெப்ரசன்ட் பண்ணக்கூடிய ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு கூடியது. நீங்கள் திட்டங்கள் சொல்லுங்கள் என்று கேட்டபொழுது, நாங்கள் இப்பொழுது தயாராக வரவில்லை, மறுபடியும் பார்த்து அஜென்டா அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். அந்த அஜென்டாவும் வரட்டும், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தை எல்லாம் வைத்து எந்த அளவிற்கு அந்தக் குழந்தைகள் வேலைக்குச் செல்லாமல் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யலாம். குழந்தைகளைக் கொள்ளை அடிப்பது என்பது எல்லாம் அங்கு ஒன்றும் நடக்கவில்லை. வேலைக்குச் செல்லாமல் படிப்பது, மற்ற வேலைகளைக் கவனிப்பது என்ற அளவில், இந்தத் திப்பெட்டி, பட்டாசு தொழிற்சாலையில் போய் வேலை செய்யாமல் இருக்கின்ற முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம்.

**அப்பர் ஆளியாற்றிலிருந்து நெகமம், புளியம்பட்டி, ராசாக்கபாளையம் ஆகிய ஊர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்**

**658—(* வினா எண் 22339) திரு. கா. வே. கந்தசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அப்பர் ஆளியாற்றிலிருந்து நெகமம், புளியம்பட்டி, ராசாக்க பாளையம் ஆகிய ஊர்களுக்குக் குடிநீர் வடிகால் வாரியத்திற்குப் பணம் செலுத்தியும் செயற்குறிப்பு நிறைவேற்றப்படாமல் இருப்பதின் காரணம் என்ன ?

(ஆ) அதனை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) பெரியநெகமம் பேரூராட்சி இன்னும் ஆய்வுக்கட்டணம் செலுத்தாததால் குடிநீர்திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. ராசாக்கபாளையம் மற்றும் புளியம்பட்டி குடியிருப்புக்கள் தரம் 6-இல் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், குடிநீர் விநியோகம் அமுல்படுத்த இயலாது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெகமம், புளியம்பட்டி, ராசாக்கபாளையம் ஆகிய கிராமங்களில் அமைந்திருக்கிற மக்கள் தொகைக்கு ஏற்பக் குடிநீர் வசதி இப்பொழுது இல்லை





யென்ற காரணத்தினால் உறுப்பினர் திரு. கே. வி. கந்தசாமி அவர்கள் தொடர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள். ஆகவே, கிராமப்புறங்களில் தேவைப்படுகிற குடிநீர் திட்டமாக இருக்கிற காரணத்தால், ஆய்வுக் கட்டணத்தை வலியுறுத்தாமல் அரசே இந்தத் திட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கான உத்தரவை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய நெகமம் என்பது பேரூராட்சி, கிராமம் அல்ல. அதனால் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் வரவில்லை. அதில் மக்கள் தொகை 5,590. எனவே அவர்களுக்கு 1983-84-க்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட வேண்டிய முன்னுரிமை திட்டங்களில் பெரிய நெகமம் குடிநீர்த் திட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ரூ. 1.25 இலட்சம் செலவு செய்யக்கூடிய ஆய்வுப் பணி மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் விதிக்கப் பட்டது. பெரிய நெகமம் பேரூராட்சி செயல் அலுவலர் அந்த ஆய்வுத் தொகையைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். ஒரே சமயத்தில் முழுத் தொகையையும் மேற்கண்ட பேரூராட்சி செலுத்த இயலாததால் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. எனவே, ரூ. 1.25 இலட்சத்தை விரைவிலே கட்டும்படி மாண்புமிகு உறுப்பினர் ஏற்பாடு செய்யும்படி வேண்டிக் கொள்கிறேன்.

**வேதாரண்யம் உப்பு உற்பத்தியாளர் சங்கத்திற்கு லாரி வாங்குவதற்கான அரசின் நிதியுதவி**

**659—(* வினா எண் 19199) திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் உப்பு உற்பத்தியாளர் சங்கத்திற்கு லாரி வாங்கு வதற்கு அரசு பண உதவி செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அதுபோல் எத்தனை சங்கங்களுக்கு அரசு எவ்வளவு தொகை அளித்துள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(ஆ) ரூ. 2.08 இலட்சம்.

(இ) மேலும் இரண்டு சங்கங்களுக்கு ரூபாய் 5 இலட்சம் உதவியுள்ளது.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** தலைவர் அவர்களே, வேதாரண்யம் உப்பு உற்பத்தியாளர் சங்கத்திற்காக ஒரு லாரி வாங்குவதற்கு அனுமதி அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே ஒரு லாரி இருப்பது போதாது என்ற காரணத்தினாலே மேலும் ஒரு லாரி வாங்குவதற்கு அரசாங்கம் உதவி செய்யுமா? அதேபோல் அங்குள்ள காய்கறி கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு வண்டி வாங்குவதற்காக கடந்த பல ஆண்டுகளாக வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அதற்கும் அரசாங்கம் உதவி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, வேதாரண்யம் உப்பு உற்பத்தியாளர் சங்கத்திற்கு இரண்டாவது லாரி வாங்குவதற்காக அதுபற்றிய கோரிக்கை வருமானால் அதுபற்றி பரிசீலிக்கப்படும். அதேபோல் அங்குள்ள காய்கறி கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கேட்டால்—அதுவும் அரசாங்கத்திற்கு வந்திருக்குமானால் அதுபற்றி யோசிக்கலாம்.

### விசைத் தறிகளுக்கான உரிமம் வழங்கும் திட்டம்

**660—(* வினா எண் 21187) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் விசைத்தறிகளுக்கான உரிமம் வழங்குவதை மைய அரசு நிறுத்திவைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் உரிமம் கொடுக்கக் கோரி மாநில அரசு வற்புறுத்தியுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) விசைத்தறிகளுக்கு அனுமதி வழங்குவது மைய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். மைய அரசால், மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விசைத்தறிகளுக்கு, மாநில அரசு அனுமதி வழங்கி வருகிறது. எனவே, மைய மாநில அரசுகள் மாநிலத்தில் விசைத்தறிகளுக்கான அனுமதி வழங்குவதை நிறுத்தி வைக்கவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் எவ்வளவு விசைத்தறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன? அனுமதி வழங்காததால், அன் ஆதரைஸ்ட் பவர் லூம்ஸ் ஆயிரக்கணக்கில் பலவிடங்களில் உள்ளன. அதைத் தடுப்பதற்கு மாநில அரசின் கைத்தறித் துறை என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது? மைய அரசு அன் ஆதரைஸ்ட் பவர் லூம்ஸை ரெகக்னைஸ் செய்கிறோம் என்று சொல்லும்போது, குறிப்பிட்ட பகுதிகளில்தான் இந்தத் தொழில் வளர்கிற





சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மைய அரசு விசைத்தறிகளுக்கு அனுமதி வழங்கும்போது மாநில அரசின் அனுமதி பெற்று தொழில் இல்லாத இடங்களில் அவற்றிற்கான அனுமதி வழங்குவது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, 31-12-1983 வரை 93,625 விசைத்தறிகள் அங்கீகாரம் செய்யப்பட்டு அவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அவ்வளவு அதிகாரமும் மத்திய அரசுக்கு இருக்கிறது. எனவே அன் ஆதரைஸ்ட் பவர் லூம்ஸை நாலைந்து ஆண்டுகள் கழித்து மைய அரசு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் கேட்டறிந்து ரெகுலரைஸ் செய்கிறது. அதில் நாம் இடையில் குறுக்கே நின்று ரெகுலரைஸ் செய்யக்கூடாது என்றோ அல்லது பண்ணவேண்டும், என்றோ நாம் ஒரு நிலையை வைத்துக்கொள்வதில்லை. நம்மைப் பொறுத்தவரையில் இரண்டு வகைகளிலும் கவனம் செலுத்திவருகிறோம். வளர்ந்துவருகிற மாறுதல்களுக்கேற்ப வளர்ச்சி பெறவேண்டும். விசைத்தறிகளும் ஓரளவு வளரவேண்டும். மைய அரசு கொடுப்பதை நாம் பெற்றுக் கொண்டு பிரித்துக்கொடுக்கிறோம். அதே சமயத்தில், 30 இலட்சம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பணிப் பாதுகாப்பு, அவர்கள் உற்பத்திக்கு நாம் கொடுக்க வேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை கவனத்தில்கொண்டு அதற்கேற்ப அரசாங்கம் தன் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இதில் அனைத்து அதிகாரங்களும் மைய அரசிடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அனுமதியைப் பெற்ற விசைத்தறியாளர்கள் கூட அவர்கள் நலிந்துவிட்டால் இன்னொருவருக்கு விற்கமுடியாது என்ற கொடுமையான சட்டத்தை வைத்திருக்கிறார்கள். எனவே இந்தத் தொழிலில் இருப்பவர்களுக்கு சிக்கலான நிலை ஏற்பட்டு இந்தத் தொழில் வேறு இடங்களுக்குப் பரவமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே இந்த அதிகாரத்தையும் விதிகளையும் தக்கமுறையில் மாற்றவேண்டுமென்று மைய அரசை மாநில அரசு கோருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, விசைத்தறிகளைப் பொறுத்தவரையில், விசைத்தறி நெசவாளர்கள் அடிக்கடி மாற்றம் செய்யக்கூடாது என்று ரெஸ்ட்ரிக்ட் செய்வதற்காகத்தான் மைய அரசு கடுமையாக இருக்கிறது. உண்மையிலேயே ஏதாவது பிரச்சினை இருந்து விற்க அல்லது பெயர் மாற்றம் செய்யவேண்டிய பிரச்னை வரும்போது மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

**திரு. தோவைத்தம்பி :** தலைவர் அவர்களே, விஞ்ஞான வளர்ச்சி வேகமாக வளர்ந்துவருகிற இந்த உலகில் கைத்தறி துறையில் மிகப் பெரிய மாற்றத்தை விரும்புகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில்

கோவையில் கைத்தறித்தொழில் ஒரு காலகட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. ஆனால் இன்று கைத்தறி நெய்கிற இடத்தை வாடகைக்கு விட்டால்கூட கோவையில் பத்து மடங்கு அதிகப்படியான வருமானம் வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் அந்தத் தொழில் தொய்ந்து போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே இன்று மிகப் பெரியதொரு புரட்சியைச் செய்து இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு, எல்லோருக்குமே நவீன கைத்தறி விசை இயந்திரங்களை கொடுக்க அரசு முன்வருமா? அதோடு, கைத்தறிக் கொள்கையை மறுபரிசீலனை செய்து உலகம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிற இந்த விஞ்ஞான வளர்ச்சி அடிப்படையில் பழைய முறையை மாற்றவேண்டுமென்று மைய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை சொல்லுமா?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொன்றுதொட்டு, காலம் காலமாக கைத்தறித் பிரசித்தி பெற்ற துணியாக தமிழகத்திலும், இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களிலும் விளங்கி வருகிறது. ஒட்டுமொத்தமாக தமிழகத்திலுள்ள 5½ இலட்சம் கைத்தறிகளையும் அப்படியே விசைத்தறிகளாக மாற்றுகின்ற பிரச்னை இங்கே எழவில்லை. நெசவாளப் பெருமக்களே, அவர்களாகவே 10, 5 தறிகள் வைத்திருந்து, பவர் லூம் சைடுக்குப் போகின்றபோது, மைய அரசு ரிஸ்ட்ரிக்ஷன் வருகிறது. நமக்கு இருக்கின்ற பிரச்னை, கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டிய அத்தனை பாதுகாப்பையும் கொடுப்பது. அந்த வகையிலே அவர்களுடைய நலனைக் காப்பாற்ற, மேலும் அபிவிருத்தி செய்ய, மார்க்கெட்டிலே அவர்கள் துணி விற்பனையாக, டிசைன்ஸ் சென்டர் ஏற்படுத்தி, மற்றும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் அரசு தன் கவனத்தைச் செலுத்துகிறது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, ஒரு விசைத்தறி நிறுவப்பட்டால், 14 கைத்தறிகள் இல்லாமல் போய்விடுகிறது. இது கணக்கு போட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இது இந்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசுக்கும் இந்த நாட்டிலே தெரிந்த விஷயம். கைத்தறித் துணியைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு நாம் 20 சதவிகிதம் ரிபேட் கொடுத்துகூட, அது மரணப் படுக்கையிலே உள்ள ஒருவனுக்கு ஆக்சிஜன் கொடுக்கின்ற அளவுக்குத் தான் செய்ய முடிகிறது. ஆகவே, கைத்தறி நெசவாளர்களை சரியான முறையிலே பாதுகாக்க வேண்டி, இந்த விசைத்தறிகளுக்கு மேலும் மேலும் அதிகப்படியான உரிமங்கள் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி, உள்ள விசைத்தறிகளுக்கு சரியான முறையில் கட்டிடங்களைக் கட்டி, அந்தத் தொழிலாளர்களை பாக்டரி ஆக்ட்படி பாதுகாக்க வேண்டும். அதே





மாதிரி, கைத்தறி நெசவாளர்களையும் பாதுகாக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், நம்முடைய அரசினுடைய கொள்கைகளைப் பொறுத்தவரைக்கும், இங்கே இருக்கின்ற நெசவாளப் பெருமக்களை காப்பாற்ற வேண்டுமென்பதாகும். அதுதான் நம்முடைய இலட்சியம், கொள்கை. அதற்கேற்ப நாம் செயல்பாடுகளை வைத்திருக்கிறோம். ஆனால். மைய அரசு இப்போது மாநில அரசுக்கு 700 பவர் லூம்களை ஒதுக்குகின்றபோது, அதைத் தனியாருக்குக் கொடுக்காமல், சொஸைடி மூலம் நெசவாளர்களை அதிலே கொண்டுவந்து, அதிலே அவர்களை உறுப்பினர்களாக இடம்பெறும் வகையில் இந்த அரசு பார்த்துக்கொள்கிறது.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு அரசு வரிச் சலுகை, மற்றும் பல சலுகைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி, பல விசைத்தறிச் சொந்தக்காரர்கள், விசைத்தறித் துணிகளின்மீது கைத்தறித் துணி என முத்திரையிட்டு, அரசு கொடுக்கின்ற பல சலுகைகளை தவறாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு தக்க தண்டனை கொடுக்க அரசு முன்வருமா? அப்படி எத்தனை பேர்களுக்கு இதுவரையில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொடுக்கப்பட்ட தண்டனை பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இப்போது இல்லை. ஆனால், தவறு செய்கின்றவர்களை அரசு கண்டிக்கும்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் வெளிநாடுகளுக்கு கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்யும் போது, விசைத்தறித் துணிகளைத் தயாரிப்பவர்கள், தவறாக கைத்தறி துணி என்று ஏற்றுமதி செய்வதால், அங்கே மார்க்கெட் மிகவும் டல்லாகி விடுகிறது. ஆகவே, அந்தத் குற்றத்தைக் கண்டுபிடித்து, அதைத் செய்தவர்கள்மீது தகுந்த தண்டனை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கோ-ஆப்டெக்சைப் பொறுத்தவரைக்கும், நாம் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்கிறோம். தனியார்களில் மில்

துணியைத் தயாரிப்பவர்கள், மில் துணியை ஏற்றுமதி செய்கிறார்கள். பவர் லூமில் தயாரிப்பவர்கள், பவர் லூம் துணிகளை ஏற்றுமதி செய்கிறார்கள். கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்கிறவர்கள், கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்கிறார்கள்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980 மார்ச்சு 31 ஆம் தேதியிலிருந்து விசைத் தறிகளுக்கு உரிமம் வழங்குவதை மத்திய அரசு நிறுத்தியிருக்கிறது. ஆனால், அதேசமயத்தில் ரயான் போட்டு நெய்கின்ற விசைத்தறிகளுக்கு, எந்தவிதமான அனுமதியும் வாங்க வேண்டியதில்லை. எனவே, இந்த ரயான் துணிகளை நெய்வதற்காவது உரிமம் வழங்குவதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளுக்கு மத்திய அரசு அனுமதி வழங்குகிறது என்று நான் ஏற்கனவே சொன்னேன். நம்மைப் பொறுத்தவரையில், நாம் விசைத் தறிகளை ஆரம்பிப்பதில்லை. காரணம், கைத்தறி நெசவாளப் பெருமக்களை நாம் பாதுகாக்க வேண்டிய நிலையிலே உள்ளோம். இத்தொழிலை நம்பி 50 இலட்சம் பேர்கள் இருக்கின்றார்கள். தமிழகத்திலே 5½ இலட்சம் தறிகள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே, கைத்தறிக்குத் தான் நாம் முன்னுரிமை கொடுத்து உற்சாகப்படுத்துகிறோம்.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வள நாடுகளில் இருக்கும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று நவீன தொழில் வளர்ச்சியை உபயோகப்படுத்தவேண்டும். அதே நேரத்தில், மனித உழைப்பைப் பயன்படுத்தி, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நல்வாழ்வையும் கொடுக்கவேண்டும் என்ற இப்படிப்பட்ட இரண்டு காரியங்களையும் இணைக்கும் ஒரு கடுமையான நிலையில் இந்த கைத்தறியும், விசைத்தறியும் அமைகின்றன. ஆகவே விசைத் தறியில் இருக்கக்கூடிய ரகங்களை கைத்தறிக்கோ, அல்லது கைத்தறியில் இருக்கக் கூடிய ரகங்களை விசைத் தறிக்கோ போடாமல் ஒழுங்குபடுத்தும் முறைகளை அரசு மேற்கொள்ளுமா ? விசைத் தறியிலே உள்ளதை கைத்தறி என்று சொல்லக் கூடிய ஆபத்து இருக்கிறதே, அதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விசைத் தறிக்கான தனி ரகங்களையும், கைத்தறிக்கான தனி ரகங்களையும், மைய அரசு ஏற்கனவே அறிவித்திருக்கிறது. அதை மீறுபவர் [illegible] 'ரிசெர்வேஷன் கமோடிட்டீஸ்' கீழ் வழக்கு தொடரப்படுகிறது. மாநில [illegible] அரசு கேட்பது தனியாக ஒரு லெஜிஸ்லேஷன் இருக்க வேண்டும்.



ஏனென்றால் வரம்பை மீறி ஒருவர் துறையில் இன்னொருவர் புகுந்து கொள்ளும்போது நடவடிக்கை எடுப்பதற்கு பிரத்யேகமான லெஜிஸ்லேஷன் கொண்டு வரவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. தென் மாநிலங்கள் அமைச்சர்களின் மகாநாட்டில் கூட நான் இதைச் சொன்னேன். மைய அரசும் அதைப் பரிசீலித்து பிரத்யேகமான லெஜிஸ்லேஷன் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான உறுதியை அளித்திருக்கிறது. அதைக்கொண்டு வருவார்கள் என்று நம்புவோம்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே செயல்பட்டுவரும் அத்தனை விசைத்தறிகளும் லைசன்ஸ் பெற்றவைதானா ? லைசன்ஸ் பெறாமல் பல விசைத் தறிகள் ஓடுவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? இப்போது எத்தனை விசைத் தறிகளுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது ? வழங்கப்படாமல் எத்தனை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஏற்கனவே நான் சொன்ன பதிலில் 93,627 விசைத் தறிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டது என்று சொன்னேன். இப்போது ஏறக்குறைய அங்கீகாரம் பெறாத பவர் லூம்கள் அங்கீகாரம் பெற்றுவிட்டன. ஏனென்றால், ஒரு கால வரம்பைச் சொல்லி, அதற்குள்ளாக அத்தனை பேரும், யார் யார் அன்-ஆதரைஸ்டாக போட்டு இருந்தார்களோ, அவர்களை ரெகுலரைஸ் பண்ண வேண்டுமென்று சொல்லி, அவைகள் எல்லாம் ரெகுலர் செய்யப்பட்டு விட்டது. இந்த மாதிரிப் பிரச்சினைகள் மற்ற மாநிலங்களிலும் உள்ளன. சில மாநில அரசுகள் மைய அரசை கேட்டுக்கொண்டிருக்கிறது. யார் யார் அன்-ஆதரைஸ்டாக பவர் லூம்களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களை அப்போதைக்கப்போது, மத்திய அரசு ஒட்டுமொத்தமாக ரெகுலர் செய்கிறோம் என்று சொல்லும்போது சிபாரிசு செய்கிறோம். அவைகள் ரெகுலரைஸ் செய்யப்படுகின்றன.

**திரு. ஆர். டி. கோபாலன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்பம், பெரியகுளம், திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய பகுதிகளில் நெசவுத் தொழில் பரவலாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு உரிமங்கள் வழங்கப்படவில்லை. ஆகவே அந்தப் பகுதிகளுக்கு உரிமங்கள் வழங்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னமாதிரி, பவர் லூம்களைப் பொறுத்தவரையிலும், நாம் மத்திய அரசை கட்டாயப்படுத்துவதில்லை. அவர்களே முன்வந்து மாநில வாரியாக வழங்குகிறபோது, அதை நாம் வேண்டாம் என்று சொல்லாமல் பெற்றுக்கொண்டு வருகிறோம். அப்படி பெற்றுக்கொண்டு, அதைப் பரவலாகப் பிரித்துக்கொடுக்கிறோம்.

[1984 ஏப்ரல் 26

தொட்டம்பாளையம் நெசவாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள்.

661—(* வினா எண் 22959) திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, தொட்டம்பாளையம் நெசவாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) விசைத்தறி உரிமையாளர்களுக்கும் கைத்தறி தொழிலாளர்களுக்கும் சமரசம் ஏற்பட அரசு முயற்சி எடுத்து வழக்கு ரத்து செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழகத்தில் கைத்தறித் தொழிலையே நம்பியுள்ள பல லட்சக் கணக்கான நெசவுத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும், அவர்கள் வாழ்க்கைத்தரம் மேம்பட வேண்டுமென்ற குறிக்கோளுடனும், இந்திய அரசு மொத்தமாக சில வகை துணிகளை கைத்தறிக்கென்றே 1971-ல் ஒதுக்கிற்று. அவற்றில் கோட்டா ரகச் சேலைகளும் ஒன்றாகும். அவற்றை விசைத்தறி போன்ற இதர உற்பத்தியாளர்கள் நெசவு செய்யக்கூடாது. இந்த வகையிலே விசைத் தறியாளர்கள் தயாரித்ததை அரசு அங்கீகரிக்காத காரணத்தினால், நீண்டகாலமாக விசைத்தறியாளர்களுக்கும் கைத்தறியாளர்களுக்கும் தொடர்ந்து போட்டி மனப்பான்மை இருந்து வந்தது. இதிலே இருவரும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ரகங்களை தயாரித்து வந்தால், பிரச்சினை வர வாய்ப்பில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், மத்திய-மாநில அரசுகள் தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றன. சில வகை ரகங்களை நான் ஏற்கனவே சொன்னது போல், கைத்தறி துறைக்கென்றே ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு சட்டம் இயற்ற முயற்சித்து வருகிறது. மாநில அரசுகளும் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசைத் தறி உரிமையாளர்களுக்கும், கைத்தறித் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள தகராறுக்கான அடிப்படைக் காரணமே, அவர்களுக்கு என்று ஒதுக்கியிருக்கின்ற அந்த ரகங்களை அவர்கள் நெய்யாமல், அதைக் கடைப்பிடிக்காமல் போனதால் வந்த விளைவுதான் இது. இது பரிசீலிக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக 96 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வழக்கு மன்றத்திற்கு அவர்கள் வாய்தாவிற்குக், கூட போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஏறக்குறைய ஒரு முறை வாய்தாவிற்காகப் போகவேண்டுமென்றால்,



1984 ஏப்ரல் 26]

இந்த 156 பேர்களும்—பல பேர் இந்த ஊரை விட்டே காலி செய்து விட்டு பெங்களூர், மைசூர் ஆகிய ஊர்களுக்குப் போய்விட்டார்கள். ஆகவே இந்த வழக்கு சம்பந்தமாக, அதை ரத்து செய்வது சம்பந்தமாக பரிசீலனையில் இருக்கிறது என்றால், எந்த அளவிற்கு இருக்கிறது ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் கோவிந்தன் என்பவர் தலைமையில் ஒரு குழு சென்று திரு. சாம்ராஜ், திரு. ரங்கசாமி, திரு. முத்துசாமி ஆகியவர்களுடைய விசைத்தறி நிலையங்களைத் தாக்கி, தீ வைத்து சேதம் விளைவித்திருக்கிறார்கள். ஆனால் பவர் லூம் சைட்லே திரு. முத்துசாமி செட்டியார் விசைத்தறி நெசவாளர் முத்துசாமி செட்டியார், திரு. என். கே. கோவிந்தனை கத்தியால் குத்தினார். எனவே இப்படி, தீ வைப்பு, கத்திக் குத்து, இப்படி பல்வேறு நிலைகளில் வழக்குகள் தொடரப்பட்டு குற்ற எண் 38-81, அதேபோல், குற்ற எண்கள் 39-81, 40-81, 41-81 ஆகியவைகளின் கீழ் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கனவே சொன்னதைப் போல, கைத்தறி துணிக்கான ரகங்களை பவர் லூம் சைட்லே, அல்லது மில் சைட்லே தயாரிப்பார்களானால் அவர்கள் மீது விதிக்கிற விதிகளின் கீழே வழக்கு போடத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர, ஒருவருக்கொருவர் சென்று அவர்களுக்கு இருக்கிற பிரச்சனைகள் மீறப்படுகிறது அல்லது விரும்புகிற அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற அந்த ரகங்கள் மீறப்படுகிறபோது, தீ வைப்பதோ, அழிப்பதோ, கத்தியாலே குத்துவதோ, இதெல்லாம் குற்றவியல் சட்டத்தின் கீழே வருவதாகும். ஆகவே இவற்றுக்கு நாம் விதிவிலக்குத் தரமுடியுமா என்பதைப் பற்றி நாம் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம். இது ரெகுலர் கேஸ் என்ற அடிப்படையிலே, விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இதிலே நெசவாளர் பாதிப்பு என்ற பிரச்சனை இல்லை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அடித்து, ஒரு குழுவினர் இன்னொரு குழுவினரை தீ வைத்தார்கள் என்ற அடிப்படையிலேதான் வழக்குகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இதிலே என்ன செய்வது என்பதைப் பற்றி அரசு இப்போது சொல்ல இயலாது.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வழக்கு உள்ளே போய் விவரங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள், 2 ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிற சங்கடம். ஆக, தீ வைத்தவர்கள், அல்லது தீ வைத்ததாக வழக்கு போடப்பட்ட, அந்த நெசவாளர்களுக்கு இடையே சமரசம் செய்வதற்காக முயற்சிகள் மேற்கொண்டு, அவர்கள் சமரசமாக போவதற்கும், தயார் நிலையில் இருக்கிறபோது, நான் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில்

சொன்னபோது நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே கூட கருணை மனுவாக கொடுக்கப்பட்டிருக்கிறது—அரசே முடிந்தால் அந்த வழக்குகளை ரத்து செய்து அவர்களுக்கு ஒரு நிவாரணத்தைக் கொடுக்கலாம் என்று கூறி இருக்கிறார்கள். தவிர விசைத்தறி உரிமையாளர்கள், எல்.ஐ.சி. மூலமாக எங்களுக்கு இவ்வளவு தொகை மொத்தமாக இருக்கிறது, அந்தத் தொகையை அவர்கள் தரவேண்டும் என்று இந்த ஏழைக் கைத்தறி நெசவாளர்களை கேட்கிறார்கள். அவர்கள் அன்றாடம் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கே கஷ்டமாக இருக்கிற நிலையில், 50 ஆயிரம், 1 லட்சம் என்று அவர்கள் அந்தத் தொகையைக் கேட்டால் கொடுக்க முடியாத சூழ்நிலையில் தான் அந்த வழக்குகள் தள்ளிப் போவதற்கும், சமரசம் ஏற்படாத நிலை இருக்கிறது. எனவே ஒரு முறையான குழு போய் நின்று, சமரசம் செய்து அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அல்லது அந்த வழக்கை ரத்து செய்து அவர்களை காப்பாற்ற முன்வருமா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாக கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கே தெரியும். வழக்குகளை நீதி மன்றத்திலே இரு தரப்பினரும் விரும்பினால் காம்ப்ரமைஸ் பண்ணிக்கொள்ளலாம். சில வழக்கிலே கிரிமினல் வழக்குகளைப் பொறுத்தவரையில் சிலவற்றை அவர்களே விரும்பினாலும் காம்ப்ரமைஸ் பண்ணிக்கொள்ள இயலாது. இது கத்திக்குத்து என்றால், 307 போன்ற வழக்குகள் ஏற்கனவே வந்திருக்கிறது. இதையெல்லாம் காம்ப்ரமைஸ் பண்ண முடியாது. இரண்டாவது, இரண்டு பேரும் காம்ப்ரமைஸ் பண்ணிக்கொள்கிறோம் என்று வழக்கு மன்றத்திலே அப்படி அவர்கள் அறிவித்து இருப்பதைப் போன்று எந்தவிதமான தகவலும் அரசுக்கு இல்லை. ஆகவே இந்த அடிப்படையிலே வழக்கு தொடர்ந்து நடக்கிறதே தவிர, அதை நிறுத்துவது அதைத் தடுப்பது என்ற அந்தப் பிரச்சனை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, சுமுகமான முடிவு காண்பதற்கு அங்கே இருந்து எந்த அறிக்கையும் வரவில்லை என்று சொன்னார்கள், கோட்டத்திலே ஆர்.டி.ஓ. போன்றவர்கள், டி.எஸ்.பி. போன்றவர்கள் சமரசம் செய்து அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அரசு நினைத்தால் [illegible] செய்வதற்கு உதவி செய்யலாம் என்ற கருத்தை அங்கேயிருக்கின்ற [illegible] சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இவைகளை அரசு கருத்திலே





கொண்டு, நெசவாளர்களுக்கும், விசைத்தறி உரிமையாளர்களுக்கும் இடையே இருக்கிற பிரச்சனைகளை சுமுகமான முறையிலே தீர்வு காண்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். 307-ஐப் பொறுத்தவரையில் அது காம்ப்ரமைஸ் கேஸ் அல்ல. எனவே இரண்டு பேருமே காம்ப்ரமைஸ் செய்ய விரும்பினாலும், முன்பு நாங்கள் குத்திக்கொண்டோம், இப்போது நாங்கள் ராசியாகப் போகிறோம் என்று சொன்னாலும், கோர்ட்டிலே அதை காம்ப்ரமைஸ் பண்ணிக்கொள்ள முடியாது. எனவே அரசு மட்டத்திலே தான் அவர்கள் ஆணையிட வேண்டும் என்றால், ஆணையிடவேண்டும். அப்படி ஆணையிடுவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்க வேண்டும். எனவே அந்தக் காரணங்கள் என்ன, எந்த அடிப்படையிலே, என்ன பேக்ரவுன்டிலே அந்தச் சண்டை நடந்தது என்பதைப் பற்றி எல்லாம் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இப்போது அதைப்பற்றி எதுவும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 662 முதல் 668 வரை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

**கு. கா. வி. 1—(*வினா எண் 23038) திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாத நகராட்சிகள் எத்தனை?

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) நான்கு.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு எத்தனை லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலே மொத்தம் 4 நகராட்சிகளிலேதான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லை என்று சொல்லப்பட்டது. நம்முடைய மாநிலத்தில் சிறிய

மாவட்டமான குமரி மாவட்டமும் அதில் ஒன்று என்றால், மக்கள் தேர்ந் தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை சந்தேகபபடுவார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? நாங்கள் மக்கள் மனத்தில் நீங்காத இடம் பெற பத்மநாபபுரம் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. இந்நகராட்சிக்கு அருகில் ஓடும் வெள்ளியாறு ஆற்றிலிருந்து நீர் எடுத்து இரண்டு உயர்மட்டத் தொட்டிகளுக்கு ஏற்றி, பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க சுமார் 65 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. போதுமான நீர் ஆதாரம் பற்றிய நிலையை குறித்து பரிசீலனை செய்த பின்னரே இதன் முடிவு தெரியவரும். எனவே அதற்கு வேண்டிய, அதாவது போதுமான நீர் ஆதாரம் பற்றிய நிலையை ஆராய்வதற்கு வேண்டிய பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இந்தத் திட்டத்தை நிறைவேற்றி நீரை வினியோகிப்பதற்கு 65 லட்சம் ரூபாய் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை கிராமங்களுக்கு அளிப்பதில் இந்த அரசின் சாதனைக்கு வைர பதக்கமே அளிக்கலாம். அந்த அளவுக்கு குடி தண்ணீர் வசதி செய்வதில் அக்கறை காட்டுகின்ற நமது அரசு, தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாத நகராட்சியே இருக்கவே கூடாது என்ற பிடிவாதத்தை செலுத்தி ராக்கெட் வேகத்தில் எல்லா இடங்களுக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா? செய்து மீதம் இருக்கிற இடங் களிலும் அந்தப் பணியை முடித்து இந்திய நாட்டிற்கே வழி காட்டுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. சீர்காழி, பொன்மலை, குளைச்சல், பத்மநாபபுரம் ஆகிய இந்த 4 நகராட்சிகளில்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் இல்லை. நான் இப்போது சொன்னதைப்போல, பத்மநாபபுரத்தைப் பொறுத்தவரையில், அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.



## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### மைலாப்பூர் மின்சார சுடுகாட்டில் எரிக்கப்பட்ட உரிமை கோரப்படாத உடல்கள் பற்றிய விவரங்கள்

**1—வினா எண் 4875—திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-80 ஆம் ஆண்டுகளில் சென்னை மைலாப்பூரிலுள்ள மின்சார சுடுகாட்டில் காவல் துறையினால் எரிக்கப்பட்ட உரிமை கோரப்படாத உடல்களின் மாதவாரியான எண்ணிக்கை.

(ஆ) இத்தகைய உடல்களின் கைப்பற்றப்பட்ட இடங்களின் விவரம்.

**விடை—(அ)**

| மாதம். | வருடம். 1979 | 1980 |
|---|---|---|
| ஜனவரி | — | 61 |
| பிப்ரவரி | — | 29 |
| மார்ச்சு | 10 | 36 |
| ஏப்ரல் | 18 | 16 |
| மே | 15 | 55 |
| ஜூன் | 31 | 22 |
| ஜூலை | 39 | 54 |
| ஆகஸ்டு | 41 | 40 |
| செப்டம்பர் | 30 | 7 |
| அக்டோபர் | 34 | 46 |
| நவம்பர் | 61 | 18 |
| டிசம்பர் | 24 | 1 |
| மொத்தம் | 303 | 385 |

(ஆ) சாலை மற்றும் இரயில் விபத்துக்களில் இறந்த உரிமை கோரப் படாத உடல்கள் சென்னை நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டு, சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை மூலமாகக் கொண்டு வரப்பட்டு, சென்னை மைலாப்பூரி லுள்ள மின்சார சுடுகாட்டில் காவல் துறையினரால் எரிக்கப்பட்டன.

[1984 ஏப்ரல் 26

## காமன்கோட்டை-மென்னந்தி சாலையை தன்னிறைவுத் திட்டம் மூலம் பராமரித்தல்

2—வினா எண் 4888—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போகலூர் பஞ்சாயத்து யூனியன் காமன்கோட்டை முதல் மென்னந்தி வரை உள்ள சாலையைத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பராமரிக்க அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மேல் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) போகலூர் பஞ்சாயத்து யூனியன் காமன்கோட்டை முதல் மென்னந்தி வரையுள்ள 4.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை மண் சாலையாகும். அதில் ஒரு பகுதி 3.2 கிலோ மீட்டர் நீளம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் மற்றொரு பகுதி 1 கிலோ மீட்டர் நீளம் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் எடுக்கப்பட்டு சாலை முழுவதும் கிராவல் பரப்பப்பட்டுவிட்டது.

## மைலாப்பூரில் உள்ள சித்திரைக்குளம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட விவரம்

3—வினா எண் 5485—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மைலாப்பூரில் உள்ள சித்திரைக்குளம், அருள்மிகு கேசவப் பெருமாள் ஆலய நிர்வாகத்தினால் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) இருப்பின் அதன் முழு விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம், முன்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சென்னை அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் பேயாழ்வார் ஆலயத்திற்குச் சொந்தமான சித்திரைக்குளத்தை அரசாணை எண் எம்.எஸ். 2034, வருவாய்த் துறை, நாள் 27—7—1954, வருடம் ஒன்றுக்கு ரூ. 1.00 வீதம் 99 ஆண்டுகளுக்கு சென்னை மாநகராட்சிக்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளுக் குட்பட்டு குத்தகைக்கு விடப்பட்டது :—

(1) குளத்தை மாநகராட்சி உடனே பழுதுபார்த்து நன்கு பராமரிக்க வேண்டும்.



1984 ஏப்ரல் 26]

(2) ஆலயத்தில் நடைபெறும் தெப்ப உற்சவம், திருகார்த்திகை உற்சவம், திருமஞ்சனம் மற்றும் இதர திருவிழாக்களுக்கு, நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்கட்குட்பட்டு, திருக்குளத்தை உபயோகப்படுத்த ஆலயத்திற்கு மாநகராட்சி அனுமதி அளிக்கவேண்டும்.

(3) மாநகராட்சி இந்தக் குளத்தை இந்துக்களின் மனம் புண்படாத வாறும், ஆலயத்தில் தற்சமயம் பழக்கத்திலுள்ள முறையில் அனுசரித்தும் உபயோகப்படுத்த வேண்டும்.

இப்படிக் குறைந்த குத்தகைக்குக் கொடுத்ததன் நோக்கம் மாநகராட்சி இக்குளத்தைப் பழுதுபார்த்து பராமரித்து சுகாதாரமாக வைத்திருக்கும் என்பதற்காகத்தான். ஆனால், குத்தகை உடன்படிக்கையின்படி சென்னை மாநகராட்சி முறையாகப் பராமரிக்காமலும் எவ்வித மராமத்து வேலைகளும் செய்யாமலும் இருந்தால், அரசு ஆணை நிலை எண் 841, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 22—6—1976-ல் கீழ்க்கண்டவாறு அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது :—

இந்தத் திருக்குளத்தைப் பழுதுபார்க்க உத்தேசமாக ரூ. 1 லட்சம் செலவு ஆகும். அதற்கு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மானியமாக ரூ. 50,000 வழங்க வேண்டும். மீதம் தேவைப்படும் தொகை ரூ. 50,000 சென்னை மாநகராட்சி அரசிடம் கடனாகப் பெற வேண்டும். குளம் பழுது பார்த்தல் வேலையை சென்னை மாநகராட்சியே மேற்கொள்ள வேண்டும். குளம் பழுது பார்த்த பிறகு அதன் பராமரிப்புச் செலவிற்காக ஆண்டு 1-க்கு ரூ. 3,000-க்கு அதிகப்படாமலோ அல்லது நடைமுறையில் ஆகும் செலவோ இதில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகையை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சென்னை மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டும்.

மேற்கண்ட ஆணையின் பேரில் மாநகராட்சி அரசிடமிருந்து ரூ. 54,490-ஐ 3—3—1976 ஆம் நாளன்று கடனாகப் பெற்றுக்கொண்டது. இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து 19—11—1977 அன்று ரூ. 50,000-ஐ சென்னை மாநகராட்சி மானியமாகப் பெற்றுக்கொண்டது.

மாநகராட்சி இக்குளம் பழுதுபார்க்க ரூ. 1,08,980-க்கு மதிப்பீடு செய்து 25—5—1978-ல் டெண்டர் பெறப்பட்டது. மதிப்பீட்டைவிட டெண்டர் அதிகமாக இருந்ததாலும், மாநகராட்சியிடம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,04,490-ஐ விட அதிகமாக இருந்ததாலும் மாநகராட்சி டெண்டரை ஏற்கவில்லை. 1978-79 வருட மதிப்பீட்டை அனுசரித்து குளத்தை மராமத்து செய்ய ரூ. 2,31,000 செலவாகும். இவ்வேலை தொடங்கப்படாததால் இக் கோயிலின் அறங்காவலர்கள் மேற்கண்ட விபரங்களை ஆணையருக்குத்

தெரிவித்து, இப்பணியை ஆலயம் தன் அளவில் செய்ய அனுமதிக்கக் கேட்டனர். அதன்படி சித்திரைக்குளத்தில் 99 ஆண்டுக் குத்தகையை முடிவிற்குக் கொண்டுவரவும், மானியத் தொகை ரூபாய் 50,000-ஐ திரும்பப் பெறவும் ஆலய அறங்காவலருக்கு அனுமதியளித்து, 13—8—1980 அன்று ஆணையரால் உத்தரவிடப்பட்டது.

அதன்படி, மேற்படி குளத்தின் பராமரிப்பிற்காக சென்னை மாநகராட்சி இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூ. 50,000-ஐ, ஆலய வசமே திருப்பிக் கொடுத்துவிட்டது. மேலும் 14—10—1953-ல் 99 வருடங்களுக்காக ஏற்பட்ட சித்திரைக்குளத்தின் குத்தகையை ரத்து செய்யுமாறு ஆலயத்தின் நிர்வாக அறங்காவலருக்கு சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. மேற்படி சித்திரைக்குளத்தினை ஆலயம் தன் சுவாதீனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு 16—3—1982-ல் இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆலயம், இந்த குளத்தை மீண்டும் சுவாதீனம் செய்து கொண்ட பிறகு எவ்விதம் மராமத்து செய்ய முடியுமென்பதை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கையை உடனடியாக ஆலயமும் இந்து சமய அறநிலையத் துறையும் மேற்கொள்ளும்.

**திருமங்கலம் வட்டம் வீரப்பெருமாள்புரத்தில் போலீஸ் நிலையம் துவக்கும் செயற்குறிப்பு.**

**4—வினா எண் 7661—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் வட்டம் வீரப்பெருமாள்புரத்தில் போலீஸ் நிலையம் ஒன்று துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன் விபரம் என்ன?

**விடை—**

(அ) மதுரை (தெற்கு) மாவட்டம் திருமங்கலம் வட்டம் வீரப்பெருமாள் புரத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) தற்பொழுது கல்லுப்பட்டி காவல் நிலையத்திற்கு உட்பட்ட எல்லை கட்டுக்கடங்காத அளவில் இருப்பதைக் கருத்தில்கொண்டும் மற்றும் சட்டம் ஒழுங்கு முதலிய பிரச்சினைகளையும் மனதில்கொண்டும் வீரப்பெருமாள்புரம் கிராமத்தில் புதிய காவல் நிலையம் ஒன்று திறப்பது அவசியம் என்று கருதப் பட்டது. ஆனால் தனி அதிகாரி, காவல் ஆணையர் முறை மதுரையில்



சமீபத்தில் நடந்த கூட்டத்தில் மதுரையினை பெருநகர் ஆக்கும் திட்டத்தின் கீழ் அவனியாபுரம் காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட ஒரு பகுதியினைப் பிரித்து வளையன்குளம் என்னும் இடத்தில் ஒரு புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்று யோசனை கூறியுள்ளார். இவ்வாறு வளையன் குளத்தில் ஒரு காவல் நிலையும் அமைக்கப்படுவதால் வளையன் குளத்தி லின்றும் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வீரப்பெருமாள்புரத்தில் தனியாக ஓர் காவல் நிலையம் அமைக்க அவசியம் இருக்காது என்று மதுரை மாவட்டக் காவல் துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

**பழவூர் புறக்காவல் நிலையத்தை முழு அந்தஸ்து உள்ள காவல் நிலையமாக உயர்த்தும் செயற்குறிப்பு.**

**5—வினா எண் 8344—திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் பழவூர் புறக்காவல் நிலையத்தை முழு அந்தஸ்து உள்ள காவல் நிலையமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

திருநெல்வேலி மாவட்டம், பழவூர் புறக்காவல் நிலையத்தை தரம் உயர்த்தி காவல் நிலையமாக மாற்றும்படி 1—7—1982 நாளிட்ட அரசு ஆணை நிலை எண் 1686-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**அத்திப்பாடி ஊராட்சி கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்களை வனத்துறையின்கீழ் கொண்டுவரும் திட்டம்**

**6—வினா எண் 8414—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சியைச் சேர்ந்த பள்ளத்தூர், புங்கனி, இலவம்பாடி ஆகிய கிராமங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களை வனத்துறையின்கீழ் கொண்டுவருவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ மாட்டாது.

[1984 ஏப்ரல் 26

## வேடசந்தூர் வட்டம், அய்யலூர்-ஆலம்பாடி சாலையை அகலப்படுத்தும் திட்டம்

7—வினா எண் 8644—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம், வடமதுரை ஒன்றியம். அய்யலூரிலிருந்து ஆலம்பாடி செல்லும் 11.4 கி.மீ. சாலையை அகலப்படுத்திச் சீரமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

11.8 கி.மீ. நீளமுள்ள அய்யலூர்-ஆலம்பாடி சாலையை ரூ. 20.00 லட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய 1982-83 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பாகத் திட்டப் பணியில் "மாநில சாலைகள்" திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. பணி விரைவில் துவங்கப்படும்.

## திருநெல்வேலி மாவட்டம் பாபநாச கோவிலுக்கு வடபுறம் உள்ள யானைப்பாலம் அதைச் சார்ந்த இணைப்புச் சாலை வேலைத்திட்டம்

8—வினா எண் 8877—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாபநாச கோவிலுக்கு வடபுறம் உள்ள யானைப்பாலம் அதைச் சார்ந்த இணைப்புச் சாலையின் மதிப்பீடு யாவை?

(ஆ) மேற்படி வேலை எப்போது முடிவடையும்?

விடை—

(அ) யானைப்பாலமும் அதைச் சார்ந்த இணைப்புச் சாலையின் மதிப்பீடு ரூ. 1.65 இலட்சம் ஆகும்.

(ஆ) பால வேலை 31—3—1981-லும், அணுகுசாலை வேலை, 31—5—1981-லும் முடிக்கப்பட்டது. 1—6—1981 முதல் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது.



1984 ஏப்ரல் 26]

## வலங்கைமான் யூனியன் நல்லூர் கிராமத்தில் கயிறு தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு.

9—வினா எண் 9298—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் அருகே வலங்கைமான் யூனியன் நல்லூர் கிராமத்தில் கயிறு தொழிற்சாலை துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) கயிறு தொழிற்சாலைக்குப் புதிய கட்டிடம் கட்டப்படுமா?

விடை—

(அ) தஞ்சை மாவட்டம், வலங்கைமான் பஞ்சாயத்து ஒன்றியத்திலுள்ள நல்லூர் கிராமத்தில் தென்னை நார் பிரித்தெடுக்கும் பிரிவும், கயிறு திரிக்கும் பிரிவும் உள்ளடங்கிய தொழில் கூட்டுறவுச் சங்கத்தோடும் பயிற்சி நிலையத்தோடும் கயிறு தொழிற்சாலை அமைக்க சமூக நலத்துறையின் பெண்களுக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் 18-11-1980-ல் ஆணையிடப்பட்டது.

(ஆ) பயிற்சி நிலையத்தில் குழு ஒன்றிற்கு 25 பயிற்சியாளர்கள் வீதம் 4 குழுக்களுக்குக் கயிறு திரிக்கும் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு குழுவின் பயிற்சிக் காலம் 6 மாதமாகும். ஆக இரண்டு வருடத்தில் 100 மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படும். கயிறு திரிப்பதில் பயிற்சி கொடுக்கும் திட்டத்திற்கு இரண்டு இலட்சமும், இயந்திரங்கள், தளவாட சாமான்களுக்காக ரூ. 1,55,000-மும் மற்றும் இதர தேவைகளுக்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தென்னை நார் பிரித்தெடுக்கும் பிரிவு ஒன்றினையும் கயிறு திரிக்கும் பிரிவு ஒன்றினையும் உள்ளடங்கிய தொழில் கூட்டுறவுச் சங்கத்தினைத் தொடங்குவதற்கு ரூ. 2.48 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியாளர்கள் 'ஏ' பிரிவு உறுப்பினர்களாகவும் தென்னை வளர்க்கும் 100 பேர்கள் 'பி' பிரிவு உறுப்பினர்களாகவும் இச்சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். மேற்படி தொழிற் கூட்டுறவுச் சங்கம் 13-11-1981-ல் பதிவு செய்யப்பட்டு 26-11-1981 முதல் வேலை செய்யத் துவங்கியுள்ளது.

(இ) இந்தக் கயிறு தொழிற்சாலைக்குப் புதிய கட்டிடம் கட்டப்படும்.

**காரைக்குடி நகராட்சியில் சிவில் சப்ளை கடைகளை அதிகரிக்கும் செயற் குறிப்பு.**

10—வினா எண் 9510—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி நகராட்சியில் சிவில் சப்ளை கடைகளை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) & (ஆ) : காரைக்குடி நகராட்சியில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூன்று நியாயவிலைக் கடைகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழு கடைகளையும் நடத்தி வருகின்றன. இந்த பத்து கடைகளிலும் 16,620 குடும்பக் கார்டுகள் இணைக் கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தால் நடத்தப்படும் மூன்று கடைகளிலும் மொத்தம் 3,666 குடும்பக் கார்டுகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று கடைகளில் 2,000 கார்டுகளுக்கும் குறைவாகவே பதிவு செய்யப் பட்டுள்ள காரணத்தால், நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் மேலும் நியாயவிலைக் கடைகளைத் திறக்க அவசியம் ஏற்பட வில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் ஏழு கடைகளில் மூன்று கடைகளில் மட்டும் 2,187, 2,271, 2,371 அட்டைகள் பதியப் பட்டுள்ளன. 2000-க்கும் அதிகப்படியான அட்டைகளின் எண் ணிக்கை மிக அதிக அளவில் இல்லாததினால் இந்த மூன்று கடை களைப் பிரித்து புதிய கடைகளைத் திறக்கும் சாத்தியக் கூறு ஏதும் இல்லை.

**தமிழகத்தில் தீயணைப்புத் துணை நிலையங்கள் இல்லாத தாலுக் காக்கள் மற்றும் அதற்கான சிறப்புத் திட்டங்கள்.**

11—வினா எண் 9776—திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா்—

(அ) தமிழகத்தில் தீயணைப்புத் துணை நிலையங்கள் இல் லாத தாலுக்காக்கள் எத்தனை?

(ஆ) அவை எவையெவை?

(இ) அவ்விடங்களில் உடன் துணை நிலையங்கள் நிறுவ சிறப்புத் திட்டம் உள்ளதா?



விடை—

(அ) தமிழ்நாட்டில் தீயணைப்பு நிலையங்கள் இல்லாத தாலுக்காக்கள் 53

(ஆ) அவை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | உத்திரமேரூர் .. | செங்கல்பட்டு மாவட்டம் |
| 2. | பொன்னேரி .. | ஷை |
| 3. | திருத்தணி .. | ஷை |
| 4. | ஆற்காடு .. | வட ஆற்காடு மாவட்டம் |
| 5. | வாலாஜா .. | ஷை |
| 6. | செய்யார் .. | ஷை |
| 7. | போளூர் .. | ஷை |
| 8. | காட்டுமன்னார்கோயில் .. | தென்னாற்காடு மாவட்டம் |
| 9. | திட்டக்குடி .. | ஷை |
| 10. | ஒரத்தநாடு .. | தஞ்சாவூர் மாவட்டம் |
| 11. | திருவையாறு .. | ஷை |
| 12. | திருவிடைமருதூர் .. | ஷை |
| 13. | பாபநாசம் .. | ஷை |
| 14. | திருத்துறைப்பூண்டி .. | ஷை |
| 15. | வேதாரண்யம் .. | ஷை |
| 16. | பேராவூரணி .. | ஷை |
| 17. | சீர்காழி .. | ஷை |
| 18. | லால்குடி .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 19. | உடையார்பாளயம் | ஷை |
| 20. | குளித்தலை .. | ஷை |
| 21. | ஆலங்குடி .. | புதுக்கோட்டை மாவட்டம் |
| 22. | கொளத்தூர் .. | ஷை |
| 23. | திருமயம் .. | ஷை |
| 24. | ஆவுடையார் கோயில் | ஷை |
| 25. | திருமங்கலம் .. | மதுரை மாவட்டம் |
| 26. | வேடசந்தூர் .. | ஷை |
| 27. | கொடைக்கானல் .. | ஷை |
| 28. | முதுகுளத்தூர் .. | இராமநாதபுரம் மாவட்டம் |
| 29. | கமுதி .. | ஷை |
| 30. | திருவாடனை .. | ஷை |
| 31. | திருப்பத்தூர் .. | ஷை |

[1984 ஏப்ரல் 26

32. திருச்சுழி .. இராமநாதபுரம் மாவட்டம்
33. செங்கோட்டை .. திருநெல்வேலி மாவட்டம்
34. ஒட்டப்பிடாரம் .. ஷ
35. விளாத்திகுளம் .. ஷ
36. சங்கரன்கோவில் .. ஷ
37. திருவைகுண்டம் .. ஷ
38. சாத்தான்குளம் .. ஷ
39. ஏற்காடு .. சேலம் மாவட்டம்
40. ஓமலூர் .. ஷ
41. சங்ககிரி .. ஷ
42. திருச்செங்கோடு .. ஷ
43. ஊத்தங்கரை .. தருமபுரி மாவட்டம்
44. பால்கோடு .. ஷ
45. பென்னகரம் .. ஷ
46. தெங்கனிக்கோட்டை .. ஷ
47. அவினாசி .. கோவை மாவட்டம்
48. பல்லடம் .. ஷ
49. பெருந்துறை .. பெரியார் மாவட்டம்
50. பவானி .. ஷ
51. கோத்தகிரி .. நீலகிரி மாவட்டம்
52. தோவாளை .. கன்னியாகுமரி மாவட்டம்
53. கல்குளம் .. ஷ

(இ) தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வரிசை எண். 27, 29, 31 மற்றும் 41-ல் உள்ள ஊர்களிலும், வரிசை எண். 23-ல் உள்ள திருமயம் தாலுக்காவிலுள்ள பொன்னமராவதியிலும், வரிசை எண். 53-ல் உள்ள கல்குளம் தாலுக்காவிலுள்ள பத்மநாபபுரம் (அல்லது) தக்கலை ஆகிய ஊர்களிலும் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவ அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. விரைவில் இந்த இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படும்.

மேலே 'ஆ'வில் குறித்த 53 இடங்களில், கீழ்க்கண்ட ஊர்களில், தீயணைப்பு நிலையங்கள் நிறுவ அதற்கென ஒப்புதல் அளிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் விவரம் பின்வருமாறு :

| வரிசை எண். | தாலுக்கா. |
|---|---|
| 6 | செய்யார் |
| 8 | காட்டுமன்னார்கோவில். |
| 9 | திட்டக்குடி |



1984 ஏப்ரல் 26]

| வரிசை எண். | தாலுக்கா. |
|---|---|
| 13 | பாபநாசம் |
| 14 | திருத்துறைப்பூண்டி |
| 16 | பேராவூரணி |
| 17 | சீர்காழி |
| 22 | கொளத்தூர் (கீரனூர்) |
| 21 | ஆலங்குடி |
| 25 | திருமங்கலம் |
| 35 | விளாத்திகுளம் |
| 37 | திருவைகுண்டம். |

இவை தவிர, நிதிநிலைக்கேற்ப, புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

### 1981 ஆம் ஆண்டு நடந்த அகிம்சை நெறி மாநாடு.

12—(வினா எண் 10103)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில், 1981 ஆம் ஆண்டு அகிம்சை நெறி மாநாடு நடத்த, அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) சென்னையில் 17-4-1981 அன்று அகிம்சை நெறி மாநாடு நடந்தது. கோரிக்கைகள் ஏதும் அரசுக்குக் கிடைக்கப் பெற்றதாகத் தகவல் இல்லை.

(ஆ) பகவான் மகாவீர் அகிம்சா பிரச்சார சங்கத்தின் சார்பாக, இரண்டாவது தமிழ்நாடு அகிம்சை நெறி மாநாடு, 17-4-1981 அன்று சென்னை வேப்பேரியிலுள்ள ரித்தர்டன் சாலை சி.யு. ஷா பவனத்தில் நடந்தது. இம்மாநாடு மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன், (நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம்) மாண்புமிகு ஆர். வி. சுவாமிநாதன் (மத்திய அமைச்சர்)

[1984 ஏப்ரல் 26

திரு. சத்தார் சையது (நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம்), திரு. சூரியக்கோஸ் (முதல்வர், லயோலா கல்லூரி) மற்றும் பலரும் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். இந்த மாநாட்டில், பகவான் மகாவீர் பிறந்த நாளை அகிம்சை நாளாகக் கொண்டாட வேண்டும் என்றும், பிராணி வதைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தவறு செய்பவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்க சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும், பிராணிகள் கொலைக்கூடங்களை நவீனப்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும், அழகு சாதனங்களைத் தயாரிப்பதற்குப் பிராணிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்க, அகிம்சா பிரச்சார சங்கத்துடன் கலந்தாலோசித்து மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இறைச்சி உண்பது உடலுக்குக் கெடுதியை விளைவிக்கும் என்ற எச்சரிக்கையை இறைச்சி விற்பனை நிலையங்களில் விளம்பரப்படுத்த வேண்டுமென்றும், மத்திய அரசின் பள்ளிப் பாடப் புத்தகங்களில் புலால் உண்ணல், பிராணிகளுக்குக் கொடுமை ஆகியவை பற்றிய குறிப்புக்களை நீக்குதல் வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் விவாதிக்கப் பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

## மதுராந்தகம் ஒன்றியத்தில் 1980-81 ஆம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தின் மூலம் முடிக்கப்பட்ட வேலைகள்.

13—(வினா எண் 10481)—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியத்தில் 1980–81 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் சாலைகள், பள்ளிக் கட்டிடம் கட்டுதல், குடிநீர் வசதி, ஆதி திராவிடர் மயானப்பாதை, சிறுபாலங்கள், தாய்சேய் நல விடுதிகள், ஏரி மராமத்து வேலைகள் ஆகியவை எத்தனை எடுக்கப்பட்டன ? எத்தனை முடிக்கப்பட்டன ?

(ஆ) முடிக்கப்படாத வேலைகள் மீண்டும் மேற்கொள்ளப் படுமா ?

விடை—

(அ) விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிலுவையில் பணிகள் ஏதும் இல்லை.



1984 ஏப்ரல் 26]

### விவர அறிக்கை.

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 417 வேலைகளும் முடிக்கப்பட்டு விட்டன.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள். | முடிக்கப் பட்ட வேலைகள். |
|---|---|---|
| 1 இணைப்புச் சாலைகள் .. | 187 | 187 |
| 2 சிறுபாலங்கள் .. .. | 64 | 64 |
| 3 ஆதிதிராவிடர் காலனி மயானம் செல்லும் பாதை | 69 | 69 |
| 4 சிறுபாசன வசதி மேம்பாடு .. | 17 | 17 |
| 5 தாய்சேய் நல நிலையம் .. | 3 | 3 |
| 5 பள்ளிக் கட்டிடங்கள் .. | 17 | 17 |
| 7 பெண்களுக்கான கழிப்பிடங்கள் | 2 | 2 |
| 8 குடிநீர் வசதி .. .. | 58 | 58 |
| மொத்தம்.. | 417 | 417 |

## வேடசந்தூர், வட மதுரை, குஜிலியம்பாறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வேலைகள்.

14—(வினா எண் 10666)—திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேடசந்தூர் வட்டம், வேடசந்தூர், வட மதுரை குஜிலியம்பாறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 1980-81 ஆம் ஆண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் வேலைகள் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக கொடுத்த உணவுப் பொருள்களும் பணமும் முறையே எவ்வளவு ?

விடை—

(அ) வேடசந்தூர் வட்டம், வேடசந்தூர், வட மதுரை, குஜிலியம்பாறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 1980-81 ஆம் ஆண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) செய்யப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை மற்றும் செலவினம் கீழ்க்கண்டவாறு உள்ளன :—

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | வேலைகளின் எண்ணிக்கை. | வழங்கப் பட்ட அரிசி அளவு. | வழங்கப் பட்ட அரிசி கிரயம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | மெ. டன். | மெ. டன். |
| வேலைக்கு உணவுத் திட்டம்— | | | |
| 1 வேடசந்தூர் .. | 31 | 54,188 | 81,282 |
| 2 வட மதுரை .. | 26 | 29,173 | 43,759 |
| 3 குஜிலியம்பாறை .. | 117 | 127,040 | 1,89,563 |
| | 174 | 210,401 | 3,14,604 |

| வரிசை எண்ணும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். | முடிக்கப் பட்ட வேலைகளின் எண்ணிக்கை. | கூலியாக வழங்கப் பட்ட அரிசியின் அளவு. | வழங்கப் பட்ட அரிசியின் மதிப்பு. | செலவிடப் பட்ட பணம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | மெ.டன். | ரூபாய். | ரூபாய். |
| தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்— | | | | |
| 1 வேடசந்தூர் .. | 32 | 19.469 | 29,204 | 14,554 |
| 2 வட மதுரை .. | 5 | 5.617 | 9,268 | 2,391 |
| 3 குஜிலியம்பாறை .. | 57 | 76.674 | 1,15,713 | 1,15,228 |
| | 94 | 101.760 | 1,54,185 | 1,32,176 |





**திருச்சி மாவட்டம் கரூர் தாலுக்கா பாப்புலர் முதலியார் வாய்க்கால் அமைக்கும் செயற்குறிப்பு.**

15—வினா எண் 11549—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், கரூர் தாலூக்கா பாப்புலர் முதலியார் வாய்க்காலை சின்னக் காளிப்பாளையத்திலிருந்து வேடிச்சிப் பாளையம் வரை வெட்டித்தரும்படி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்போது பணி தொடங்கும் ?

(இ) அதனால், எத்தனை ஏக்கர் பாசனம் பெறும் ?

விடை—

(அ) கொடுக்கப்பட்ட கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள வாய்க்கால் பகுதி, பாப்புலர் முதலியார் வாய்க்காலில் கடைமடைப் பகுதிக்கு அப்பால், பட்டா நிலங்களில் பட்டாதாரர்களால் அனுமதி இல்லாமல் வெட்டப்பட்ட வாய்க்காலாகும். அருகாமையில் உள்ள நிலங்களிலிருந்து இந்த வாய்க்காலில் வடியும் வடிகால் நீரை அனுமதியில்லாமல் வெட்டப்பட்டுள்ள வாய்க்காலின் மூலம் எடுத்துச் சென்று தங்கள் நிலங்களுக்கு பாசனத்திற்குப் பயன்படுத்துகின்றனர். ஆதலால் இப்பகுதிக்கு சீரமைப்புப் பணிகளை பொதுப்பணித் துறை மேற்கொள்ள இயலாது.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

**1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வழக்குகளின் விவரம்.**

16—வினா எண் 11788—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1980–81 ஆம் ஆண்டில் தொழிற் கோர்ட்டுகளில் (Labour Court) தொழில் தகராறு பற்றிய வழக்குகளில் தொழிலாளர் சட்டத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்காத தொழில் அதிபர்கள் மீது துவங்கப்பட்ட தொழில் வாரியான வழக்குகள் எத்தனை ?

விடை—

1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் நீதி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வழக்குகளின் விவரம் தொழில் வாரியாக (industry wise) கீழே தரப்பட்டுள்ளது :—

| தொழில் விவரம். | தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வழக்குகள். 1980 | 1981 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 நெசவு (Textiles) .. ... | 69 | 101 |
| 2 பொறியியல் (Engineering) .. | 137 | 140 |
| 3 தோட்டங்கள் (Plantations) .. | 70 | 54 |
| 4 மோட்டார் போக்குவரத்து (Motor Transport) | 91 | 126 |
| 5 அச்சகம் (Printing Press) .. .. | 16 | 42 |
| 6 திரை அரங்கம் (Cinema Theatres) | 16 | 28 |
| 7 உணவு விடுதி (Catering Establishment) | 14 | 24 |
| 8 தோல் பதனிடுதல் (Tanneries) .. | 6 | 8 |
| 9 மற்றவை ... ... .. .. | 617 | 512 |
| மொத்தம் .. | 1,036 | 1,035 |

**காஞ்சிபுரம் சி.வி.எம். அண்ணாமலை பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் கையாடல்.**

17—வினா எண். 12161—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சிபுரம் சி.வி.எம். அண்ணாமலை பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தனி அலுவலர் பதவி காலத்தில் கையாடல் நடந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?



(ஆ) ஆம் எனில், அத் தனி அலுவலர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) எவ்வளவு தொகை அவரிடமிருந்து வசூல் செய்யப் பட்டுள்ளது ?

விடை —

(அ) காஞ்சிபுரம் சி.வி. எம். அண்ணாமலை பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் விசாரணை நடத்தியதில் அதில் கையாடல் நடைபெறவில்லை என்று தெரிய வந்தது.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்துகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்துதல்.**

18—வினா எண். 12268—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையுளிப்பாரா —

(அ) அனைத்து அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) பொருத்தப்பட்ட பிறகு விபத்துகள் குறைந்துள்ளனவா ?

(இ) பொருத்தப்பட்ட பிறகு வசூல் தொகை குறைந்துள்ளதா ? அதிகரித்துள்ளதா ?

விடை —

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் 500 பேருந்துகளுக்கு வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டுள்ளது. மற்ற பேருந்துகளிலும், படிபடியாகப் பொருத்தப்பட்டு வருகிறது.

(ஆ) ஆம்.

(இ) வசூல் தொகை அதிகரித்துள்ளது.

**கோவையில் காட்டூரிலும், செல்வபுரத்திலும் புதிதாக காவல் நிலையங்கள் அமைத்தல்.**

19—வினா எண். 12554—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவையில் காட்டூரிலும், செல்வபுரத்திலும் புதிதாக காவல் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை —

கோவை மாவட்டம் ''சிவானந்தா காலனியில்'' காட்டூர் காவல் நிலையம் ஒன்று உள்ளது. ஆகவே, காட்டூரில் காவல் நிலையம் அமைப்பதற்கு அவசியம் இல்லை. செல்வபுரம் என்ற இடத்தில் புதிதாக ஒரு காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு 1983-84 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

**மகாபலிபுரத்தில் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள்**

20—வினா எண். 12643 — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாபலிபுரத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புராதன மனிதர்கள் கற்காலத்தில் பயன்படுத்திய பழங்கால கருவிகள், ஆயுதங்கள், மத்திய மாநில புதைபொருள் ஆராய்ச்சி நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மகாபலிபுர சிற்பங்களை வழக்கமாக ஆய்வு செய்யும் பொழுது மத்திய அரசு துணைப் புதைப் பொருள் ஆராய்ச்சித் துறை ''அர்ச்சுனன் தவம்'' சிற்பத்திற்கு தெற்கு-தெற்கு-மேற்கு பகுதியில் புதிய கற்கால இடம் ஒன்று இருப்பதை கண்டு பிடித்துள்ளது. அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மண்ணின் மேற்பரப்பிலும், கற்குகைகளுக்கு அடியிலும் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த கருவிகள் சிதைவுற்றனவாகவும் கூர்மையானவையாகவும், கரடு முரடானவையாகவும் பளிங்கு போன்ற கற்களால் செய்யப்பட்டனவாகவும் இருந்தன.

**நியாய விலைக் கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் வழங்கும்போது ஜனத்தொகையைக் கணக்கிட்டு பொருட்கள் வழங்குதல்.**

21—வினா எண். 12780 :— திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கும் போது கிராமங்களின் ஜனத்தொகை அடிப்படையில் கணக்கிடப்பட்டு அனைத்து ஏழை மக்களுக்கும் உணவுப் பொருள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



விடை—

தமிழ் நாட்டில் சட்டப்பூர்வமான உணவு பங்கீட்டு முறை அமலில் இல்லை. இன்றியமையாப் பொருட்கள் வெளிச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றன. மக்கட் தொகையின் அடிப்படையில்எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் வழங்குவதற்கு இயலாது. ஏனெனில், உதாரணமாக, பாமோலின் ஒதுக்கீட்டை எடுத்துக் கொண்டால், மத்திய அரசு மாதத்திற்கு தற்போது சராசரி சுமார் 3,500 மெ. டன்கள் வீதம் ஒதுக்கீடு செய்து வருகின்றது. அதே போன்று லெவி சோதுனமயும் மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநிலத்திலுள்ள 113 இலட்சம் குடும்பக் கார்டுகளுக்கு கார்டுக்கு மாதமொன்றுக்கு ஒரு கிலோ வழங்குவதென்றாலும், சுமார் 11,300 டன்கள் தேவைப்படும். மண்ணெண்ணெய் தமிழ்நாட்டிற்கு போதுமான அளவு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. சர்க்கரை மட்டும் குடும்பத்தில் உள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வழங்கப்படுகிறது. அதனால் ஒதுக்கீடு செய்யப்படும் அளவு மிகவும் குறைவாக இருப்பதால், எல்லா இன்றியமையாப் பண்டங்களையும் மக்கட் தொகையின அடிப்படையில் தற்சமயம் வழங்க இயலாது.

**சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள காவலர் குடியிருப்புக்களில் வசிக்கும் போலீசார் வீடுகளில் மின்சாரத்துக்கு தனி மீட்டர் பொருத்துதல்**

22—வினா எண். 13484 : திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள கல்மண்டபம் காவலர் குடியிருப்பு, சிங்காரத் தோட்டம் காவலர் குடியிருப்பு மற்றும் பழைய வண்ணாரப்பேட்டை, தண்டையார்ப் பேட்டை காவலர் குடியிருப்புகளில் வசிக்கும் போலீசார் வீடுகளில் மின்சாரத்துக்கு தனி மீட்டர் வசதி இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்வீடுகளுக்கு தனி மீட்டர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள 279 குடியிருப்புகளிலும் (கல்மண்டபம்—45 வீடுகள், சிங்காரத் தோட்டம்—137 வீடுகள், பழைய வண்ணாரப்பேட்டை—54 வீடுகள், தண்டையார்ப்பேட்டை—43 வீடுகள்) மின் வசதி செய்யப்பட்டுள்ளன. ஆனால் இவ்வீடுகளுக்குத் தனி மீட்டர் பொருத்தப்படவில்லை. ஒவ்வொரு காவலர் வீட்டிற்கும் 20 யூனிட் மின்சாரம் செலவிட இலவச சலுகை உண்டு. இந்த இலவச சலுகைக்கும் மேற்பட்ட தொகை அவர்களிடமிருந்தே வசூலிக்கப்படுகின்றது. இவ் வீடுகளுக்கான தனி மீட்டர் வசதி நிதி நிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

[1984 ஏப்ரல் 26

**1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்கிய விவரம்.**

23— வினா எண். 13497 : திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1979—80, 1980—81 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தில் ஆதி திராவிடர்களுக்கு எத்தனை பேருக்கு வீடு கட்ட கடன் அரசு வழங்கியுள்ளது?

விடை—

கிராம வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 1979—80-ஆம் ஆண்டு 55,467 ஆதி திராவிட மக்களுக்கும், 1980—81-ஆம் ஆண்டு 96,929 ஆதி திராவிட மக்களுக்கும் வீடுகள் கட்ட கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களினால் கடன் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் அரைவை செய்ய நியமிக்கப்பட்ட அரைவை முகவர்கள்.**

24—வினா எண். 13575: திரு. இல. பலராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உணவு வழங்கும் நிறுவனம் மூலம் நெல்லை அரிசியாக ஆக்க 1978—79, 1979—80, 1980—81, 1981—82 ஆண்டுகளில் அனுமதி பெற்றவர்கள் எத்தனை நபர்?

(ஆ) இவர்களுக்கு வழங்கிய நெல் அளவு எவ்வளவு ?

(இ) இவர்களிடம் இருந்து திரும்பப் பெறாத நெல் அளவு ஆண்டு வாரியாக தாலுக்கா வாரியாக எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ), (இ)

| விபரம் (1) | 1978—79 (2) | 1979—80 (3) | 1980—81 (4) | 1981—82 (5) |
|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் செய்ய நியமிக்கப்பட்ட அரைவைமுகவர்கள் | — | இல்லை. | — | 56 |
| 2. 31—3—1982 முடிய அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நெல் அளவு .. .. | — | இல்லை. | — | 12,075—824 மெட்ரிக் டன்கள |
| 3. அரைவை முகவர்கள் திரும்பத் தராத அரிசியின் அளவு (31—3—1982 முடிய) | — | இல்லை. | — | 2,133.631 மெட்ரிக் டன்கள் |



1984 ஏப்ரல் 26]

| வட்டம். (1) | மெட்ரிக் டன்கள். (2) | கிலோ கிராம். (3) |
|---|---|---|
| குடியாத்தம் .. .. .. | 131 | 994 |
| வேலூர் .. .. .. | 1,163 | 717 |
| ஆரணி .. .. .. | 146 | 826 |
| போளூர் .. .. .. | 6 | 913 |
| திருவண்ணாமலை .. .. | 132 | 902 |
| ஆற்காடு .. .. .. | 422 | 036 |
| செய்யார் .. .. .. | 102 | 220 |
| வந்தவாசி .. .. .. | 27 | 023 |
| | 2,133 | 631 |

**காஞ்சியில் அரசு சார்பில் குளு குளு தியேட்டர் கட்டும் செயற் குறிப்பு.**

25—வினா எண். 13791—திரு. பி. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சியில் தமிழக அரசின் சார்பில் குளு குளு தியேட்டர் கட்ட உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**வேப்பம்பட்டு கிராமத்தில் இறைவை பாசன கூட்டுறவுத் திட்டத்தின் மூலம் முடிக்கப்பட்ட பணிகள்.**

26—வினா எண். 13864—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு ''கணியம்பாடி ஒன்றியம்'' வேப்பம்பட்டு கிராமத்தில் இறைவை பாசன கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் என்ன பணிகள் முடிக்கப்பட்டன?

(ஆ) இதனால் பயன்பெறும் விவசாயிகள் எத்தனை பேர்;

(இ) நிலத்தின் விஸ்தீர்ணம் யாது?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டம் கணியம்பாடி ஒன்றியம் வேப்பம்பட்டு கிராமத்தில் உள்ள பெரிய பாலம்பாக்கம் சிறு விவசாயிகள் இறைவை நீர்பாசன சங்கம் மாநில நிலவள வங்கியினால் அனுமதிக்கப்பட்டு வழங்கிய கடன் தொகை ரூ. 1,02,680-ன் மூலம் ரூ. 86,520 செலவில் 5 கிணறுகளை வெட்டியும் ரூ. 14,460 செலவில் மூன்று நீரேற்றுப் பொறிகளை வாங்கியும், ரூ. 1,700 செலவில் இரண்டு பம்புசெட் அறைகளையும் கட்டி உள்ளது. மேற்கண்ட பணிகள் தவிர அரசிடமிருந்து பெற்ற கடன் தொகை ரூ. 12,500 மற்றும் மான்யம் ரூ. 12,500-ன் மூலம் ரூ. 25,556·96 செலவில் தான்ய கிடங்கு ஒன்றையும் சங்கம் கட்டியுள்ளது.

(ஆ) இச் சங்கத்தில் மொத்தம் 136 விவசாய உறுப்பினர்கள் உள்ளனர். சங்கத்தால் வெட்டப்பட்ட ஐந்து கிணறுகளில் பயன்பெறக்கூடிய நிலையில் உள்ள மூன்று கிணறுகளால் ஐம்பது உறுப்பினர்கள் பயன்பெற்று வருகின்றனர். மற்ற இரண்டு கிணறுகள் பொய்த்துவிட்டன.

(இ) இச்சங்கத்தினரால் சேர்க்கப்பட்ட 146 ஏக்கர் நிலப் பரப்பில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே மூன்று கிணறுகளினால் நீர் இருக்கும் காலத்தில் பயன்பெற்று வருகிறது. மேற்கண்ட மூன்று கிணறுகளை விவசாயிகள் அதிக அளவில் பயன்பெறும் நோக்கத்தோடு ஆழப்படுத்துவதற்காக ரூ. 45,320 மாநில நிலவள வங்கியிடம் கூடுதல் கடனாகப் பெறும் வாய்ப்பு சங்கத்திற்கு ஏற்பட்டுள்ளபோதிலும், மாநில நிலவள வங்கியிடம் ஏற்கனவே பெற்ற கடன் ரூபாய் 1,02,680-ல் திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைத் தொகைகளில் ரூ. 55,547.96-ஐ இதுவரை செலுத்தாததால் கூடுதல் கடன் பெறும் தகுதியை இழந்து பணிகளை முடிக்க இயலாத நிலையில் சங்கம் உள்ளது. எனினும் இச் சங்கத்தின் செயல்திறனை ஊக்குவித்து நன்கு செயல்பட தேவையான நடவடிக்கைகளை வட ஆற்காடு மண்டல இணைப் பதிவாளர் மேற்கொண்டு வருகிறார்.

பெரியகுளம் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமான நிலம்.

27—வினா எண். 13934—திரு. கே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

(அ) பெரியகுளம் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமான நிலங்களின் விபரம் என்ன?

(ஆ) அதன் ஆண்டு வருமானம் என்ன?



விடை—

(அ) பெரியகுளம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு கீழ்க்காணும் விபரப்படி நிலங்கள் சொந்தமாக உள்ளன:—

| நஞ்சை. (1) | புஞ்சை. (2) | நகர்ப்புற நிலம். (3) |
|---|---|---|
| ஏ. செ. | ஏ. செ. | |
| 9.61 | 18.40 | 30,657 சதுர அடி. |

(ஆ)

| பசலி. | வருமானம். ரூ. பை. |
|---|---|
| 1388 | 23,051.00 |
| 1389 | 19,674.89 |
| 1390 | 21,905.98 |

பெரியகுளம் நகரில் துணை நீதிமன்றத்திற்கென கட்டிடமும் துணை நீதிபதிக்கென வீடுகட்டும் செயற் குறிப்பு.

28—வினா எண் 13940—திரு. கே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரிய குளத்தில் துணை நீதிமன்றத்திற்கென கட்டிடமும் துணை நீதிபதிக்கென வீடும் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(ஆ) ஆமெனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திண்டிவனம் வட்டம், ஆல கிராமம் ஏரியை நீர்த்தேக்க ஏரியாக மாற்றும் செயற் குறிப்பு.

29—வினா எண் 14027—திரு.கே.எம். தங்கமணி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திண்டிவனம் வட்டம், ஆலகிராமம் ஏரியை நீர்த்தேக்க ஏரியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1981–82-ல் ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்பட்ட விவரம்.

30—வினா எண் 14034—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறு உழவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள 1981–82-ல் மானியத்தொகை பயன் படுத்தப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1981–82-ல் ஒதுக்கப்பட்ட மானியம் முழுவதும் சிறு உழவர்கள் உட்பட எல்லா ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கும் செலவு செய்யப் பட்டது.

(ஆ) வினா எழாது.

சோளிங்கர் நகரில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

31—வினா எண் 14059—திரு. ஓ. கோபால் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கர் நகரில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசு ஆய்வு செய்துள்ளதா?

(ஆ) வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகரில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்ற கோரிக்கை பொது மக்களிடம் இருந்து வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?



விடை—அ, ஆ, மற்றும் இ

தமிழ் நாட்டில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவுவதற்கான முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஊர்களோடு மொத்தம் 24 ஊர்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவ உத்தேசித்துள்ளது. அவற்றுள் சோளிங்கரும் ஒன்று. அதன் முறை வரும்போது சோளிங்கரில் ஒரு தீயணைப்பு நிலையம் நிறுவப்படும்.

குருவராஜி பேட்டையில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற் குறிப்பு.

32—வினா எண் 14065—திரு. ஓ. கோபால் : மாண்புமிகு ஊரக அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் தாலூகா, குருவராஜிபேட்டை கிராமத்தில் சார்பதிவாளர் அலுவலகம் புதியதாக ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை—

15–7–1982 முதல் குருவராஜிபேட்டையில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

சாத்தூரில் காவலர் குடியிருப்புக்கள் கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு.

33—வினா எண் 14128—ரா. கு. பெருமாள் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் சாத்தூரில் காவலர் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் இது பற்றிய பரிந்துரை பரிசீலனையில் உள்ளது. அரசுக்கு அறிக்கை வந்தவுடன் தக்க முடிவு எடுக்கப்படும்.

**கோமளப்பேட்டை ஐயனாற்றில் வண்டிப்பாலம் கட்டும் திட்டம்.**

34—வினா எண் *14160*—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் பனையூர் பஞ்சாயத்தில் கோமளப்பேட்டையில் ஐயனாற்றில் வண்டிப் பாலம் கட்டுவதற்கு திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?*

*(இ) எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?*

விடை—

*(அ) இல்லை.*

*(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.*

**திருத்துறைப்பூண்டி நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு.**

35—வினா எண் 14168—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருத்துறைப்பூண்டி நகரத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க செயற்குறிப்புள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?*

விடை—

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறப்பதற்கான முன்னுரிமைப் பட்டியலில் திருத்துறைப்பூண்டியும் இடம் பெற்றுள்ளது. அதன்முறை வரும்பொழுது அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்படும்.*

**தொட்டிக்காடு கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு விவசாய நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கும் திட்டம்.**

36—வினா எண் 14207—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

*(அ) இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ஊணந்தாங்கல் பஞ்சாயத்தில் தொட்டிக்காடு கிராமத்திலுள்ள ஏழை ஆதிதிராவிடர் மக்கள் அனுபவித்து வருகின்ற விவசாய நிலங்களை பட்டா செய்து கொடுக்க அரசிடம் திட்டமுள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?*



விடை—

*(அ) மற்றும் (ஆ): நடைமுறையில் அமலில் உள்ள அரசு ஆணைகளின்படி மலைப்பிரதேசங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை மலைவாழ் மக்களுக்கு மட்டுமே அடமானம் செய்யக்கூடும். எந்த ஒரு பகுதியிலும் அங்கேயுள்ள மலைவாழ் மக்கள் இந்த அரசு நிலங்களை கேட்டு மனு செய்யவில்லையென்றாலோ, அல்லது அங்கே குடியேறியுள்ள ஆதி திராவிடர்களுக்கு அடமானம் செய்வதில் ஆட்சேபனையில்லையென்று தெரிவித்தாலோ அந்த நிலங்களை அவ்வாறு அடமானம் செய்வது பற்றி பரிசீலிக்கலாம். கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள ஊணந்தாங்கல் கிராமத்தில் நில ஆக்கிரமிப்பு செய்துள்ள மற்றவர்களை அப்புறப்படுத்தி நிலமில்லாத மலைவாழ் மக்களுக்கு பட்டா வழங்கக்கோரி மலைவாழ் மக்கள் சங்கத் தலைவர் மனு கொடுத்துள்ளார் என்றும் இந்த நிலையில் நில அடமானம் கோரிய ஆதி திராவிடர்களின் மனுக்கள் சேலம் மாவட்ட ஆட்சியரால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**வடாற்காடு மாவட்டத்தில் பொலிகாளை மையத்துடன் கூடிய கால்நடை மருத்துவமனைகள் அமைக்கும் திட்டம்.**

37—வினா எண். 14244—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

*(அ) வடாற்காடு மாவட்டத்தில் பொலிகாளை* (Bull Stations) *மையத்துடன் இயங்கி வரும் கால்நடை மருத்துவமனைகள் எங்கெங்குள்ளன ?*

*(ஆ) இந்தப் பொலிகாளை மையம் அமைப்பது எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறது ?*

*(இ) புதியதாக இவ்வாண்டு இந்த மாவட்டத்தில் பொலிகாளை மையங்கள் அமைக்க உள்ளதா ?*

விடை—

*(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பொலிகாளை மையத்துடன் இயங்கி வரும் மருத்துவ மனைகள் உள்ளன :—*

*(1) வேலூர்.*

*(2) திருவண்ணாமலை.*

*(3) வந்தவாசி.*

*(4) திருப்பத்தூர்.*

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள காளைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு அவற்றை செவ்வனே பயன்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளைப் பற்றி ஆய்ந்து அவற்றினை நடைமுறையில் பயன்படுத்திக் கொள்ளவும் எதிர்கால கால்நடை பராமரிப்புத் திட்ட மேம்பாட்டிற்கு இவை பயன்படும் வகையில் செய்யவும் தக்க திட்டங்களைப் பரிந்துரை செய்யும் பொருட்டு முன்னாள் கால்நடை பராமரிப்பு இயக்குநரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு வயது முதிர்ந்த மற்றும் பணிக்கு லாயக்கற்ற காளைகளுக்கான பராமரிப்பு செலவை குறைக்கும் பொருட்டு, அவற்றை நீக்கவும் கால்நடை மருத்துவ மனை நிலையங்களில் உபயோகமுள்ள பொலி காளைகளைக் கொண்டும் பிற இடங்களிலிருந்து மாற்றம் செய்தும் 59 பொலிகாளை நிலையங்கள் அமைக்கவும் பரிந்துரை செய்தது. 1977 ஆம் ஆண்டில் இக்குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில் உபரியான பொலிகாளை நிலையங்களை மாற்றம் செய்து, தனியே 59 பொலிகாளை நிலையங்கள் கால்நடை பராமரிப்புத் துறையால் அமைக்கப்பட்டது.

(இ) இல்லை.

**அரியலூர் அண்ணா நகர் அரசு ஊழியர் குடியிருப்புகளுக்கு விலை நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு.**

**38—வினா எண் 14255—திரு. த. ஆறுமுகம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் அண்ணா நகரில் அரசு ஊழியர்களுக்காக கட்டப்பட்ட 125 வீடுகளுக்குக் கடந்த 1978 ஆம் ஆண்டில் இருந்து இது வரையில் விலை நிர்ணயம் செய்யப்படாமலேயே இருப்பதால் உடனடியாக மதிப்புத் தொகையினை நிர்ணயம் செய்து ஊழியர்கட்கு அறிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**விடை—**

அரியலூர் அண்ணா நகரில் 125 வீடுகள் கட்டுவதற்கான செலவினங்களை முடிவு செய்து அதற்கான பட்டியல்களை ஒப்பந்தக்காரர் காலம் தாழ்த்தி சமர்ப்பித்ததினால் அரியலூர் அண்ணா நகரில் கட்டப்பட்ட வீடுகளுக்கு இறுதி விலை வரையறுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. தற்பொழுது 68 வீடுகளுக்கு வீட்டின் இறுதி விலை நிர்ணயிக்கப்பட்டு வீடு ஒதுக்கீடுதாரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள வீடுகளுக்கு இறுதி விலை நிர்ணயிக்கப்பட்டு வீட்டின் ஒதுக்கீடுதாரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிடும்.



**புதுகை மாவட்டம் ஆலங்குடியில் முன்சீப் கோர்ட் அமைக்கும் திட்டம்.**

**39—வினா எண் 14298—திரு. பெ. திருமாறன் :** மாண்புமிகு சட்டம் – தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுகை மாவட்டம் ஆலங்குடியில் முன்சீப் கோர்ட் அமைக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

**விடை—**

இல்லை.

**புதுக்கோட்டையில் உள்ள தொழு நோயாளிகள் விடுதியை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.**

**40—வினா எண் 14305—திரு. பெ. திருமாறன் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் உள்ள தொழுநோயாளிகள் விடுதியை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

**விடை—**

புதுக்கோட்டையில் உள்ள தொழுநோயாளிகளுக்காக கட்டப்பட்டுள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தை வேறு இடத்திற்கு மாற்ற எவ்வித நடவடிக்கையும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**ஆலங்குடியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.**

**41—வினா எண் 14315—திரு. பெ. திருமாறன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுகை மாவட்டம் ஆலங்குடியில் தீயணைப்பு நிலையம் நிறுவ அரசு முன் வருமா ?

**விடை—**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆலங்குடி அரசினால் ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்டு உள்ள முன்னுரிமைப் பட்டியலில் (முதன்மை பட்டியலில்) 11-வது இடம் வகிக்கிறது. அதன் முறை வரும்போது ஆலங்குடியில் ஒரு தீயணைப்பு நிலையம் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[1984 ஏப்ரல் 26

**தூத்துக்குடி பகுதியில் கார்பைடு தொழிற்சாலை துவங்கும் செயற் குறிப்பு.**

42—வினா எண் 14361—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு சட்டம்-தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தூத்துக்குடி பகுதியில் கார்பைடு தொழிற்சாலைகளைத் துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**மதுராந்தகம் வட்டம், பவுருசீர் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு.**

43—வினா எண் 14372—திரு. எஸ். டி. உகம்சந்த் மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் பவுருசீர் கிராமத்தில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது முதல் செயலுக்குவரும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் வட்டம் பவுருசீர் கிராமத்தில் காவல் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு ஏதும் இப்பொழுது இல்லை. பவுருசீர் கிராமத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள கூவத்தூர் கிராமத்தில் இருந்த புறக்காவல் நிலையம் 21—12—1981-ல் இருந்து முழுக்காவல் நிலையமாக இயங்கிவருகிறது.

**தோட்டிகள், தலையாரிகள் ஆகியோருக்கு ஓய்வுகால ஊதியம் வழங்கும் திட்டம்.**

44—வினா எண் 14677—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்திலுள்ள தோட்டிகள், தலையாரிகள், மொத்த எண்ணிக்கையில் வயதானவர்கள் என்ற பெயரில் விலக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை யாது ?



136268

ஏப்ரல் 26]

(ஆ) இவர்களுக்கு ஓய்வு கால ஊதியம் கொடுக்கப்பட்டு கிறதா ?

விடை—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 29,265 பேர்கள். இவர்களில் 60 வயதினைக் கடந்து பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 2,718 ஆகும். இவர்களின் விவரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| (அ) கிராமக் காவலர்கள் | .. | .. | 1,332 |
| (ஆ) கிராமப் பணியாளர்கள் | .. | .. | 1,360 |
| (இ) பாசனக் காவலர்கள் | .. | .. | 26 |
| | | | 2,718 |

(ஆ) கிராம ஊழியர்கள் பகுதிநேர ஊழியர்களே. இவர்களுக்கு ஓய்வூதிய விதிகள் பொருந்தா. எனவே இவர்களுக்கு ஓய்வுகால ஊதியம் கொடுக்கப்படவில்லை.

**திண்டுக்கல் பகுதியில் பட்டுப்பூச்சி வளர்ப்பிற்கு ஊக்கம் அளிக்கும் நடவடிக்கைகள்.**

45—வினா 14691—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை மாவட்டம், திண்டுக்கல் பகுதியில் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை—

விவர அறிக்கை ஒன்று தனியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

அறிக்கை.

திண்டுக்கல் பகுதியில் பட்டுப்பூச்சி வளர்ப்பிற்கு ஊக்கம் அளிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் வருமாறு :

1. அரசு பட்டுக்கூடு அங்காடி, திண்டுக்கல் ;

திண்டுக்கல் பகுதியில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளை விவசாயிகளிடமிருந்து வாங்கி அவற்றை தனியார் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்திடவும், விவசாயிகள் தங்கள் பட்டுக் கூடுகளை நல்ல விலைக்கு விற்று அதிக வருமானம்

பெற்றுடவும் திண்டுக்கல்லில் ஒரு அரசு பட்டுக்கூடு அங்காடி ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.. இந்த அங்காடி கடந்த ஆண்டு 1981-82-ல் 16,969 கிலோ பட்டுக் கூடுகளை வாங்கி விநியோகம் செய்தது.

2. பட்டு நூற்பு பயிற்சி நிலையம், திண்டுக்கல் :

சிறு விவசாயிகள் மற்றும் நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களுக்குப் பட்டு நூற்புத் தொழிலில் இரண்டு மாத பயிற்சி இந் நிலையத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 100 வீதம் இரண்டு மாதத்திற்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1981-82ல் இத்திட்டத்தின் மூலம் 48 நபர்கள் பயிற்சி பெற்று பயனடைந்தனர். இந்த ஆண்டு, 1982-83-ல் 22 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இதற்காக அரசு ரூ. 1.26 இலட்சம் வழங்கியுள்ளது.

3. பட்டு வித்தகம் :

தரமான பட்டு முட்டைகளை உற்பத்தி செய்ய ஒரு பட்டு வித்தகம் திண்டுக்கல்லில் நிறுவப்பட்டுள்ளது. இந்த வித்தகம் 1,44,767 முட்டைகளை உற்பத்தி செய்து மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் விநியோகித்துள்ளது. நடப்பு ஆண்டில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 45,998 முட்டைகள் உற்பத்தி செய்து விநியோகித்து உள்ளது.

4. பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பு தொழில் கூட்டுறவுச் சங்கம், திண்டுக்கல் :

திண்டுக்கல் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்போர் தொழில் கூட்டுறவுச் சங்கம், 15—2—1981லிருந்து செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் பட்டுக் கூடுகளை வாங்கி நூலாக மாற்றியும் பட்டுத் தொழிலுக்குத் தேவையான உபகரணங்களை எளிதில் குறைந்த விலைக்குப் பட்டு விவசாயிகளுக்குப் கிடைக்க ஏற்பாடு செய்து தருகின்றது. இச்சங்கம் 1981-82 ஆம் ஆண்டில் 235 கிலோ கிராம் பட்டு உற்பத்தி செய்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரு மாதங்களில் 104.95 கிலோ கிராம் பட்டு உற்பத்தி செய்துள்ளது.

5. வெளி நாட்டின் பட்டுப்புழு வளர்ப்பு நிலையம் :

இத்திட்டத்தின் கீழ் சிறுமலைப்புதூரில் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் வித்துப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வெளி நாட்டின் வித்துக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு அவை திண்டுக்கல் பட்டு வித்தகத்திற்கு முட்டைகள் தயாரிக்க அனுப்பப் படுகிறது. பாச்சலூரில் உள்ள வனத்துறைக்குச் சொந்தமான



10 ஏக்கர் நிலத்தைப் பட்டு வளர்ச்சித் துறைக்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் வழங்கியுள்ளது.

6. பட்டு வளர்ப்பு பயிற்சி உதவித் தொகை :

திண்டுக்கல் கோட்டத்தில் 1981-82-ல், 400 பட்டு விவசாயிகள் 367.95 ஏக்கரில் முசுக்கொட்டை பயிர் செய்துள்ளனர். அவர்களில் 228 பேர்களுக்கு மூன்று மாத காலம் பட்டுப்புழு வளர்ப்பில் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டது. மாதம் ஒன்றுக்கு ரூ. 150 உதவித் தொகையும், பயிற்சி உபகரணங்களுக்கும் சேர்ந்து ரூ. 1,36,800 மானியமாக பயிற்சியாளர்களுக்கு வழங்கப் பட்டது. நடப்பு ஆண்டான 1982-83-ல் திண்டுக்கல் கோட்டத்தில் 600 ஏக்கரில் மல்பரி பயிர் செய்யவும், 360 பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

7. பட்டு வளர்ப்புக்கான மானியம் :

1981-82-ல் திண்டுக்கல்லில் பட்டுப்புழு வளர்ப்பு சாதனங்கள் மற்றும் குடில் அமைத்த 180 விவசாயிகளுக்கு வங்கிக் கடன் ரூ. 9,00,000 பரிந்துரை செய்து; அவர்களுக்கு அரசு மான்யமாக ரூ. 2,12,975 வழங்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிலும் பட்டு விவசாயிகளுக்குத் தொடர்ந்து மானியம் வழங்கப்படும்.

8. மாவட்ட பட்டு வளர்ப்பு மையம் :

மதுரை மாவட்டத்தின் பட்டு வளர்ச்சி கேந்திரமாக திண்டுக்கல் நகரைத் தேர்வு செய்து அங்கு மாவட்ட பட்டு வளர்ப்பு மையமும், உதவி பட்டு வளர்ச்சி இயக்குனர் அலுவலகமும் நிறுவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பட்டு வளர்ப்பு மையம் விரைவில் அமைந்திட நில ஆர்ஜித வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. 1982-83ல் திண்டுக்கல் கோட்டத்தில் 600 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலமாக 3,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

### மதுரை இராசாசி மருத்துவமனையில் கட்டு கட்டும் துணிகள் தட்டுப்பாட்டைப் போக்கும் நடவடிக்கை.

46—வினா 14707—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை இராசாசி மருத்துவமனையில் எலும்பு முறிவு நோய் பிரிவில் தரமான கட்டு கட்டும் (Bandage) துணிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், தரமான துணிகள் வழங்க அரசு முன் வருமா ?

விடை—

தரமான கட்டு கட்டும் துணி கூட்டுறவு நிறுவனத்திலிருந்து வருடத்திற்கு 5 முதல் 6 இலட்சம் மீட்டர்கள் வரை அரசு இராசாசி மருத்துவ மனையில் வாங்கப்படுகின்றது. ஆதலால் கட்டு கட்டும் துணிக்குத் தட்டுப்பாடு ஏதும் இல்லை. நோயாளிகளிடமிருந்து இது குறித்து புகார் ஏதும் வரவில்லை.

### வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் வழக்கறிஞர்களுக்கு ஓய்வறை கட்டும் செயற்குறிப்பு.

47—வினா எண். 14757— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு சட்டம்-தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள சப்-டிவிசனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் எதிரில் வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறை கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உடனே கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள்.

48—வினா எண் 14780—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்கள் Revenue Poromboke) எத்தனை ஏக்கர்கள் உள்ளன?

(ஆ) அதில் ஆக்கிரமிப்புகள் எத்தனை ஏக்கர் ?

(இ) நஞ்சை எவ்வளவு ? புஞ்சை எவ்வளவு ?





விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் அரசு புறம்போக்கு நிலங்கள் 430,18.14 ஏக்கர்கள் உள்ளன.

(ஆ) அவற்றில் ஆக்கிரமிப்புகள் விவரம்—

| | |
|---|---|
| (1) சாகுபடி நிலங்கள்— | |
| (1) ஆட்சேபணையற்ற இனங்கள்— | ஏக்கர். |
| (1) தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சைத் தரிசு .. .. .. | 3,418.56 |
| ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | 9,332 |
| (2) இதர புறம்போக்குகள் .. | 3,831.58 |
| ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | 11,326 |
| (2) ஆட்சேபணையுள்ள இனங்கள் .. | 13,948.01 |
| ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | 52,705.00 |
| ஆக மொத்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை .. .. .. | 73,363.00 |
| ஆக்கிரமிக்கப்பட்ட மொத்த பரப்பு | 21,198.15 |
| 2. விட்டுமனை— | |
| (1) ஆட்சேபணையற்ற இனங்கள் : | |
| (1) நத்தம் புறம்போக்கு பரப்பு .. | 144.64 |
| ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | 2,822.00 |
| (2) இதர புறம்போக்கு பரப்பு .. | 229.49 |
| ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | 3,501 |
| (2) ஆட்சேபணையுள்ள இனங்கள் .. | 721.86 |
| ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | 10,768 |
| ஆக மொத்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை .. .. .. | 17,091.00 |
| மொத்த ஆக்கிரமிப்பிலுள்ள பரப்பு.. | 1,095.99 |

இந்த ஆக்கிரமிப்புகளில் ஆட்சேபணையுள்ள இனங்களைக் காலி செய்யவும், ஆட்சேபணையற்ற இனங்களை வரன்முறை செய்து, ஒப்படை செய்யவும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

**திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம மருந்தகங்களில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களை பணியமர்த்தும் திட்டம்.**

49—வினா எண். 14790—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எங்கெங்கு கிராம மருந்தகங்கள் இருக்கின்றன?

(ஆ) அவைகளில் எத்தனை மருந்தகங்களில் எம்.பி.பி.எஸ். பட்டதாரி மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள்?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கண்ட 13 இடங்களில் கிராம மருந்தகங்கள் இருக்கின்றன:—

1. பாளையங்கோட்டை.
2. மானூர்.
3. தென்காசி.
4. பாப்பாக்குடி.
5. கடையம்.
6. நாங்குனேரி.
7. ராதாபுரம்.
8. ஆழ்வார்திருநகரி.
9. சாத்தான்குளம்.
10. உடன்குடி.
11. கோவில்பட்டி.
12. விளாத்திகுளம்.
13. ஒட்டப்பிடாரம்.

(ஆ) எம்.பி.பி.எஸ். பட்டதாரிகள் ஒருவரும் இல்லை.



**தூத்துக்குடி அண்ணா நகர் கதர் நெசவுத் தொழிலாளர்களுக்கு 1980-81 ஆம் ஆண்டுக்கான சேமநல நிதி வழங்கக் கோருதல்.**

50—வினா எண். 14809—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள அண்ணா நகர் கதர் நெசவுத் தொழிலாளர்களுக்கு 1980-81 ஆம் ஆண்டுக்கான (வெல்ஃபேர் ஃபண்டு) சேமநல நிதி வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடனடியாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்தொகை 27—2—1982 அன்று வழங்கப்பட்டது.

**ஒவ்வொரு மாவட்டத்திலும் காச நோய் மருந்துவமனை அமைக்கும் திட்டம்.**

51—வினா எண். 14930—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் காச நோய் மருத்துவமனை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(அ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது?

விடை—

(அ) மருத்துவமனை சிகிச்சை, நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தேவை. பெரும்பாலான காச நோயாளிகள் வீட்டு சிகிச்சை முறையிலேயே குணமடையலாம். அத்தகைய சிகிச்சை அனைத்து மருத்துவ மனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருந்தகங்களிலும் மாவட்ட காசநோய் தடுப்பு இயக்கத்தின் கீழ் அளிக்கப்படுகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**வேடசந்தூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு.**

52—வினா எண் 14940—திரு. வேடசந்தூர் வி பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூரில் மாவட்ட முன்சீப் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

விளாங்குடி— திருமானூர் சாலையில் கொள்ளிடம் பாலத்தில் சுங்க வரி வசூலிக்கும் திட்டம்.

53— வினா 14974— திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தாலுக்கா விளாங்குடி—திருமானூர் கொள்ளிடம் பாலத்தில் 31–3–1982 வரை எவ்வளவு தொகை சுங்க வரி வசூலிக்கப்பட்டது ?

(ஆ) இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு வசூலிக்க அரசு உத்தேசித்துள்ளது ?

விடை—

(அ) திருவையாறு தாலுக்கா, விளாங்குடி—திருமானூர் சாலையில் கொள்ளிடம் பாலத்தில் 16–3–1974 முதல் சுங்க வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆக 1974–75 முதல் 1981–82 (31–3–1982) வரை ரூ. 6,57,985.71 பை. சுங்கத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பாலம் கட்ட செலவழிக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 65.70 இலட்சம் மற்றும் 7½ சதவீதம் வட்டித் தொகை அரசுக் கணக்கில் ஈடு செய்யும் வரை இச்சுங்கத் தொகை வசூலிக்கப்படும்.

திருவையாறு தொகுதியில் 1981 ஆம் ஆண்டில் கிராமப்புற வீடுகட்டும் சங்கம் மூலமாக ஆதிதிராவிட மக்களுக்குக் கடன் வழங்கிய விவரம்.

54— வினா 14977— திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி 1981-ம் ஆண்டில் கிராமப்புற வீடு கட்டும் சங்கம் மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனை வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) எத்தனை வீடுகள் இதுவரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ?

விடை—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு சட்ட மன்றத் தொகுதியில் 1981 ஆம் ஆண்டு கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலம் 663 ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டது.

(ஆ) 30–9–1983 அன்று வரை 153 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



திருவையாறு தொகுதி செங்கிப்பட்டி, கல்லணை ஆகிய ஊர்களில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம்.

55— வினா 14980— திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவையாறு தொகுதி செங்கிப்பட்டி, கல்லணை ஆகிய ஊர்களில் காவல் நிலையங்கள் அமைக்கக் கோரி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, செங்கிப்பட்டியில் உள்ள புறக்காவல் நிலையத்தை தரம் உயர்த்தி, காவல் நிலையமாக மாற்றியும், கல்லணையில் எல்லைக்குட்பட்ட (தொகூர் கிராமம்) ஒரு புதிய காவல் நிலையமாக ஏற்படுத்தியும் 1–7–1982 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 1686-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

திருக்காட்டுப்பள்ளியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.

56— வினா 14981— திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவையாறு தொகுதி திருக்காட்டுப்பள்ளியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருக்காட்டுப்பள்ளியில் புதிய தீயணைப்பு நிலையம் நிறுவ கோரிக்கை ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

பழனி அரசு மருத்துவமனையில் காச நோய் சிகிச்சைப் பிரிவு தொடங்கும் திட்டம்.

57— வினா 14985— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி அரசு மருத்துவமனையில் காசநோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை துவக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

[1984 ஏப்ரல் 26

விடை—

(அ) தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பழனி நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்.

58—வினா 14993—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எத்தனை ?

(ஆ) தற்போது எத்தனை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன?

விடை—

(அ) தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதி திட்டத்தின்கீழ் நீதித்துறை அலுவலர்களுக்காக, மாவட்ட முன்சீப் அவர்களுக்கு ஒரு குடியிருப்பும், சப் மாஜிஸ்திரேட் அவர்களுக்கு ஒரு குடியிருப்பும் வருவாய்த் துறை அலுவலர்களுக்காக தாசில்தார் அவர்களுக்கு ஒரு குடியிருப்பும், ஆக மொத்தம் மூன்று குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 31.70 ஏக்கர் நிலப்பரப்பில் சிறிய நகரங்களில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டும் திட்டத்தினை வீட்டு வசதி வாரியம் செயற்படுத்த திட்டமிட்டுள்ளது.

பழனியில் உள்ள துணைப்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் விவரம்.

59—வினா 14994—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பழனியில் உள்ள துணை பதிவாளர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு மாத வாடகை எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பழனியில் உள்ள 2 நிர். இணை சார்பதிவாளர் அலுவலகம் அரசு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. ஆனால் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் தனியார் கட்டிடத்தில் ரூ. 1,100 மாத வாடகையில் இயங்கி வருகிறது.



1984 ஏப்ரல் 26]

பழனி தாலுக்கா காவல் நிலையம், நகரின் மையப் பகுதியில் அமைக்கும் திட்டம்.

60—வினா 14996—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலுக்கா காவல் நிலையம், நகரின் மையப் பகுதியில் இல்லாமல் ஒதுக்குப்புறமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை இப்பொழுது இருக்கும் இடத்திலிருந்து மாற்றி, பேருந்து நிலையம் அருகில் அமைத்துத் தரப்படுமா ?

விடை—

(அ) பழனி தாலுகா காவல் நிலையம் ஊரைவிட்டு விலகியிராமல், பழனி நகரின் மையப் பகுதியிலும், பழனி பேருந்து நிலையத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பழனி நகரில் பெண்கள் பாலிடெக்னிக்குக்கு சோதனைக்கூடம் அமைக்கும் திட்டம்.

61—வினா எண். 15009—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் உள்ள பெண்கள் பாலிடெக்னிக்குக்கு சோதனைக் கூட வசதி இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) பழனி நகரில் உள்ள பெண்கள் பாலிடெக்னிக்கிற்கு சோதனைக் கூட வசதி உண்டு. இப்பாலிடெக்னிக்கில் பௌதிகம், இரசாயனம் ஆகியவற்றுக்கான செய்முறைப் பயிற்சிக் கூடங்கள் உடனடியாக அமைக்கப்பட்டு அரசு தேர்வுகளும் (செய்முறைப் பயிற்சி) நன்முறையில் நடைபெற்றன.

(ஆ) 1982–83 இரண்டாம் ஆண்டுக்கான சோதனைக் கூடங்களுக்கு தேவையான சிவில், எலக்ட்ரானிக்ஸ் பொருள்கள் வாங்குவதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சாதனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. பல சாதனங்களும், வாங்கப்பட்டுவிட்டன.

### சட்டக் கல்விக்கு நிரந்தரமான இயக்குநர் நியமனம்.

62—வினா எண். 15013—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது சட்டக் கல்விக்கு நிரந்தரமான இயக்குநர் மற்றும் முதல்வர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன ?

(இ) எப்பொழுது நியமிக்கப்படுவார்கள் ?

விடை—

(அ) தற்போது நிரந்தரமாக சட்டக் கல்வி இயக்குநர் இல்லை என்பது உண்மை. ஆனால் சென்னை சட்டக் கல்லூரிக்கு நிரந்தரமாக முதல்வர் உள்ளார்.

(ஆ) மற்றும் (இ) சட்டக் கல்வி இயக்குநர் பதவிக்கு தகுந்த ஒருவரை விரைவில் நியமிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

### டெல்லி கேட் ரோட்டை செப்பனிடும் செயற்குறிப்பு.

63—வினா எண். 15054—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு விஷாரம் பைபாஸ் ரோட்டையும், திருவத்திபுரம் ரோட்டையும் இணைக்கும் டெல்லி கேட் ரோடு செப்பனிடும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செப்பனிடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு விஷாரம் பைபாஸ் ரோட்டையும், திருவத்திபுரம் ரோட்டையும் இணைக்கும் டெல்லி கேட் ரோடு செப்பனிடும் பணி 1982-83-ம் ஆண்டுக்கான இரண்டாம் பாகத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவக்கப்படும்.

### மணிமுத்தா நதி அணைக்கு கீழே பாலம் கட்டும் செயற்குறிப்பு.

64—வினா எண் 15078—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி-பழைய சிறுவங்கூர் சாலையில் மணிமுத்தா நதி அணைக்குக் கீழே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?





(ஆ) ஆம் எனில், எப்போது பாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### சங்கராபுரம் தொகுதியைச் சேர்ந்த சில பகுதிகளில் பிற்பட்டோர் நல விடுதி கட்ட உத்தேசித்தல்.

65—வினா எண் 15084—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியைச் சார்ந்த கோமண்டார் குடி, தேவபாண்டலம், சங்கராபுரம் ஆகிய இடங்களில் உள்ள பிற்பட்டோர் நல விடுதிக்குச் சொந்த கட்டிடம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) கோமண்டார்குடி மற்றும் தேவபாண்டலம் ஆகிய இடங்களில் உள்ள பிற்பட்டோர் நல விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட முன் மொழிவுகள் எதுவும் பரிசீலனையில் இல்லை. சங்கராபுரத்தில் பிற்பட்டோர் நல விடுதி இல்லை.

(ஆ) கேள்வி எழ இடமில்லை.

### வடபொன்பரப்பி காவல் நிலையத்துக்குக் கட்டிடம் கட்ட மற்றும் காவலர் குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு.

66—வினா எண் 15088—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள வடபொன்பரப்பி காவல் நிலையத்துக்குக் கட்டிடம் கட்டவும் காவலர் குடியிருப்பு கட்டவும் அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### தேவக்கோட்டை அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமனம்.

67—வினா எண் 15198—திரு.ச. அங்குசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டை அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமிக்கப்படவில்லை என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தேவக்கோட்டை அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் 5—3—1982—லிருந்து பணியாற்றி வருகிறார்.

### வேளாம்பிக்காணியில் பழங்குடியினர் குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் அமுலாக்குதல்.

68—வினா எண் 15209—திரு. டி. மணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேளாம்பிக்காணியில் குடியிருக்கும் பழங்குடியினரின் குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டம் அமுலாக்கப்பட்டு உள்ளதா ?

விடை—

வேளாம்பிக்காணியில் குடியிருக்கும் பழங்குடியினரிடமிருந்து தங்கள் குடிசைகளுக்கு மின் இணைப்பு வேண்டி எவ்வித விண்ணப்பமும் வரவில்லை. விண்ணப்பங்கள் வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### நீலகிரி மாவட்டம் மேல் கூடலூரில் இலங்கை அகதிகளுக்கு வீட்டு மனைப்பட்டா செய்து தரும் செயற்குறிப்பு.

69—வினா எண் 15299—திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் மேல் கூடலூர் கோக்கால் ச. எண். 1268-ல் உள்ள தரிசு நிலங்களை இலங்கை அகதிகளுக்கு வீட்டுமனைக்காக பட்டா செய்து தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



விடை—

(அ) மற்றும் (ஆ) : கூடலூர் கிராமம் சாலையில் ச. எண். 1268-23 என்னும் சாலையில் 3.39.5 எக்டேர் நிலம் நத்தம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம் கோத்தர்கள் எனப்படும் ஆதிவாசி பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிவாசிகள் கோக்கால் பகுதியில் பல நூற்றாண்டுகளாக வசித்து வருகின்றனர். மேற்குறிப்பிட்ட சாலையில் அவர்களின் குல தெய்வமான இரண்டு கோயில்கள் உள்ளன. இந்த ஆதிவாசி மக்கள் இந்த இடத்தில் திருவிழா மற்றும் இதர மத சடங்குகளை நடத்தி வருகின்றனர். எனவே இந்த நிலம் இவர்களின் பிரத்தியேகமான உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கை அகதிகள் மற்ற இனத்தவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்தால் ஆதிவாசிகள் மத சடங்குகள் செய்வது போன்ற காரியங்களில் மற்றவர்கள் தலையீடு செய்து அவர்களின் பொது சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்பட வழி ஏற்படும். எனவே இச்சாலையில் இதர இனத்தவர்களுக்கு இடம் ஒதுக்குவது சரியல்ல என கருதப்படுகிறது. எனினும் கூடலூர் பகுதிகளில் பல்வேறு இடங்களில் இலங்கை அகதிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த 12—8—1982 அன்று கோழிப்பாலம் என்னும் இடத்தில் கூடலூர் பகுதியில் வாழும் 182 இலங்கை அகதிகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

### மதுரை மின் திட்டத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கோருதல்.

70—வினா எண் 15343—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மின் திட்டத்தில் விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு இணைப்புக் கேட்டு ஒவ்வொரு கோட்டத்திலும் எத்தனை பேர் 1982 மார்ச் முடிய மனு செய்து உள்ளனர்?

(ஆ) மின் இணைப்பு எந்த ஆண்டுக்குள் கொடுத்து முடிக்கப்படும்?

விடை—

(அ) 1982-ம் வருடம் மார்ச் முடிய மதுரை மின் திட்டத்தில் விவசாய விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கோரி மனு செய்துள்ளவர்களின் கோட்டவாரிய எண்ணிக்கை விவரம்:—

| கோட்டம். (1) | மனு செய்திருப்பவர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| கோ. புதூர் .. .. .. | 2,018 |
| நகரகம்-மதுரை .. .. .. | 2,375 |
| சமயநல்லூர் .. .. .. | 1,189 |
| திருமங்கலம் .. .. .. | 1,840 |
| வத்தலகுண்டு .. .. .. | 2,357 |
| பெரியகுளம் .. .. .. | 1,127 |
| தெற்கு-திண்டுக்கல் .. .. | 3,061 |
| வடக்கு-திண்டுக்கல் .. .. | 3,371 |
| சின்னமானூர் .. .. .. | 811 |
| தேனி .. .. .. .. | 865 |
| மொத்தம் .. | 19,014 |

(ஆ) 1976-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரை விண்ணப்பம் செய்தவர்களுக்கு மின் இணைப்பு இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குப்பின் விண்ணப்பம் செய்துகொண்டவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எந்த ஆண்டுக்குள் கொடுக்க முடியும் என்று தற்போது திட்டவட்டமாகக் கூற இயலாது.

**நகராட்சிகளுக்குத் தேவையான எழுது பொருள்களை மொத்தமாக வாங்கி நகராட்சிகளுக்கு வழங்கும் செயற்குறிப்பு.**

71—வினா எண் 15412—திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகளுக்குத் தேவையான எழுது பொருள்கள், தளவாடங்கள் எந்தமுறையில் வாங்கப்படுகின்றன?

(ஆ) மொத்தமாக வாங்கி நகராட்சிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

(அ) ஒப்பந்தப்புள்ளிகள் (tencers) கோரப்பட்டு குறைந்த வீதத்தில் உள்ளதை ஏற்றுக் கொள்ளும் முறை கடைபிடிக்கப்படுகிறது.

(ஆ) எழுதுபொருள், தளவாடங்கள் மொத்தமாக வாங்கி நகராட்சிகளுக்கு வினியோகிக்கும் முறையை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**நெடுஞ்சாலை ஓரங்களில் நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை.**

72—வினா எண் 15429—திரு. ச. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை ஓரங்களில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்ற அரசு முடிவு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் பொதுமக்களுக்கு இடைஞ்சலாகவும் சாலைப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் உள்ளதால் அவைகளை அகற்றுவது அவசியம் எனவும், எனவே காலவரை அறிவிப்பு கொடுத்து இவ்வாக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றுவது மட்டும் அல்லாமல் மேற்கொண்டு ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுக்க நிழல்தரும் மரங்களைப் பயிரிட்டு வேலிகள் அமைக்கலாம் எனவும் நெடுஞ்சாலைத் துறையின் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கும், கோட்டப் பொறியாளர்களுக்கும் 16—12—1981 நாளிட்ட சுற்றறிக்கையில் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கிராமப் பணித்துறை அறிவுரை வழங்கியுள்ளார்.

**மதுரை மாவட்டம் சேடப்பட்டி, ஏழுமலை, நாகையாபுரம் காவல் நிலையங்களின் காவலர்களுக்கு குடியிருப்பு கட்டும் திட்டம்.**

73—வினா எண் 15437—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி, ஏழுமலை, நாகையாபுரம் காவல் நிலையங்களின் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தரும் பரிசிலனை அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

[1984 ஏப்ரல் 26

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் சேடபட்டி, ஏழுமலை, மற்றும் நாகையாபுரம் காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

தீயணைப்புப் படைகளின் இயந்திரங்களைச் சீர் செய்ய தனியாக பணிமனை ஒன்று அமைக்கும் திட்டம்.

74—வினா எண் 15468—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீயணைப்புப் படைகளின் இயந்திரங்களைச் சீர் செய்ய தனியாக பணிமனை ஒன்று அமைக்கப்படுமா ?

விடை—

தீயணைப்புத் துறை ஊர்திகள் மற்றும் கருவிகள் இவற்றில் ஏற்படும் பழுதுகளைச் சீர் செய்ய ஏற்கெனவே ஒரு பணிமனை சென்னையில் இயங்கி வருகின்றது.

தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளில் கயத்தாறு ஒன்றியத்தில் செலவு செய்யப்பட்ட தொகை விவரம்.

75—வினா எண் 15475—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (N.R.E.P.) 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் கயத்தாறு ஒன்றியத்தில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளின் விவரம் என்ன ?

விடை—

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் செலவு செய்யப்பட்ட தொகை விவரம்:

| | | ரூ. |
|---|---|---|
| 1. | 1980-81 .. | 1,99,603 |
| 2. | 1981-82 .. | 7,20,500 |



1984 ஏப்ரல் 26]

(ஆ) அதன் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளின் விவரம்:

| வரிசை எண்ணும் வேலைகளின் விபரமும், (1) | 1980-81. (2) | 1981-82. (3) |
|---|---|---|
| 1 நீர்ப்பாசனம் .. .. .. | 6 | 12 |
| 2 இணைப்புச் சாலைகள் .. .. | 35 | 48 |
| 3 மரம் வளர்ப்பு .. .. .. | 2 | 2 |
| 4 குடிநீர் .. .. .. .. | 7 | 10 |
| 5 கட்டிடங்கள் .. .. .. | 6 | 6 |

மதுரை வைகை மேம்பாலம் மீனாட்சி மகளிர் கல்லூரிக்கு அருகே நடைபெறும் விபத்துக்கள்.

76—வினா எண் 15583—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வைகை மேம்பாலம் மீனாட்சி மகளிர் கல்லூரிக்கு அருகில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

(அ) குறிப்பிட்ட இடத்தில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுகின்றன என்பது சரியல்ல. 1981 ஆம் ஆண்டில் இவ்விடத்தில் 8 சாலை விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் 3 விபத்துக்களில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

(ஆ) சாலை விபத்துக்களைத் தடுப்பதற்காக வேகத் தடுப்பு முனைகள் ஏற்படுத்தியிருப்பதுடன் சாலை விதிகளை மீறுபவர் மீது காவல் துறையினர் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கீழ்ச்செழுவனூர் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்தும் திட்டம்.

77—வினா 15695—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் காவல் துறை ஆய்வாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட கீழ்ச் செழுவனூர் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்த செயற் குறிப்புள்ளதா ?

[1984 ஏப்ரல் 26

(ஆ) ஆம் எனில், எப்போது காவல் நிலையமாக உயர்த்தப்படும் ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் காவல் துறை ஆய்வாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட கீழ்ச் செழுவனூர் புறக்காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாக உயர்த்தும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**1981-82ல் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பிரதான சாலைகளில் நடப்பட்டுள்ள மரங்கள்.**

78— வினா 15718— திரு. ச. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பிரதான சாலைகளில் எத்தனை மரங்கள் 1981—82 இல் நடப்பட்டது ?

(ஆ) எந்த இன மரங்கள் அதிகம் நடப்படுகிறது ?

விடை—

(அ) 70.25 இலட்சம் மரங்கள்.

(ஆ) பனை மரங்கள் அதிகம் நடப்படுகிறது.

**திருவாடானை தாலுக்கா அனந்தூரில் காவல் நிலையம் திறக்கும் செயற்குறிப்பு.**

79—வினா 15723— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

திருவாடானை தாலுக்கா அனந்தூரில் காவல் நிலையம் திறக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

திருவாடானை தாலுக்காவில் உள்ள அனந்தூரில் காவல் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**அரியலூரில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு.**

80—வினா 15736—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?



1984 ஏப்ரல் 26]

விடை—

அரியலூரில் ஒரு ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் நிறுவுவதற்கு அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. புதிய தீயணைப்பு நிலையங்களுக்கான ஊர்திகள் கட்டுமானம் செய்யப்பட்டு பெறப்பட்டவுடன் அரியலூரில் தீயணைப்பு நிலையம் நிறுவப்படும்.

**1981 ஆம் வருட ஆரம்பத்திலிருந்து 1982 ஆம் வருடம் ஏப்ரல் மாத இறுதி வரை உயர்நீதி மன்றத்தில் முடியாமல் இருந்த தொழிலாளர் வழக்குகள் பற்றிய விவரம்.**

81— வினா 15928—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1981 முதல் 1982 ஏப்ரல் முடிய ஹைக் கோர்ட்டில் எத்தனை தொழிலாளர்கள் வழக்குகள் முடியாமல் இருக்கின்றன?

விடை—

| | |
|---|---|
| 1981 ஆம் வருட ஆரம்பத்தில் நிலுவையிலுள்ள மொத்த வழக்குகள். | 1,105 |
| நிறுவனங்கள் .. .. .. .. .. | 664 |
| முடிவடைந்தவை .. .. .. .. .. | 417 |
| 1981 ஆம் ஆண்டு இறுதி வரையில் முடிவடையாத வழக்குகள். | 1,352 |
| 1982 ஆம் வருடம் ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் வரையில்— | |
| நிறுவனங்கள் .. .. .. .. .. | 68 |
| முடிவடைந்தவை .. .. .. .. .. | 88 |
| 1982 ஆம் வருடம் ஏப்ரல் மாத இறுதி வரை முடியாத வழக்குகள். | 1,332 |

[1984 ஏப்ரல் 26

**ஏழைப் பெண்கள் தட்டெழுத்து பயிற்சி பெற சமூக நலத் திட்டத்தின் மூலம் உதவும் திட்டம்**

**82—வினா 15933—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழைப் பெண்கள் தட்டெழுத்து பயிற்சி பெற சமூக நலத் திட்டத்தின் மூலம் உதவும் திட்டத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் 1982 மார்ச் முடிய எவ்வளவு பேர் பயன்பெறுகின்றனர்?

விடை—

ஏழைப் பெண்கள் தட்டெழுத்து பயிற்சி பெற சமூக நலத் துறையால் நடத்தப்படும் பயிற்சி திட்டத்தின் கீழ் வட ஆற்காடு மாவட்டத்தில் 1982 மார்ச் முடிய பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 272.

**வட ஆற்காடு மாவட்டத்தில் தியணைப்புப் பயிற்சிப் பள்ளி துவங்கும் திட்டம்.**

**83—வினா 15934—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் தியணைப்புப் பயிற்சிப் பள்ளி துவங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

**திருவண்ணாமலையிலிருந்து ஆராஞ்சி கிராமம் வரை டவுன் பஸ் விடும் செயற்குறிப்பு.**

**84—வினா 15941—திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையிலிருந்து (வழி பள்ளிகொண்டாப்பட்டு) ஆராஞ்சி கிராமம் வரை டவுன் பஸ் விட வேண்டும் என்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

விடை—

இல்லை. ஆயினும் திருவண்ணாமலையிலிருந்து காந்தி நகர், பள்ளிகொண்டாப்பட்டு, சம்பத்தனூர், ஆராஞ்சி வழியாகச் சாணிப்பூண்டி வரை நகரப் பேருந்து விடப்படும்.



1984 ஏப்ரல் 26]

**பேராவூரணி அருகில் பழுப்பு நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டுள்ள விவரம்.**

**85—வினா 15961—திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு சட்டம்-தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அருகில் பழுப்பு நிலக்கரி படிவங்கள் உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி வட்டத்திலுள்ள மாவடுகுறிச்சி கிராமத்தில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், குடிநீர் வளம் அறிவதற்கான துறப்பணப்பணிகள் மேற்கொண்டபொழுது தரைமட்டத்திலிருந்து 213-223 அடி ஆழத்தில் பழுப்பு நிலக்கரி காணப்பட்டது. இப்பழுப்பு நிலக்கரி குறைந்த அளவு சாம்பல் சத்துடன் கூடிய உயர்வெப்ப சக்தி கொண்டதாய் இருப்பதாக சோதனை மூலம் தெரிய வருகின்றது. 223 அடிக்குக் கீழ் உள்ள புவியமைப்பியல் படிவங்கள் மிகக் கடினமானதாக அமைந்துள்ளதால் தொடர்ந்து துறப்பணப்பணி மேற்கொள்ளப்படவில்லை. தவிர, இப்பகுதிக்கு அருகாமையில் இடப்பட்ட மற்ற இரண்டு துறப்பணத் துளைகளிலும் பழுப்பு நிலக்கரி படிவ அமைப்புகள் தென்படவில்லை. எனவே, இங்கு காணப்படும் பழுப்பு நிலக்கரி படிவ அமைப்பு ஒரே இடத்தில் மட்டும் காணப்படும் சிறு அமைப்பு என்றும், பொருளாதார ரீதியில் முக்கியத்துவ மற்றதொன்றாகும் என்றும் கருதப்படுகிறது.

**சைக்கிள் ரிக்ஷாவில் அளவுக்கு மீறி பள்ளி சிறுவர்களை ஏற்றிச் செல்வதைத் தடை செய்யும் செயற்குறிப்பு.**

**86—வினா 15983—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைக்கிள் ரிக்ஷாவில் அளவுக்கு மீறி பள்ளி சிறுவர்களை ஏற்றிச் செல்வதைத் தடைசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

தனியார் பள்ளிகளுக்குச் சொந்தமான சைக்கிள் ரிக்ஷாக்கள் வாடகை வண்டிச் சட்டத்தின் கீழ் வரவில்லை. எனவே, இத்தகைய சைக்கிள் ரிக்ஷாக்களில் அளவுக்கு மீறி பள்ளிச் சிறுவர்களை ஏற்றிச் செல்வதைத்

நடை செய்ய இயலாது. எனினும், வாடகை சைக்கிள் ரிக்ஷாக்களில் அளவுக்கு மீறி பள்ளிச் சிறுவர்களை ஏற்றிச் செல்லும் குற்றத்தைச் செய்யும் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

### ராஜா அண்ணாமலைபுரம் மற்றும் கோவிந்தசாமி நகர் ஆகிய இடங்களில் ஏற்பட்ட தீவிபத்து.

87—வினா 15999—திரு. கு. ரமணி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரம் தெற்குப் பகுதியில் உள்ள ராஜா அண்ணா மலைபுரம், கோவிந்தசாமி நகரில் 28—6—1982-ந் தேதி ஒரு தீ விபத்தில் 100 வீடுகளும், இதே பகுதியில் 25—6—1982 தேதி 86 வீடுகளும் இராயப்பேட்டை உசேன் நகரில் 27—6—1982 தேதி 110 வீடுகளும் தீ விபத்தில் எரிந்து சாம்பலாகிப் போனது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இந்த தீ விபத்துக்கள் ஏற்படக் காரணம் என்ன?

(இ) குடிசைகள் தீக்கிரையாகி வருவதை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம். அவற்றின் விவரம்.

| விபத்து நடந்த நாள். | தீ விபத்து நேர்ந்த இடம். | தீ விபத்துக் குள்ளான குடிசை வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 25-06-1982 | கோவிந்தசாமி நகர்— இராஜா அண்ணாமலைபுரம் .. | 28 |
| 27-06-1982 | டை .. | 81 |
| | மொத்தம் .. | 109 |
| 27-06-1982 | உசேன் நகர், இராயப்பேட்டை .. | 112 |

(ஆ)—

| இடம். | விபத்தின் காரணம். |
|---|---|
| (1) | (2) |
| 1 கோவிந்தசாமி நகர், இராஜா அண்ணாமலைபுரம். | அடுப்பிலிருந்து கிளம்பிய தீப் பொறி. |
| 2. உசேன் நகர், இராயப்பேட்டை | சிமினி இல்லாத விளக்கு. |



(இ) தீ விபத்தைத் தடுக்க எடுத்த நடவடிக்கைகள்.

(1) வழிநடை மற்றும் சாலைப் பரிசோதனைகளின்போது தீயணைப்புத்துறையினர் பொது மக்களுக்கு தீ விபத்துக்களைத் தடுப்பது எவ்வாறு என அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்குகின்றனர்.

(2) தீத்தொண்டு நாளின்போது மக்களிடம் நேரிடையாக வர்சி கள் மூலம் பிரசாரம்.

(3) குடிசைப் பகுதிகளுக்கு அருகில் உள்ள தீயணைப்பு நிலையங் கள் எல்லாக் காலங்களிலும் விழிப்புடன் தயார் நிலையில் இருத்தல்.

(4) தீ விபத்துக்களால் அதிக சேதம் விளையாமல் இருக்க பல உரிய நடவடிக்கைகள் எடுக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

### ஈரோடு நகரில் புதிதாக மேல்நிலைப் பள்ளிகள் அமைக்கும் திட்டம்.

88—வினா 16002—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகரத்தில் எத்தனை மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன?

(ஆ) புதிதாக மேல்நிலைப்பள்ளி ஏற்படுத்த அரசிற்கு உத்தேசம் உண்டா?

(இ) புதிதாக ஒரு மேல்நிலைப்பள்ளி ஆரம்பிக்க புது பள்ளிக்கும் பிறிதொரு பள்ளிக்கும் இடையே எத்தனை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும்?

விடை—

(அ) ஆறு.

(ஆ) நடப்பு ஆண்டில் (1982—83) இல்லை.

(இ) அவ்வாறு தொலைவு அடிப்படையை மட்டும் கருத்தில் கொண்டு புதிய மேல்நிலைப்பள்ளிகள் திறக்க அனுமதிக்கப்படுவதில்லை. அந்தந்த வட்டாரங்களிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை முதலியவற்றையும் கருத்திற்கொண்டே அந்த அனுமதி வழங்கப்படுகிறது.

**மதுராந்தகம் மற்றும் லத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் 1982 ஜூன் முடிய குடிசைக்கு ஒரு விளக்கு கோரி வந்த விண்ணப்பங்கள்.**

89— வினா 16035— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் மற்றும் லத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில், 1982 ஜூன் மாதம் முடிய குடிசைக்கு ஒரு விளக்கு திட்டம் கோரி வந்த விண்ணப்பங்கள் எத்தனை நிலுவையில் உள்ளன ?

(ஆ) 1981-82 ஆம் ஆண்டில் மேற்படி ஒன்றியங்களில் குடிசைக்கு ஒரு விளக்கு அளிக்கப்பட்டது எத்தனை ?

விடை—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் மற்றும் லத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் 1982 ஜூன் மாதம் முடிய குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் கோரி வந்த தகுதியான விண்ணப்பங்களில் நிலுவையில் உள்ளவை (டிபாசிட் கட்டியவர்கள்) :—

| | |
|---|---|
| மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் .. .. | 167 |
| லத்தூர் ஊராட்சி ஒன்றியம் .. .. | 276 |

(ஆ) 1981-82 ஆம் ஆண்டில் மேற்படி ஒன்றியங்களில் ஒரு விளக்கு அளிக்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை :—

| | |
|---|---|
| மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் .. .. | 1,392 |
| லத்தூர் ஊராட்சி ஒன்றியம் .. .. | 1,310 |

**கோவை சட்டக் கல்லூரிக்கு சொந்த கட்டிடம் கட்டும் திட்டம்.**

90— வினா 16036—திரு. கு. ரமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சட்டக் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோவை சட்டக் கல்லூரிக்கு கட்டிடம் கட்ட 1980-81 ஆம் ஆண்டு இரண்டாம் நிலைத் திட்டத்தில் 5 இலட்சம் ரூபாய் செலவு ஒப்பளிக்கப்பட்டது. இந்தக் கட்டிடம் கட்ட தகுந்த ஒரு இடத்தினை தேர்வு செய்து அதனை கையகப்படுத்தத் தேவையானவற்றை விரைவு அறிவிக்கைகளை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். நிலம் கையகப் படுத்தப்பட்டதும் கட்டிடம் கட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்படும்.



**ஆற்காடு தொகுதி கலவை பேரூராட்சியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.**

91— வினா 16095—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆற்காடு தொகுதி கலவை பேரூராட்சியில் பெண்கள் உயர் நிலைப் பள்ளி நிறுவ அரசிடம் உத்தேசம் உண்டா ?

விடை :

இல்லை.

**கொடைக்கானல் மலைப் பகுதிக்கு பஸ் வசதி.**

92— வினா 16096—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் இருந்தும், கொடைக்கானலில் இருந்தும் கொடைக்கானல் மலைப்பகுதிக்கு பயணிகள் செல்ல போதிய பஸ் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) இக்குறையைப் போக்க அதிக பஸ் போக்குவரத்து செய்து தரப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கொடைக்கானலுக்கு சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் பாதைகள் குறுகலாக இருப்பதால் சிறிய பேருந்துகள் தான் செல்ல முடியும். இதைக் கருத்தில் கொண்டு பாண்டியன் போக்குவரத்துக் கழகம் கொடைக்கானலில் பணிமனை ஒன்று கட்ட ஏற்பாடு செய்துள்ளது. பணிமனை வேலை முடிந்ததும், கொடைக்கானலில் இருந்து அதன் சுற்றுப்புறங்களுக்கு சிறிய பேருந்துகள் விடப்படும்.

**வட ஆற்காடு ஆலங்காயத்தில் இருந்து கோயிலூர் வரை நகர பேருந்து விடும் திட்டம்.**

93 — வினா 16152—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு ஆலங்காயத்தில் இருந்து ஜம்னாமருத்தூர் வழியாக கோயிலூர் வரை நகர பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1984 ஏப்ரல் 26

**கோவையில் நடைபெற்ற ஹிந்து மாநாட்டின் கோரிக்கைகள்.**

94—வினா 16155— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோவையில் நடைபெற்ற ஹிந்துமாநாட்டின் கோரிக்கைகள் அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரமென்ன ?

(இ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.
(ஆ) மற்றும் (இ) : கேள்விக்கு இடமில்லை.

**திருவண்ணாமலை நகரில் சினிமா திரையரங்கம் கட்ட N. O. C. விண்ணப்பித்தவர்கள் விவரம்.**

95—வினா 16173— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு திருவண்ணாமலை நகரத்தில் 1980–81, 1981–82, 1982–83-ல் சினிமா திரையரங்கம் கட்ட N.O.C. விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) N.O.C. வழங்கப்பட்டவர் எத்தனை பேர் ?

விடை—

(அ) வடார்க்காடு திருவண்ணாமலை நகரத்தில் திரையரங்கம் கட்ட N.O.C.-க்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையின் விவரங்கள் பின்வருமாறு :—

| வருடங்கள். | |
|---|---|
| 1980–81 .. .. .. .. | 1 |
| 1981–82 .. .. .. .. | 5 |
| 1982–83 .. .. .. .. (16—9—1982 வரை). | ஒன்று மில்லை. |
| மொத்த எண்ணிக்கை .. | 6 |



1984 ஏப்ரல் 26]

(ஆ) N. O. C. வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையின் விவரங்கள் பின்வருமாறு :—

| வருடங்கள். | |
|---|---|
| 1980–81 .. .. .. .. | ஒன்றுமில்லை. |
| 1981–82 .. .. .. .. | 2 |
| 1982–83 .. .. .. .. (16-9-1982) வரை | 1 |
| மொத்த எண்ணிக்கை, .. | 3 |

**திருப்பூரில் கோட்ட வளர்ச்சி அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு**

96—வினா 16187— திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் கோட்ட வளர்ச்சி அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருப்பூர் சப் ஸ்டேஷனை விரிவாக்கும் செயற்குறிப்பு.**

97—வினா 16193— திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 'சப்ஸ்டேஷனை' விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து எடுக்கப் பெற்ற நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.
(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**கிரிப்பாறை அரசு ரப்பர் தோட்ட ரப்பர் தொழிற்சாலைக்கு ரப்பர் கிரீப் அடிக்க வாங்கப்பட்ட இயந்திரம்.**

98—வினா 16221—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீரிப்பாறை அரசு ரப்பர் தோட்ட ரப்பர் தொழிற் சாலைக்கு ரப்பர் கிரீப் அடிக்கும் இயந்திரம் எப்போது வாங்கப் பட்டது.

(ஆ) இந்த இயந்திரம் செயல்படுத்த இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் ?

விடை :

(அ) 1980 ஆம் ஆண்டு மே மாதத்தில் வாங்கப்பட்டது.

(ஆ) இவை இன்னும் மூன்று மாத காலத்தில் செயல்படுத் தப்படும்.

**வாசுதேவநல்லூர் தொகுதியில் சில இடங்களில் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதி கட்ட செயற்குறிப்பு.**

99—வினா 16542—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி சிவகிரி, கரிவலம்வந்த நல்லூர், புளியங்குடி ஆகிய இடங்களில் ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி சிவகிரி, கரிவலம்வந்தநல்லூர், புளியங்குடி ஆகிய இடங்களில் ஆதி திராவிடர் மாணவர் விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மேற்சொன்ன இடங்களில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு பிரேரணை அனுப்புவக்கு மாறு நெல்லை மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரை இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் அவர்கள் கேட்டுள்ளார்கள்.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



**2. தகவல் கோரல்.**

**திருச்சி கரூர் மில் தொழிலாளர்களது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவது.**

**திரு. என். சங்கரய்யா :** துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சில நாட்களுக்கு முன்பு, நீண்டகாலமாக நடைபெற்று வரக்கூடிய கரூர் மில் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்தைப் பற்றி, பல எதிர்க் கட்சிகள் சேர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த நேரத்தில், மாண்புமிகு முன்னவர் அவர்கள் இறுதியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, தொழிலாளர் அமைச்சர் அவர்களையும், எதிர்க்கட்சிப் பிரதிநிதி களையும் வைத்துக் கொண்டு, அதைப்பற்றி பேசுவதற்கு ஏற்பாடு செய் வதாகச் சொன்னார்கள். இன்று வரையில் நடக்கவில்லை. அது குறித்து எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில், பாராளு மன்ற ஜனநாயக மரபில், எதிர்க்கட்சிகள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதில் முன்னவர் அவர்கள் தலையிட்டு பதில் சொல்லும் போது, அதற்கு மதிப்பு இருக்கிறது என்று நினைக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எங்களுடைய உணர்வுகளை, முன்னவர் அவர்கள் தெரிவித்து, இன்றைக்காவது அதைப்பற்றி பேச ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நானும் அதே விஷயம் குறித்துத்தான் கருத்துத் சொல்ல இருக்கிறேன். அன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அதன்மீது உறுப்பினர்கள் பேசிய பிறகு, அமைச்சர் அவர்கள் பதிலளித்து பேசியபிறகு, மாண்புமிகு முன்னவர் அவர்கள் தலையிட்டு, முதலமைச்சர் அவர்கள் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். சொல்லி ஒரு வாரம் ஆகிறது. இன்றைக்காவது முன்னவர் அவர்கள் சொன்ன வாக்குறுதியின் படி, முதலமைச்சர் அவர்கள் மூலமாக, இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண உரிய ஏற்பாடுகளை செய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தத்தான் நான் எழுந்து நின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கரூர் ஆலைத் தொழிலாளர்கள் பிரச்னையைப் பற்றி, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கான காரணங்கள் என்னென்ன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கங்கள் தந்து, அதனுடைய முடிவிலே நான் எடுத்துச் சொன்ன போது, மாண்புமிகு

உறுப்பினர்கள் கூறுகின்ற கருத்துக்களையும், அவர்களுடைய உணர்வுகளையும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவிப்பேன் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய முக்கியமான உறுப்பினர்களையும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் வைத்துக் கொண்டு, பிரச்னையைத் தீர்ப்பதற்கு என்னென்ன முறைகளைக் கையாளலாம், என்னென்ன முறைகள் மேற்கொள்ளலாம் என்பது பற்றி முடிவு எடுக்க வாய்ப்பாக இருக்கும், அதற்கான ஏற்பாடுகள் செய்கிறேன் என்று நான் சொன்னேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்த அவையிலே நடந்த குறிப்புகளையும் எடுத்துச் சொன்ன கருத்துக்களையும் எடுத்துச் சொல்லி எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு தொழிலாளர் அமைச்சரும் முதலமைச்சராகிய தாங்களும் உட்கார்ந்து அதற்கு என்ன முன்னேற்பாடுகள் செய்யலாம் என்று முடிவு எடுத்துக் கொண்டால் அதன்படி நடவடிக்கைகள் தொடர்வதற்கு வசதி ஏற்படும் என்று சொன்னேன். அவர்கள் இதற்கு ஒப்புக் கொண்டு அதற்கு ஒரு நேரம் குறிப்பிடுகிறேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு டெல்லிக்குப் போய்விட்டு வந்ததற்குப் பிறகு தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வருவதற்கில்லை. நேற்றுக் கூடக் கேட்டேன். வந்தவுடன் பேசலாம் என்று சொன்னார்கள். வந்தவுடன் நேரம் தருகிறேன் என்று சொல்லியிருப்பதால் வந்தவுடன் நேரம் குறிப்பிடுவார்கள். அதைத் தெரிந்து நான் அறிவிக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளைக்கு திருநெல்வேலி, நாகர்கோவில் நேர் போவதாகச் சொல்கிறார்கள். அசெம்பிளி இன்னும் இரண்டு நாட்கள்தான் நடக்கப் போகிறது. 100 நாட்களாக அந்தத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. என். சங்கரய்யா :** துணைத் தலைவர் அவர்களே, அசெம்பிளிக் கூட்டம் 2 நாட்கள்தான் நடக்க இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் நேர் போவதாகச் சொல்கிறார்கள். அவர்களோடு தொடர்பு கொண்டு இன்றைக்குத் தெரிவித்தால் நல்லது. கரூரிலே தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சொந்தப் பிரச்சினை அல்ல, இது ஒரு பொது ஜனங்கள் பிரச்சினை.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய உணர்வுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்து இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு நேரம் குறிப்பிட்டு பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் உங்களுக்கு இங்கே சொல்லியிருக்கிறேன். மீண்டும் இப்போது சொல்கிற கருத்துக்களையும் அவர்களிடத்திலே சொல்கிறேன். ஆனால் முதலமைச்சர் அவர்களை வற்புறுத்தி தந்தே தீரவேண்டுமென்று சொல்வதற்கில்லை. ஆகவே அவர்கள் தந்தால் அதைப்பற்றி குறிப்பிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது வெளிப்படுத்தியிருக்கிற உணர்வுகளையும் தெரிவிக்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் 246-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு ஒரு முன்னறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை பேரவையில் எழுப்ப அனுமதி அளிக்குமுன் இதில் அவை உரிமை மீறல் எப்படி எழுகிறது என்பதை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். வி. என். சோமு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 23—4—1984 அன்று நடைபெற்ற வீட்டு வசதி வாரிய மானியத்தில் கலந்துகொண்டு எங்கள் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. புருஷோத்தமன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அண்மையில் உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பைப் படிக்க முற்பட்டபோது உடனே அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் குறுக்கிட்டு அந்தப் பிரச்சனை உயர்நீதி மன்றத்தில் அப்பீலில் இருக்கிறது என்றும், ஆகவே அதுகுறித்துப் பேசுவது சப்ஜுடிஸ் என்றும் கூறினார். ஆனால் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு சப்ஜுடிஸ் என்றும் கூறினார். ஆனால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 9585 of 1982. ரிட்மனு மீது எந்தவிதமான ரிட் அப்பீலும் இதுவரை அனுமதிக்கப்படவில்லை; எந்த ஸ்டே ஆர்டரும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைக்கு ரிட் அப்பீல் மனு அங்கே தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படிக் குறிப்பிட்டு கழக உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் பேச இருந்த கருத்துக்களைப் பேசவிடாது தடுத்ததோடு அவைக்கு ஒரு தவறான தகவலைக் கொடுத்ததன் மூலம் அவை உரிமையை மீறியிருக்கிறார்.

அது மட்டுமல்ல. என்னுடைய பணிவான கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்ற முறைகளை வகுத்துத் தந்திருக்கிற Kaul and Shakdhar மிகத் தெளிவாக 911-வது பக்கத்திலே குறிப்பிட்டிருப்பதைப் படிக்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை நீங்கள் படிக்க வேண்டாம். உரிமை மீறல் எப்படி ஏற்பட்டுள்ளது என்பதை மட்டும் நீங்கள் சொன்னால் போதும்.

**திரு. என். வி. என். சோமு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் சோமு பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது திரு. சோமு பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன். (குறுக்கீடு) உரிமைப் பிரச்சினை என்ன என்பதை மட்டும் தான் பேச வேண்டும். (குறுக்கீடு) அன்றைக்கு தலைவரால் அளிக்கப்பெற்ற தீர்ப்புக்குள் போக முடியாது. உயர்நீதி மன்றத் தீர்ப்பைப் பற்றியும் விவாதிக்க முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 23 ஆம் தேதி சொன்னது, இந்தத் தீர்ப்பை எதிர்த்து 21 ஆம் தேதி மேல் முறையீடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதாகும் (குறுக்கீடு) I stand by it.

**திரு. என். வி. என். சோமு :** நான் விசாரித்த வரையில்—எந்த விதமான மேல் முறையீடும் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை திட்டவட்டமாக நான் தெரிவிக்கிறேன். I stand by it.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்று தான் அன்றைக்கும் நான் சொன்னேன். இப்போதும் அதைத்தான் சொல்கிறேன்.

**திரு. என். வி. என். சோமு :** நான் விசாரித்த வரையில் அந்த அப்பீலின் மீது எந்த ஸ்டே ஆர்டரையும் உயர்நீதி மன்றம் கொடுக்கவில்லை. எந்த அப்பீலும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அரசாங்கம் செய்து இருப்பது எல்லாம் என்ன என்றால், ஒரு எஸ்.ஆர். உங்களுக்குத் தெரியும்—ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞர் என்ற முறையில் சொல்கிறேன், ஒரு மனுவை தாக்கல் செய்தால் எஸ்.ஆர். நம்பர் என்று குறிப்பிடுவார்கள். 50597/84 என்பது. அதாவது ஏதாவது ஒரு வழக்குக்கு மேல் முறையீடு செய்வதற்கு கிளார்க்கிடம் கொடுத்தால் அந்த கிளார்க் ஒரு நம்பர் கொடுப்பார். அந்த நம்பரை வைத்துக்கொண்டு நாங்கள் மேல் முறையீடு செய்து இருக்கிறோம் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் ஸ்டே ஆர்டர்க்கு கூட அபிடவிட் இன்னும் அரசாங்கத்தின் சார்பாக தாக்கல் செய்யப்படவில்லை. It is not pending before the Court. It is only pending before the Clerk.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 23 ஆம் தேதி சொன்னதிலிருந்து எந்தவித மாறுபாடும் இல்லை. 21 ஆம் தேதி மேல் முறையீடு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து என்று சொன்னேன். இன்னும் அடிஷனலாக சொல்லவேண்டும் என்றால் 25—4—1984 அன்று அபிடவிட் பைல் பண்ணப்பட்டு இருக்கிறது. இந்த தகவலையும் இப்போது நான் தருகிறேன்.

**Thiru N. V. N. SOMU :** Whether it is pending before the Court or not—That is my question.

அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. சப்-ஜுடிஸ் என்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது நாம் சப்-ஜுடிஸ் பற்றி பேசவில்லை. We are only examining whether there is a breach of privilege or not. ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் எப்போது வரும் அமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு தவறான தகவலைக் கொடுத்திருந்தால் ப்ரீச் ஆப் பிரிவிலேஜ் ஆகும்.

[1984 ஏப்ரல் 26

(முற்பகல் 10-00)

**திரு. கு. ராமணி :** துணைத் தலைவரவர்களே, நாளைக்கு எங்களுக்கும் இதே நிலைமைதானே வரும்? சப்-ஜூடிஸ் என்று சொல்லி . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சப்-ஜூடிஸ் கொஸ்டின் என்பது இன்றைக்கு எழவில்லை. இன்றைக்கு நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற பிரச்னை, ப்ரீச் ஆஃப் பிரிவிலேஜ் இருக்கிறதா இல்லையா என்பது தான். (குறுக்கீடு) ஒரு நிமிஷம் இருங்கள், இப்பிரச்சினையில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறியது : "துணைத் தலைவரவர்களே, அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு அரசு செய்திருக்கிற காரணத்தினால் அதைப்பற்றி பேசுவது சப்-ஜூடிஸ் ஆகும்" என்பதுதான். இதில் அவர் கொடுத்துள்ள தவறான தகவல் எது? அவர், அவைக்கு ஏதாவது தவறான தகவலைக் கொடுத்திருந்தால் ப்ரீச் ஆஃப் பிரிவிலேஜ் வரும்.

Otherwise, where is the breach of privilege? He has expressed **his view.**

ஆகவே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு இதில் உரிமை மீறல் எழவில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

Thiru N. V. N. SOMU: **He has said, the matter is on appeal and the matter is sub-judice.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :-** அவையை திசைத் திருப்புகின்ற முயற்சியை அவர்கள் எடுக்கவில்லை. அமைச்சர் சொன்ன வாசகத்தை அவைக் குறிப்பில் இருந்து படித்துக் காட்டி, என்னுடைய தீர்ப்பையும் கொடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் குறிப்பிட்டதை ஒட்டி இங்கே அவை மீறல் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சோமு கொண்டு வந்து, எப்படி அவை மீறல் இருக்கிறது என்பதற்கான காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பது, அவர்களே சொல்லியிருக்கின்ற வகையிலே, உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றைக் குறிப்பிட்டபோது ரிட் மனு 9585/1982 மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் இந்த ரிட் மனு மீது உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு இருக்கிற காரணத்தினால் அதைப்பற்றிப் பேசக் கூடாது என்பது.





ஆகவே, மேல் முறையீடு அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. அது நீதிபதியால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது அடுத்த கட்டம். ஆகவே, மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது என்று தான் சொன்னார்கள். மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, உண்மைக்கு மாறான தகவலை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கவில்லை. ஆனால், The matter is an appeal and it is Sub-judice என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட உரிமை உண்டு. ஆகவே, அது சப்-ஜூடிசா இல்லையா என்று தீர்ப்பளிக்க வேண்டியது துணைத் தலைவரோ, தலைவரோ. சப்-ஜூடிசா இல்லையா என்று அன்றைக்கு வாதாடி இருக்க வேண்டியது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கடமை. அன்றைக்கே தீர வேண்டிய ஒன்று. சப்-ஜூடிசா இல்லையா என்று முடிவு கட்ட வேண்டிய ஒன்று. ஆனால் இன்றைக்கிருக்கின்ற பிரச்னை, உரிமை மீறலா இல்லையா என்பது. ஆகவே, அவர்கள் கூறுகிற படி, இது கோர்ட்டிலே எடுத்துக்கொள்ளப்பட வில்லை என்பது உண்மை; இவர்கள் சொல்கிறபடி மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் உண்மை. இது சப்-ஜூடிசா இல்லையா என்பது அன்றைக்கு விவாதித்துத் தீர்ப்பு வாங்கியிருக்க வேண்டுமே தவிர இன்றைக்கு இதைக் கொண்டு வருவது சரியாக இருக்காது.

**Mr. DEPUTY SPEAKER : In support of my ruling I would say that in 1969 a ruling has been given that "When a matter has** gone on appeal it was not proper to discuss it on the floor of the House". It is our own ruling. There is no breach of privilege.

எனவே நான் ரூலிங் கொடுத்துவிட்டேன். தேர் இஸ் நோ ப்ரீச் ஆஃப் பிரிவிலேஜ் என்று. (கூச்சல், குழப்பம்)

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்பில் பண்ணுவதற்கு முயற்சி செய்யும்போதே தி மேட்டர் ஹேஸ் கான் ஆன் அப்பில் என்று ஆகுமா? அந்த அடிப்படையில் தான் அதைப் பேசக் கூடாது என்று தடுத்து இருக்கிறீர்கள். எனவே அரசாங்கம் அப்பீல் பண்ண முயற்சிக்கின்றது என்கின்றபோதே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்பிலைத் தாக்கல் பண்ணி விட்டார்கள். ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்பது அல்ல பிரச்சினை.

**திரு. என். சங்கரய்யா :** அப்போதே அது சப்-ஜூடிஸ் என்று சொல்லப் பட்டதால்தான் பேசப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைக்கு சப்-ஜூடிஸ் கொல்டின் இஸ் நாட் அன்டர் டிஸ்கஷன். ப்ரீச் ஆஃப் பிரிவிலேஜ் இருக்கின்றதா இல்லையா என்பதுதான் பிரச்சினை. எனவே அந்தந்தப் பிரச்சினைகள் வருகின்றபோது அந்தந்தப் பிரச்சினைகளுக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்படும். (கூச்சல், குழப்பம்) அப்பில் ஃபைல் பண்ணி விட்டார்கள் . . . (கூச்சல், குழப்பம்) அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு அரசாங்கம் செய்திருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றிப் பேசுவது. . . (குறுக்கீடு) அப்பீல் பண்ணியாகிவிட்டது என்று சொல்கிறார் கள். ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஃபைல் பண்ணியவுடனே அதனை அப்பீலாக எடுதது்க்கொள்ளலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஜெனரல் மேட்டர்சைப் பற்றி நாம் இங்கே டிஸ்கஸ் பண்ண முடியாது. இந்தக் கேசிலே எப்போது பிரீச் ஆஃப் பிரிவிலேஜ் வரும் என்றால், அமைச்சர் இங்கே ஏதாவது தவறான தகவலைத் தந்து அவையின் கவனத்தைத் திசைதிருப்ப முயன்றார் என்றால் தான் ப்ரீச் ஆஃப் பிரிவிலேஜ் என்பது வரும். ஆகவே தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொல்லி எஸ்.ஆர். நம்பரையும் கொடுத்திருக் கிறார்கள். எனவே இதிலே ப்ரீச் ஆஃப் பிரிவிலேஜ் இல்லை. (கூச்சல், குழப்பம்) நான் ரூலிங் கொடுத்துவிட்டேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு அதற்கு மேல் அந்தப் பற்றிய விவாதங்கள் வரக் கூடாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபல விளக்கங்கள் பெற வேண்டிய அளவுக்கும், எதிர்காலத் திலுடைய நடவடிக்கைகளுக்குப் பயன்பட வேண்டுமென்ற முறையிலும் சிலபல விளக்கங்கள் கேட்கிறார்கள். அந்த வகையில் எடுத்துச் சொல்லப் படுகிறது. அந்த வகையில் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு ஐயப்பாட்டைக் கிளப்புகிறேன் என்கிறார்கள். அவர் கிளப்பியதற்குப் பிறகு, தாங்கள் தீர்ப்பளித்ததற்குப் பிறகு அதற்கான முடிவை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே அப்பீல் என்று சொல்வதற்கு

**Kaul and Shakdhar—Practice and Procedure of Parliament—Page 914 ............... (Interruption)**





ஏற்கெனவே சொல்லப்பட்ட பிரச்னையில் நீதிமன்றத்தில் இருப்பதை விமர்சிக்கக் கூடாது. . ஏனென்றால் சப்ஜூடின் என்று சொல்லப்பட்டது. அதற்குக் காரணம் ஏற்கெனவே நாங்கள் அப்பீல் செய்து விட்டோம் என்று சொல்லி இருக்கிறார்கள். எப்பொழுது ' சப்-ஜூடிஸ் ' ஆகும் என்று இந்தப் புத்தகத்தில் தரப்பட்டிருக்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சப்-ஜூடிஸ் பற்றி நீங்கள் பேச முடியாது. (Interruption) Then you are questioning my ruling on the other day. I have already given my ruling on the matter of sub-judice. (குறுக்கீடுகள்.)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம் இங்கே சொல்லியிருப்பது

" .......... From the time the appeal is admitted till judgment is delivered."
என்று போட்டிருக்கிறார்கள். அப்பீல் என்றால் அப்பீல் நெம்பர் என்ன ? கொடுக்கப்பட்டிருந்தால் தகவல் தெரிய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கவுல் அன்ட் ஷக்தார் அந்தப் புத்தகத்தை எழுதும்போது அட்மிஷன் என்ற ஒரு ஸ்டேஜ்தான் இருந்தது. இன்றைக்குத் திரு. சோமு அவர்களுக்கே தெரியும் "Prior to Admission, Notice of Admission" என்ற ஒரு ஸ்டேஜ் இப்பொழுது வந்திருக்கிறது.

**THIRU N. V. N. SOMU :** The application is pending, before the Court for Admission.

**MR. DEPUTY SPEAKER :** Yes. The stage of Notice before Admission.
இப்பொழுது புதிதாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமை இங்கே இருக்கிற வழக்கறிஞர்கள் எல்லோருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்)

**Thiru N. V. N. SOMU :** I read from Kaul and Shakdher's. Practice and Procedure of Parliament: Page 914.

"If a matter is pending before the Court for admission....."
(Interruption.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அதை பேஸ் பண்ணித் தான் தீர்ப்புச் சொன்னேன். சப் ஜூடிஸ் என்று சொன்னேன்.

**திரு. அ. ரகுமான்கான் ;** அப்பீல் அட்மிட் ஆகாதபொழுது எப்படி சப் ஜூடிஸ் ஆகும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது நாம் இரண்டு பேருமே இன்னொரு ஜட்ஜைத் தேடிப் போக வேண்டும். (சிரிப்பு) இன்றுள்ள நிலைமையைச் சொன்னேன். அட்மிஷனுக்கு முன்னாலே இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே நோட்டீஸ் ஆப் மோஷன் என்று ஒரு ஸ்டேஜை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** அப்படியானால் ஒரு கேள்வி; உயர்நீதிமன்றத்தில் அமைச்சர் இராகவானந்தம் சம்பந்தமாக ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பு பற்றி இப்போது சபையிலே பேசலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது அந்தப் பிரச்சினை எழவில்லை. எழும்போது அதற்குப் பதிலளிக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### சிங்காநல்லூர் ஜனார்த்தனா மில் மூடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் கு. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், கே. ஆர். சுந்தரம், ஜே. ஹேமச்சந்திரன், எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், என். வ. பூங்காவனம், ரா. கிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. கு. ரமணி :** துணைத்தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம் சிங்காநல்லூர் ஜனார்த்தனா மில் மூடிக்கிடப்பதால் 800 க்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் இன்னல்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

கோவை ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட் என்ற நூற்பாலையில் சுமார் 700 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அதில் எச். எம். எஸ்., அண்ணா தொழிற் சங்கப்பேரவை, டி.என்.டி.யு.சி., தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, யூ.டி.எல்.எ. போன்ற சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.





2. கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம், தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் ஆகியவை நிர்வாகத்தின்மீது வேலைப் பளு மற்றும் சம்பள உயர்வு போன்ற பொதுக் கோரிக்கைகள்மீது 17—7—1983 அன்று முதல் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக ஓர் அறிவிப்பினை 1—7—1983 அன்று கொடுத்தன.

3. இதைத் தொடர்ந்து கோவை, தொழிலாளர் துறை உதவி ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தை மேற்கொண்டார். இதற்கிடையில் தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்தல் (Go slow), கீழ்ப்படியாமை insubordination) வேலை செய்ய மறுத்தல், வன்முறை போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி 7—8—1983 முதல் கதவடைப்பு செய்வதாக நிர்வாகம் அறிவித்தது.

4. சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஒரு சுமுக முடிவு ஏற்படாததால், கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர் தனது சமரச முறிவறிக்கையை அரசுக்கு அனுப்பினார். இத் தொழிற் தகராறில் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் சென்னை, தொழிலாளர் துறை ஆணையர் முன்பு 5—10—1983 அன்று நடைபெற்றது. இருப்பினும் சுமுக முடிவு எதுவும் ஏற்படவில்லை.

5. இதற்கிடையில், நலிவுற்ற பஞ்சாலைகளை இயங்கச் செய்வதுபற்றிய பிரச்சினை குறித்து விவாதிக்க மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், மாண்புமிகு தொழில் அமைச்சர் மற்றும் பல உயர் அலுவலர்கள் மட்டத்தில் 7—11—1983 அன்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில், நலிவுற்ற நிலையில் இருக்கும் கோவை ஜனார்த்தனா மில்ஸ் உட்பட ஆறு பஞ்சாலைகளை தேசிய மயமாக்குவது பற்றி மத்திய அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்கிற முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க, இவ்வரசு 7—12—1983 அன்று மைய அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனார்த்தனா மில் உள்ளிட்ட ஆறு பஞ்சாலைகளை தேசிய மயமாக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. இவ்வேண்டுகோளின்மீது மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

6. சமரச முறிவு அறிக்கையினை அரசு பரிசீலித்து மேற்கண்ட ஆலை தற்போது இருப்பினாலும் நலிவடைந்தும் மூடிக்கிடப்பதால் தொழிலாளர்கள் எழுப்பிய சம்பள உயர்வு முதலிய கோரிக்கைகளை நீதிமன்ற முடிவுக்கு தற்போது அனுப்ப வேண்டியதில்லையெனவும், ஆலை மீண்டும் திறக்கப்பட்ட பிறகு தொழிலாளர் தொழில் தாவா எழுப்பி நிவாரணம் பெறலாம் என்வும், 27—2—1984-ம் நாளிட்ட அரசாணை எண் 482-ல் அறிவித்துள்ளது.

7. இவ்வாலை மூடியதால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கலாமா என்பது மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கு. ரமணி :** துணைத்தலைவர் அவர்களே, இந்த மில் சுமார் எட்டு மாதங்களுக்கு மேலாக மூடிக்கிடக்கிறது. இதற்காக தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் ஏராளமாக ரெப்ரசன்டேஷன்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மில் மூடிக் கிடப்பதால் சிங்காநல்லூர் வட்டாரத்தில் ஒரு பிரச்னையாக மாறி தொழிலாளர்கள் பட்டினிக்கு ஆளாகியிருப்பதால் வேறுவிதமான போராட்டத்திற்குப் போகிற மோசமான நிலைமை உருவாகி இருக்கிறது. அந்த நிலைமையில் அந்த மில்லை திறந்து ஓட்டுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 700 தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிறார்கள். இந்த நிலைமையை மனதிலே கொண்டு 7—12—1983 அன்று இந்த மில்லை தேசியமயமாக்க வேண்டுமென்று மத்திய அரசிற்கு மாநில அரசு கடிதம் எழுதி இன்னமும் அங்கேயிருந்து கடிதம் வரவில்லை.

**திரு. கு. ரமணி :** துணைத்தலைவர் அவர்களே, அண்மைக்காலத்தில் இதுமாதிரியான பதில் தான் அரசாங்கத்திடமிருந்து வந்துகொண்டு இருக்கிறது. பி அண்ட் சி மில்லில் இதே நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கிற மிகப்பழம் பெரும் தொழிலான பஞ்சாலைத் தொழிலில் இந்த நெருக்கடி ஏற்பட்டபோது முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் அந்தக்காலத்தில் இருந்த அரசாங்கம் என்ன செய்தது என்றால் ரிலீப் அண்டர்டேகிங் ஆக்ட் சட்டத்தைக் கொண்டு வந்து மூடிக்கிடக்கிற மில்லை எடுத்து, எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும், தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கும், மில்கள் தொடர்ந்து நடப்பதற்கும் நடவடிக்கை எடுத்து அந்த மில்லை எடுத்து நடத்தினார்கள். அப்படிச் செய்வதை தங்களுடைய கொள்கையாக ஏற்று அதனுடைய நிர்வாகத்தை ஏற்று நடத்தினார்கள். இப்போதும் அந்த மில்லினுடைய நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்று நடத்தி அந்த 800 தொழிலாளர்கள் குடும்பங்கள் வாழ்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத்தலைவர் அவர்களே, இந்த ஆலையிலே பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை





வழங்கலாமா என்பது மாநில அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. தேசிய மயமாக்க வேண்டுமென்று மத்திய அரசிற்கு கடிதம் எழுதி இருந்தோம். பி. அண்ட். சி. ஆலைப் பற்றியும் எழுதி இருந்தோம். ஆனால் பி. அண்ட். சி மில் பற்றி அவர்கள் பதில் எழுதுகிறபோது இந்த மில்லினுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேசியமயமாக்குவது, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவாது. மாறாக கமலாத்தினம் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒவ்வொரு தொழிலாளியும் ஏற்றுக் கொண்டு 12 (3) செட்டில்மென்ட் போட்ட அந்த ஒப்பந்தத்தின்படி உற்பத்தித் திறன் அதாவது புரடக்ஷன் அண்ட் புரடக்ட்டிவிட்டி கொடுத்தால் அந்த மில் நன்றாக நடக்கும். ஆகவே தொழிலாளர்களை அழைத்து வேலை நிறுத்தத்தை நீக்கிக்கொண்டு உள்ளே போய் வேலை செய்யச் சொல்லுங்கள். 'yau use your good offices' என்று கடிதம் வந்தது. அதைப் பற்றி தொழிலாளர்களிடத்தில் சொல்லியிருக்கிறோம். அதைப் போலவே ஜனார்த்தனா மில்லைப் பற்றி எந்தவிதமான பதிலும் வரவில்லை. விரைவில் பதில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 10-20)

**திரு. கு. ரமணி :** நான் கேட்ட கேள்விக்குச் சரியான பதில் வரவில்லையென்றால் நான் எப்படி திருப்திப்படுவது? நான் கேட்ட கேள்விகளுக்கும், அமைச்சர் அளித்த பதிலுக்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர்கள் இப்படித்தான் பதில் சொல்ல வேண்டும் என்று நான் கட்டாயப்படுத்திச் சொல்ல முடியாது. (குறுக்கீடு)

I cannot direct the Hon. Minister as to how he should reply.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் ஜனார்த்தனா மில்லில் சுமார் 700 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் கடந்த 8 மாத காலமாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதை தேசியமயமாக்கவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசிடம் இருந்து அதற்கான பதில் இதுவரையில் வரவில்லை என்றும் சொன்னார்கள். அப்படி பதில் வராமல் இருந்தாலும் கூட, கடந்த 8 மாதமாக அந்த 700 தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 4000 பேர், இன்றைக்கு பாதிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், அரசாங்கமே நலிவுற்ற ஆலைகளை ஏற்றுக்கொள்வது என்ற அடிப்படையில், மாநில

அரசுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏற்கனவே அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி பல தொழிற்சாலைகள் மாநில அரசால் ஏற்கப்பட்டிருக்கின்றன. அதை ஏற்றுக்கொண்டு நடத்துவதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து நிவாரணம் அளிக்கவும் அரசு ஆவன செய்யுமா? ஏனென்றால் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து அவர்கள் உதவி தருவது பற்றி ஆலோசித்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடந்த 8 மாதகாலமாக அவர்கள் குடும்பங்கள் செத்துக்கொண்டு இருப்பதால், அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப்போல, தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதை மாநில அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்லவில்லை. பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்று நான் சொன்னேன். அதை தேசியமயமாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். அவர்களிடத்தில இருந்து பதிலை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து பதில் கிடைத்தபிறகுதான் மற்றபடி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையிலே இருக்கும் சிங்காநல்லூரில் இருக்கும் ஜனார்த்தனா மில்லில் கிட்டத்தட்ட 800 தொழிலாளர்கள் 8 மாத காலமாக அந்த ஆலை மூடிக்கிடப்பதால் வேலையின்றி இருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம், இந்த விளக்க அறிக்கையில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால், அந்தத் தொழிலாளர்கள் 'கோ-ஸ்லோ' முறையைக் கையாண்டதாகவும், வேலை செய்ய மறுத்ததாகவும் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், அதனால் நிர்வாகம் 7-8-83 முதல் கதவடைப்பு செய்துள்ளது என்றும் இதிலே குறிப்பிட்டுள்ளது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், 8 மாத காலமாக பேச்சுவார்த்தை நடத்தி பலன் தரவில்லை, 1970 ஆம் ஆண்டிலேயே இதே நிலையில் இருந்த மூடிக் கிடந்த 12 பஞ்சாலைகளை சிக் அண்டர்டேகிங் ஆக்ட்டின் கீழே மாநில அரசாங்கத்தால் அவை எடுக்கப்பட்டு, தமிழ்நாடு பஞ்சாலை கார்ப்பரேஷன் என்று அதை மாற்றி, பின்னர், மத்திய அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு, தேசிய பஞ்சாலை நிறுவனமாக மாறியிருக்கிறது. எனவே மத்திய அரசாங்கத்தின் அனுமதி வரும் வரையில் அந்தத் தொழிலாளர்களைப் பட்டினி



போடுவதை விட, இன்றைக்கு இருக்கக்கூடிய, தமிழக அரசுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தின் அடிப்படையில், சிக் அண்டர்டேகிங் ஆக்ட்டின் கீழ், அந்த ஆலையை அரசாங்கமே ஏற்று நடத்தி, அவர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பைக் கொடுப்பதற்கும், முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக நிதி உதவி கொடுப்பதற்கும் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். ஒரு மில் பற்றி பதில் வந்திருக்கிறது. இந்த மில்லைப் பொறுத்த வரையில் இன்னும் மத்திய அரசிடமிருந்து பதில் வரவில்லை; பதிலை எதிர்பார்க்கிறோம். பதில் வந்த பிறகு என்ன செய்யலாம் என்பதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. இ. கா. நல்லப்பன்:** துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் சிங்காநல்லூர் ஜனார்த்தனா மில் கடந்த 9 மாதங்களாக மூடிக் கிடக்கிறது என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 9 மாதங்களாகப் பேசித் தீர்க்க முடியாமல் இன்னும் இழுத்துக்கொண்டே இருக்கிறது. மேலும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது என்று. பரிசீலனை முடிந்து குறைந்தபட்சம் மே 1-ந்தேதி முதலாவது நிவாரண உதவி கொடுக்க அரசு முன்வருமா, என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லப்பன் அவர்கள் சொன்னதைப்பற்றி பரிசீலிக்கலாம். தேசியமயமாக்க வேண்டுமென்று இந்த அரசு சொல்லும் போது நிர்வாகத்திடமிருந்து அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நல்ல முடிவுக்கு வந்திருக்கிறது என்பதை நினைத்து பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை. பதில் வந்த பிறகு மேற்கொண்டு என்ன செய்யலாம் தொழிலாளர் நலன் கருதி என்பதை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

### 5. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,38,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. இ. கா. நல்லப்பன் :** துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்றம் நடைபெறும்போது ரயில், பேருந்து ஆகியவைகளுக்கு ரிசர்வேஷன் செய்வது சம்பந்தமாக சட்டமன்ற வளாகத்தில் ஏற்பாடு செய்வது குறித்துப்பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 1,38,41,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 2,99,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss Policy, I move 'that the allotment of Rs. 2,99,00,000 under Demand No. 8—Elections be reduced by Rs. 100'.

**திரு. த. வேணுகோபால் :** துணைத் தலைவரவர்களே, தனியார் அச்சகத்தில் வாக்காளர் பட்டியல் அச்சிடுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 2,99,00,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. என். பழனிவேல் :** துணைத் தலைவரவர்களே, தமிழக சட்டமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 2,99,00,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. இ. கா. நல்லப்பன்:** துணைத் தலைவரவர்களே, இதுவரை தேர்தல்கள் நடைபெறாமல் உள்ள அனைத்து தொகுதிகளுக்கும் இந்த ஆண்டு முடிவிற்குள் தேர்தல்கள் நடத்துவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,99,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



(இ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 25,50,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

Thiru N. S. V. CHITTAN: Sir, to discuss the need to set up a Cabinet Secretariat for the State, I move—

"That the allotment of Rs. 25,50,49,000 under Demand No. 9—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100".

**திரு. இ. கா. நல்லப்பன் :** துணைத் தலைவரவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 25,50,49,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 45,18,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

THIRU N. S. V. CHITTAN : Sir, to discuss Policy I move—"that the allotment of Rs. 45,18,23,000 under Demand No. 42—Pensions and other Retirements Benefits be reduced by Rs. 100".

**திரு. என். பழனிவேல்:** துணைத் தலைவரவர்களே, தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் இந்த ஆண்டிலிருந்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 45,18,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. இ. கா. நல்லப்பன்: துணைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 45,18,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

(முற்பகல் 10-30)

(2) கோரிக்கை எண் 43 பல்வகை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

"மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,87,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

Thiru N. S. V. CHITHAN: Sir, to discuss Policy, I move—"that the allotment of Rs. 76,87,76,000 under Demand No. 43—Miscellaneous be reduced by Rs. 100".

திரு. இ. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 76,87,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஐ) கோரிக்கை எண். 57—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,30,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss Policy, I move—"that the allotment of Rs. 13,30,91,000 under Demand No. 57—Miscellaneous Capital outlay, be reduced by Rs. 100".

திரு. இ. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,30,91,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



(எ) கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 345,39,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss Policy, I move—"that the allotment of Rs. 345,39,93,000 under Demand No. 58—Loans and Advances by the State Government be reduced by Rs. 100".

திரு. இ. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, மாநில அரசு விவசாயிகளுக்கு வழங்கியுள்ள கடன்கள் அனைத்தையும் மழை, வெள்ளம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் ரத்து செய்வது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 345,39,93,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்ட பல்வேறு மானியக் கோரிக்கைகளைப் பற்றிய விளக்கக் குறிப்புகள்* எல்லாம் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றை நிகழ்ச்சி நிரல் குறிப்பிலே ஏற்றுக்கொள்ளும்

* 719-743 ஆம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

படியாகக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு சில கருத்துக்களை இறுதியிலே வழங்குகிறேன் என்று சொல்லி, என்னுடைய முன்னுரையை முடிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, சட்ட சபையிலே கேள்வி நேரம் என்பது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் போலீஸ் மானியம் சம்பந்தமாக, போலீஸ் துறை சம்பந்தமாக கேட்கப்படுகின்ற பல கேள்விகள், இந்த வினாக்கள்-விடைகளில் இடம் பெறவில்லை. முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்து அவைகளுக்கான பதில்களைச் சொல்வதில்லை. ஆனால் அதே நேரத்தில், தஞ்சையில் தியேட்டர் திறக்கப் போகிறார். தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திண்டிவனத்தில் நடத்தப்படும் விழாவிற்குப் போகிறார். நடிகை ஸ்ரீதேவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார்கள். ஆனால் இங்கே முக்கியமாக பதில் சொல்ல வேண்டிய கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும். போலீஸ் இலாக்கா சம்பந்தப்பட்ட கேள்விகள் இடம் பெறவேண்டும். அமைச்சர்களாக இருந்தாலும், அரசாங்க அலுவலர்களாக இருந்தாலும், தவறான தகவல்களைத் தரக் கூடாது. உதாரணமாக 1980-85 தமிழக அரசின் ஐந்தாண்டுத் திட்டத்தில் நெல்லை மாவட்டம், கூடங்குளம் என்ற இடத்தில் ஒரு அணு மின் நிலையம் உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆளுநர் உரையிலும் சொல்லப்பட்டது. பட்ஜெட்டிலும் சொல்லப்பட்டது. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் மோகன் அவர்கள் கேள்வி கேட்ட நேரத்தில், அணு மின் நிலையம் கூடங்குளத்தில் தொடங்கப்படுமா என்றும், அங்கே ஏதாவது இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதா என்றும் கேட்ட நேரத்தில், பிரதமர் அவர்கள் பார்லிமெண்டில் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். அது சம்பந்தமாக மத்திய அமைச்சர் சிவராஜ் பட்டேல் ஒரு தவறான தகவலை அரசு தரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். இப்படி மக்களை திசை திருப்புகின்ற வகையில், சபையை திசை திருப்புகின்ற வகையில் சொல்வது சரியல்ல. இதற்காக முதலமைச்சர் மீதும், நாவலர் மீதும், அமைச்சரவை மீதும் உரிமைப் பிரச்சினைகளைக் கொடுக்கலாம், இப்படி தவறான தகவலைக் கூறுவது சரியாக இருக்காது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், நகராட்சி தேர்தல்கள் நடக்கும் என்று இங்கே அறிவித்தார்கள். வருஷம், மாதம் கூட தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு தேர்தல் நடக்கின்ற சூழ்நிலை இல்லை. கோர்ட்டில் யாராவது ஸ்டே வாங்கினாலும் கூட, பழைய முறைப்படி தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். கோர்ட்டில் ஸ்டே வாங்கப்பட்டது. அவர்கள்



சொன்ன மாதிரி பழைய முறைப்படி இந்தத் தேர்தல் நடக்குமா? சபையில் கொடுக்கப்பட்ட அந்த வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டுமென்ற அடிப்படையில் இந்த தேர்தல் நடக்குமா என்பதை அறியவிரும்புகிறேன். பெண்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் இடம் கொடுப்பது பற்றி, தி.மு.க. வரவேற்கிறது. ஆனால் அதில் குறைகள் இருக்கக்கூடாது. அவர்களுக்கும் இடம் ஒதுக்குவது சம்பந்தமாக சிலர் கோர்ட்டுக்குப் போய் இருப்பது வருந்தத்தக்கது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போய் இருக்கிறார்கள் என்று சொல்லி, அவையிலே உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலை மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் தந்திருக்கிறார்கள். தேவேந்திரன் என்பவர், மணலி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்தவர், திராவிட முன்னேற்றக்கழகத்தின் கிளைச் செயலாளர், கோர்டுக்குப் போய் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள். தமிழ்நாட்டிலே மொத்தம் 376 ஒன்றியங்கள்தான் இருக்கின்றன. மணலி பஞ்சாயத்து ஒன்றியம் என்று ஒன்று கிடையவே கிடையாது. அரசுப் பதிவுகளிலும் கிடையாது. செங்கற்பட்டு மாவட்டத்திலே 1,192 கிராமங்கள்தான் இருக்கின்றன. மணலி கிராம பஞ்சாயத்து. அதனுடைய தி.மு.க. கிளைச்செயலாளர், நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, தேவேந்திரன் அல்ல. ஜெயபால். எனவே உண்மைக்குப் புறம்பாக தகவல்களை இங்கே அமைச்சர் அவர்கள், வேண்டும் என்றே கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சனை கொடுத்து இருக்கிறேன். நாளைக்கு அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு முன்பாகக்கூட நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே மதுரை மாவட்டத்திலே தேனி தாலுக்காவிலே கருணாநிதி அவர்கள் மகன் அழகிரி பெயரால் நிலம் வாங்கியிருக்கிறார்கள், நிரூபிக்கிறேன், அப்படி நிரூபிக்காவிட்டால் மந்திரி பதவியை ராஜினாமாச் செய்கிறேன் என்று சொன்னார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப்பற்றிய விஷயம் உரிமைக் குழுவிலே இருக்கிறது. எனவே "இதைப்பற்றி பேசவேண்டாம்" என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் தலைவரும் இதே மாதிரி வெளியே பேசியிருக்கிறார்கள். எனவே நாம் குழுவை மதிக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுவோம்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, உரிமைக் குழுவிலே இருக்கின்ற விவரத்திற்குள்ளே நான் போகவில்லை. திருபிக்கப் படாவிட்டால் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். எனவே அதைச் செய்வாரா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ராமபிரசாத்ராவ் கமிஷன் பற்றி நீங்கள் உறுதி கொடுத்தீர்கள். உங்களிடத்திலே கூட சொன்னோம். விவாதிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்து, நானே ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னீர்கள். நான் நோட்டில் கூட கொடுத்திருக்கிறேன். அசெம்பளி ரூல்ஸ் 77-ன்படி விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறீர்களா? இல்லையா? என்பதைப் பற்றித் தெரிவிக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால், சபை இன்னும் இரண்டு நாளில் முடியப் போகிறதாகத் தகவல் இருக்கிறது. ஆகவே எப்போது எடுத்துக்கொள்கிறீர்கள்? அதிலே ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? ஊழல் பேர்வழிகள் தாங்கள் அல்ல என்ற உறுதி இருக்குமானால் விவாதத்திற்குத் தாராளமாக அனுமதிக்கலாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே எந்தத் தேதி என்பதைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சட்ட சபைதான் சுப்ரீம் அத்தாரிட்டி ஆப் தில் லேண்ட் என்று சொல்வார்கள். ஆனால் இந்தச் சபைக்கு பல கமிஷன்களின் ரிப்போர்ட்கள் வரவில்லை. ஹர்பன்சிங் கமிட்டி ரிப்போர்ட் வரவில்லை. அதைப்போலவே திரவியம் கமிஷன் ரிப்போர்ட் வரவில்லை. அதைப்போல வைவேல் சம்பந்தமாக ஒரு ரிப்போர்ட் இருப்பதாக அறிகிறேன், நடராஜன் ஐ.ஏ.எஸ். கமிட்டி ரிப்போர்ட், அதுகூட சபையிலே வைக்கப்படவில்லை. ஆகவே இவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் சபைக்குத் தெரிவிக்க வேண்டும். எவ்வளவு கமிஷன்கள் போட்டிருக்கிறீர்கள்? எவ்வளவு பணம் செலவாகிறது? என்ன நடவடிக்கை என்பது குறித்து அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுதி நிகழ்ச்சிகள், அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும். ஆனால் புறக்கணிக்கப்படுகிறார்கள் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், சேலை, வேட்டி கொடுப்பது, வெள்ள நிவாரணப் பணி, தண்ணிறைவுத் திட்டப் பணி, வறட்சி நிவாரணப் பணி, அதிகாரிகள் நடத்துகிறார்கள். இல்லை என்று சொன்னால் ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்கள் சேர்த்துகொள்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், இது ஆளும் கட்சியின் பணம் அல்ல. இந்த வேட்டி சேலை கொடுப்பது. அரசாங்கத்தின் பணம். நாங்களும் வரி கொடுக்கிறோம். மக்களுடைய வரிப்பணம். எனவே எதிர்க்





கட்சிக்காரர்கள் அந்த நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும். இன்னொன்று தொகுதி நிகழ்ச்சிகளிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

என்னுடைய தொகுதியிலே மின்சார வாரியக் கட்டிடம் புதிதாகத் திறக்கப் பட்டது. கே. ஆர். இராமசாமி அவர்களுடைய பெயரால், முதல்வர் திறக்கிறார். என்னை அழைக்கவில்லை. அதேபோல் கவர்ன்மென்ட் எஸ்டேட், என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் இருக்கிறது. அங்கே தமிழ் அரசு பத்திரிகைக் கட்டிடம் திறப்பு விழா நடக்கிறது. தொகுதி எம்.எல்.ஏ. என்னை அழைக்கவில்லை. ஆனால் ராணிப்பேட்டையிலே குடிநீர் வடிகால் வாரியவிழாவிற்கு அதிகாரத்திலே இல்லாத, இன்னும் சொல்லப்போனால், உங்களுடைய கொள்கை பரப்புச் செயலாளரை அங்கே பேச அனுமதிக்கிறீர்கள். கேட்டால் சத்துணவு உயர் மட்டக்குழு உறுப்பினர் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் மற்றும் பல உறுப்பினர்கள் இருக்கிறார்களே, அவர்களையும் அனுமதிக்கிறீர்களா என்று நான் கேட்கிறேன். அந்த விழாவிலே பேசுகிறபோது கொள்கை பரப்புச் செயலாளர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்தத் தொகுதி மக்களுக்கு இந்தப் பகுதி எம். எல். ஏ. நன்மைகளைச் செய்யவில்லை என்று அரசாங்க விழாவிலே போய் அரசியல் பேசுகிறார்கள்.

இன்னும் ஒன்றை நான் தெரிவிக்கிறேன், அமைச்சர்களைப் பொறுத்த மட்டில் நான் சில விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள், உறவினர்கள் உட்பட, தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், மந்திரிமார்கள், மாவட்டச் செயலாளர்கள், எல்லாம் சொத்துக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படியானால் முதல்வர் ஏன் இந்தச் சொத்துக் கணக்கை வைக்கவில்லை. வழிகாட்டி ஏன் மறுக்கிறார். மந்திரிகள் ஏன் சொத்துக் கணக்கை பெரும்பகுதியானவர்கள் வைக்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் மந்திரிகள் மீது குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. குற்றச்சாட்டு சொன்னால் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். ஆனால் சொத்து பற்றிய விவரத்தை சபையிலே வைக்காத காரணத்தால் உங்கள் மூலமாக சில விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மந்திரிகள் தங்கியிருக்கும் வீடுகள், சொந்த வீடா? அரசாங்க வீடா? சொந்த வீட்டில் தங்கிக்கொண்டு, அரசிடம் வாடகை வாங்கக்கூடாது என்ற அண்ணாவின் கொள்கை பின்பற்றப்படுகிறதா? * * * நான் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. விளக்கம்தான் கேட்கிறேன். இதிலே என்ன தப்பு இருக்கிறது? (குறுக்கீடு).

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(முற்பகல் 10-40)

திரு. கி. கோபால்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, * * * அது ஏற்கெனவே அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, * * * ஆகையினால்தான் தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேளுங்கள், நீங்கள் கேட்பதற்கு உரிமை இல்லை என்று சொல்லவில்லை. அவைக் குறிப்பிலிருந்து ஏற்கெனவே நீக்கப் பெற்றவைகளைத் திரும்பவும் சொல்லும்போது பேரவையின் கண்ணியம் பாதிக்கப்படாதா? எண்ணிப் பார்த்துப் பேசுங்கள். எனவே அது நீக்கப்பெறுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: ஏற்கெனவே இதுபற்றிய விவரங்கள் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு இல்லை என்ற காரணத்தாலே, இதை விட்டு விடுகிறேன். ஆனால் இதுபோன்று, அமைச்சர்களுடைய உறவினர்கள், சகோதர, சகோதரிகள் யாராவது பேப்பர் நிறுவனங்களிலே, இதுபோன்ற பெரிய நிறுவனங்களிலே மூலதனம் செய்திருக்கிறார்களா? அதுபற்றிய குறிப்புகள் ஏதேனும் உண்டா . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உட்பட தங்கள் சொத்துக் கணக்கை அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. அமைச்சர்களாக இருக்கிற காரணத்தாலே அவர்கள் உறவினர்களது எல்லா விவகாரங்களையும் உங்களிடம் சொல்ல வேண்டும் என்றால் இது தான் ஜனநாயகமா? அப்படியானால் யாரும் அமைச்சராக முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: நான் அமைச்சர்களைப் பற்றிய, அவர்களுடைய சொந்தக்காரர்களைப் பற்றிய சொத்து விவரங்களைத்தான் கேட்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களைப் பற்றிய விவரங்களைக் கேட்பது சரி. அவர்களுடைய உறவினர்களைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டு வந்து சொல்ல வேண்டும் என்றால் எப்படிப் பொருத்தமாக இருக்கும்?

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களைக் கேட்டாரே. அதனால்தான் நானும் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எந்த நிலையில் கேட்டாரோ அந்த நிலையில் பதில் சொல்ல வேண்டுமே தவிர, இந்த மானியத்தில் அது வராது.

திரு. அ. ரகுமான்கான்: ரைட், நான் அதை விட்டுவிட்டுப் பேசுகிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக் கொள்வது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எத்தனை பேர்கள் சொத்துக் கணக்கை இந்த அவைக்கு வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய சகோதரிகள், தம்பிகள், மற்ற உறவினர்களுடைய சொத்துக் கணக்குகளை எல்லாம் இங்கே வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான்: அண்ணன் காட்டிய வழியம்மா, என்று சொல்வார்களே, அதுபோல் முதல்வர் அவர்கள் வைத்தால் நாங்களும் வைக்கத் தயார். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது பற்றி நீங்கள் கேட்கக் கூடாது என்று சொல்லிவிட்டால், அடுத்து ஒரு முக்கியமானப் பிரச்சினைக்கு நான் வருகிறேன். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி நீங்கள் பேசினால், நான் ஏதோ தடுத்துவிட்டதாக பேப்பரில் போடுவார்கள். நீங்கள் கேட்பது நியாயமா என்று நீங்களே யோசித்து, Self-restraint செய்துக் கொள்ள வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, தவறான சர்டிபிகேட் கொடுத்தால், டி.ஆர்.ஓ. ஆனாலும் சரி, ஆர்.டி.ஓ. ஆனாலும் சரி, தாசில்தாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. சட்டத்திற்கு மேற்பட்டவர்கள் சட்டசபை உறுப்பினர்களாக இருக்க முடியாது. ஆனால் தேர்தலில் ஒரு தொகுதியில் நான் மலை ஜாதியைச் சேர்ந்தவன் என்று சொல்லி உண்மைக்குப் புறம்பாக சர்டிபிகேட்

வாங்கிய பிறகு, அந்தத் தேர்தல் செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. ஆனால் அதற்குள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குரிய பலன்களை எல்லாம் அனுபவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

அதேபோல அடுத்து இன்னொரு முக்கியமானப் பிரச்சினை ஹவுசிங் போர்டு சம்பந்தமாக. அதிலே ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர வேண்டியவனாக இருக்கிறேன் * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே அதுபற்றி நான் தீர்ப்பளித்து இருக்கிறேன். (குறுக்கீடு) திரும்பவும் எப்படிப் பேச முடியும்? இன்று காலையிலும் விவாதித்திருக்கிறோம். திரும்ப இன்னொரு முறையிலே அந்தப் பிரச்சினையை எழுப்புகிறீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகிறது.

திரு. அ. ரகுமான்கான்: தீர்ப்பிலே இருப்பதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது சப் ஜுடிஸ் என்று ஏற்கெனவே நான் தீர்ப்பு கொடுத்திருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: அது சப் ஜுடிஸ் இல்லை என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தலைவருடைய தீர்ப்புத்தான் இறுதியானது; அவை ஒழுங்காக நடைபெற சில விதிமுறைகளை நாம் கடைப் பிடித்தாக வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதையும் அவைக் குறிப்பி லிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன். இந்த சப்ஜக்டை காலையில் அரை மணிக்கும் மேல் விவாதித்து விட்டோம். மற்றதைப் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே * * * மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் . . . .

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. அ. ரகுமான்கான்: * * * என்ற அர்த்தத்திலே நான் அதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது. நேற்று பூராவும் எக்ஸ்பங்ஷன் கிடையாது; நானே மகிழ்ச்சி அடைந்தேன். இன்று நீங்கள் பேசுவது பூராவும் பார்த்துப் பார்த்து நீக்க வேண்டியதாக உள்ளது.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே, பேசுகின்றபோது ஒரு விவரத்தை அவர்களிடத்திலே சொன்னேன். * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்கு பதில் சொல்லக்கூடிய தன்மையும் அதற்கான பொறுப்பும் உள்ளவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையை சேர்ந்த அமைச்சராவார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை கோரிக்கை வந்த போது இந்தப் பிரச்சினையைக் கிளப்பி இருப்பார்களானால் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் பதில் சொல்வதற்கு பொருத்தமாக இருந்திருக்கும். ஏற்றபொழுதில் அதைக் கேட்பது பற்றித் தவறில்லை; மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை, எடுத்துச் சொல்லக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் விளக்கம் கேட்பதோ ஐயப்பாட்டை தீர்த்துக் கொள்ளவோ முடியும். ஆனால் இன்றைக்கு அவைமுன் எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ள கோரிக்கை களுக்கு நான் பதிலளிக்க இருக்கிறேன். உறுப்பினர் அந்தப் பொருள் பற்றி அரை மணி நேரம் சொன்னாலும் கூட பதில் சொல்வதற்கு என்னிடத்திலே எதுவும் தகவல் இருக்காது. ஆகவே அந்தப் பிரச்சினையை இப்போது எழுப்பு வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை நீக்கும்படி உத்தரவிடு கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் வாக்குறுதி கொடுத்தார். அவையிலே வாக்குறுதி கொடுத் தால் அந்த வாக்குறுதி அஷ்யூரன்ஸ் ஆகிறது. அஷ்யூரன்ஸ் கமிட்டி வைத் திருக்கிறோம். அஷ்யூரன்ஸ் மீறப்பட்டிருக்கிறது. ஆகவே நான் கேட் கிறேன். நான் சாட்டிய ஒரு குற்றச்சாட்டில் நடவடிக்கை எடுக்கிறேன், எனக்கு இப்போதுதான் தெரியும், நடவடிக்கை எடுப்பேன் என்று வாக்குறுதி

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுத்திருக்கிறார், புரசீடிங்ஸிலே இருக்கிறது. ஆகவே அந்த அஷ்யூரன்ஸ் என்ன ஆயிற்று என்று கேட்கிற உரிமை எனக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் கேட்கிறேன்.

* * * *

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக் குழுக்கள் எல்லாம் It is a mini—Legislature அஷ்யூரன்ஸ் என்றால் அஷ்யூரன்ஸ் கமிட்டி இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: That is different.

Mr. DEPUTY SPEAKER: You cannot raise any matter, i.e., before any Committee.

அஷ்யூரன்ஸ் கமிட்டி இருக்கிறது (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சந்தர்ப்பங்களில் கேள்விகளின் போதும், விளக்கங்கள் சொல்லுகின்றபோதும் கருத்துரைகள் சொல்லுகின்ற போதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சிலபல உறுதி மொழிகளை தருகிறார்கள். இது நடைபெறும் என்று கூறுகிறார்கள். எது எது அஷ்யூரன்ஸ்க்கு கீழே வரும் என்று இந்தத் துறையினர் பொறுக்கி எடுத்து அஷ்யூரன்ஸ் குழுவுக்கு அனுப்புகிறார்கள். அஷ்யூரன்ஸ் குழுவிலே எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதிலே இடம் பெற்று இருக்கிறார்கள். ஆகவே இங்கே கொடுக்கப்பட்டு இருக்கிற உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டனவா இல்லையா என்பதை அந்தந்தத் துறையை கேட்கிறார்கள். எது எது நிறைவேற்றப்பட்டது என்பதற்கு காரணங்கலைச் சொல்லுகிறார்கள். நிறைவேற்றப்படுவதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்றும் சொல்கிறார்கள். எடுக்க முடியவில்லை என்றால் ஏன் எடுக்க முடியவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு அதன் மீது கருத்துக்களை வழங்குகின்ற உரிமை அந்த உறுதிமொழிக் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. பிறகு உறுதிமொழிக் குழு கடைசியில் தன்னுடைய அறிக்கையை இந்த அவையில் வைக்கும். அவையில் வைக்கும்போது அந்தக் குறிப்பை எடுத்து வைத்துக்கொண்டு, அதற்கு என்று இருக்கிற சட்ட முறையின்படி விவாதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அதற்கு

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பற்றது.





பிறகு அதன் மீது விவாதிக்கலாமே தவிர அஷ்யூரன்ஸ் கமிட்டியில் இருக்கின்ற போது அதைப்பற்றி இங்கே வற்புறுத்தவோ அல்லது உடனடியாக இங்கே பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்துவதோ பொருத்தமாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அஷ்யூரன்ஸ் கமிட்டியில் இருப்பதால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களிடத்தில் உங்கள் மூலம் கேட்கிறேன். ராம்பிரசாத் ராவ் கமிஷன் முடிவு பற்றி எப்போது வாதிப்பீர்கள் என்று கேட்டேன். சபையில் விவாதிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது அஷ்யூரன்ஸா இல்லையா? அதைப்பற்றி கேட்கலாமா? கேட்கக்கூடாதா? அது மாதிரிதான் * * *

அடுத்து, முக்கியமான பிரச்சினை ஒன்றை நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர்களுக்கு பி.ஏக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கார் மற்றும் எல்லா வசதிகளும் கொடுக்கப்படுகின்றன. சட்டத்தின் முன் எல்லோரும் சமம் தான். பி.ஏ.க்கு மட்டும் அமைச்சர்கள் சலுகை செய்யக் கூடாது. பொது மக்களுக்கும் செய்ய வேண்டும். லா காலேஜில் ஒரு அமைச்சருடைய பி.ஏ.க்கு அவர் தேர்டு கிளாஸ், அவருக்கு வந்து இடம் கொடுத்து இருக்கிறார்கள். நல்ல மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கொடு என்றால் கிடையாது. ஆகவே அதிகார துஷ்பிரயோகம் இருக்கக் கூடாது.

* * * *

(கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இம்மாதிரி பேசினால் பிரச்சினைகள் எழத்தான் செய்யும். (குறுக்கீடு). குற்றச்சாட்டு, ஊழல் என்று எதையெதையோ சொல்ல வேண்டும் என்பது உங்கள் எண்ணமாக இருந்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: அவைகளுக்குப் பதில் சொல்வதற்கு அமைச்சர் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக எதையும் பேச முடியாது. அவை முன்னுள்ள பொருள் குறித்து விவாதத்தை ஒழுங்குபடுத்திப் போவதற்குத் தான் நான் இருக்கிறேன்.

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாநில ஆட்சித் தலைவரின் கீழ் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாநில ஆட்சித் தலைவர் என்றால் அது கவர்னரைக் குறிக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர் என்றால் கலெக்டரைக் குறிக்கும்.

I am sorry to say this.

**திரு. அ. ரகுமான்கான் :** மாநில ஆட்சித் தலைவர் என்றால் கவர்னர் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் தலைமையிடப் பணியாளர்கள் என்பவர்கள் மாநில ஆட்சித் தலைவருக்குக் கட்டுப்பட்டவர்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கலெக்டர்களாகவும் இருக்கிறார்கள். பல்வேறு துறைகளிலேயும் இருக்கிறார்கள். எனவே, இந்த அரசிலே என்ன ஒரு நிலைமையைப் பார்க்கிறோம் என்றால், இன்றைக்குக் கொஞ்சம் சிக்கலான நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம்.

* * * *

கவர்னர் என்றால், ஹெட் ஆப் தி ஸ்டேட்—நிர்வாகப் பொறுப்பிற்குத் தலைமை வகிப்பவர். தலைமையிடப் பணியாளர்களாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றி மிகவும் முக்கியமான ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இவை எல்லாம் அவைக் குறிப்பிலே ஏற வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றிப் பேசலாமா, பேசக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கிட்டத்தட்ட 22 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அவை மூன்றுள்ள மானியக் கோரிக்கைகள்மீது நல்ல பல கருத்துக்களைச் சொல்லியிருந்திருக்கலாம்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றிப் பேசியது பூராவும் நீக்கப்படுகிறது. கோர்ட்டிலே * * * வழக்கும் இருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** இதே சபையிலே முதல்வரவர்கள் பேசிய பேச்சு இருக்கிறது. நாகராஜன் மீது குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். இப்பொழுது அரசாங்கமே குற்றச்சாட்டுகளை வாபஸ் வாங்குகிறது.

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். போய்விட்டார்; குகன், ஐ.ஏ.எஸ். போய்விட்டார்; மகாதேவன், ஐ.ஏ.எஸ். போய்விட்டார். பல காரணங்களைச் சொல்லி அவர்களெல்லாம் போய்விட்டார்கள்.

அடுத்து, மிகவும் முக்கியமான பிரச்னை என்னவென்றால், இலங்கைத்
தமிழர்கள் பிரச்னை குறித்து உங்களுக்கும், எல்லோருக்கும் அக்கறை
இருக்கிறது. மெடிகல் காலேஜிலே 40 சீட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால்
அவர்கள் எக்சாமினேஷன் எழுத முடியாதாம். மெடிகல் கவுன்சிலின் அனுமதி
கிடைத்தால்தான் எக்சாமினேஷன் எழுத முடியுமாம். அதற்கு அரசாங்கம்
நடவடிக்கை எடுக்கவில்லை. சீட்டு கொடுத்துவிட்டு, அவர்கள் எக்சாமி
னேஷன் எழுதுவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. எனவே, அந்த இலங்கைத்
தமிழர்கள் குறித்து தனி அக்கறை எடுத்துக்கொண்டு, மனிதாபிமானப்
பிரச்னையோடு அணுகி, அவர்களை பரிட்சை எழுதுவதற்கு அனுமதிக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒன்றே ஒன்றை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். நட்சத்திர இரவு நடைபெற்றது. கலெக்டரால் நடத்தப்பட்டது.
அதிலே எவ்வளவு வசூல்? 36 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் என்று சொல்
கிறார்கள். அதிலே முதலமைச்சரிடத்திலே கொடுக்கப்பட்டது 36 இலட்சம்
ரூபாய். மற்றபடி நடிகர்களுக்கு மோதிரம் கொடுத்தது, நடிகைகளுக்கு
மோதிரம் கொடுத்தது, இவற்றுக்கெல்லாம் என்ன செலவு? மற்ற செலவுகள்
எல்லாம் எவ்வளவு? அந்த விவரங்களை எல்லாம் இந்தச் சபையிலே வைத்
தால் மிக நன்றாக இருக்கும்; நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பாக
இருக்கும். * *

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசியாக திரு. ரகுமான்கான் குறிப்பிட்ட வார்த்தை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதைப்பற்றிச்
சொன்ன பாங்கு மற்றவை எல்லாம் அவைக் குறிப்பிலே இருப்பது நல்லதல்ல;
ஆகவே இதுவரை அதுபற்றி நடைபெற்ற விவாதம் அனைத்தையும் அவைக்
குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1984 ஏப்ரல் 26

**திரு. அ. ரகுமான்கான்:** அப்படியென்றால் நானே சபைக்கு வரக்கூடாது என்று சொல்வீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நடைமுறை சரியில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும், வேறு என்ன செய்வது;

It is not a healthy argument. (குறுக்கீடு) வேண்டாம்.

I am not wounding you.

என்க்குப் பட்டதை, தெரிந்ததைச் சொன்னேன். 234 உறுப்பினர்களில் நான் ஒருவர் இங்கே உட்கார்ந்திருப்பதால், நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. உ. சுப்பிரமணியன்:** பாயிண்ட் ஆப் ஆர்டர். இன்றைய விவாதம் 1 மணிக்கு முடிவடைய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறீர்கள். இப்பொழுது போகின்ற போக்கைப் பார்த்தால், இறுதியாகப் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்காது என்ற காரணத்தினால், 1 மணி என்று கொடுத்திருப்பதை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீட்டிப்பதற்கில்லை.

**திரு. ஏ. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மாநிலச் சட்டமன்றம் பற்றிய மானியக் கோரிக்கை பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாற்றுக் கட்சி மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அரசாங்க விழாக்களிலே, வேஷ்டி சேலை கொடுக்கக்கூடிய விழாக்களிலே ஒருசில இடங்களிலே தங்களது பெயர்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் வந்த பிறகுதான் எந்தத் தொகுதியிலே நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரைப் போட வேண்டும், அந்தத் தொகுதியினுடைய பாராளுமன்ற உறுப்பினரைப் போட வேண்டுமென்ற ஒரு உத்தரவைப் போட்டார்கள். ஆனால் பல விழாக்களிலே மாற்றுக் கட்சி அல்லது வேறு கட்சி நண்பர்கள் அரசாங்க விழாக்களை, அந்த நிகழ்ச்சிகளை புறக்கணிப்பது தொடர்ச்சியாக இருக்கிறது. பத்து நிகழ்ச்சிகளில் பெயர்களைப் போட்டால் ஒன்றிற்குக் கூட வருவதில்லை. இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு இந்த மாமன்றம் என்ன உத்தரவாதம் அளிக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒரு பாராளுமன்ற உறுப்பினர் 30, 35 முறை பெயர் போட்டும், வந்ததே கிடையாது. அவரது பெயரைத் தொடர்ந்து போட வேண்டுமா? இப்படி வராதவர்கள் பெயரை அந்தக்



1984 ஏப்ரல் 26] [திரு. ஏ. சி. சண்முகம்]

கல்லிலே பொறிக்க வேண்டுமா? எனவே, தயவுசெய்து வருகின்ற உறுப்பினர்கள் பெயரைத்தான் போட வேண்டுமென்ற நியதியை இந்த மாமன்றம், இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் நீக்கப் பெற்றாகி விட்டது.

**திரு. ஏ. சி. சண்முகம்:** * *
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன்னால் சொன்னது இருசாராருக்கும் பொருந்தும். நான் இரண்டு பக்கமும் அடி வாங்க வேண்டியிருக்கிறது. திரு. ஏ. சி. சண்முகம் இறுதியாகப் பேசியதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. ஏ. சி. சண்முகம்:** மாண்புமிகு ரகுமான்கான் பேசியதெல்லாம் ரெக்கார்டிலே இருக்கிறது. மொத்தத்தையும் நீக்குவது என்றால் நான் அந்தப் பிரச்னைக்கே வரவில்லை. முன்னாள் தலைமைச் செயலாளராக இருந்த திரு. இராயப்பா எவ்வளவு கொடுமைப்படுத்தப்பட்டார் என்பதை நாடு மறக்காது. நாங்கள்தான் ஏதோ மாவட்ட ஆட்சித் தலைவரைப் புறக்கணிக்கிறோம், ஏதோ வேண்டுமென்றே செய்கிறோம் என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் சொல்வது அவர்களுக்கு வேண்டுமென்ற நேரத்திலே வேண்டியவர்கள், வேண்டாத நேரத்திலே, இந்த அரசின் மீது புழுதி வாரி இறைப்பது போன்ற வேலையிலே தயவுசெய்து மாற்றுக் கட்சி நண்பர்கள் ஈடுபடக் கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றத்தினுடைய மானியக் கோரிக்கையிலே தொன்மை வாய்ந்த இந்தச் சட்டமன்றக் கட்டிடத்தை விரைவிலே புதுப்பித்து, புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று அரசை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே எல்லாம் சட்டமன்றம், பாராளுமன்றம் வளாகத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தனியாக அறை ஒதுக்கீடு செய்யப்பட்டு தொகுதியிலே இருந்து வருகின்றவர்களைப் பார்ப்பதற்காக வசதி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், தனித்தனியாக இங்கே அறை ஒதுக்க

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வேண்டும். ஒன்றிய சேர்மெனுக்கு கிளர்க், பியூன் எல்லாம் இருக்கிறார்கள். ஆனால் மூன்று ஒன்றியங்களுக்கு பிரதிநிதியாக இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கிளர்க் கூட இல்லை. அதனாலே தொகுதி சுற்றுப் பயணம் செய்கிறபோதும், அரசு விழாக்களில் கலந்துகொள்கிறபோதும், பி.டி.ஓ. அலுவலகத்திலிருந்து ஒரு கிளர்க்கை எங்களுக்கு பயன்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இப்போது 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கிறார்கள். இந்த மூன்று ஆண்டுகளில் ஏழு முறை தொகுதி சுற்றுப்பயணம் செய்திருக்கிறோம். பி.டி.ஓ. அவர்களிடம் வண்டி கேட்டால் பெட்ரோல் இல்லை என்று சொல்கிறார்கள். நாங்கள் போட்டு ஜீப்பை எடுத்துக்கொண்டு போகிறோம் என்றால் அதற்கு நடைமுறையில் இடமில்லை என்று சொல்கிறார்கள். எனவே 50 லிட்டர் என்பதை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். இதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கிற போன் பில்லைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பெல்லாம் எவ்வளவு உள்ளூர் கால் போட்டாலும் அதற்கு கட்டணமில்லை. இப்போது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வாடகை நாங்கள் கட்டியாக வேண்டும். ஒவ்வொரு லோக்கல் காலுக்கும் பணம் கட்டியாக வேண்டும். ஆகவே மூன்று ஆண்டுகள் கொடுத்த அந்த சலுகைகளை இப்போது புதிய இணைப்பு கொடுத்ததற்காக நிறுத்தி விடுவது நல்லதல்ல. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்களாகிய நாம் ஒருவரை ஒருவர் மதித்தால் தான் நம்முடைய மாமன்றத்தை பொதுமக்கள் மதிப்பார்கள். அப்போதுதான் அவர்களுக்கு நம்மிடத்திலே மரியாதை இருக்கும். நமக்குள்ளேயே நாம் விமர்சனம் செய்கிற நிலைமைகள் வளருமேயானால் அது எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். முன்பு ஒருமுறை இந்த மாமன்றத்திலே இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது.

அலுவல் ஆய்வுக் குழு என்பது சாதாரண குழு அல்ல. அந்தக் கமிட்டிக்கு எவ்வளவு மதிப்பு என்பது நமக்குத் தெரியும். அலுவல் ஆய்வுக் குழுவிலே எல்லா எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அந்தக் குழுவைப் பற்றி மிகக் கேவலமாக வெளியே போய் பேசுவது, அசிங்கமான முறையில் ... ஏமாளிகள் என்ற முறையிலே பேசுவது, விமர்சிப்பது



போன்றவைகளை வெளியே இருப்பவர்கள், அதுவும் பொறுப்பிலே இருந்து, இந்த மாமன்றத்திலே பல்லாண்டு காலம் பணியாற்றியவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவைப் பற்றி அப்படி விமர்சிக்கிறார்கள் என்று சொன்னால் அதை இந்த மாமன்றம் தடுத்தாக வேண்டும். இதற்கு எந்த முறையில் நடவடிக்கை எடுப்பீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். வெளியே இருப்பவர்கள், இந்த மாமன்றத்தைப்பற்றி அறியாதவர்கள் பேசினால் பரவாயில்லை. பல ஆண்டுகாலம், 20-25 ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர்கள் இங்கே பொறுப்பிலே இருந்து பணியாற்றிய வர்கள் அலுவல் ஆய்வுக் குழுவைப்பற்றி ஏமாளிகள் என்று விமர்சிப்பார்களானால் அது எந்த அளவிலே பொருத்தமானது என்பதை இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்வது என் கடமையெனக் கருதுகிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் என்று குறிப்பிட்டுப் பேசவில்லை என்று சொல்கிறீர்களா ? (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்,:** வெளியே பேசுவதைப்பற்றி இங்கே விமர்சிக்கக் கூடாது என்று நீங்கள் ஏற்கனவே ரூலிங் கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வெளியே பேசியதைப்பற்றி சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நாங்களும் இப்படி வெளியே பேசிக்கொண்டிருக் கிறார்கள் என்று சொல்லலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிற பிரச்னை இந்த அவையிலே விவாதிக்கப்பட்டு, தீர்ப்பு அளிக்கப்படாமல் அவைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது. ஆகவே, அதைப் பற்றி அவர் பேசுகிறார். (குறுக்கீடு) அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட டேப் கொடுத்து இருக்கிறார்கள். அதைப்பற்றித்தான் அவர் பேசிக்கொண்டு இருக்கிறார்.

**திரு. துரைமுருகன் :** அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். வெளியே பேசியிருந்தால் அதைப்பற்றி இங்கே பேசக்கூடாது வெளியிலே பேசுங்கள் என்று நான் சொன்னேன். கடைசியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நான் விட்டு விடுகிறேன் என்று விட்டுவிட்டு வேறு சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன் என்று சொல்லி அவர் சொல்லிவிட்டு போய்விட்டார். ஸ்பீக்கரும் சொல்லிவிட்டார். மறுபடியும் அதே சப்ஜெக்ட்டை அவர் வெளியே சொல்லாததையும் இவராகச் சேர்த்துச் சேர்த்து சொல்லிக் கொண்டு போவது முறைதானா என்று சொல்லிக்கொள்கிறேன்.

[1984 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி, டேப் கொடுத்து இருப்பதால்தான், தற்போது மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். அந்தப் பிரச்னையிலே இன்னும் எந்தவிதமான முடிவும் எடுக்கப் படவில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப் பட்ட பிரச்னை, மாமன்றத்திலே விவாதிக்கப்பட்ட பிரச்னை, அதைப்பற்றித் தான் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு இந்தப் பிரச்னை பேசப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லி, இந்தப் பிரச்னையை இத்தோடு விட்டு விடுகிறேன் என்று சொல்லி, தலைவரிடத்தில் இதற்காகத் தீர்ப்பளிக்கவேண்டும் என்று சொல்லி, டேப்பையும் கொடுத்து விட்டார்கள். அந்தப் பிரச்னை அப்போதே முடிந்து விட்டது. மீண்டும் அதைக் கிளப்பி பேசவேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : அடுத்த பிரச்சினை. இங்கே மாண்புமிகு உறுப்பினர்களை ஐந்து ஆண்டுகாலத்திற்கு மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பு கிறார்கள். அந்த ஐந்து ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மக்களுக்கு விஸ்வாசமாக, அந்த மக்களின் பிரதிநிதியாக, அவர்களுக்கு இருக்கும் பிரச்னைகளை இந்த மாமன்றத்திலே சொல்லி, நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் ஐந்து ஆண்டுகாலத்திற்கு அரசியல் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அவர்களை நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றி விட்டு, இடையே போகின்ற நிலைமைகள் தமிழகத்தில் தொடர்ந்து ஒவ்வொரு கட்டங்களிலும் வருகிறது. ஐந்து ஆண்டுகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் நான்காண்டு காலத்திலேயே அல்லது மூன்று ஆண்டு காலத் திலேயே தங்கள் பதவியை ராஜினாமா செய்து விடுவது என்கிற நிலைமை தமிழகத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. இது நீடித்தால் தமிழகத்தின் நிலை என்னவாகும் என்பதை தயவுசெய்து இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

திரு. துரைமுருகன் : நான் ஒன்றைச்சொல்கிறேன். மதிப்பிற்குரிய எஸ்.டி.எஸ். அவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இங்கே அமைச்சராக வரவேண்டும் என்பதற்காக இடையே அதை ராஜினாமா செய்து விட்டு வந்தார். மாண்புமிகு உறுப்பினருக்கு எஸ்.டி.எஸ். அவர்கள்மீது என்ன கோபம் என்பது எனக்குத் தெரியாது.



1984 ஏப்ரல் 26]

(முற்பகல் 11-20)

திரு. ஏ. சி. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் இங்கே விவாதத்திலிருக்கிற டிமாண்ட்ஸ் பற்றி பேசாமல் மருத்துவத் துறை மானியத்தைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள். அதனால் இந்தச் சட்டமன்றம் பற்றி வந்திருக்கிற மானியத்தில் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றிச் சொல்வதற்கு தாங்கள் நேரம் அதிகமாகத் தரவேண்டும்; தடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா நகர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் இங்கே எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார். அவர் முறையாக, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்படுவதும், அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்தபிறகு ஒரு கட்சியி லிருந்து இன்னொரு கட்சிக்குப் போவதும், சட்டமன்றத்திற்கு வந்தபிறகு ராஜினாமா செய்வதும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. அதிலே யாரும் தலையிட வேண்டியதில்லை. அதுபற்றி விமரிசனம் செய்ய வேண்டுமென்றால் அது இந்த சட்டமன்றம் அல்ல. அதுபற்றி விமரிசனம் செய்ய வேண்டிய இடம் அரசியல் மேடைகள், பொதுக்கூட்டங்கள் தவிர இந்த சட்டமன்றம் இல்லை. ஆகவே தயவுசெய்து வேறு ஏதாவது பிரச்சனை இருந்தால் அதுபற்றி பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : இந்த சட்டமன்றத்திலே நாம் பல கமிட்டிகளை நியமித்திருக்கிறோம். பெட்டிஷன் கமிட்டி என்று பல மாநிலங்களில் இருக்கிறது. அதைப்போன்று தமிழ்நாட்டிலும் பெட்டிஷன் கமிட்டி என்று ஒரு கமிட்டியை அமைத்தால் நன்றாக இருக்கும். முக்கியமான பெட்டிஷன்கள் பற்றி அந்தக் கமிட்டியில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்; அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைத்தம்பி அவர்கள் சென்ற முறை இந்த மானியத்திலே பேசும்போது அரை மணி நேரத்திற்கு மேலாக சட்டமன்ற உறுப்பினர்களை விமரிசிப்பதுபற்றி கடுமையாகப் பேசினார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி, அமைச்சர் களைப்பற்றி, பொறுப்பிலே இருப்பவர்களைப்பற்றி தரக்குறைவாக படம் எடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். தாங்களும் அன்றைக்கு பேரவை உறுப்பினர்களை கேவலமாக விமரிசித்தாலும் சித்தரித்து எழுதினாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள்.

இன்றைக்கும் தரக்குறைவாக விமரிசித்து, சித்தரித்து; சில படங்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக 'இன்குலாஃப்' என்று ஒரு இந்திப் படம். அதிலே . . .

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி தரக்குறைவாக எழுதினால், சித்தரித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தாங்களும் தீர்ப்பு வழங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். (ஒரு புத்தகத்தைக் காட்டி) இது 'சன் டே' பத்திரிகை இந்த வாரம் வந்திருக்கிறது. இதிலே * என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படிப் பேசுவதோடு ஏன் விட்டுவிடுகிறீர்கள் ? ஸ்பெசிபிக்காக அதைக் குறிப்பிட்டு, அந்தப் பத்திரிகையோடு எழுதிக்கொடுங்கள். தகுந்த நடவடிக்கை எடுக்கப்பெறும்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** துணைத் தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்புக்கு நன்றி. நான் இன்குலாஃப் என்ற இந்திப் படத்திலே இருப்பதைப் பற்றிச் சொல்கிறேன் . . .

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, இந்தப் பத்திரிகையில் * என்று வந்திருக்கிறது என ஸ்பெசிபிக்காகத்தான் சொல்கிறேன். இதை தனியாக ஏன் எழுதிக்கொடுக்க வேண்டும்? மன்றத்திலேதான் கேட்கிறேன். நடவடிக்கை எடுப்பீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுபோன்ற முன்னறிவிப் பின்றி அவையில் எழுப்புவது முறையாகாது. எழுதிக்கொடுங்கள், பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம். எதிராளிக்கு இது தெரியவேண்டும் என்பதால் அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தர விடுகிறேன். (குறுக்கீடு).

**திரு. ஏ. சி. சண்முகம் :** துணைத் தலைவரவர்களே, தங்களுடைய கவனத்திற்கும் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், மன்ற உறுப்பினர்களைப்பற்றி, அமைச்சர் களைப்பற்றி குறை சொல்வது, தவறு செய்தால் சுட்டிக்காட்டுவது ஜனநாயக முறையில் கடைப்பிடிக்கிற மரபு. ஆனால் (குறுக்கீடு) . . .

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களைப்பற்றி, தவறு செய்தால் விவரிக்கலாம். ஆனால் கேவலமாக தனிப்பட்ட முறையில், அவர்கள் வாழ்க்கை நிலைமைகளைப் பேசக் கூடாது.

356 இந்திய அரசியல் அமைப்பு சட்ட ஷரத்தை நிச்சயமாக மாற்றி அமைக்கவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த உறுப்பினர்களுடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்தான், என்று சொன்னால், நடுவிலே அந்த அரசைக் கலைப்பதை மத்திய அரசு நிறுத்தவேண்டும். இந்த அரசியல் சட்டத்தின் 356 ஆவது ஷரத்தை நிச்சயமாக நீக்குவதற்கு மத்திய அரசு ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டீ-லிமிட்டேஷன் கமிட்டியைப்பற்றி மத்தியப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. தொகுதி பங்கீடுகள் என்ற பிரச்சினையில், விரைந்து முடிவு எடுப்பதில், மத்திய அரசு முடிவு எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய நேரம் பாதிக்கு மேல் போய் விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசி, அமைச்சர் பதில் சொல்லவேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக இரண்டு பிரச்சினைகளைச் சொல்லி முடிக்கிறேன்.

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் பேசியதையும், தாங்கள் பேசியதையும் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிட்டு, அடுத்த பொருள்பற்றி பேசப் போகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(முற்பகல் 11-30)

**திரு. ஏ. சி. சண்முகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு சட்டமன்றம் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *

(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சனையைப்பற்றி நாம் ஏற்கனவே பேசிவிட்டோம். எப்படி உறுப்பினர்கள் பேச வேண்டும் என்பதைப்பற்றி நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லி இருக்கிறோம். எனவே உறுப்பினர்கள் நல்லமுறையிலே பேசவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர் சண்முகம் கடைசியாகப் பேசியது நீக்கப்படுகிறது.

* **திரு. கு. ரமணி:** உதவி சபாநாயகர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில முக்கியமான விஷயங்கள்பற்றி இந்தமானியக் கோரிக்கையின்மீது இந்த மன்றத்திலே நான் முன்வைக்க விரும்புகிறேன். எட்டாவது கோரிக்கை தேர்தல்கள் பற்றிய கோரிக்கையாக முன்வைக்கப் பட்டிருக்கிறது. ஜனநாயக முறையில் தேர்தல்கள் முறையாக நடத்துவதற்கு வேண்டிய உத்தரவாதங்கள் ஏற்படவேண்டும். 18 வயதானவர்களுக்கு எல்லாம் ஓட்டுரிமை என்று கொடுக்கவேண்டும் என்பது நம்முடைய கோரிக்கை. இந்த உள்ளாட்சியைச் சேர்ந்த தேர்தல்களுக்கு அது பின்பற்றப்படுகிறது. ஆனால் சட்டமன்றம், பாராளுமன்றத் தேர்தல்களுக்கு அது பின்பற்றப்படுவதில்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும். 18 வயதானவர்கள் அனைவருக்கும், சட்ட மன்றம், நாடாளுமன்றத் தேர்தல்களின்போது அவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கவேண்டும் என்பதை இந்தச் சட்டமன்றம் மூலமும், நம் அரசாங்கத்தின் மூலமாகவும், வலியுறுத்தி, மத்திய சர்க்கார், அதற்குத் தேவையான சட்ட மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் அதற்குத்தகுந்த மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த வோட்டர் பட்டியல் தயாரிப்பு. இது ஒரு முக்கியமான பிரச்சினை. இந்த தயாரிப்புக்காக, பல்வேறு ஆசிரியர்களும், மற்றவர்களும் ஈடுபட்டு, சில நாட்களிலே அந்தப் பட்டியலைத் தயாரிக்கிறார்கள். இதிலே பல குறைகள் ஏற்படுகின்றன. பல உண்மையான பெயர்கள் விடுபட்டு, பல மாற்றுப் பெயர்கள் இதிலே சேர்க்கப்படும்படியான நிகழ்ச்சிகள் நடைபெறு கின்றன. இவைகள் எல்லாம் தேர்தல் நடக்கும்போது வெளியிலே வருகின்றன. உண்மையாகவே, மக்களுடைய பிரதிநிதிகள் இந்த வோட்டர் பட்டியலில்



தயாரிப்பு வேலையில் அரசாங்க ஊழியர்களோடு உதவியாக நின்று, இந்தப் பட்டியல் தயாரிக்கிற ஒரு ஜனநாயக முறையை நடவடிக்கைகளைக் கையாண்டால், இதை எல்லாம் தடுப்பதற்கு வழி ஏற்படும். ஆகவே வோட்டர் பட்டியல் தயாரிக்கும் காலத்திலே அரசியல் கட்சிகள், அவர்களுடைய பிரதிநிதிகளை அனுப்பி, அரசாங்க அதிகாரிகளோடு சேர்ந்து அதை நிறை வேற்றுவதற்கு முயற்சி எடுப்பது நல்லது என்ற ஆலோசனையை நான் முன் வைக்கவிரும்புகிறேன். அப்படிச் செய்தால் ஆள் மாறாட்டம் போன்றவைகள், பொய்யான வோட்டுக்கள் என்று சேர்ப்பதெல்லாம் இல்லாமல் தடுப்பதற்கு சாத்தியப்பாடுகள் இருக்கும். இதைப்பற்றி நான் பல உதாரணங்களைக் கூடச் சொல்ல முடியும். சென்னையிலே அண்மையிலே நடந்த பட்டதாரிகள் தொகுதி தேர்தலிலே இந்த விஷயம் கூர்மையாக பேசப்பட்டது. உதாரணமாக ஒரு குடிசையிலே 10 பேர்கள், 12 பேர்கள் பட்டதாரிகளுக்கு ஓட்டிருக்கிறது என்று வந்தால் இது என்ன நிலையாக இருக்கும் என்பதை யோசனை செய்து பாருங்கள். அதேமாதிரி, பெருந்து நிலையத்திற்கு முன்னால், ஏதோ ஒரு வீட்டினுடைய நம்பரைப் போட்டு, அதிலே ஒரு டசன் பட்டதாரிகள் இருந்தார்கள் என்று வோட்டர் பட்டியலிலே விலாசம் வருகிறது என்று சொன்னால், இது என்ன அவல நிலை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் சரி செய்யப்படவேண்டிய விஷயங்கள். இவைகளை மிகுந்த ஜாக்கிரதையோடு செய்யவேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எல்லாவற்றுக்கும் மேலாக நாம் எல்லோரும் திடுக்கிடும்படியான ஒரு செய்தி, நான் கேள்விப்பட்டது. இது உண்மையாக இருக்குமானால்— அதாவது பேலட் பேப்பரைக் கொடுக்கிறார்கள், அப்படிக் கொடுக்கிறபோது, அந்தப் பேலட் பேப்பரைப் பெறும்போது, அந்த இடத்திலே கையெழுத்துப் போடுவது, அல்லது அவர்களுடைய கை ரேகையைப் பெறுவது என்ற பிராக் டிஸ். இருந்து வருகிறது. பட்டதாரிகள் விஷயத்திலும் அதேநிலை இருந்தது. அப்படியானால் என்ன அர்த்தம்? ஒரு பட்டதாரியாக இருப்பவர் ரேகை வைத்து பாலட் பெற்று வோட்டுப் போடுவது என்பது. இதுவும் கூடத் தெரியாமலே ஒரு அரசாங்கத்தினுடைய ரெக்கார்டு, இருந்துள்ளது. அப்படி யானால், இது எதைக்காட்டுகிறது என்றால், அதிகார வர்க்கத்தினுடைய ஆணவமான நடைமுறைதான் கண்மூடித்தனமாக நடக்கிறதே தவிர வேறல்ல. என்ன மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ளது என்பதையெல்லாம் பார்க்கத் தேவையில்லையா? பிரிட்டிஷ்காரன் காலத்திலே அந்த ரிக்கார்ட்டுகள் தயாரிக்கப்பட்டு, எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று

இருந்த நிலையில் போட்டிருக்கக்கூடிய வாசகங்களை அப்படியே போட்டு, இன்னமும் இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால், என்ன கண்காணிப்பு இருக்கிறது? என்ன கவனிப்பு இருக்கிறது? ஓட்டர் பட்டியலில் இப்படி இருக்க வேண்டும் 'என்றால், அடிப்படையான ஜனநாயகத்திற்கு பயன்படும்படியான, கட்டுப்படுத்தும்படியான அரசாங்கத்தை உருவாக்கும்படியான மக்களுடைய உரிமை எப்படி எல்லாம் புறக்கணிக்கப்பட்டு நடைபெறச் செய்கிறது என்பதை கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு நடக்கும்படியான தேர்தல் முறை. ஒரு ஜனநாயக நாட்டில் இப்படிப்பட்ட முறைகள் நடக்கலாமா என்பதை நாம் அத்தனை பெரும் கவலையோடு கவனிக்க வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே சொல்கிறேன். இன்றைக்கு ஜனநாயக முறையில் அல்ல தேர்தல்கள் நடப்பது. அதற்குப்பதில் பணநாயக முறையில்தான் தேர்தல் நடக்கிறது, என்று சொல்வது தான் கரெக்டாக இருக்கும். தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கக்கூடியவர்கள் எத்தனை லட்சக் கணக்கான பணம் செலவழிக்க முடியும் என்ற நிலையில்தான் பார்க்கப்படுகிறது. அதே மாதிரி சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள், கோடிக் கணக்கில் இருக்கக்கூடிய சமுதாய அமைப்பில், அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் பயன்படுத்தி பணத்திற்கு ஓட்டுகளை விலைக்கு வாங்கும்படியான நிலை இருக்கிறது. அத்தோடு சமுதாயச் செல்வாக்குகள் இன்னும் பல்வேறு செல்வாக்குகளும் பயன்படுத்தப் படுகின்றன. இதற்கு வேறு எங்கேயும் உதாரணத்திற்கு போக வேண்டிய தேவையில்லை. தமிழ்நாட்டிலே நடந்த பெரியகுளம் பாராளுமன்றத் தேர்தல் ஒன்றே அதற்கு உதாரணமாகப் போதும்.

அதில் நாங்கள் கேள்விபட்டோம். ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி ஒரு கோடி ரூபாய் பணம் இதிலே செலவழித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆயிரம் மோட்டார் வண்டிகள் உபயோகப்படுத்தப்பட்டன என்று சொல்கிறார்கள். அது மட்டும் அல்ல, நம்மை இன்றைக்கு ஆட்சி புரியக்கூடிய அரசாங்கத்தினுடைய அமைச்சர்களே அந்தத் தொகுதிக்கு போய் அங்கே வேலை செய்தார்கள். செய்யட்டும். ஆனால் இந்த மாபு சரிதானா என்று அவர்களே ஒரு முடிவுக்கு வரட்டும். அவர்கள் அந்தத் தொகுதிக்கு வந்த நேரத்தில், அவர்கள் நின்ற இடத்திலேயே, மக்கள் கேட்டதை ஆன் தி ஸ்பாட், உத்திரவுகள் போட்டு, அவை நிறைவேற்றப்பெற்றன.





ஜனங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லையா? குழாய் போடு என்று உத்தரவு. உடனே குழாய் வருகிறது. ரோடு போடு என்றால் உடனே ரோடு போடப்படுகிறது. பள்ளிக்கூடத்திற்கு அஸ்திவாரம் போடு, உடனே போடப் படுகிறது. மின்சார இணைப்பா? உடனே கொடுக்கப்படுகிறது. இப்படி நடந்தால் அது தேர்தல் என்று எப்படி அர்த்தமாகும். இதனுடைய விளைவு ஜனங்கள் மத்தியிலே ஒருவித வெர்ஷன்கள் பேசப்படுகிறது. அந்த ஜனங்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

நாம் இருக்கக்கூடிய பிரதேசங்களிலே தண்ணீரோ. ரோடோ, பள்ளிக் கூடமோ வேண்டும் என்றால், அது கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக அக்கோரிக்கைகளை எடுத்துச் சொன்னால் கூட கிடைக்க மாட்டேன் என்கிறது. ஆகவே நம் முடைய பகுதியில் யாராவது பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது சட்டமன்ற உறுப்பினரோ காலமாகிவிட்டால், நமக்கு இப்படி ஏதாவது வரும் என்று பேசக்கூடிய நிலைமைக்கு ஜனங்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவ் வளவு கீழான நிலைமைக்கு நம்முடைய நிலை போய்க் கொண்டிருக்கிறது. ஜனநாயகம் மிகப் பரிதாபமான நிலைமைக்கு இன்றைக்கு வந்துக் கொண்டி ருக்கிறது, என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலை நாட்டிலே ஏற்படக் கூடாது. ஆனால் இதற்கு இறுதியாக ஜனங்கள் தான் முடிவு கட்டுவார்கள் என்பது உண்மை. ஆனால் அந்த முடிவிற்கு நாம் ஜனங்களை கொண்டு செல்ல வேண்டாம் என்பதே என்னுடைய வேண்டுகோள். இந்த ஜனநாயக விரோத நிலைமையைப் போக்க வேண்டும்.

அதேபோன்று திருப்பத்தூர், திருச்செந்தூர் தொகுதியிலேயும் நடந்த சட்டமன்றத் தேர்தல்களிலே எத்தனையோவிதமான தவறான நடவடிக்கைகள் அவைகளையெல்லாம் சாட்சிகள் வைத்து நிரூபிக்க முடியாது. ஆனால் ஊரே அறிந்து அதை சொல்லக் கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இப்படி நடந் தால், இந்தியாவிலே ஏழை எளிய மக்களுடைய பிரதிநிதிகள் அனேகமாக சட்டமன்றங்களிலேயும், பாராளுமன்றங்களிலேயும் வர முடியாது. இப் போது ஏழை எளிய மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலர், இந்த தேர்தல் போராட்டமே வேண்டாம், வேறு ஏதாவது போராட்டத்திற்கு போகலாமா என்று எண்ணக் கூடிய நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இந்த பணநாயக தேர்தல் மூலம் ஏற்படுகிறது என்று சொல்லி இந்த ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

[திரு. கு. ரமணி] [1984 ஏப்ரல் 26

அதேமாதிரி தேர்தலை நடத்துவதும் சரி, எப்போது சௌகரியமோ அப்போது தேர்தல் நடத்தப்படுகிறது. பிரிட்டிஷ்காரன் காலத்தில் இருந்து சரித்திரங்கள் எல்லாம் நம் எல்லோருக்கும் தெரியும். நாம் இப்போது அந்தச் சரித்திரக் காலக் கட்டத்தில் இல்லை. ஆனால் சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளுக்குப்பிறகும், இன்றைக்கும் நாம் அப்படியே அந்த நிலையிலேயே வைத்துக் கொண்டு இருக்கிறோம்.

நமது பஞ்சாயத்துக்களுக்கும், மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல் நடந்து எத்தனை காலமாச்சு? அது பற்றி நாமே இந்த மன்றத்திலே பேசியிருக்கிறோம். அதற்குப் பல்வேறு காரணங்கள் அவ்வப்போது சொல்லப் படுகிறது. ஆனால் உண்மை, அந்தக் காரணங்கள் இல்லை. ஏனென்றால் இந்திய நாடு முழுவதிலும் பல்வேறு மாநிலங்களிலே எப்படி தேர்தல் நடக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இங்கே அப்படிப்பட்ட தேர்தல் கூட நடக்காமல், பல ஆண்டுகளுக்கு, ஒரு ஐந்து வருஷம் அல்ல, இன்னொரு 5 வருஷம் அல்ல, அதையும் தாண்டி விட்டது. இந்த தேர்தல்களை யெல்லாம் வசதிப்படி வைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. தேவையானால் 5 வருஷத்தில் வைக்கலாம். தேவையில்லை என்றால், தள்ளி விடவே செய்துக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இது அபாயகரமானது. ஜனநாயகத்தினுடைய அஸ்திவாரத்திற்கே இது வேட்டு வைத்துத் தகர்க்கும். மக்களுக்கு ஜனநாயக முறையில் நம்பிக்கை இல்லாத முறையில் கொண்டுபோய்விடும். அது கூடாது, என்பதைச் சொல்லவேண்டி யிருக்கிறது. உதாரணமாக மேலவையிலே மொத்த உறுப்பினர்கள் எவ்வளவு என்று நமக்குத் தெரியும். நமக்கு இந்தச் சபையிலே 234 பிளஸ் 1 மொத்தம் 235 பேர்கள். அந்த சபையிலே 21 பேர்கள் இன்றைக்கு இல்லை. காரணம் என்ன? பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் தேர்தல்கள் நடக்க வில்லை. அதனுடைய விளைவுதான் அது. அந்தத் தேர்தலுக்குப் பிறகு மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு மேல்சபைக்கு வரவேண்டிய பிரதிநிதிகள். நாம் ஜனநாயகம் என்று பேசுகிறோம். உலகத்திற்கு எல்லாம் நாம் முன்னோடிகள் என்று இப்போது உரிமை கொண்டாடுகிறோம். இந்த நிலைமைகள் மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமைகள். இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டும்.

(முற்பகல் 11-40)

ஜனநாயகத்திற்கு சரியான ஒத்த முறைகள் அல்ல அவை. [illegible] அனுபவித்தாலும் இறுதியாக அரசாங்க அதிகாரம் என்பது மக்களிடமிருந்து வருவது, அதனுடைய வற்று பொதுமக்கள் [illegible] அதை மறந்து பணம்,



1984 ஏப்ரல் 26] [திரு. கு. ரமணி]

செல்வர்க்கு இவைகளினுடைய சாமர்த்தியத்தினால் நாம் பதவிகளையும் அரசாங்க அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வது என்ற முறை ஜனநாயகத் திற்கு ஒத்து வராது. நிராகரிக்க வேண்டிய நடவடிக்கைகள். இன்றைக்கு இருக்கிற நிலையில் நாம் சொல்லமுடியும். 5 ஆண்டுக்காலம் வரைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமோ பாராளுமன்றமோ இருப்பதற்கு இடம் இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டிலே உள்ள சரித்திரத்தைப் பார்க்கி றோம்; 3 ஆண்டுகளுக்குள்ளே அவை போகும், 4 ஆண்டுக்குள்ளே போகும். இஷ்டப்படுகிறபோது கலைக்கப்படும் அதனால்தான் அரசியல் சட்டம் 356-வது பிரிவு ரத்து செய்யப்படவேண்டுமென்று ஆளுங்கட்சி உறுப்பினர் இங்கே சொன்னார். அது நல்ல கருத்து. வரவேற்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலேயே நேற்றைக்கு திரு. இளையபெருமாள் சொல் லும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னது அவர்களுடைய மன திலே ஏற்பட்ட கருத்து. அவர்கள் மத்தியில் ஆளும்படியான கட்சியைச் சேர்ந்தவர். அவருக்கு ஏதாவது தெரிந்திருக்குமா என்பது எனக்குத் தெரிய வில்லை. இன்றைக்கு இந்த மன்றத்திலே நாம் பேசுவது இதுவே கடைசியாக இருந்தாலும் இருக்கலாம் என்று சொன்னார்கள். நான் தவறு என்று கருத வில்லை. அப்படிப்பட்ட ஒரு தோற்றம் ஏற்படுகிறது. நாடு முழுவதும் இந்தப் பிரச்சினை ஒருபுறத்திலே பேசப்பட்டது. இந்தப் பாராளு மன்றம் கலைக்கப்படும், அதோடு சேர்ந்து இந்தச் சட்டமன்றமும் கலைக்கப் படும் என்று. அப்படியானால் என்ன அர்த்தம்? கலைக்கப்படுகிறதா இல்லையா என்பதை பிறகு எங்கோ போய் என்ன என்று பார்க்கட்டும். பிரச்சினை அது அல்ல. 5 வருடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்ட மன்றம் சட்டப்படி பதவியில் இருப்பதற்கு உரிமை இருக்கிறது. அதை வேண்டாம் என்று முடிவுக்கு வருவது என்று சொன்னால் ஜனநாயகம் பற்றி பேசி பிரயோசனம் இல்லை. அதிலே அர்த்தம் இல்லை. ஜனநாயகம் கேலிக்கூத்தாகி விடும். இந்தச் சட்டமன்றம் கடைசிவரைக்கும் 5 ஆண்டுக் காலம் இருக்குமா என்று அனுபவத்தில் பார்த்துத்தான் சொல்லவேண்டும். நான் ஜோஸ்யம் சொல்ல விரும்பவில்லை. பார்த்துத்தான் சொல்லவேண்டு மென்ற ஒரு நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்றத்திலே இன்றைக்கு நாம் நடத்தக்கூடிய நடவடிக்கைகள் என்று வருகிறபோது போதிய வசதிகள் இல்லை. இதிலே இருக்கிற இருக்கைகள் நெருக்கமாக இருக்கின்றன. [illegible] இங்கு [illegible] நடந்தபோது நான் பார்த்தேன், மாட்டிக் கொண்டால் இதிலேயிருந்து வெளியே போக முடியாத நிலை. உட்காருவதற்கே வசதியில்லை என்ற நிலைமை இருக்கிறது.

இந்த நிலைமை கூடாது. இதற்காக 10, 12 கோடி ரூபாய் செலவழித்து புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு நடக்கிறது என்று இங்கே பேசப்படுகிறது. ஆனால் அது துரிதப்படுத்தப்பட வேண்டும். நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் இருக்கிறார், அதிலே அவருக்குப் பொறுப்பு இருக்கிறது. அவர் செய்வார் என்று எதிர்பார்க்கிறேன். இல்லையென்றால் நாமே இந்த கஷ்டத்திற்கு ஆளாவோம். மேலும் இந்தச் சட்டமன்றத்திலே ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் குறைந்த பட்சம் இங்கே வரும்போது ஏற்படுகிற பிரச்சினைகளை ஆராய்ந்து கலந்து பேச அறைகள் தேவை. பாராளுமன்றத்திலே பார்க்கிறோம், ஜப்பானிலே சிங்கப்பூரிலே போய் பார்க்கிறோம் என்று சொல்லப்பட்டது. இங்கேயும் போய்ப் பார்க்கலாம், அங்கே எந்த மாதிரியான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதை நாம் பார்க்கலாம்.

அமைச்சர்களுக்கு நாம் கடிதம் எழுதினால் நமக்கு பதில் தரவேண்டும். பாராளுமன்றத்திலே ஒரு முறை வைத்திருக்கிறார்கள். கடிதம் கிடைத்ததும், சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு பதில் எழுதாவிட்டாலும் கிடைத்தது என்று இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாராக இருந்தாலும் பதில் உங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றது என்று நமக்கு வரும். இங்கே அமைச்சர்கள் பலபேர்களிடமிருந்து . பதில் வருவதில்லை. உதாரணமாக 3 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஒரு குறிப்பிட்ட மானியம் வரும்போது அந்த மானியத்திற்கு முன்னாலேயே சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு நான் எழுத்து மூலமாக மெமோரண்டமாக சமர்ப்பிக்கிறேன். இன்றுவரை பதில் வரவில்லை. பதில் பெறுவதற்குக்கூட சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கு யோக்கியதை இல்லையா என்று வருத்தத்தோடு நான் இவ்வாண்டு எழுதி இருக்கிறேன். பதில் கிடைக்கவில்லை. இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். இதிலே சுயவு தாட்சண்யம் எதுவும் இல்லை. இது பொதுமக்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் கன்செல்டேட்டிவ் கமிட்டி ஒவ்வொரு மினிஸ்ட்டிரிக்கும் ஒவ்வொரு போர்ட்போலியோவுக்கும் ஒரு கன்செல்டேட்டிவ் கமிட்டி, ஒரு ஆலோசனைக் குழு வேண்டும். இது மிக மிக அவசியம். பார்லிமெண்டில் இதை வைத்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் பங்ஷனில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் கமிட்டிகள் இருக்கின்றன. எனக்குத் தெரியும். நானே அந்த மாதிரி கமிட்டியில் பங்கு எடுத்து இருக்கிறேன். இப்போது இங்கே என்ன நிலைமை என்று கேட்டால் சட்டமன்றக் கூட்டம் முடிந்த உடனே வெளியே போன பிறகு அடுத்த சட்டமன்றக் கூட்டம் கூடும் வரைக்கும் என்ன நடக்கிறது என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிய



முடியாது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு தெரியலாம். ஆனால் அவர்களுக்கு இருக்கக்கூடிய தொடர்பு, அது அவர்களுக்கு சாத்தியம். ஆனால் நமக்குத் தெரிய முடியாது. எதிர்க் கட்சியைச் சேர்ந்த பல பேருக்கு தெரிய முடியாது. இடைப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த கன்செல்டேட்டிவ் கமிட்டி இருந்தால் சில விஷயங்களை அங்கே விவாதிக்க முடியும். என்ன செய்யப் போகிறார்கள் என்று, அரசினுடைய மந்திரி சபையினுடைய முடிவு எடுத்து இருந்தால் கூட அது நமக்குத் தெரியும். அப்போது நமக்கு பத்திரிகையில் வரும் செய்திக்கு மக்கள் கேட்டால் பதில் சொல்ல முடியாத முழிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே அப்படிப் பட்ட கன்செல்டேட்டிவ் கமிட்டிகள் தேவை. ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் இது தேவை.

அதே சமயத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் தொகுதிகளுக்கு வரும்போது தெரிவதில்லை. அது இப்போது நடந்து கொண்டே இருக்கிறது. இப்போது நாம் புதிதாக நல்ல வழிகளை கண்டுபிடித்து இருக்கிறோம். எம்.எல்.ஏ.-க்கள் வந்தாலும் வராவிட்டாலும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மாண்புமிகு அமைச்சர்கள் ஒரு தொகுதிக்கு போவது என்று சொன்னால் கார்டில் அச்சடித்துக் கொடுத்து விட வேண்டியது. இந்த எம்.எல்.ஏ. இந்த எம்.எல்.ஏ. என்று அச்சடித்து விட வேண்டியது. அதற்கு அவர் வரவில்லை என்று சொன்னால் அவர் வரவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்ல வேண்டியது. இது எப்படி கரெக்டாக இருக்கும். அந்த குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர் அன்று அந்தத் தொகுதியில் இல்லாமல் இருக்கலாம். அப்படி அவர் இருக்கிறாரா வருகிறாரா என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற அதிகாரிகள் கேட்டு அமைச்சர் அவர்கள் வருவார்கள் நீங்கள் வரவேண்டும் என்று சொல்ல வேண்டும். அன்று அவர் இல்லை என்று சொன்னால் அவருடைய பெயரை போடவேண்டிய அவசியம் இல்லை. நான் அப்படி தான் அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். நான் இல்லை என்றால் என் பெயரைப் போடக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அது இல்லாமல் எம்.எல்.ஏ.-க்கள் இப்படி கேட்கிறார்களே என்பதற்குப் பதில் கொடுப்பதற்கு ஒரு 'ரேடி மேடு அரேன்ஜ்மெண்டு வைத்தால் சரியாகுமா? 'That is only a mechanical approach' அது ஒரு நியாயமான அணுகு முறை அல்ல. இது கூடாது. அதேசமயத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அவர்களிடம் சொல்லி அதைச் செய்ய வேண்டியது அதிகாரிகளுடைய வேலை. நேரிடையாக அமைச்சர்கள் செய்ய முடியும் என்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய திட்டங்கள் தயாரிக்கும் போது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மற்ற அதிகாரிகள் இதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். அதேசமயத்தில் அதற்கு ஒரு

நல்ல உதாரணம் சொல்லமுடியும். இந்த குடியரசு தினம் 26 ஆம் தேதி அன்று என்னுடைய தொகுதியில் நம்முடைய உள்ளாட்சித் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்கள் குறையை கேட்பது என்று தீர்மானித்து அங்கே வந்தார்கள். மக்கள் குறை கேட்பது குடியரசு தினத்தன்று. ஆனால் சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த விஷயத்தை தெரிவிக்கவில்லை. அந்த கலெக்டரோ மற்ற அதிகாரிகளோ தெரிவிக்கவில்லை. அவர் வந்தார். பெரிய விழா கோலத்தில் நடக்கிறது. நான் என்னுடைய வீட்டில் இருக்கிறேன். என்னுடைய வீட்டுக்கு பக்கத்தில் விழா நடக்கிறது. அதற்கு எந்தவிதமான அழைப்பும் இல்லை. அதைப் பற்றி நான் ஒரு பெரிய குற்றச்சாட்டாக சொல்லவில்லை. அதைப்பற்றி பத்திரிகையில் ஒரு அறிக்கை விட்டேன். நாம் சொன்னாலும் அதை எல்லாம் பத்திரிகையில் போடுவார்களா? போட மாட்டார்கள். அதற்கு வேறு காரணம் இருக்கிறது. அவர்கள் எல்லா விஷயங்களையும் போட முடியாது. அந்த விழா முடிந்த பிறகு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் கேட்டேன். இது இப்படி செய்யலாமா? நீங்கள் மக்கள் குறைகளை கேட்கிறீர்கள். ஏன் எனக்குத் தெரிவிக்கக் கூடாது. அதற்கு அவர் எனக்கு சொன்ன பதில் திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல, நான் சென்னையிலேயே இப்படி நடத்தி இருக்கிறேன். அங்கேயும் இப்படி தான் செய்தேன். இங்கே இப்படி செய்வதற்கு காரணம் உங்களை புறக்கணிக்கவேண்டும் என்பது அல்ல. நீங்களும் வந்து பக்கத்தில் உட்கார்ந்தால் தொகுதியில் உள்ள மக்கள் தங்களுடைய கஷ்டங்களை வாய் திறந்து சொல்வதற்கு அவர்கள் அஞ்சுவார்கள் என்று சொன்னார்கள். இது எப்படி சரியாகும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து மக்கள் அஞ்சக்கூடிய நிலையில் இருக்கிறார்களா? நாங்கள் அப்படி இல்லை. அப்படி யாராவது இருக்கிறார்கள் என்றால் அதை நீங்கள் பரிசிலிக்கவேண்டிய விஷயம். நாங்கள் அப்படி இல்லை. இப்படி நடந்து இருக்கிறது. நான் இன்றைக்குத்தான் இதைச் சொல்கிறேன். இதை நான் குற்றச்சாட்டாக இதுவரை சொல்லவில்லை. ஏன் என்றால் இந்த அனுபவத்தின் அடிப்படையை நீங்கள் புரிந்து எதிர்காலத்தில் நடந்து கொள்ளவேண்டும். சில சமயத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் திட்டம் போட்டு வரமுடியாது போகிறது. அதை உடனே தப்பு என்றும் சொல்வது இல்லை. சட்டமன்ற உறுப்பினர் இருந்தால் அவர்களுக்கு அதில் பங்கு எடுத்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்கள் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் பங்கு வகிக்க முடியுமா என்று கீழே இருக்கக் கூடிய அதிகாரிகள் முயற்சிக்கவேண்டும், பார்த்துச் செய்யவேண்டும். இதை ஒழுங்காக செய்யவில்லை என்று சொன்னால் நிச்சயமாக தவறான எண்ணம் ஏற்படும். உதாரணமாக ஆளும் கட்சியை சேர்ந்த உறுப்பினர்களுக்கு



மாண்புமிகு அமைச்சர்களுடைய நடமாட்டம், அவர்களுடைய திட்டம் நடவடிக்கைகள் அனைத்தும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் இந்தத் தேதியில் இந்த ஊருக்கு போகிறார். அன்று அங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் போட்டு இருக்கக்கூடிய திட்டப்படி அவர்கள் அங்கே பங்கு எடுத்துக்கொள்வார் என்று எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் எங்கள் விவகாரத்தில் என்ன

(முற்பகல் 11-50)

நடக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராக ஆனதற்குப் பிறகு ஒருமுறை மாண்புமிகு அமைச்சர் ஒருவரை என்னுடைய தொகுதிக்கு அழைத்துச் சென்றேன். அவர்கள் வந்து இரண்டு மூன்று இடங்களைப் பார்த்துவிட்டு, ஆன் தி ஸ்பார்ட் உத்தரவைப் போட்டார்கள். ஆனால் அதை நிறைவேற்ற 75 சதவீதம் வேலைகள் இன்றுவரையில் நடக்கவில்லை. கடிதம் எழுதியும் நடக்கவில்லை. எனவே, நான் வேதனையோடு சொல்கிறேன், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற தரம் இருக்கக் கூடாது. சட்டப்படி அப்படி இல்லை, ஆனால் நடைமுறையில் அப்படி இருக்கிறது. இரண்டாம்தர உறுப்பினர்களாக எங்களை ஆக்கக் கூடாது, அது ஜனநாயக மரபுக்கு ஒத்தது அல்ல.

எம்.எல்.ஏ.-க்கள் சம்பந்தப்பட்டவரையில் நாங்கள் அதிகமாக எந்த வசதிகளையும் கேட்கவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நாங்கள் இருக்கின்ற எம்.எல்.ஏ., ஹாஸ்டல் பெரிய தேர்த் திருவிழா நடக்கின்ற இடம் போல இருக்கிறது. அதற்கு ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஏற்கெனவே இந்த மன்றத்தில் இதைப்பற்றிப் பேசியிருக்கிறோம்.

அங்கே உள்ள உணவகத்தில், ஹாஸ்டலில் உள்ள நாங்கள் போய்ப் பல நேரங்களில் சாப்பிட முடியவில்லை. எங்களுடைய உயிரையும், ஆரோக்கியத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு; அதைத் தவிர்க்க முடியாது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியாக உணவு சமைக்க மெஸ் ஏற்படுத்த வேண்டும். அதற்கு என்ன செலவு ஏற்படுகிறதோ அதைக்கூட சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளலாம். இதைச் செய்ய வேண்டும். இதைச் செய்யவில்லை என்றால் ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் என்று பேசிப் பிரயோஜனம் இல்லை.

[திரு. கு. ரமணி] [1984 ஏப்ரல் 26

நாங்கள் எங்களுடைய அறையில் எந்தவிதமான உபத்திரவமும் இல்லாமல் செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உறுப்பினர்களுக்கு எத்தனையோ பேர்கள் நண்பர்களாகவும், வேண்டியவர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்காக என்று தனியாக ஒரு இடத்தைக் கட்டி, குறிப்பிட்ட ஒரு நேரத்தைக் குறித்து அங்கே சென்று அவர்களைப் பார்க்கின்ற வசதியைச் செய்ய வேண்டும். அவ்வாறில்லாமல் எல்லோரும் படையெடுத்து அங்கே உள்ளே வந்து ஊழியர்களைத் திண்டாட விடக் கூடாது.

இரயில் டிக்கெட்டுகளைப் புக் செய்வதைப் பொறுத்தவரையில், வி.வி.ஐ.பி.ஸ் என்று அமைச்சர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களைச் சொல்கிறார்கள். எங்களைக்கூட வி.ஐ.பிஸ் என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் அது நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இரயில்களில், இடம் தருவதில் அமைச்சர்களுக்கும், பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கும் கிடைப்பதைப் போல எம்.எல்.ஏ.-க்களுக்கும் முன்னுரிமை வழங்குவதற்கான உத்தரவாதத்தை, அரசு செய்ய வேண்டும். இரயில்வேயில் உள்ள ஆட்களோடு நாங்கள் சிநேகம் பிடித்துத்தான் எங்களுக்கு வேண்டிய இட வசதியைச் செய்துகொள்ள வேண்டுமென்ற நிலைமை இருக்கக் கூடாது.

பஸ்களிலே எம்.எல்.ஏ.-க்கள் செல்வதற்குப் பாஸ் இருக்கிறது. ஆனால் அதில் சில ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இருக்கின்றன. அதில் ஒன்று, ஏர்கண்டிஷன் பஸ்களில் போகக் கூடாது அல்லது அப்படிப் போனால் எக்ஸ்ட்ரா கட்டணம் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) போகலாம் என்று சொன்னால் சந்தோஷம். நான் இதுவரையில் ஏர்கண்டிஷன் பஸ்ஸில் போகவில்லை.

இன்னொரு ரெஸ்ட்ரிக்ஷன், படுத்துத் தூங்கும் பஸ்களில் நாங்கள் போக முடியாது. ஏனென்றால் அதற்குச் செலவு ஜாஸ்தியாகிறது, அதிகக் கட்டணம் கொடுத்து வருபவர்களுக்குக் கொடுத்தாக வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பயணங்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால் கூடுதல் கட்டணத்தைக் கொடுத்துவிட்டு வேண்டுமானாலும் போகலாம். இரயில்வேயில் ஏர்கண்டிஷன் வண்டியில் செல்வதற்கு எக்ஸ்ட்ரா சார்ஜ் கொடுத்துப் பயணம் செய்வதற்கான வகை இருக்கிறது. ஆகவே, அந்த வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேயுள்ள சட்டசபைச் செயலாளரிடம்கூட பல சந்தர்ப்பங்களில் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்ற விஷயம் என்னவென்றால், இங்கேயுள்ள [illegible] இன்றைக்கு 8 ரூபாய், 10 ரூபாய் என்று கூலி பெற்றுக் கொண்டு



1984 ஏப்ரல் 26] [திரு. கு. ரமணி]

பணி புரிகிறார்கள். இது மிகப் பெரிய அநியாயம். தினக் கூலிகள் என்று அவர்களைச் சொல்கிறார்கள், கேஷுவல் லேபர் என்று சொல்கிறார்கள். அது தப்பு. அவர்களுக்கு நிச்சயமாகச் சம்பள உயர்வைக் கொடுப்பது மட்டுமல்லாமல், ஒரு வருஷ காலம் அவர்களுக்கு சர்வீஸ் இருந்தால் நிச்சயமாக அவர்களுக்குப் பணி நிரந்தரப்படுத்தி வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட நம்பர்தான் வரும்.

இங்கே உள்ள பணியாளர்கள் காலையில் சட்டசபைக்கு வருகிறார்கள். அவர்களுக்குப் பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று அரசு ஜி.ஓ. போட்டது. ஆனால் அந்த ஜி.ஓ. அமலாகவில்லை. சர்க்கார் போட்ட ஜி.ஓ. அமலாகவில்லை என்றால் என்ன செய்வது? அவர்களும் நமக்கு முன்னால் வேலைக்கு வருகிறார்கள். எனவே, இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எல்.ஏ., ஹாஸ்டலில் 70 ஸ்வீப்பர்கள்—பெண்கள் 4½ ரூபாய் சம்பளத்தில் கேஷுவல் கூலிகளாக இருக்கிறார்கள். இதனால் பல குறைகள், கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்த 70 பேர்களுக்கும் சேர்த்து ஒரு சானிடரி இன்ஸ்பெக்டர்தான் இருக்கிறார். இப்படியிருந்தால் அவர் எப்படி வேலை செய்ய முடியும்? அவர் ஒருவர் இவர்களைக் கண்ட்ரோல் செய்ய முடியவில்லை. சட்டமன்ற விடுதி இவ்வளவு அலங்கோலமாக இருப்பதற்குக் காரணம் இதுதான். இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பென்ஷன் சம்பந்தமாகச் சொல்லுகின்ற நோக்கில், விவசாயத் தொழிலாளிகளுக்குப் பென்ஷன் கொடுக்க சட்டம் கொண்டு வர வேண்டும்.

இன்றைக்கு நீங்கள் கூறுவது இன்சூரன்ஸ் பற்றியது. அதற்கு நாம் போய் அமல் பண்ணவேண்டியதில்லை. அதற்குக் கொஞ்சம் ப்ரீமியம் அவர்கள் கட்டினாலே அது சரியாக நடக்கும். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்திலே 1980 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி கொடுத்த தேர்தல் அறிக்கையை நீங்கள் பார்க்க வேண்டும். அதிலே அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். எனவே அதற்கான சட்டத்தைப் போட்டு அவர்களிடத்திலே இருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்து அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கக்கூடிய வகையிலே ஒரு ஏற்பாட்டினைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பிலே இந்தச் சட்டமன்ற வளாகத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய பகுதிகளில்—நம்முடைய மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே முறையாகத் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய முறையிலே பல்வேறு கருத்துக்களை எடுத்து வைக்கக்கூடிய முறையிலே போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலைகளைப் பற்றி இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

நூலகத்திலே இருக்கக்கூடிய சில குறைபாடுகளைப் பற்றி உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல முக்கியமான கருத்துக்களையும், ஆவணங்களையும் எடுத்துக் கொடுக்கக்கூடிய முறையிலே இந்த லைப்ராரியில் மூன்று உதவியாளர்களை நியமிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கன்னிமேரா லைப்ராரியில் இருப்பதுபோன்று பல்வேறு கருத்துக்களை உடைய பல்வேறு புத்தகங்களும் நம்முடைய நூலகத்திலே வைக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நூலகத்திலே உறுப்பினர்கள் அமர்ந்து படிப்பதற்குத் தேவையான சோபாக்கள் இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே அதிகப்படியான உறுப்பினர்கள் அமர்ந்து படிக்கக்கூடிய வகையிலே அதிகப்படியான சோபாக்களை அங்கே போடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்புக்களை எடுப்பதற்கு நூலகத்திலே போதிய ஆட்கள் இல்லாத நிலைமை இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலை காரணமாக அங்கே தட்டெழுத்திலே குறிப்புக்களை எடுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே குறிப்புக்களை தட்டெழுத்திலே எடுத்துக்கொள்வதற்கு வசதியாக அங்கே தட்டெழுத்தர்களை நியமிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கக்கூடிய விடுதிகளில் இருக்கக் கூடிய சட்டமன்றக் கட்சி அலுவலங்களுக்கு அரசாங்கமே தொலைபேசி வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதுமட்டுமல்ல. கட்சி அலுவலகங்களுக்கு முன்னாலே சில வேண்டாதவர்களும், விரும்பத்தகாதவர்களும் படுத்திருக்கின்ற காரணத்தால் அங்கே கட்சிக் கூட்டத்தை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றது. உதாரணமாக பழைய சட்டமன்ற விடுதி இருக்கக்



கூடிய பகுதியில் எங்களுடைய கட்சி அலுவலகத்திற்கு முன்னால் வேண்டாதவர்களும், விரும்பத்தகாதவர்களும் அதிகமான பேர் அங்கே படுத்து உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் எங்களுடைய வேலைகள் தடைப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையில், அவர்களை எல்லாம் அந்தப் பகுதிகளுக்கு வரவிடாமல் தடுக்கின்ற வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் அரசாங்கம் கொடுத்து இருக்கக்கூடிய சட்டமன்றக் கட்சி அலுவலகங்களிலே தொலைபேசி அமைத்துக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர்கள் தொகுதிகளுக்கு வரக்கூடிய நேரத்தில் அல்லது வேறு எங்கே சென்றாலும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே தகவல் கொடுக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு தொகுதிகளுக்கு வரக்கூடிய நேரத்திலே அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கெடுத்துக்கொள்ளக்கூடிய முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ அல்லது சம்பந்தப்பட்ட அங்கே இருக்கக்கூடிய வருவாய்க் கோட்ட ஆட்சித்தலைவர்களோ எங்களை அணுகி எங்களுக்கு இருக்கக்கூடிய தேதியையும் அனுசரித்து அமைச்சர்கள் வரக்கூடிய தேதியை நிர்ணயித்து ப்ரோகிராம்களை ஃபிக்ஸ் பண்ணுகின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கமே அறிவித்திருக்கின்றது. அதாவது தொகுதியைச் சுற்றிப் பார்ப்பதற்காக மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு யூனியனிலிருந்தும் 50 லிட்டர் பெட்ரோலோடு வண்டிகள் கொடுப்பது என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கின்றது. ஆனால் நாங்கள் எப்போது கேட்டாலும்—எங்களுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் அல்லூர் ஒன்றியத்திலே இருக்கக்கூடிய வாகனம் இட்டத்தட்ட மூன்றாண்டுக்காலமாக பழுதாக இருந்து எந்தக் காலத்திலும் எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளில் பணியாற்றக்கூடிய முறையில் நல்ல முறையிலே தொகுதி மக்களைச் சந்திப்பதற்கும் அரசு அறிவித்திருக்கிற மாதத்திற்கு ஒரு முறை 50 லிட்டர் பெட்ரோல் யூனியனில் இருக்கக்கூடிய வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு சரியான உத்தரவைப் போட வேண்டும். வாகனங்கள் பழுதடைந்து விட்டால் வேறு ஒன்றியத்திலிருந்து எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [1984 ஏப்ரல் 26

(நண்பகல் 12-00)

அதேபோல் தேர்தல்கள் என்று வரக்கூடிய தலைப்பிலே 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். சமீபத்திலே கூட உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதாக அறிவித்தார்கள். உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதற்காகக் கொடுத்திருக்கிற வாக்காளர் பட்டியலில் கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு வாக்காளர்கள் இடம் பெறவில்லை. வாக்காளர் பட்டியலில் இருக்கக்கூடிய குறைகளைப் போக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, ஆசிரியர்களோடு வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கக்கூடிய நேரத்தில் இப்பொழுது அவர்கள் வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கு எந்தப் பகுதிக்கு வருகின்றார்கள் என்பதை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால்தான் அவர்கள் வரக்கூடிய நேரங்களில் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களைச் சந்திப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே, வாக்காளர் பட்டியலில் விடுபட்டிருக்கக்கூடியவர்களை எதிர்காலத்தில் விட்டுவிடாமல் இருப்பதற்கு, சேர்த்துக் கொள்வதற்கான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கக்கூடிய மனுக்களுக்கு அமைச்சர்களிடத்திலிருந்து பதில் கிடைப்பதில்லை. முதலமைச்சர், அமைச்சரைப் பார்ப்பது என்பதுகூட ஒரு அரிதான சூழ்நிலையாக இருக்கிறது. நான் அமைச்சர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், முன்கூட்டி மாண்புமிகு முதலமைச்சரைப் பார்ப்பதற்கே கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கே ஒரு நேரம், இடத்தை நிர்ணயித்துக் கொடுத்தால் கூட உதவிகரமாக இருக்கும். நாங்கள் கொடுக்கக்கூடிய மனுக்களுக்கு, விண்ணப்பங்களுக்கு அமைச்சர்கள் உடனுக்குடன் எங்களுக்குப் பதில் கொடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்த இணைச் செயலாளர்கள் அல்லது துணைச் செயலாளர்கள் பதில் கொடுக்கின்றார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய பதிலில், விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது, மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பெற்றது என்று மட்டும் குறிப்பிடுகிறார்களே தவிர, அதன் மீது எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன? அந்த விண்ணப்பங்கள் எந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன என்பதைக் கூட சட்டமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அமைச்சர்களிடத்திலே கொடுக்கக்கூடிய விண்ணப்பங்களுக்குக் காலத்திலே பதில் கொடுக்கக்கூடிய . . . .



[1984 ஏப்ரல் 26

**திரு. ஏ. சி. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை என்ற ஒரு குறையைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆளுங் கட்சி உறுப்பினர்கள் பார்க்கப் போகும்போது கூட, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் வந்தால் அவர்களை அழைத்துப் பார்க்கக்கூடிய ஒரு முதலமைச்சரை தமிழகம் பெற்றிருக்கிறது. இப்பொழுதுகூட நாங்கள் முதலமைச்சரைப் பார்க்கப் போனால், திரு. சங்கரய்யா அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் அங்கே ½ மணி நேரமாக விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். யாராக இருந்தாலும், எதிர்க்கட்சிக்காரர்களை முதலிலே அழைத்துப் பேசக்கூடிய ஒரு முதல்வரைத்தான் இந்தத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்று கருதுகிறேன். நான் குறிப்பிட்டது, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதுதான். எனவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். பார்க்கவே இல்லை என்று நான் சொல்லவில்லை. சட்டமன்றம் நடைபெறக்கூடிய காலத்தில் பல்வேறு அலுவல்கள் முதலமைச்சருக்கு இருக்கிற காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவரைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் சொல்லியிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகள் வாய்ப்புகள் என்று எடுத்துக்கொண்டால் சட்டமன்ற உறுப்பினர்களே தொகுதியையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வரக்கூடிய விண்ணப்பங்களையும் பெற்று அதிகாரிகளையும் அமைச்சர்களையும் சந்திப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வரக்கூடிய விண்ணப்பங்களைப் பார்ப்பதற்கும் அனுப்பப்படுகிற கடிதங்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு நபரை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் ஓய்வூதியங்கள் என்று வரக்கூடிய அந்தத் தலைப்பில் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது; 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே, நெடுஞ்சாலைத் துறையிலே பணி புரிந்திருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே ஓய்வு பெற்றிருந்தால் அவர்

களுக்கும் ஓய்வு ஊதியங்கள் கொடுப்பதற்கான ஒரு நடவடிக்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு முன்னவர் அவர்கள் இதே அவையிலே ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். கோவை மாநகரத்தை மாநகராட்சியாக உயர்த்தியதற்குப் பின்னாலே, பி-1 நிலையிலிருந்து பி-2 நிலையாக உயர்த்தப்பட்டது. அவர்களுக்கு அரசாங்கம் நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப் படியும் எப்போது கொடுக்குமென்று நான் இதே அவையிலே ஒரு கேள்வி கேட்கிற நேரத்திலே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; அதற்குத் தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கோவை நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தி நான்கு ஆண்டுகள் ஆகியும், அங்கே இருக்கிற ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும் உயர்த்திக் கொடுக்கப்படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் கோவை மாநகராட்சியில் இருக்கிற ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்காக இங்கு ஒரு ஓட்டல் நடத்தப்படுகிறது. அந்த ஓட்டலிலே போய் யாரும் சாப்பிட முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. துணைத் தலைவர் அவர்கள்தான் அந்த ஓட்டலுக்கு பொறுப்பு என்று கருதுகிறேன். அந்த ஓட்டலை அரசாங்கமே நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியார்களிடம் காண்ட்ராக்ட் விட்டால் அது உருப்படியாகாது. ஆகவே அரசாங்கமே அந்த ஓட்டலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மாநிலச் சட்டமன்றம் போன்ற கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நான் நன்றி கூறுகிறேன். இங்கே எங்கள் கட்சி துணைத் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இதெல்லாம் ஏதோ வேறு துறைகளில் இல்லாததைப்போல, இங்கே அரசாங்கத்தை குற்றம் சாட்டுவது என்ற நிலையில் இல்லாது, இந்தச் சபை சுமூகமாகவும், சௌகரியமாகவும் நடப்பதற்கு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள் என்ற ரீதியிலே அமைச்சர் அவர்களும், அரசாங்கமும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.



சட்டமன்றத்திலே அரசிடமிருந்து மக்களின் நலனைக் கருதி பல்வேறு கேள்விகள் அவ்வப்போது முழு விவரமும் அறிந்து கொள்வதற்காக கேட்கப்படுகின்றன. ஆனால் அத்தனை கேள்விகளும் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அவைகள் அத்தனையும் எடுத்துக்கொள்ள முடியாது என்பது எங்களுக்கும் தெரியும். இருந்தாலும், பொதுமக்களின் நலனைக் கருதி, தொகுதிகளின் நிலவரங்களை அறிந்து கொள்வதற்காக, 'To elicit information from the Government" என்ற நிலையிலேதான் கேள்விகள் கேட்கப்படுகின்றன. இப்போது நேரம் காணாத நிலையில் பல கேள்விகள் அவையில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இந்த நிலையை மாற்றி அனைத்து நல்ல கேள்விகளையும் எடுத்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் என்னுடைய யோசனையாகத்தான் சொல்கிறேன். அதற்காக விடுபட்ட கேள்விகளை எல்லாம் ஒரு நாள் வைத்து அந்தக் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிப்பார்களானால் நல்ல காரியமாக இருக்கும். ரேசிலே கூட 'லூ சர்ஸ் டே' என்ற முறையிலே தோற்றவர்களுக்காக ஒரு தினம் ரேஸ் நடக்கும். அந்த முறையிலே விடுபட்ட கேள்விகள் ஒரு நாளில் எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, முதலமைச்சர் சம்பந்தப்பட்ட கேள்விகள் பெரும்பாலும் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அவர்களுக்கு இருக்கிற பல்வேறு பணிகளின் காரணமாக அவர்கள் வந்து விவரம் சொல்ல முடியாத நிலை இருந்தாலும்கூட, அவர்கள் சார்பாக எந்த அமைச்சராவது அல்லது முன்னவர் அவர்களே அந்தப் பொறுப்பை ஏற்று அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் வழங்குவார்களானால் அது உபயோகமாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல எம்.எல்.ஏ.க்கள் அமைச்சர்களுக்கு எழுதுகிற கடிதங்களுக்கு பதில் வருவதில்லை. உடனடியாக அது கவனிக்கப்படும் என்ற அளவிலே பதில் வந்து, உருப்படியான காரியங்களுக்கு மேல் நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு பதில் கிடைத்தால் நல்ல அம்சமாக இருக்கும். பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு யார் கடிதம் எழுதினாலும், உடனடியாக அவர்களுக்குப் பதில் கிடைக்கிறது. அடுத்து, வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற ஒரு நிலை இருக்கிறது. பதில் கிடைக்கிறது என்ற காரணத்தால் அவர்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்படுகிறது. அந்த நல்ல அபிப்பிராயம் உங்கள் மீதும் ஏற்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலேதான் சொல்கிறேன். நீங்கள் உடனடியாக எங்களுக்குப் பதில் எழுதி அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1984 ஏப்ரல் 26

இன்னொன்று, ஆண்டுதோறும் இந்தச் சட்டமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டவேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். சமீபத்திலே கூட பெரிய வரைபடம் கேட்டு, அதற்கு லட்சம் ரூபாய் பரிசு வழங்கப் போகிறோம் என்று அறிவித்தார்கள். இந்தக் கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கட்டிடமாக இருக்கிறது. கோடைக்காலத்தில்தான் சட்டமன்றக் கூட்டத் தொடர் அதிகமாக நடக்கிறது. இதனால் இங்கே இருக்கிற உறுப்பினர்கள் புழுக்கத்திலே—மனப் புழுக்கத்திலே அல்ல, இயற்கையிலே வெயிலின் காரணமாக ஏற்படுகிற புழுக்கத்திலே—இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே புதிய கட்டிடத்தை நவீன மோஸ்தரில் ஏ.சி. வைத்து கட்டுவதற்கு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் அந்தக் கட்டிடம் தமிழ் நாட்டின் சிற்பக்கலையை பிரதிபலிக்கிற வகையிலும், தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை வெளிப்படுத்துகிற வகையிலும் அமைய வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. அதற்கான முயற்சியை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

இன்றைக்கு அமைச்சர்களுக்கு என்று தனியாக ஒரு செக்ரடேரியட் இல்லாமல் இருப்பதால், பல்வேறு காரியங்கள் தாமதமாகின்றன. ஆகவே, அமைச்சர்களுக்கு என்று தனியாக கேபினெட் செக்ரடேரியட் வைத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, பல மாநிலங்களில் பெட்டிஷன் கமிட்டி என்றும், லைப்ரரி கமிட்டி என்றும் இருக்கின்றன. அந்த முறை இங்கேயும் அமலுக்குக் கொண்டு வந்தால், இங்கே பல்வேறு விதமான கருத்துக்களை பொதுமக்கள் சார்பாக எடுத்துச் சொல்வதற்கு உதவியாகவும் இருக்கும்; அவர்களுக்கு நிவாரணமும் கிடைக்கும். ஆகவே, அந்த வகையில் அந்தக் கமிட்டிகளை அமைக்க சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே நடைபெறுகின்ற சபை நடவடிக்கைகளில் அன்றாடம் எக்ஸ்பஞ்ச் செய்வது என்பது வழக்கமாகிவிட்டது. துணைத் தலைவர் அவர்கள்கூட பெருமையாகச் சொன்னார்கள். நேற்றையதினம் தான் ஒரு வார்த்தைகூட எக்ஸ்பஞ்ச் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இது குறித்து நான் ஒரு கருத்து இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் சொன்னது சரித்திரத்திலே குறித்து வைக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த நிலை



1984 ஏப்ரல் 26] [திரு. உ. சுப்பிரமணியன்]

தினந்தோறும் ஏற்பட வேண்டும். தவறுதலாக வரும் வார்த்தைகள், அன் பார்லிமெண்டரியாக இருக்குமானால் அவைகளை நீக்குவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் பலரும் ஏதேதோ விரும்பத்தகாத வார்த்தைகளை இங்கே பேசினார்கள் என்பதற்காக எக்ஸ்பஞ்ச் செய்யக்கூடாது. அப்படிப்பட்ட வார்த்தைகள் இங்கே பயன்படுத்தப்பட்டன என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும். எந்த உறுப்பினரால் அப்படிப் பேசப்பட்டது என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் பொறுப்புகளை உணர்ந்து அதிகமான அளவிற்கு எக்ஸ்பஞ்ச் செய்யப்படாத நிலையில் பேசுவதற்குரிய ஒரு நிலைமை ஏற்படும். சில சமயங்களில் உங்களுடைய உணர்ச்சி வேகத்தில் வருகின்ற வார்த்தைகளையே கூட அவைக் குறிப்பில் இருந்து எக்ஸ்பஞ்ச் செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, அந்த முறையைக் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக்கூட கடுமையாக ஒரு விவாதம் இங்கு நடைபெற்றது. அது தான் சப்ஜுடிஸ் பற்றிய விவாதம். நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் காமன்வெல்த் பார்லிமெண்டரி அசோசியேஷன் சார்பில் மேலைநாடு களுக்குச் சென்றபோது, ஹவுஸ் ஆப் காமன்ஸ்க்குச் சென்றிருந்தோம். அங்கே சீஃப் கிளார்க் என்பவர்—இங்கே நாம் செக்ரட்டரி என்று சொல்வதைப்போல—எங்களை அழைத்து ஒரு கான்பரன்ஸ் நடத்தினார்கள். அதிலே பல்வேறு கருத்துக்கள் எங்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டன. அப்போது நான் அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டேன். அதில் நான் இந்த சப் ஜுடிஸ் பற்றி அவரிடம் கேட்டேன். எங்கள் நாட்டில் இதன் காரணமாக பல்வேறு சமயங்களில் அமைச்சர்களிடம் இருந்து பதில்களைப் பெற முடியாமல் போய் விடுகிறது, ஆகவே Whether the House is Supreme or the Court is Supreme? என்று நான் கேட்டேன் அதற்கு ஒரு பதிலை அவர்கள் நேரடியாகச்சொல்லாமல், அழகான வகையில் "Anyhow we must honour the Court" சொன்னார்கள். அதாவது கோர்ட்டுகளை கௌரவிக்க வேண்டு என்று சொன்னார்கள். மென்று சொன்னார்கள்.

நான் அவர்களிடத்திலே இதற்கு ஒரு திட்டவட்டமான நிச்சயமான பதிலைத் தரவேண்டுமென்று சொன்னேன்.

"If you put that question in that way I must say that our House is supreme". என்று சொன்னார்கள். அந்த நிலையை நாம் இங்கே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

அவர் சொல்லியிருப்பதை நாம் கூர்ந்து கவனித்தால் இரண்டுவிதமான கருத்துக்களை நாம் எடுத்துக்கொள்ளலாம். கோர்ட்டுகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்றும், ஆனால் இறுதியான முடிவு சட்டமன்றத்தி னுடையதுதான் என்றும், சட்டமன்றம் தான் சுப்ரீம் பவர் உடையது என்றும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நிலையை வசதிக்காக சில நேரங் களில் எடுத்துக்கொள்வது என்பதாக வைத்துக்கொள்ளக் கூடாது.

இந்தச் சபையில் படித்த வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக இருப்பதால், துணைத் தலைவர் அவர்களும் வழக்கறிஞராக இருப்பதால், பல அமைச்சர் களும் வழக்கறிஞர்களாக இருப்பதால் இதற்கென ஒரு 'செல்' அமைத்துக்கூட இந்தக் கோர்ட்டு விவகாரங்கள் குறித்து முடிவு எடுத்து நடைமுறைப்படுத்த —ஒரு கோட் ஆப் கான்டக்ட்—அதாவது வழி முறையை உருவாக்கினால் வருங்காலத்தில் இந்தச் சபை சுமுகமாக நடைபெறுவதற்கு வழிகோலுவதாக இருக்கும் என்பதை என்னுடைய யோசனையாக சொல்லிக்கொள்கிறேன்..

மேலும் இந்த சட்டமன்றம் நடைபெறும் நாட்களை அதிகமாக்க வேண்டும். கடந்த காலத்தை எண்ணிப் பார்த்தால், இந்த சட்டமன்றம் நடைபெறுவதற்கு அதிக நாட்கள் ஒதுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. பல்வேறு கருத்துக்களை பொதுமக்கள் சார்பாக எடுத்துச் சொல்ல இந்த அமைப்புதான் நாங்கள் பயன்படுத்தும் அமைப்பாக இருக் கிறது. ஆகவே நல்ல முறையில் சட்டமன்றம் நடைபெற வேண்டும்; சட்ட மன்றம் நடைபெறும் நாட்களை கூடுதலாக்க வேண்டும். அப்படி கூடுதலாக்க வேண்டுமென்று சொல்லும்போது இப்படி தொடர்ச்சியாக இரண்டரை மாதம், மூன்று மாதம் என்று நடத்தக்கூடாது. மூன்று அல்லது நான்கு பகுதி களாகப் பிரித்துக்கொண்டு, வருடத்தில் 3 அல்லது 4 முறை சட்டமன்றக் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகஸ்ட், செப்டம்பர் அந்தப் போன்று நவம்பர், டிசம்பர் மாதங்களில் வசதியைப் பொறுத்து, அரசைக் கலந்து, கூடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வருடத்திற்கு 3, 4 முறை யாவது வசதியைப் பொறுத்து சட்டமன்றம் நடைபெற வேண்டும். துணைத் தலைவரும், அவைத் தலைவரும், அவை முன்னவரும் இதுபற்றி கலந்து பேசி, அரசையும் கலந்து, தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இப்போது பென்ஷன் கொடுக்கப் படுகிறது. அவர்களுடைய தியாகத்தை விலை கூற முடியாது. எதையும் எதிர்பார்க்காமல் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால்தான் அவர்களை



தியாகிகள் என்று சொல்கிறோம். அவர்களுடைய பரிதாபகரமான நிலையை எண்ணிப் பார்த்து அவர்களுக்கு வழங்கும் பென்ஷனை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கிற சுதந்திரப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. அவர்கள் வாழ்க்கையில் மிகவும் நலிந்துபோய் இருக்கிறார்கள். அந்தத் தியாகிகளுக்கு எம்.எல்.ஏ.-க்களுக்கு இலவச பஸ் பாஸ் கொடுத்திருப்பதைப் போன்று பஸ் பாஸ் கொடுக்க ஏற்பாடு செய்தால் சிறப்பாக இருக்கும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசுத் துறை பஸ்களில் இலவசமாகப் பயணம் செய்ய பாஸ் வழங்கியிருக்கிறோம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் இரயிலில் பிரயாணம் செய்ய வருஷத் திற்கு 3,000 ரூபாய் அல்லது 3,500 ரூபாய்க்கு கூப்பன்கள் கொடுக்கிறார்கள். முதல் வகுப்பில் பிரயாணம் செய்தால் சொந்த ஊருக்குச் சென்று வருவதற்கே 10 தடவைகளுக்கு மேல் அந்த கூப்பன்கள் வராது. அதனால் தான் பலர் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படு கிறது. ஆகவே, நம்முடைய அரசு மத்திய அரசுடன் அல்லது இரயில்வே இலாகாவுடன் தொடர்பு கொண்டு தமிழ்நாட்டிற்குள்ளேயாவது சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகப் பிரயாணம் செய்ய பாஸ் வசதி செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாராளுமன்றத்தில் பல்வேறு குறைகளை எடுத்துச்சொல்ல, பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற பெட்டிஷன்களைப் போடுவதற்கு என்று சபாநாயகர் அறைக்குப் பக்கத்தில் தனியாக பெட்டி வைத்திருக்கிறார்கள், என்று நான் கேள்விப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்கள், அந்த முறை இருப்பதாக அவர்களும் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஏற்பாடு இங்கேயும் இருந்தால், கேள்விகள் எழுதிப் போட்டாலும், வேறு ஏதாவது குறைகளை எழுதிப் போட்டாலும் உரிய அமைச்சர்களுக்கு அவ்வப்போது அனுப்ப வசதியாக இருக்கும். பாராளுமன்றத்தில் அந்த நடைமுறை இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த நடைமுறையை இங்கே நாமும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் எம்.எல்.ஏ.-க்கள் ஜீப்பை பயன்படுத்திக்கொள்ள வசதி இருக்கிறது. அது நல்ல வசதிதான். ஆனால் ஒவ்வொரு மாதமும் அதைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. சட்டமன்றம் நடை பெறும்போது; அல்லது வேறு ஏதாவது வேலைகள் இருக்கும்போது ஜீப்பை பயன்படுத்த முடியாது. அல்லது அந்த ஜீப்பே பழுதடைந்துவிடலாம்.

அல்லது வேறு வேறு இலாக்காக்களில் அதை எடுத்துக்கொண்டு போகலாம். அப்போதும் பயன்படுத்த முடியாது. இப்போது மாதம் 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கப்படுகிறது. இந்த முறையை மாற்றி, மாதந்தோறும் ஜீப்பை பயன்படுத்த முடியாத நிலை இருப்பதால், 3 மாதத்திற்கு 150 லிட்டர் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் 6 நாள், 8 நாள் தொடர்ந்து தொகுதி முழுவதற்கும் சென்று பார்வையிட வசதியாக இருக்கும். இந்த கருத்தை பல உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்து சரியானதாக இருக்கும் என்று நானும் கருதுகிறேன். ஆகவே, 3 மாதத்திற்கு ஒருமுறை 150 லிட்டர் பெட்ரோல் வழங்கி, ஜீப் வசதியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நகராட்சியில் இருக்கிற ஜீப்பை எம்.எல்.ஏ.-க்கள் பயன்படுத்த தற்போது வசதியில்லை; அந்த ஜீப் கிடைப்பதில்லை. ஊராட்சிகள் மட்டுமல்லாமல் நகராட்சிப் பகுதியும் ஒரு தொகுதியில் வருவதால் அந்த நகராட்சிப் பகுதிகளையும் சுற்றிப் பார்க்க வசதியாக ஆங்காங்கே இருக்கிற நகராட்சியினுடைய ஜீப்பையும் அங்கத்தினர்கள் பயன்படுத்த வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் கடந்த இரண்டாண்டுகளாக எந்தவிதமான சம்பள உயர்வும் படி உயர்வும் கொடுக்கவில்லை. விலைவாசி உயர்ந்துகொண்டே இருக்கிறது. அதன் காரணமாக அமைச்சர்களுக்கும் ஓரளவுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். எம்.எல்.ஏ.-க்களும் விலைவாசி உயர்வினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதால் அவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் எம்.எல்.ஏ.-யைவிட குறைவாகச் சம்பளம் வாங்குகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1977-லிருந்து 1980 வரை குறைவாக வாங்கினேன், இப்போது அப்படி இல்லை.

**திரு. உ. சுப்பிரமணியன்:** உங்களுக்கு விசேஷ அலவன்ஸ் கொடுத்தால்கூட எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. விலைவாசி உயர்வு ஆண்டுக்காண்டு உயர்ந்துகொண்டே போகிறது, செலவு அதிகமாகி வருகிறது, அதனால் உறுப்பினர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நானும் அதை வலியுறுத்துகிறேன். பிற மாநிலங்களில் ஏற்கெனவே நம்மைவிட அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்ற செய்தியை நானும் தெரிந்துகொண்டிருக்கிறேன்.



(பிற்பகல் 12-20)

ஆந்திராவிலே ரூ. 2,000, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலே ரூ. 1,500 என்றும் அதிகமாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் எது சரி என்று நினைக்கிறார்களோ, அதைச்செய்யவேண்டும். இல்லையென்றால், யார் யாரோ யூனியன் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அதைப்போல அகில இந்திய சட்டமன்ற உறுப்பினர்கள் யூனியன் என்று வைத்துக்கொண்டு நாங்களும் கோரிக்கை விடும் காலம் கூட வரலாம். அதைத் தவிர்ப்பதற்கு என்னசெய்யவேண்டுமோ, அதை மாண்புமிகு முன்னவர் அவர்கள் பெரிய மனது வைத்து, இந்த ஆண்டிலேயே அறிவித்தால், உங்கள் அத்தனை பேரின் சார்பாக அட்வான்ஸ் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

டெலிபோன் கட்டணங்களைப் பொறுத்தவரையில், தனித்தனியாக டெலிபோன்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக மகிழ்ச்சி. ஆனால் அதற்கு பில் போடுகின்றபோது, ஏற்கனவே இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கட்டணங்கள் வசூலிக்கப்பட்டன. ஆனால் இப்போது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வசூலிக்கப்பட்டு, ஓர் ஆண்டிற்கு நான்கு முறை வசூலிக்கிறார்கள். இரண்டு தவணைகள் எங்களுடைய சம்பளத்திலிருந்து பிடிக்கப்படுகிறது அல்லது நாங்கள் அதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே எங்களுக்கு இழப்பு இல்லாமல், அதை ஈடுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் தேர்தல் நடந்து நீண்டகாலமாகிவிட்டது. அடுத்து எப்போது நடக்கும் என்பது தெரியவில்லை. பொதுமக்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இப்போது இல்லாத காரணத்தினால், இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஒரே ஒருவர் சட்டமன்ற உறுப்பினர்தான் என்ற வகையில் இருப்பதால், அவர்களுக்கு அதிகமான வேலைப்பளு ஏற்படுகிறது. எனவே அவர்களுக்கு இரண்டு நபர்களை, அதாவது ஒரு ஜூனியர் அசிஸ்டெண்ட், ஒரு கடைநிலை ஊழியர் ஆகியவர்களை நியமித்து, நியாயமான முறையில் சட்டபூர்வமாக, உறுப்பினர்கள் தங்கள் கடமையை ஆற்றுவதற்கு உதவியாக இருக்கச்செய்ய வேண்டும். அவர்களை புதியதாக நியமிக்காவிட்டாலும்கூட, இப்போது இருக்கக்கூடிய யூனியன்களிலிருந்து, இவர்களில் ஒருவரை ஒரு யூனியனும், இன்னொருவரை இன்னொரு யூனியனிலிருந்தும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால்தான், எம்.எல்.ஏ.-க்கள் தங்களுடைய கடமைகளை இருப்பாகச் செய்வதற்கு உதவியாக இருக்கும்.

அடுத்து மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையில், என்.ஜி.ஓ.-க்கள் மாதிரி எம்.எல்.ஏ.-க்கள் நடத்தப்படுகிறார்கள் என்ற குறையைச் சொல்கிறார்கள். ஒவ்வொரு முறையும் எழுதிக்கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை அடையாள அட்டையை புதுப்பிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இலாக்காவினால் ஒரு முறை வழங்கப்பட்டுவிட்ட பிறகு, அதை வைத்துக்கொண்டு, அந்த டர்ம் முழுவதும் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

உறுப்பினர்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து மருந்துகளை வாங்கி, பில் கொடுத்து, திரும்பப் பணம் பெறுவதில் மிகவும் காலதாமதமாகி, மூன்று, நான்கு மாதங்களாகின்றன. அந்த நிலைமைகளை மாற்றி உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்திலே பணியாற்றுகின்ற பல்வேறு பிரிவினர் தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கூட அன்றாடம் அவர்கள் குறைகளை உணர்ந்துகொண்டிருக்கிறோம். பல பேர் தற்காலிகப் பணியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக்கி, அவர்களுக்கு சம்பளத்தையும் நல்ல முறையில் கொடுக்கவேண்டும். பல ஆண்டுகளாக நிரந்தரப் பணியாளர்களாக ஆக்காமல் இருப்பதால், அவர்களுடைய வேலைக்கு பாதுகாப்பு உறுதி இல்லை என்பதால் அவர்கள் மனம் நொந்துபோய் இருக்கிறார்கள். அவர்களுடைய மனம் நிறைவு பெறுவதற்காக, அவர்களை நிரந்தரப் பணிகளில் அமர்த்தி, சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுகள் தனியாக சுமார் 20 விடுகள் இருக்கின்றன. அவைகள்கூட சரியான முறையில் பழுதுபார்க்கப்படவில்லை என்பதை அறிகிறேன். அருமைத் தலைவர் இளையபெருமாள் அவர்கள் வீட்டில்கூட, மின்சார வசதி, கழிவு நீர் வசதி இவைகள் சரியாக செயல்படவில்லை. மழை பெய்தால், ஒழுகுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அவைகளையும் சீர்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கக் கட்டிடங்களுக்கு பாதுகாப்பு தருவதன் மூலமாக உறுப்பினர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு கிடைக்குமென்ற முறையில் அவைகளைச் செய்யவேண்டும்.

தட்டச்சர்களுக்கு தினக்கூலி வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். உண்மையிலேயே இந்த காலத்தில் டெய்லி வேஜஸ் என்பது ரோட்டிலே வேலை செய்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். [illegible] பயின்று, பயிற்சி பெற்று, வேலைசெய்கிற இவர்களுக்குக் கூட, அன்றாடக் கூலி என்ற முறையில் தினக் கூலி கொடுப்பதை மாற்றி,



மாதச் சம்பளமாக வழங்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது கூட பட்டதாரிப் பணியாளர்களுக்கு கொடுக்கிற அன்றாட ஊதியம் ரூ. 30 என்ற அளவிலேயாவது சரி சமமாக இவர்களுக்கும் கொடுப்பதால், இவர்களுக்கும் மன நிறைவு ஏற்படும். இந்தப் பணிச் சான்றிதழ் வழங்கும்போது, இரண்டுவிதமாக வழங்கப்படுவதை தவிர்க்கப்பட வேண்டும். மேலவையிலே பணிச்சான்றிதழ் வழங்குவது போல் இங்கேயும் இருக்கவேண்டும். அவர்களுக்கு கொடுக்கின்றபோது

'Individual was not recruited through the Employment Exchange and the said appointment does not vest any service rights on him'. என்று சொல்லப்படுகிறது. ஆகவே எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாக வராத காரணத்தால்தான் அவர்கள் பல நலன்களை இழக்கவேண்டிய ஒரு துர்பாக்கிய நிலையை மாற்றி, அவர்கள் நம்முடைய சட்டமன்றம் நல்ல முறையிலே நடப்பதற்கு உதவியாக இருக்கின்ற பணியாளர்கள் என்ற வகையிலே, சட்டத்திலே இடம் இல்லை என்றாலும், கூட ஆன் கம்பாசனேட் கிரவுன்ட்ஸ், அனுதாப ரீதியிலே, மனிதாபிமானத்தோடாவது அந்தக் காரியங்களைச் செய்யவேண்டும். அதற்கான சட்ட திருத்தங்களைச் செய்து கொடுத்தால், அவர்கள் மனநிறைவோடு இருப்பார்கள்.

இன்னொன்று, நான் ஒரு சட்ட ரீதியான ஒரு சிக்கலைப்பற்றிக் கேள்விப் பட்டேன். அப்படி இருந்தால், அது எந்த அளவிற்கு சரி என்பதை நான் உங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். கடந்த மாதம் நடந்த தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆசிரியர்கள் தேர்தலிலே ஒருவர் ஆசிரியர் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு, தேர்தலிலே நின்றிருக்கிறார்கள். ஆனால் மறுபடியும் மீண்டும் அவர் அந்தப் பணியிலே அமர்த்தப் பட்டிருக்கிறார். எப்படி ராஜினாமாச் செய்தவரை உடனடியாக சி.இ.ஓ. மீண்டும் அந்தப் பணியிலே அமர்த்தினார். அதற்கு எந்தவகையிலே சட்டம் இடம் கொடுக்கிறது, அது எப்படி முறையாகும் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் சட்டசபையிலே உள்ள காவலர்களுக்கு பணி செய்பவர்களுக்கு வாட்ச் அன்ட் வார்ட்களுக்கு 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த சட்டமன்றக் கூட்டத்தொடருக்கான தினப்படி, இன்று வரையில் கொடுக்க வில்லை என்று சொல்கிற நிலை இருக்கிறது என்றால் எப்படி? அது உண்மையாக இருந்தால், நிச்சயமாக நாம் ஆழ்ந்த அனுதாபத்தோடு அவர்களுக்குச் செய்யவேண்டும். 1983 ஆம் ஆண்டிலேயிருந்து கிட்டத்தட்ட ஆறு மாதத்திற்கு மேலாக அவர்களுடைய படி பாக்கியிருந்தால், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையை எப்படி நடத்துவார்கள் என்பதை நாம் சற்று

சிந்தித்துப் பார்க்கவேண்டும். இங்கே பணிபுரியும் காவலர்களுக்கு தினப்படி குறைந்தது 10 ரூபாய் தரவேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. சட்டசபை கூடும்போது, காவலர்களுக்கு இரண்டு வேளையும் நடந்தால் மதிய உணவு கொடுக்கவேண்டும். பாராளுமன்றத்திலேகூட அது நடைமுறையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். நாம் நமக்குள்ள வசதிகளின் காரணமாக வெளியிலே சென்று சாப்பிட்டுவிட்டு வருகிறோம். அவர்கள் காலையிலே எட்டு மணிக்கு வருகின்றார்கள். சில நாட்களிலே, இரவு ஒன்பது மணி, பத்து மணி வரை இருக்கின்ற நிலைமைகள் ஏற்படுகிற காரணத்தால், அவர்களுக்கு இவைகள் எல்லாம் சட்டப்படி கொடுக்கவேண்டும். மனிதாபிமானத்தோடு கொடுக்கவேண்டும். நியாயமாக கொடுக்கவேண்டும், என்ற காரணத்தால் உடனடியாக அவர்களுக்கு இந்த நிவாரணம் கொடுக்க வேண்டும்.

பொதுவாக இந்தச் சட்டமன்றத்திலே பணி செய்கின்ற அனைவரும், சர்க்காரிலே வேலை செய்கின்ற மற்ற உத்தியோகஸ்தர்களைப் போல் அல்லாமல், அதிகாலையிலே அவர்கள் வேலைக்கு வருகின்ற காரணத்தால், பல பேர்கள் தூரத்திலிருந்து வருகின்ற காரணத்தால் அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வசதி செய்து கொடுத்தால், அவர்களுக்குத் துணையாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நூலகத்தைப்பற்றி பலரும் பேசிவிட்டார்கள். அங்கே போகின்ற வழி, மண்ணடியிலே உள்ள காயலான்கடைக்குப் போகின்ற வழி மாதிரித்தான் இருக்கின்றது. அது புனிதமான இடம். அறிவைப் பெருக்கக்கூடிய இடம். விளக்கத்தைக் கொடுக்கக் கூடிய இடம். அப்படிப்பட்ட இடத்திலே நாம் வழுக்கி விழக்கூடிய நிலைமையிருக்கிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அங்கே தங்கி படிக்கின்ற அல்லது பத்திரிகைகளை வாசிக்கின்றவர்களுக்குத் துணையாக பல்வேறு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஒரு வாஷ் பேசின் அமைக்க வேண்டும். அவசரத்திற்கு பேச வேண்டும் என்றால், டெலிபோன் வசதிகள், டெலிபோன் புக், டெலிபோன் பூத் போன்று ஏற்பாடு செய்யவேண்டும். இவைகளில் எல்லாம் அதிகமாகச் செலவு ஆகிவிடாது. நாம் எல்லாம் இவைகளை செய்தால் மாடர்னைஸ் பண்ணியதாகக் கூட இருக்கும். நாங்கள் எல்லாம் சிங்கப்பூர், ஹாங்காங் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கேயுள்ள பாராளுமன்றங்களைப் பார்க்கின்றபோது, அங்கே நுழையும்போது ஒரு மரியாதை நமக்கு ஏற்படுகிறது. அந்த லைப்ரரி இருக்கின்ற இடத்தைப் பார்க்கின்றபோது, அமைதியான சூழ்நிலை, நல்ல முறையில் படிப்பதற்கான ஒரு அமைப்பு அங்கேயிருக்கிறது. இது பழையக் கட்டடத்திலே இருக்கின்றது. கட்டிடம் பழையதாக இருந்தாலும்கூட, அந்தக் கட்டடத்திலே நவீன வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் அங்கே பிரஸ் கட்டிங் ஏராளமாகச் சேர்க்கின்ற காரணத்தால், அதை வைப்பதற்கு ஒரு நல்ல ரேக்கிங் சிஸ்டம் ஏற்படுத்தி, அதையும் நவீனப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இதைப்போன்ற பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன.

இதுகூட இல்லட்டின் என்ற ஒரு இக்கட்டான நிலையிலே நான் அகப்பட்டுக் கொண்ட காரணத்தால், வேறு பல நண்பர்கள் என்னுடைய நேரத்தை ஆக்கிரமித்துக்கொண்ட காரணத்தால், அவை முன்னவர் அவர்கள் பல்வேறு காரியங்களை, விளக்கமாகவும், மகிழ்ச்சியோடு சில செய்திகளைச் சொல்ல இருக்கின்ற காரணத்தால், அதற்கு இடையே நான் நிற்க விரும்பவில்லை.

(பிற்பகல் 12-30)

பென்ஷனைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது இரண்டு டெர்ம்ஸ்களில் இருந்தால்தான் 500 ரூ. என்று இருக்கிறது. அந்த நிலைமை மாற்ற வேண்டும். இப்போது இருக்கக்கூடிய பல்வேறு சூழ்நிலைகளில் நாம் முன்னாள் அமைச்சர்களைப் பார்க்கிறோம்; முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்கிறோம். அடிப்படை வசதிகள்கூட இல்லாமல், அன்றாட வாழ்க்கைக்குக்கூட கஷ்டப்படுகிற பல பேர்கள் அவர்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கும், வருங்காலத்தில் எங்களுக்கும்கூட, உதவியாக இருக்கும் வகையிலே இந்தப் பென்ஷனை அதிகமாகக் கொடுக்கும்படியான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, எனக்குச் சந்தர்ப்பம் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்று பல்வேறு மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்று முடிவுறுகிற நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. பல்வேறு மானியக் கோரிக்கைகளை, இந்தப் பேரவையினுடைய கருத்துக்களை அறிகிற வகையில் விவாதத்திற்கு வைத்திருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்களில் பெரும்பாலோர் சட்டமன்றத்தையும், சட்டமன்றத்தை ஒட்டியும், சட்டமன்றத்தைப் பொறுத்தும் இருக்கிற பல்வேறு பிரச்னைகளை எழுப்பி அதற்கு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கருத்துக்களை மிகச் சிறப்பான முறையில் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, சட்டமன்றம் ஒரு ஜனநாயக நாட்டில் மிகப் பொறுப்பு வாய்ந்த ஒரு அமைப்பாக விளங்குகிறது என்பதை, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் ஆகிய அத்தனை பேரும் உணர்ந்து, நாம்

பணியாற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கவேண்டும் என்ற கருத்தையும் சில உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்தினார்கள். ஆகவே நம்முடைய ஜனநாயகத்தில் மிக முக்கியமான ஒரு அமைப்பாக, பொறுப்புள்ள ஒரு அமைப்பாக சட்டமன்றம் விளங்குகிறது. சட்டமன்றம் எப்பொழுது ஒரு பொறுப்புள்ள அமைப்பாக விளங்குகிறதோ, அதிலே அங்கம் வகிக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேருமே பொறுப்புள்ளவர்கள் ஆகிறார்கள் என்பதும் சொல்லாமலே விளங்குகிறது. நம்முடைய ஜனநாயகம் முக்காலி வடிவிலே அமைந்திருக்கிற ஒன்றாகும்.

ஆகவே, நம்முடைய ஜனநாயகம் சிறப்பாக தழைக்க வேண்டுமென்றால், மக்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றம் சிறப்பாக, செம்மையாக இயங்கி வருவதைப் பொறுத்தும், சட்டமன்றம் உருவாக்கித் தருகின்ற கருத்துக்களின் அடிப்படையிலே சட்டங்கள் இயற்றப்பட்டு, அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற 'எக்ஸிகியூட்டிவ்' என்று சொல்லப்படுகிற நிர்வாக அமைப்பு, மேல் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரையில் இருக்கிற நிர்வாக அமைப்பு ஒரு பிரிவாகவும்; இந்தச் சட்டத்திற்கு விளக்கங்கள் தரவும், சட்டங்களைப்பற்றி தீர்ப்பு அளிக்கவும், அதற்குள்ளே உரிமைப் பிரச்னைகள் எழுகிறபோதும்—அது தனி மனிதனுக்கும், இன்னொரு தனி மனிதனுக்கும், ஒரு அமைப்புக்கும் இன்னொரு அமைப்புக்கும், அல்லது அரசுக்கும் தனி மனிதனுக்கும்; அல்லது ஒரு அமைப்புக்கும் ஒரு அரசுக்கும்; அல்லது ஒரு அரசுக்கும் இன்னொரு அரசுக்கும்; அல்லது மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே இப்படி பிரச்னைகள் ஏற்பட்டு, தகராறு ஏற்படுகிறது என்றால்,—அதற்குத் தீர்ப்பு அளிப்பதற்கு என்று தனியாக இயங்கக்கூடியது 'ஜுடிஷியரி' என்று சொல்லக்கூடிய நீதி இலாகா.

இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் ஆனால் ஒன்றை ஒன்று அணுகி வாழ வேண்டிய அளவுக்கு, ஒன்றை ஒன்று கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாமல், ஆனால் ஒன்றை ஒன்று தழுவி நிற்க வேண்டிய தன்மையினுடைய அடிப்படையிலே ஜனநாயகம் தழைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறது. இப்பொழுது நாட்டிலே இருக்கிற மிகப் பெரிய பிரச்னையிலேகூட, உள்ளபடியே தீர்ப்பு வழங்குகின்ற நீதிமன்றங்கள்கூட, சட்டமன்றம், பாராளுமன்றம், எதைச் சட்டமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறதோ, எது சட்டம் என்று ஆக்கப்படுகிறதோ, அந்தச் சட்டத்திற்கு என்ன தண்டனை என்ற வகையில் தருகிறதோ, அந்த அடிப்படையிலேதான் தீர்ப்பு வழங்க வேண்டிய அளவுக்கு நீதிமன்றங்கள் எல்லாம் இருக்கின்றன. [illegible] பொதுவாக நீதிமன்றங்கள் என்று சொன்னாலும்கூட,





அவைகளை ஆங்கிலத்தில் அழைக்கிறபோது, Court of Law என்றுதான் சொல்கிறார்களே தவிர, எதையும் Court of Justice என்று சொல்வதே இல்லை. அங்கே உட்கார்ந்து தீர்ப்பு அளிக்கிறவர்களைத் தான் ஜஸ்டிஸ், நீதிபதிகள் என்கிறார்களே தவிர, அது Court of Law தான். சட்டத்தில் இருப்பவைகளுக்குத் தீர்ப்பு வழங்குகிற ஒரு இடம் என்று இருக்கிறபோது, எல்லா வகையிலும் உயர்ந்து முன்னோடியாக விளங்க வேண்டியதாக சட்டமன்றம் இருக்கிறது என்பதை உணர்ந்து, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பொறுப்புகளை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணிகளை, நாட்டு மக்கள் கூர்மையாகக் கவனிக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், அந்தப் பணிகள் மூலமாக சிறப்பான பலன்கள் ஏற்பட வேண்டும் என்று, நாட்டிலுள்ள அத்தனை பேர்களும் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், நாம் மிக நன்றாக உணருவோம். ஆகவே, அந்த வகையிலேதான் நாம் பணிபுரிய வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அளவிலே சென்ற 36, 37 ஆண்டுக்காலமாக, பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையிலும்கூட, நம்மைச் சுற்றிலும் சர்வாதிகார நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக தோன்றிய நிலையிலேயும்கூட, பக்கத்திலே இருக்கிற பர்மா ஆகட்டும், பக்கத்திலே இருக்கிற வங்காள தேசமாகட்டும்; பாகிஸ்தான் ஆகட்டும்; ஆப்கானிஸ்தான் ஆகட்டும், வேறு பல நாடுகளாகட்டும், ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு நாடும், ஜனநாயக மாண்பையும், ஜனநாயகப் பண்பையும், ஜனநாயக நடைமுறைகளையும் இழந்து கொண்டு சர்வாதிகார போக்கிலே வந்து கொண்டிருக்கிற சூழ்நிலையிலே இந்தியாவைப் பொறுத்தவரையில், அது விடுதலை பெற்றதிலிருந்து ஜனநாயகத்தைக் காப்பாற்றிக் கொள்வதிலே முனைப்போடு இருந்து வருகிறோம் என்பது மட்டுமல்லாமல் உலகத்திலிருப்போர் பல்வேறு வகையிலே கண்டு மெச்சத்தக்க அளவுக்கும், பாராட்டத்தக்க அளவுக்கும், அதை நிலை நாட்டி வருகிறோம் என்பதிலே நாம் பெருமிதம் கொள்ளலாம்.

நாமே பெருமிதம் கொள்ளத்தக்க அளவுக்கு, நாமே மகிழ்ச்சியடையத்தக்க அளவுக்கு, இந்தியாவிலே இருக்கிற இந்திய பாராளுமன்றமும் சரி, இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களிலே இருக்கிற மாநில சட்டமன்றங்களும் சரி, நடைபெற வேண்டும் என்று நாட்டு மக்கள் எதிர் பார்ப்பதிலே எந்தத் தவறும் இல்லை. இந்த இலக்கணத்திற்கு உரியவர்களாக நாம் நம்மையெல்லாம் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில்தான், யாருக்கும் வேறுபாடு இல்லாத அளவுக்கு அவரவர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் சாதாரணமாக இருக்கிறபோது சிறந்தவர்களாக, நல்லவர்களாக, உயர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், உணர்ச்சி வயப்படும்போது மட்டும் சிலபல நிலைமைகள் பின் தள்ளப்பட்டு, உணர்ச்சி முன் தள்ளப்படுகிறபோது,

விரும்பத்தகாத நிலைமைகள் ஏற்படுகிறது என்கிறபோது, தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு உடையவர்களாக நாம் இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கூறுகின்றபோதுகூட சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால், நாடாளுகின்ற அமைச்சர்கள் என்றால், பொறுப்பேற்றுக் கொள்கிறவர்கள் என்றால் அவர்கள் கேலிக்குரியவர்கள், பழிப்பிற்குரியவர்கள் என்று யார் யார் பழித்தாலும்கூட மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்ற அளவுக்குச் சர்வசாதாரணமாக நாடக காட்சிகளிலேயும் சரி, கேலிக்கூத்துக்களிலேயும் சரி, நகைச்சுவை நாடகங்களிலேயும் சரி அல்லது சினிமாக்களிலேயும் சரி சிலர் நகைச்சுவையைப் புகுத்த வேண்டுமென்பதற்காகப் புகுத்துகிறார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த நிலைமைகள் ஏற்படுவது நல்லதல்ல,

அதற்கு சட்டமன்ற உறுப்பினர்களோ மற்றவர்களோ சிறிதுகூட இடம் கொடுக்கக்கூடாது என்பதை முதலிலே ஒப்புக்கொள்கிறேன். அப்படியே இல்லாவிட்டாலும் அதை உருவாக்கி அதன் மூலமாக ஒரு கேலிச்சித்திரத்தை உருவாக்கி ஒரு பழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நகைச்சுவை உணர்வை உண்டாக்கி வருகிறார்கள் என்று சொன்னால் அது அவர்களுக்கும் நல்லதல்ல, சட்டமன்றத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறவர்களுக்கும் நல்லதல்ல. ஒரு சட்டமன்றத்தையே பழித்துவிட்டு—சட்டமன்றத்திலே உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களே விரும்பி ஒருவரைப் பிரதிநிதியாக ஜனநாயக முறைப்படி கொண்டுவந்து சேர்த்ததற்குப் பிறகு—மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கிறவர்களையே மக்களிலே ஒரு பகுதியினர் இழித்து பழித்து இழிநிலைக்குக் கொண்டுவந்து விடுவார்களேயானால் வேறு யாரை நம்பி ஜனநாயகத்தை மற்றவற்றைக் காப்பாற்றுகிற நிலைக்குப் பொது மக்கள் வரமுடியும் அல்லது மற்றவர்களும் வரமுடியும் என்பதை அவர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதனுடைய விளைவு அவர்களையும் சேர்த்து எதிர்காலத்திலே தாக்குகிற அளவுக்குத்தான் இருக்கும். ஆகவே குறைபாடுகளுக்கு இடமில்லாத அளவுக்கு, சந்தேகத்திற்கு சிறிதுகூட இடமில்லாத அளவுக்குப் பொறுப்பேற்றவர்களும் நடக்கவேண்டும், விமரிசிப்பவர்களும் நடக்கவேண்டும், அதற்கு இருக்கிற மதிப்பு காப்பாற்றப் பட்டால்தான், சட்டமன்றத்திற்கு இருக்கிற பொறுப்பு காப்பாற்றப்பட்டால் தான் அதன்மீது மக்கள் வைத்திருக்கிற நம்பிக்கை சிறிதளவும் கெடாமல் இருந்தால்தான், அதன்மீது மக்கள் வைத்திருக்கிற நன்மதிப்பு சிறிதளவுகூட கெடாமல் இருந்தால்தான் எதிர்காலத்திலே ஜனநாயகம் மிக வலிவுடையதாக



இருக்கும். அது மட்டுமல்லாமல் மக்கள் ஜனநாயக நாட்டில் (குறுக்கீடு) இதில் என்ன சந்தேகம் உங்களுக்கு, இதுதானே வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொன்னால் நான், நீங்கள் எல்லோரும்தான். ஆகவே நம்மைக் கேலி செய்வது வரவேற்கக்கூடியதல்ல. அதே நேரத்திலே மொத்தத்திலே தவறுகளை எடுத்துச் சொல்கிற முறையிலே விமர்சிக்கிற முறையிலே தவறுகளை படம்பிடித்துக் காட்டுகிற நிலைமையும் இருக்கிறது. உதாரணமாக ஸ்டார் தியேட்டரிலே ஒரு திரைப்படம் காட்டப்படுகிறது. அதிலே வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன் என்று ஒருவர் சொல்கிறார். அவர் தான் கதாநாயகன். அவர் ஒரு சவரத் தொழிலாளி; தேர்தலில் வெற்றிபெற்று வருகிறார். வந்தவுடன் இலவச சவரத் திட்டம் என்று 20 பேர்களுக்கு மொட்டையடிக்கிறார். தேர்தல் வாக்குறுதி கொடுத்துவிட்டு நிறைவேற்ற வில்லையென்பதைக் கண்டிப்பதற்காக இப்படிக் காட்டுகிறார்கள், அதிலே என்ன தப்பு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படி வருகிற கேலிச் சித்திரங்களை யெல்லாம் ஆதரிக்கிற நிலையில் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் இருப்பாரேயானால் தவறு சொல்வதற்கில்லை. நான் இப் போது கூட ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று ஒரு இடத்தில் கூட குறிப்பிட வில்லை. நான் பொதுவாக இலக்கணத்தைச் சொல்லிக்கொண்டே திரும்பவும் திரும்பவும் வருகிறேன். ஆகவே எதிர்க்கட்சிக்காரர்கள் இப்படி நடக்கிறார் கள், ஆளுங்கட்சியிலே உணர்ச்சி வயப்படவில்லை என்று குறிப்பிடவில்லை. பொதுவாக இலக்கணத்தைக் குறிப்பிட்டுக்கொண்டே வருகிறேன். ஆகவே, அத்தகைய நிலையிலே ஒரு தேர்தலிலே ஒரு கட்சி வருகிறது. வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் அடுத்து தேர்தல் வருகிறபோது மக்கள் கட்டாயம் தீர்ப்பு வழங்குவார்கள். வாக்குறுதியை நிறைவேற்றாதவர்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டியதுதான். வீட்டுக்குச் செல்கிறார்களோ இல்லையோ அது அவரவர்களுடைய தெம்பைப் பொறுத்தது. ஆகவே மக்கள் எடை போட்டு பார்ப்பார்கள். 5 ஆண்டுக் காலம் பார்ப்பார்கள். கொடுத்த வாக்குறுதி மக்களுக்குத் தெரியும். 5 ஆண்டுக்காலம் கழித்து தேர்தலுக்கு நிற்கிறபோது அவர்களை மீண்டும் கொண்டுவர வேண்டுமா வேண்டாமா என்ற அளவுக்கு மக்கள் நினைப்பார்கள். நினைத்து அதற்கு ஏற்றபடி வாக்களிப்பார்கள் என்ற நிலை அகில இந்தியாவிலேயும் காண்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 ஏப்ரல் 26]

(பிற்பகல் 12-40)

எங்களைப் பொறுத்தவரையில் அடுத்த தேர்தலிலே நாங்கள்தான் வருவோம் என்ற தெம்பு எங்களுக்கு இருக்கிறது. எங்களை இறக்கிவிடலாம் என்ற தெம்பு உங்களுக்கும் இருக்கலாம். அது இருப்பதிலே தவறில்லை. என்ன நடைபெறுகிறது என்பதை வருகிற தேர்தலிலே பார்த்துக் கொள்வோம். இப்போது ஒன்றுமில்லை. நான் பொதுவாக கேலி செய்கின்ற நிலைமைக்கு மாற்றம் சொல்கிறேன். அவர்களைப் போய்த் தடுக்க முடியுமா என்றால் குறிப்பாக தணிக்கை போர்டார் மற்றவர்கள் நாட்டினுடைய ஜனநாயகம் பொதுவாக காப்பாற்றப்பட வேண்டுமென்றால் நானும் உங்களை கேலி பண்ணி நீங்களும் எங்களை கேலி பண்ணி இரண்டு பேரும் இரு சாராரையும் கேலி பண்ணியதற்குப் பிறகு நாட்டார் மதிக்கத்தக்க அளவுக்கு யார் மிச்சப்படுவார்கள் என்பதை நாம் யோசிக்க வேண்டும். நான் பொதுப்படையாக எடுத்துச் சொல்கிறேனே தவிர, சிலபல இடங்களில் குறைபாடுகளே இல்லை என்று சொல்லவில்லை, குற்றங்களே நிகழவில்லை என்று சொல்லவில்லை. ஆகவே ஒரு சிறு பகுதி ஒரு முழு பகுதியாகி விட முடியாது. ஒரு சிறு இன்ஸ்டன்ஸ்-ஐ வைத்து ஜெனரலைசேஷன் ஆக பண்ணுகின்றபோதுதான் எல்லோரும் பாதிக்கின்ற அளவுக்கு வருகிறது. அதைத்தான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும்போது சிலபல இடங்களில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வருகின்றனவே என்கின்றபோது ஒவ்வொரு நகைச்சுவை நாடகத்தையும் நாம் தணிக்கை செய்து கொண்டு இருப்பது என்பது ஆகாத காரியம். அதற்கு மாற்று என்ன என்று சொன்னால் உள்ளபடியே நல்ல சட்டமன்ற உறுப்பினர் எப்படி எப்படி நடக்க முடியும்? நல்ல அமைச்சர்கள் எப்படி எப்படி நடக்க முடியும் என்று உள்ளபடியே படம் எடுக்கிறவர்கள்கூட இந்த அவையில் 4, 5 பேர்கள் இருப்பதன் காரணமாக அவர்கள் அப்படிப்பட்ட ஒரு தீம்-ஐ வைத்து அப்படிப்பட்ட நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று கவுண்டர் ஆக, அதற்கு எதிரிடையாக திரைப்படங்கள் எடுத்துக் காட்டுவார்களானால் அதையும் பார்த்து மகிழ்ந்து கை ஒலி செய்பவர்கள் நாட்டில் ஏராளமான மக்கள் இருக்கிறார்கள் என்பதையும், அதற்கு அவர்கள் கை ஒலி செய்கிறார்கள்; எதற்கு அவர்கள் பாராட்டுகிறார்கள், தனித் தனி வகைகள் இருக்கிறதன் காரணமாக. ஆகவே நல்ல சட்டமன்ற உறுப்பினரையும் உருவகப்படுத்தி ஒரு படத்தில் கொண்டு வரலாம். ஆகவே, தன்னுடைய இயக்கத்தைச் செய்து, தன்னுடைய நேரம், திறன், உழைப்பு, அறிவு, ஆற்றல் எல்லாம் பயன்படுத்தி, பயன்படுத்தி மக்களுக்குப் பாடுபட்டு தேய்ந்து அதற்காகவே இருந்து மாய்ந்தார் என்று கூட ஒரு கதை எடுக்க ஒரு சட்டமன்ற உறுப்பினரைக் காட்டுவது, அதில் [illegible] அதையும் யாரும் மறுக்கவும் முடியாது. அப்படிப்பட்ட



1984 ஏப்ரல் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நிலைமைகளில் தான் மற்ற ஏற்பாடு செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இவைகளை நான் எடுத்துச் சொல்கிறேன்: ஆகவேதான் இத்தகைய சட்டமன்றத்தினுடைய தன்மைகள் வருகின்றபோது நாமும் கூட ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். சட்டமன்றத்தில் ஆற்றுகின்றபோது அது அமைச்சர்களுக்கும் பயன்பட்டதாக இருக்க வேண்டும், நிர்வாகத்தை நடத்திச் செல்கிறவர்களுக்கும் பயன்பட்டதாக இருக்க வேண்டும், குற்றம் குறைகளை உணர்வதற்கும் பயன்பட்டதாக இருக்க வேண்டும். அந்தக் குற்றம் குறைகளை நீக்குவதற்குத் தூண்டுகோலாக அமைய வேண்டும். ஆக அந்த வகையில் இங்கே எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் பயன்படுமானால் பொதுவாக அமைச்சரவைக்கும் மற்றவைக்கும் சேர்த்து பயன்படுவதாக அமையும். இல்லாவிட்டால் சட்டமன்றத்தில் பேசுகின்ற பேச்சு ஒரு விதம், வழக்கு மன்றத்தில் நின்று ஒருவர் வாதாடுகின்றபோது அவர் பயன்படுத்துகின்ற உரை ஆற்றல் முறை இன்னொரு விதம். பொதுக்கூட்டத்தில் போய் பொதுமக்களுக்கு விளக்கங்கள் தர வேண்டுகோள் விடுக்க பயன்படுத்துகின்ற முறை இன்னொரு விதம். அவரே ஒரு கல்லூரி பேராசியராக இருந்து விரிவுரையாளராக இருந்து ஒரு பாடத்தை எடுத்து விளக்கும்போது அவர் எடுத்துச் சொல்லுகின்ற விதம் மற்றொரு விதம். இந்த 4-க்கும் வேறுபாடு உண்டு. கல்லூரி விரிவுரையாளருக்கு இருக்க வேண்டிய ஒரு திறமை, வழக்கறிஞராக இருந்து அங்கே வாதாட வேண்டிய திறமை, சட்டமன்றத்தில் கலந்து கொண்டு வாதாட வேண்டிய ஒரு திறமை, பொதுக்கூட்டத்தில் பேசி விளக்கங்கள் சொல்லி வேண்டுகோள்கள் விடுத்து மக்களைத் தங்கள் பக்கம் இழுக்கும் அளவுக்கு நயம்பட உரையாற்றுகின்ற பாங்கையும் பெற்று வேறு பல தன்மைகள் எடுத்துச் சொல்வது வேறு. அந்த நிலைமைகள் இருக்குமானால் சட்டமன்றத்தினுடைய நேரம் அதிகமாக பயன்பட்டதாக ஆகும். எங்களைப் போன்றவர்களுக்குப் பயன்படுகின்ற வகையிலும் அமையும்.

இந்தச் சட்டமன்றம் கூடுகின்ற நாட்கள் அதிகமான நாட்களாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பொறுத்தவரை கூடுமானவரை தேவையான அளவுக்குச் சட்டமன்றத்தின் நாட்கள் கூட்டப்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தினுடைய அடிப்படையில் நாம் தொடர்ந்து கூட்டிக் கொண்டு வருகிறோம். பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கூட ஓரளவுக்குக் கூடுதல்தான். அலுவல் ஆய்வுக் குழுவில் இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சேர்ந்து எடுக்கின்ற முடிவுக்கு இணங்க நாம் சட்டமன்றத்தினுடைய நாட்களை எல்லாம் ஓரளவுக்கு முடிவு செய்து தீர்மானிக்கிறோம். உதாரணத்திற்கு 1983 ஆம் ஆண்டை மட்டும் எடுத்துக் கொண்டோமானால் ஆந்திர மாநிலத்தின் சட்டசபை 45 நாட்கள் கூடியிருக்

கின்றது. உத்திரப்பிரதேச மாநிலத்தின் சட்டசபை 48 நாட்கள் கூடியிருக்
கின்றது. குஜராத் மாநிலத்தின் சட்டசபை 48 நாட்கள் கூடியிருக்கின்றது.
மகாராஷ்டிரத்தின் சட்டசபை 65 நாட்கள் கூடியிருக்கின்றது.
தமிழ்நாடு சட்டசபை 78 நாட்கள் கூடியிருக்கின்றது. நம்முடைய
போக்கின் அடிப்படையில் நாம் பார்த்தால் இந்த ஆண்டு இன்னும் கொஞ்சம்
கூடுதலாகக் கூட வரும். ஏற்கெனவே கூட பார்ப்போமானால் 1975 ஆம்
ஆண்டில் 64 நாட்கள் கூடியது. 1977-ல் 50 நாட்கள் கூடினோம். 1978-ல்
49 நாட்கள் கூடினோம். 1979-லே 71 நாட்கள் கூடினோம். 1981-ல் 77 நாட்கள்
கூடியிருக்கிறோம்; நான் முதலிலே சொன்னது மாதிரி 1983-லே 78 நாட்கள்
கூடியிருக்கிறோம்.

நாட்களைப் பற்றிக் கூட அல்ல; அவசியப்பட்டால், தேவைப்பட்டால்
இந்த மன்றத்திலே விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றபொழுது அதிக
நாட்களை ஒதுக்குவதிலேகூட அதிக ஆட்சேபணை இல்லை. ஆனால்,
ஒதுக்கப்படும் நாட்களிலே, கூட்டப்படுகின்ற நாட்களிலே, எல்லா
உறுப்பினர்களும் வருகை தர வேண்டும்; பொறுப்பு உணர்ந்து அவர்களுடைய
கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும். மற்றவர்களின் கருத்துக்களையும்
கேட்கின்ற ஒரு பாங்கு ஏற்பட வேண்டும். அதன் மூலமாகக் கருத்துக்களின்
மீது கருத்துக்கள் வழங்குகின்ற ஒரு முறை ஏற்படுமேயானால் இந்த மன்றம்
நமக்கு மட்டும் அல்ல; மேலேயிருந்து பார்ப்பவர்களுக்கும் கண்களுக்குக்
குளிர்ச்சியாகவும் அமையும். அந்த வகையிலே எல்லோரும் பாடுபட
வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

கேள்வி நேரத்தைப் பற்றிச் சொன்னார்கள். கேள்விகளைப் பற்றி
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் குறிப்பிட்டார்கள்;
மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. சுப்பிரமணியன் அவர்களும் குறிப்பிட்டார்கள்.
கேள்வி நேரம் என்பது மிகவும் முக்கியமான நேரம் என்பதை நாம் உணர்ந்து
கொள்ளலாம். கேள்வி நேரத்தின் மூலம் பல்வேறு பிரச்சினைகளை மக்கள்
மன்றத்திற்கு வெளியிடுவதற்குப் பயன்படுகிறது. அது மட்டுமல்லாமல்,
கேள்வி கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல்,
அமைச்சரவையிலே இருக்கின்ற, ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகின்ற
அமைச்சர்களுக்கேகூட கேள்வி நேரம் என்பது மிகமிகப் பயன்படும் வகையிலே
அமைகின்றது.

சிலபல துறைகளைப் பொறுத்து. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எடுக்கப்
பட்டு அது நடைபெற்று வருகின்ற முறைகள், அதனால் ஏற்பட்ட பலன்கள்,
ஏற்கெனவே இருக்க நிலைமைகள், இருக்கக்கூடிய நிலைமைகள், இனிமேல்





இருக்கக்கூடிய நிலைமைகள் ஆகியவற்றை நாட்டு மக்களுக்கு நாங்கள் தெரி
விக்க வேண்டுமென்றாலும், மக்களுக்கு விளங்க வைக்க வேண்டுமென்றாலும்,
மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கின்றபொழுது, மாண்புமிகு
அமைச்சர்கள் விடையாக எடுத்துச் சொல்லுகின்றபொழுது, நாட்டு
மக்களுக்குத் தேவைப்படுகின்ற விளக்கங்கள் கிடைக்கின்றன.

ஒரு ஜனநாயக நாட்டிலே மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டு
மென்பதும், மாநில அரசின் சார்பாகவும், மத்திய அரசின் சார்பாகவும் என்
னென்ன நடைபெறுகின்றன என்று அன்றாடம் கூர்ந்து கவனிக்கின்ற பாங்கும்
தங்களுக்காக மத்திய அரசும், மாநில அரசும் என்ன செய்கிறார்கள் என்று
அறிந்து கொள்ளுகின்ற பாங்கும், இப்படிச் செய்வதிலே நாம் எதைப் பயன்
படுத்திக் கொண்டோம் என்று மக்கள் உணர்ந்து கொள்ளவும், எதைப் பயன்
படுத்திக் கொள்ளத் தவறி விட்டோம் என்று மக்கள் தெரிந்து கொள்ளவும்,
தவற விட்டதை மறுபடியும் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரு தூண்டுகோலாக
அமைவதற்கும் கேள்விகளைக் கேட்பதும், அந்தக் கேள்விகளுக்கு விடை
யிறுக்கும் ஒரு பாங்கும் மிகமிகப் பயன்படுகிறது என்பதை நாம் நன்றாக
அறிவோம்.

கூடுமானவரையில் கேள்விகளுக்கு அவ்வப்பொழுது தாக்கீது அனுப்பப்
பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு வரையறையெல்லாம் குறிப்பிட்டிருக்
கிறோம். குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகப் பதில் வர வேண்டும். ஏற்றுக்
கொள்ளப்படும் கேள்விகள், ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன என்று மாண்பு
மிகு பேரவைத் தலைவரவர்கள் அனுமதி அளித்த பிறகு அந்தக் கேள்விக்குரிய
பதில் உரிய காலத்தில் வந்து தீரவேண்டும் என்று அந்தந்தத் துறையினருக்கு
அடிக்கடி தாக்கீது அனுப்பிக்கொண்டே இருக்கிறோம். அந்தந்த அமைச்சர்
களும் உடனடியாக எடுத்துத் தெரிவிப்பதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு மட்டும் அல்ல அமைச்சர்களுக்கே கூட, எட்டு, ஒன்பது மாதங்களுக்கு
முன்னாலே ஒரு கேள்வி கேட்கப்பட்டு, பத்து மாதங்களுக்கு முன்னாலே உள்ள
நிலைமைகளைப் பற்றிப் பதில் சொல்லுகின்றபொழுது, எங்களுக்கே சிலபல
இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அப்பொழுதிருந்த சூழ்நிலையிலே சொல்லப்
பட்டவைகளுக்குச் சிலபல மாற்றங்களோடு சொல்ல வேண்டிய கட்டங்கள்கூட
பிறகு வந்துவிடும். உடனுக்குடன் குறிப்பிட்ட நாட்களில் கொடுப்பதன்
மூலம் அமைச்சரவைக்கும் நல்லது என்ற முறையிலேதான், மாண்புமிகு உறுப்
பினர்களுடைய உணர்ச்சிக்கு நாம் பதில் சொல்லும் வகையில் துறையினர்
அத்தனை பேரும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் இந்தச் சந்தர்ப்
பத்திலே நான் இதை எடுத்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குப் போடப்படுகின்ற கேள்விகளுக்கு விடைகள் வரவில்லை என்கின்ற ஒரு தன்மையை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லிய மாதிரி நானே சொன்னேன் மாண்புமிகு முதலமைச்சரவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட, ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்ற அத்தகைய கேள்விகள் அத்தனையையும் எனக்கு அனுப்பினால் அவை முன்னவர் என்ற முறையில் நானே பதில் சொல்லி விடுகிறேன் என்றுகூடச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது சில நாட்களாக, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கேள்விகளை எனக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விகள் இப்பொழுது எவ்வளவு உண்டோ. அவ்வளவையும் அனுப்புங்கள். ஒரு நாளிலே பத்து, பதினைந்து கேள்விகள் எனக்கு அனுப்புவதானாலும் அனுப்பி வையுங்கள். நான் சொல்லி விடுகிறேன் என்று அந்தத் துறையினருக்குச் சொல்லியிருக்கிறேன். அடுத்தடுத்த நாட்களிலே, அவர்களுக்குப் போடப்பட்ட கேள்விகளில், அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு, கையெழுத்திடப்பட்டிருக்கின்ற அத்தனை கேள்விகளுக்கும் விரைவில் பதில் சொல்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நானே பொறுப்பேற்றுக்கொண்டு, அவற்றிற்குப் பதில் சொல்கிறேன் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள், ராமப்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை இந்த அவையிலே விவாதத்திற்கு வைக்கப்படும் என்று குறிப்பிட்டது குறித்துப் பேசினார்கள். விவாதத்திற்கு வைக்கப்படும் என்று கூறியது உண்மை. விவாதத்திற்கு வைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அரசு இருக்கிறது.

(பிற்பகல் 12-50)

இந்தத் தொடர் கூட்டம் முடிந்த பிறகு, சட்ட முன்வடிவுகளெல்லாம் நிறைவேறியதற்குப் பிறகு வைக்கலாம் என்ற அளவிற்குத்தான் முதலிலே அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் முடிவு செய்தோம். இடைத் தேர்தல் வராது என்ற சூழ்நிலை இருந்தது. அது வராமல் இருக்குமேயானால், தொடர்ந்து இந்தச் சட்டமன்றம் நீடிக்கலாம் என்ற அந்த அளவில்தான் நாம் முடிவு செய்தோம். பிறகு மத்திய அரசு, மற்றவைகளெல்லாம் சேர்ந்து, அகில இந்தியா முழுவதும், 26 தொகுதிகளில் இடைத் தேர்தல் வருவதன் காரணமாக, தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய இடைத் தேர்தலையும்—நான்கு தொகுதிகளிலே நடத்திட வேண்டுமென்று சொன்னார்கள். 26 தொகுதிகளில்





3 தொகுதிகளிலே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதிலே வடக்கே இரண்டு தொகுதிகளுக்கும், இங்கே புரசைவாக்கம் தொகுதியைப் பொறுத்தவரையில் அது வழக்கு மன்றத்திலே இருப்பதன் காரணத்தால் அந்தத் தொகுதிக்கும் தேர்தல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. ஆக 26 தொகுதிகளில் 23 தொகுதிகளுக்கு மாத்திரம் தேர்தல் நடைபெறுகின்றது. அப்படித் தேர்தல் நடைபெறுகின்றது என்று வந்த வுடனே 1-ஆம் தேதிக்குள்ளாக எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் களும் மற்றவர்களும், தொகுதி வேலைகளையும் மற்றவைகளையும் பார்க்க எங்களை விட வேண்டும் என்று கேட்டதன் காரணத்தால் அதற்கேற்ப அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே இந்தப் பிரச்சினைகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு மீண்டும் சட்டமன்றம் கூடுகின்ற போது, 10, 15 பில்களைப் பாஸ் பண்ணவேண்டி இருக்கின்றது. அதற்குப் பிறகு ராம்பிரசாத்ராவ் கமிஷன் அறிக்கை மீது விவாதம் போன்றவைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இப்போது வரி அடிப்படையிலே உள்ள சில மசோதாக்களை மட்டும், நாளையும், நாளை மறுநாளும் எடுத்துக்கொள்ள இருக்கிறோம். ஏனென்றால் ஒன்றாம் தேதியிலிருந்து நாம் கொண்டுவந்திருக் கின்ற சிலபல வரி விகிதங்களை இப்போதே நாம் கொண்டுவராவிட்டால் அடுத்த சட்டமன்றம் கூடுவதற்குள்ளாக வரிவிதிப்பு பாதிக்கப்பட்டுவிடும் என்ற காரணத்தால் அலுவல் ஆய்வுக் குழுவிலே தலைவர்கள் எல்லோரிடத்தி லேயும் விளக்கமாக எடுத்துச்சொன்னதற்குப் பிறகு அவர்களும் அதைப்பற்றி மட்டும் இந்த இரண்டு நாட்களிலே வைத்துக்கொள்ளலாம் என்றும் நிதி ஒதுக் கீட்டு மசோதாவைக் கூட நாளைக்கு விவாதம் இல்லாமல் நிறைவேற்றலாம் என்றும் ஒப்புக்கொண்டார்கள். எனவே அந்த வகையிலே நாளையும், நாளை மறுநாளும் இந்த 6 பில்களை மட்டும் அதாவது வரி விதிப்பு பற்றிய பில்களை மட்டும் நிறைவேற்றலாம் என்றும் மறுபடியும் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு ஜூனிலேயோ ஜூலையிலேயோ சட்டமன்றம் கூடுகின்ற போது மற்ற பில்களையும், ராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை மீது விவாதம் ஆகியவற்றை எல்லாம் வைத்துக் கொள்ளலாம் என்றும் அலுவல் ஆய்வுக் குழுவிலே உள்ள தலைவர்கள் அத்தனை பேர்களும் ஒத்துக்கொண்டதன் பேரில் பிறகு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றது என்பதை நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராம்பிரசாத் ராவ் கமிஷனுடைய ஃபைன்டிங்ஸ் பற்றிய விசாரணைக்கு நேரம் இல்லை என்றும், குறுகிய காலத்திலே சட்டசபை நடத்தப்படவேண்டி இருக்கின்றது என்றும் கூறப்படுகின்ற காரணம் உண்மையானால் அவர்

[திரு. அ. ரகுமான்கான்] [1984 ஏப்ரல் 26

களுடைய ஃபைன்டிங்ஸை மட்டும் வேக, வேகமாக, அவசரமாக நேரத்தை எடுத்துக்கொண்டு வைத்திருக்கிறீர்களே ஏன்? அப்படியானால் அதற்கு நேரம் இருக்கின்றது, இதற்கு நேரம் இல்லை என்றால் என்ன நியாயம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா நியாயங்களையும் பற்றி அது விவாதத்திற்கு வரும்போது நாம் எடுத்து வைப்போம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பேசுகின்றபோது நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினர்களுடைய் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எப்போதும் நிலையாக இருக்கக்கூடிய அளவுக்கு மத்திய அரசு மக்கள் தொகையின், எண்ணிக்கையின் அடிப்படையில் நிர்ணயித்து விட்டது. 500 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். வேறு சிலபேருக்கு அதாவது ஆங்கிலோ இந்தியர்கள், மற்றும் சிலருக்கு என்று 43 இடங்களைத் தனியாக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்த 500 என்பதை எக்காரணம் கொண்டும் உயர்த்துவதில்லை என்ற அளவுக்கு வைத்துவிட்டதன் காரணத்தால் மக்கள் தொகையின் அடிப்படையில் அவ்வப்போது நிர்ணயிக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இவ்வாறு மக்கள் தொகை அடிப்படையில் 41 உறுப்பினர்கள் என்றிருந்த நிலைமை மாறி இன்றைக்குக் குறைந்துவிட்டது. நாம் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை மிகத் தீவிரமாக நடத்திக் கொண்டு வருவதன் காரணத்தால் நம்முடைய மாநிலத்திலே மக்கள் தொகை ஓரளவுக்குக் குறைந்துவிட்டார்கள். மற்றவர்கள் எல்லாம் இதைப் பற்றிக் கவலைப்படாமல் நான் என்ன செய்வது, நான் என்ன செய்வது என்று சொல்லிக்கொண்டு அவர்கள் எல்லாம் மக்கள் தொகையைப் பெருக்கியதன் காரணத்தால் கடைசியில் பார்க்கின்றபோது மற்ற மாநிலங்களில் அதிக எண்ணிக்கையும் நம்முடைய மாநிலத்திலே குறைந்ததன் காரணத்தால் 41-ஆக இருந்தது 39-க்கு வந்துவிட்டது. ஆகவே இந்த 39 என்பதை எக்காரணம் கொண்டும் மாற்றக்கூடாது. ஆனால் இந்த 39 நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளைப் பொறுத்தவரையில் சட்டமன்றத் தொகுதியின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ மத்திய அரசினுடைய அனுமதியின் பேரில் நாம் செய்யலாம். ஆக, ஒரு நாடாளுமன்றத் தொகுதி என்பது 5 சட்டமன்றத் தொகுதியாக முன்பு இருந்ததை இப்போது 6 ஆக்கி இருக்கிறோம். சில மாநிலங்களில் 8-ஆகக் கூட பிரித்து வைத்திருக்கிறார்கள். எனவே நம்முடைய மாநிலத்திலும் அந்த எண்ணிக்கையை கூட்டவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று ஒவ்வொரு



1984 ஏப்ரல் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தொகுதியிலும் வாக்காளர்களின் எண்ணிக்கை பெருகிவிட்டது. இப்போதுகூட அண்ணா நகர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன. 50 ஆயிரம் வாக்குகள், 60 ஆயிரம் வாக்குகள் என்று அதிகமாகி இருக்கின்றன. எனவே 8-ஆக மாற்றுவது நல்லதுதான். அதை மத்திய அரசுக்குக் கூட எழுதினோம். ஒவ்வொரு தொகுதியையும் 8 சட்டமன்றத் தொகுதியாகப் பிரிப்பார்களேயானால் எண்ணிக்கையும் குறையும்; பாடுபடுவதற்கான வசதி, வாய்ப்புக்களும் அதிகமாகும்.

ஆனால் இப்போது கி.பி. 2 ஆயிரம் வரையிலும் இந்தச் சட்டமன்றத் தொகுதிகளின் நிலைமைகளை மாற்றுவதில்லை என்ற கொள்கையை மத்திய அரசு கொண்டிருக்கின்றது. ஆகவே அதில் ஒரு மாற்றம் ஏற்படுமேயானால், அதிலே மாற்றம் செய்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் நாமே கூட 8 என்று கொண்டு வருவதற்குரிய ஒரு சூழ்நிலையைப் பெற முடியும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சட்டமன்றத்திலே பெட்டிஷன் கமிட்டி, லைப்ரரி கமிட்டி அமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் சொன்னார்கள். இதைச் சென்ற ஆண்டும் எடுத்துச் சொன்னார்கள். அது கவனிக்கப்படும் என்று சொன்னேன். ரூல்ஸ் கமிட்டி இதை ஒப்புக்கொண்டு பெட்டிஷன் கமிட்டி, லைப்ரரி கமிட்டி என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டிகளை அமைக்கவேண்டும் என்று சொல்லி அந்த விதிகள் குழு அந்த விதிகளைச் சேர்ப்பதற்காக ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறது. ஆய்வு நடந்து முடிந்த பிறகு இதைச் சட்டமன்றத்திலே கொண்டு வந்து வைத்து அவைகளை நிறைவேற்றியதற்குப் பிறகு அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சி உறுப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினர் என்று பார்க்காமல் இருசாராரையும் ஒரே தரத்தினராகக் கருதவேண்டும் என்றும் இதிலே வேறுபாடு கூடாது என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட வேறுபாடு காட்டக் கூடாது என்ற கொள்கையைத்தான் நாம் வைத்து இருக்கிறோம். அரசு நடத்துகிற எந்த ஒரு விழாவாக இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து—உள்ளபடியே பிரச்சனை வரும்போது வேண்டுமென்றால் வாதப் பிரதிவாதங்கள் இருக்கலாமே தவிர—ஒரு விழாவை நடத்தி நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும்போது அதிலே மாறுபட்ட பிரச்சினை, வேறுபட்ட பிரச்னை இருக்க முடியாது. எல்லோரும் சேர்ந்து, கலந்து கொண்டு செய்தால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட முடியும். ஆகவே, அரசியல் கட்சி உறுப்பினர்கள் இங்கேதான் சேர முடியவில்லை யென்றாலும் இங்கே மாச்சரியத்

தோடு ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்து ஒருவரை ஒருவர் காரசாரமான முறையிலே கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன என்றாலும் ஒரு ஜனநாயகப் பண்பை வளர்ப்பதற்குக் கூட அரசாங்க விழாக்களில் எல்லோரும் ஒன்று சேர்ந்து பங்கெடுத்துக்கொள்ளும்போது எல்லோரும் சேர்ந்து பங்கு கொண்டிருக்கிறோம், நாட்டினுடைய நலங்கள் என்ற நிலை ஏற்படுவதற்குத் தான் எந்த விழா நடைபெற்றாலும் அந்த விழா நடைபெற இருக்கிற இடத்திலே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர், அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் யாராக இருந்தாலும் அவர்களை அரசு விழாவிலே இடம் பெற வைக்க வேண்டுமென்று நாங்கள் ஆணையிட்டிருக்கிறோம். பெரும்பாலான இடங்களில் நடைபெறுகின்றன. சிலபல இடங்களில் அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, சிலபல குறைபாடுகள் நிகழ்ந்து விடுகின்றன. அது நடைபெறக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம், இப்பொழுதும் சொல்கிறோம் அதே மாதிரி போடப்படுகின்றவர்களும் கூடுமான வரையில் போடப்பட்டதற்கு மதிப்பு தருகின்ற வகையில் வருகை தந்து மகிழ்வித்து, பெருமைப்படுத்தி, பாராட்டுகின்ற அளவுக்கு வரவேண்டும். நான் கலந்துகொள்கின்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள். அதிலே எந்த இடத்திலும் ஒரு மாச்சரியமும். சண்டை சச்சரவும் இல்லை. நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிற தன்மையைத்தான் நான் பார்த்திருக்கிறேன். சிலபல இடங்களிலே சிலபலர் வரவும் மறுக்கிறார்கள். அது அவர்களுக்கும் நல்லதல்ல. சில இடங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இப்பொழுது கூட தேரழுந்தூரிலே கம்பர் விழா நடைபெற்றபொழுது அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் அருமை நண்பர் இராசமாணிக்கம் இரண்டு நாட்களும் அங்கே இருந்து பணிகளை ஆற்றி, அரசுப் பணியாற்றுகின்ற அளவுக்கு கூடவே இருந்து பணிகளை சிறப்பாக ஆற்றினார் என்பதிலே கடைசி வரையிலே இருந்து மகிழ்வித்தார் என்பதிலே எங்களை எல்லாம் பெருமையோடு வரவேற்று மகிழ்ந்து பாராட்டி வழி அனுப்பி வைத்தார் என்கின்றபொழுது அப்படிப்பட்ட பண்பாடுகளை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிக் கலந்து உரையாடுகின்றபொழுது நல்ல சூழ்நிலைகள் ஏற்படுகின்றன என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வேறு பிரச்னைகள் பலவற்றையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே ஒருசில கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்களும் அதை ஒலித்துச் சொன்னார்கள். சில பேர்—சொல்ல முடியாதவர்கள் கை தட்டலின் மூலமாக ஒலித்துக் காட்டியிருக்கிறார்கள்.





சென்ற ஆண்டே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்தினார்கள். சென்ற ஆண்டே இருந்த நிலைமையை நான் எடுத்துச் சொன்னேன். கடுமையான, கொடுமையான வறட்சி நாட்டில் இருந்ததன் காரணமாக, மற்றவர்களுக்கெல்லாம் மறுத்துவிட்டு, மற்றவர்களுக்கெல்லாம் தீர்ப்பு வழங்குகிற நிலையிலே இருக்கிற நாம் படியையும் சம்பளத்தையும் கூட்டுதல் பொருந்தாது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் பொறுமையோடும் பெருந்தன்மையோடும் அதை ஏற்றுக்கொண்டார்கள். அந்தப் பெருந்தன்மைக்கும் பொறுமைக்கும் ஏதாவது பரிசு வழங்க வேண்டுமென்பது என் எண்ணம் ஆகும். அந்த வகையிலே காணுகின்றபொழுது நம்முடைய மாநிலத்திலே கொடுக்கப்படுவதும் எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பதை நான் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிலே படி, சம்பளம் எல்லாம் சேர்ந்து ரூபாய் 1,050 கொடுக்கிறோம், கேரளாவிலே மொத்தமும் சேர்த்து ரூபாய் 750; ஜம்மு காஷ்மீரிலே எல்லாம் சேர்ந்து ரூபாய் 1,050; ஆந்திரப் பிரதேசத்தில் ரூபாய் 1,000—இப்பொழுது கூட்டி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்; முழு விவரம் எனக்கு வரவில்லை; கர்நாடகத்திலே எல்லாம் சேர்ந்து ரூபாய் 1,250; மேற்கு வங்காளத்திலே எல்லாம் சேர்ந்து ரூபாய் 650; மகாராஷ்டிராவிலே ரூபாய் 1,300; உத்தரப் பிரதேசத்திலே ரூபாய் 1.500; பஞ்சாபிலே ரூபாய் 1,000 தருகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது ஊதியம் ரூபாய் 300; ஈட்டுப் படி ரூபாய் 400; தொலைபேசிப் படி ரூபாய் 350; ஆக ரூபாய் 1,050 வழங்கப்படுகிறது. அந்தச் சம்பளம் ரூபாய் 300 ஆக இருப்பதை ரூபாய் 500 ஆக உயர்த்தித் தரலாம் என்று கருதி, அது மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், கூர்ந்த கண்ணோடு பார்த்துக் கொண்டிருக்கிற துணைத் தலைவருக்கும் மேலவைத் தலைவருக்கும் மேலவைத் துணைத் தலைவருக்கும், அமைச்சர்களுக்கும் எல்லோருக்கும் சேர்ந்து—ரூபாய் 200 மாதம் அடிப்படைச் சம்பளத்தில் சேர்த்து, ரூபாய் 300 ஆக இருப்பது ரூபாய் 500 ஆக்கப்படும்; மற்ற படிகள் எல்லாம் அப்படியே இருக்கும். ஆக மொத்தம் ரூபாய் 1,250 வரும். 1—4—1984-லிருந்து ரூபாய் 200 உயர்த்தப்படும். இங்கே சட்டம் கொண்டு வந்து பாஸ் பண்ணியதற்குப் பிறகுதான் பணம் கைக்கு வந்து சேரும்; என்றாலும் சேர்ந்து வந்துவிடும் என்பதை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இரயில்வே கூப்பனைக் கூடுதலாகத் தர வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது ரூபாய் 3,000-க்குக் கூப்பன் தரப்படுகிறது. இரயில்வே கட்டண உயர்வு மற்றவைகள் அண்மையில் ஏற்பட்டதை எல்லாம் கணக்கெடுத்துப்

பார்த்து, 1—4—1984-லேயிருந்து உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 4,000 அளவுக்கு கூப்பன் வழங்கப்படும்.

ஓய்வு பெறுகின்ற உறுப்பினர்களுக்கு மருத்துவப் படி என்று மொத்தமாக நாம் ரூபாய் 200 தந்து வருகின்றோம். அவர்களுக்கு ரூபாய் 200 தருவதை ரூபாய் 400 ஆக மாற்றுகிறோம். 1—4—1984-லிருந்து இந்தச் சலுகையை நாம் தரவிருக்கிறோம் என்பதை மட்டும் இப்பொழுது சொல்லி இந்த அளவோடு முடிக்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது பிற்பகல் 1-00 மணி. விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்;

திரு. தி. கா. நல்லப்பன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,38,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், என். பழனிவேல், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. த. வேணுகோபால் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,99,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன். திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 9—மாநில, ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 25.50,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், என் பழனிவேல், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 45;18.23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 43—பல்வகை

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 76,87,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 13,30,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 345,39,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



6. அறிவிப்பு

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவு

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 27—4—1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

167. ஏனைய இடங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயத்திற்கு, சென்னை கிண்டியிலும், உதகமண்டலத்திலும் நடைபெறும் குதிரைப் பந்தயத்தின் போது பந்தயம் கட்டுவது குறித்து வரி நிர்ணயிப்பது தொடர்பாக, வணிகவரி அறக் கட்டளைகள் துறையின் 30—9—1983 ஆம் நாளிட்ட 1,111 ஆம் எண்

[1984 ஏப்ரல் 26

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

168. 1982 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

169. 1978-79 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

172. கோரிக்கை எண் 8—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

173. கோரிக்கை எண் 9—நிதி நிறுவனங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

174. கோரிக்கை எண் 42—ஓய்வூதியம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

175. கோரிக்கை எண் 43—கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும் குடி பெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும், மறு வாழ்வும். (தமிழ், ஆங்கிலம்).

176. கோரிக்கை எண் 57—பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு பற்றிய துணைக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

177. கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

178. மறுவாழ்வுத் துறையின் 1984-85 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம். (தமிழ், ஆங்கிலம்).



1984 ஏப்ரல் 26]

179. 'தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்' என்ற புத்தகம். (தமிழ்).

180. 'தமிழ் நாட்டில் பட்டுத் தொழில் வளர்ச்சி' என்ற புத்தகம். (தமிழ்).

181. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும். (ஏழாம் பட்டியல்).

182. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும். (எட்டாம் பட்டியல்).

## இணைப்புகள்

(649-ஆம் பக்க அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 8, தேர்தல்கள்

### வரைவு உரை

பேரவைத் தலைவர் அவர்களே,

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்" என்பதன் கீழ் 1984-85 ஆம் நிதியாண்டின் செலவுக்காக ரூபாய் 2,99,00,000 அரசுக்கு வழங்க வேண்டுமென நான் முன் மொழிகிறேன். இக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி பெரும்பாலும் முறையான தேர்தல் அமைப்பில் உள்ளோரின் சம்பளம் போன்ற செலவுகளுக்கும் தேர்தல் நிர்வாகத்தின சீரான நடைமுறைக்காகவும் பயன் படுத்தப்படுகிறது. இந்த நிதியாண்டில் நடைபெற இருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்காகவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

2. நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல்கள் 20—1—1985-க்குள் நடத்தப்பட்டு புதிய மக்களவை அமைக்கப்படவேண்டும். குறித்த நாளில் தேர்தல்கள் நடைபெற, சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்கள், 1984-ம் ஆண்டு சனவரித் திங்கள், முதல் நாளைத் தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வீடுவீடாகச் சென்று திருத்தியமைக்கப் பட்டன. தற்சமயம் இம் மாநிலம் பொறுத்தவரை மக்களவையில் காலியிடம் ஏதும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

3. சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல்கள் 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடத்தப்பட்டது. அடுத்த தேர்தல் நடத்துவதற்கான ஐந்தாண்டு காலக்கெடு 1985-86 ஆம் நிதியாண்டில்தான் முடிவடையும்.

4. சட்டமன்றப் பேரவையில் தற்பொழுது, அண்ணாநகர், புரசைவாக்கம் உப்பிலியாபுரம், மாயவரம், தஞ்சாவூர் ஆகிய ஐந்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் உறுப்பினர் பதவிகள் காலியாக உள்ளன. இவற்றுள், புரசை வாக்கம் தொகுதியைத் தவிர மற்ற நான்கு தொகுதிகளுக்கான இடைத் தேர் தல்கள் 20 மே 1984 அன்று நடைபெறும். புரசைவாக்கம் தொகுதியைப் பொறுத்த வரையில் தேர்தல் வழக்கொன்று உயர்நீதிமன்றத்தில் தீர்க்கப்படா மல் உள்ளதால், அத்தொகுதியில் தற்போது இடைத் தேர்தல் நடைபெற வில்லை.

5. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், உள்ளாட்சித் தொகுதிகளிலிருந்து நிரப்பப்படவேண்டிய இருபத்தியொரு இடங்கள் காலியாக உள்ளன. உள் ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்தவுடன் மேற்படி காலி யிடங்களை நிரப்புவதற்கான தேர்தல்கள் நடத்தப்படும்.

6. இம்மானியக் கோரிக்கையின் கொள்கை குறித்து முக்கியமான விவரங் கள் மேலே தரப்பட்டுள்ளன. இதனையேற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மான்யக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்" என்பதன் கீழ் 1984-85-ம் ஆண்டில் கீழ்குறித்த இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ. 2,99,00,000 (அனுமதிக்கப்படவேண்டியது) ஆகும்.

215. எ தேர்தல்கள்—(திட்டத்தில் சேராதது)

| | ரூபாய் |
|---|---|
| (எ) தேர்தல் அதிகாரிகள் எ சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் | 39,15,000 |
| (பி) மேலவைத் தொகுதிகள் | 10,000 |
| (பி) வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுதல் | |
| (எ) சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் | 32,000 |
| (பி) மேலவைத் தொகுதிகள் | 3,000 |
| (சி) நாடாளுமன்ற மக்கள் அவைக்கும் மாநிலச் சட்ட மன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் அவற்றை நடத்துவதற்கான செலவுகள் | 3,01,000 |



| | |
|---|---|
| (டி) நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆகும் செலவுகள் | |
| (எ) இடைத் தேர்தல்கள் | 12,000 |
| (பி) நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல் | 2,55,33,000 |
| (இ) மாநிலச் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் நடத்து வதற்கான செலவுகள் | |
| (எ) மாநில சட்டமன்றப் பேரவை | 15,000 |
| (பி) சட்டமன்ற மேலவை | 10,000 |
| மொத்த ரூபாய் | 2,99,00,000 |

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்கு செலவு செய்யப்படுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

எ. தேர்தல் அதிகாரிகள் :

எ. சட்டமன்றப் பேரவை நாடாளுமன்றத் தொகுதிகள் :

மதிப்பீடு ரூ. 39,15,000.

தலைமைச் செயலகத்தில், பொதுத் (தேர்தல்கள்) துறைக்குத் தலைமை தேர்தல் அதிகாரியும் துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரியும் (துணைச் செயலாளர்) பொறுப்பு வகிக்கின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள், இன்னும் மற்ற பணியாளர்களும் நிலை யான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளியூர் பகுதிகளில் எல்லா மாவட்ட (சென்னை நீங்கலாக) ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், வட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தேர்தல் பதிவு அதிகாரிகளாகப் பொறுப்பு வகிக்கும் வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், சேலம், திருச்சிராப்பள்ளி நகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் மற்றும் கோயமுத்தூர், மதுரை மாநகராட்சிகளின் ஆணையர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனிப்ப தற்கென நிலையான அடிப்படையில் ஓர் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையர்

அலுவலகத்தில், தாசில்தார் ஒருவர், உதவியாளர் இருவர், தட்டச்சர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், சிற்றெழுத்தர் ஒருவர், அடிப்படை ஊழியர் ஒருவர் ஆகியோர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட நிலையான அலுவலர்கள், ஊழியர்களின் சம்பளச் செலவுகள் தவிர, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் பதிவு அதிகாரிகள், உதவித் தேர்தல் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் பயணச் செலவுகளும் இத் தலைப்பின்கீழ் அடங்கும். அவர்களின் அலுவலகச் செலவுகள், எதிர்பாராத செலவினங்கள், தபால், தந்தி, தொலைபேசிக் கட்டணங்கள், தேர்தல் சார்பான சிறப்புப் பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவையும் இக்கணக்குத் தலைப்பின்கீழ் அடங்கும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள செலவினங்களுக்காக நிதி ஒதுக்கம் தேவை. எனவே, மேற்குறித்த அளவில் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச் செலவினங்களில் ஐம்பது சதவீதத்தை மத்திய அரசு பகிர்ந்து கொள்ளுகிறது.

**எ.ஏ. தேர்தல் அதிகாரிகள்:**

**எபி. மேலவைத் தொகுதிகள் :**

**மதிப்பீடு : ரூ. 20,000.**

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அமைக்கும் பணிக்காகும் செலவுகளும், இதற்காக அவ்வப்போது நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் போன்றவையும் இத்தலைப்பின் கீழ் அடங்கும்.

சென்னை மாவட்டத்திலுள்ள மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தமான பணிகளைக் கவனிக்க, சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் ஓர் உதவியாளர் நிலையான அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் சம்பளம், படிகள் முதலியனவற்றிற்காக இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. 1984-85 நிதியாண்டில் மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தும் பணியை மேற்கொள்ள உத்தேசமேதுமில்லை. எனவே, மேற்குறித்த அளவில் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களை மாநில அரசே ஏற்றுக் கொள்ளுகிறது.



**எபி. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் :**

**எஎ. சட்டமன்றத் தொகுதிகள் :**

**மதிப்பீடு : ரூ. 32,000.**

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காகத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் சம்பளம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

தமிழ் நாட்டிலுள்ள 113 கிராமப்புற சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களும், இந்தியத் தேர்தல் ஆணைக்குழு பணித்தபடி 1983-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளை தகுதியேற்படுத்தும் நாளாக் கொண்டு, 1—4—1983 முதல் 1—11—1983 வரை தீவிரமாகத் திருத்தப்பட்டன. மீதியுள்ள 121 சட்டமன்ற பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள், 1984-ம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு, 20—10—1983 முதல் தீவிரமாகத் திருத்தப்பட்டன. 1983-ல் தீவிரமாகத் திருத்தப்பட்ட 113 கிராமப்புற தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களையும், 1984-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு சுருக்கமுறையில் திருத்த வேண்டுமெனவும் தேர்தல் ஆணைக்குழு பணித்தது. அச்சுருக்க முறை திருத்தப் பணியும் 20—10—1983 அன்று தொடங்கி முடிக்கப் பட்டுள்ளது. சென்னை மாநகரிலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் நீங்கலாக மற்றெல்லா தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களும் இறுதியாக பிப்ரவரித் திங்கள் 7-ம் நாள் வெளியிடப்பட்டன. சென்னை மாநகரில் உள்ளடங்கியுள்ள பதினொன்று தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் பிப்ரவரி திங்கள் 15-ம் நாள் இறுதியாக வெளியிடப்பட்டுள்ளன.

1984-85 நிதியாண்டில் வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் நடைபெறுவது பற்றி எந்த தகவலுமில்லை. எனினும் சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைக் காப்பதற்காக நிலையாக நியமிக்கப்பட்டுள்ள ஓர் உதவியாளர், ஒரு சிற்றெழுத்தர், ஆகியோரின் சம்பளச் செலவுகளுக்காக மேலே குறித்த அளவில் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது.

[1984 ஏப்ரல் 26

**ஏபி. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல் ;**

ஏஜி, மேலவைத் தொகுதிகள்.

மதிப்பீடு : ரூபாய் 2,000.

மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை அச்சிடுவதற்கான செலவுகள் மட்டும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். இதற்கான மொத்த செலவு களையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது நடப்பு நிதியாண்டில் மேலவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்துவதற்காக, இந்நாள் வரை திட்டம் ஏதுமில்லை. எனவே, அடையாள ஒதுக்கீடு மட்டுமே செய்யப் பட்டுள்ளது.

**ஏசி. நாடாளுமன்ற மக்கள் அவைக்கும், மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறுகையில் இவற்றை நடத்துவதற் கான செலவுகள் : மதிப்பீடு ரூ. 3,61,000.**

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன் கீழ் அடங்கும். 1980-ம் ஆண்டில் நாடாளுமன்றத்திற்கும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் தனித்தனியே பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. 1984-85 நிதியாண்டில் அதுபோல் ஒருங்கிணைந்த தேர்தல்கள் நடைபெறுவது பற்றி தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை. ஆனால் மாவட்டங்களில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள தனியார் கட்டிடங்களுக்கான வாடகை, அதற்கான காவலாளரின் சம்பளம், வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், பொதுத் (தேர்தல்) துறையில் உள்ள மோட்டார் காரின் பராமரிப்பு பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்கள் இதன் கீழ் அடங்கும். மேலும், 1984-ம் ஆண்டின் இறுதியில் நாடாளுமன்றத் திற்கான பொதுத்தேர்தல்கள் நடைபெறுங்கால் அப்போது வேட்பாளர் சின்னங்களுக்கான அச்சுக்கட்டைகள், வாக்குப் பெட்டிகள் போன்ற சில செலவினங்களை மேற்கொள்ளவும் இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் தேவைப் படுகிறது, இச்செலவினங்களில் ஐம்பது சதவீதத்தை மத்திய அரசு திருப்பித் தருகின்றது.



1984 ஏப்ரல் 26]

**ஏடி. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்.**

ஏஏ. இடைத் தேர்தல்கள்.

மதிப்பீடு : ரூ. 12,000.

நாடாளுமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றால், அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் அடங்கும். தற்சமயம், நாடாளுமன்றத் தொகுதிகள் ஏதும் இம்மாநிலத்தில் காலியாக இல்லை. எனவே, இத்தலைப்பின் கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

ஏபி. நாடாளுமன்றத் தேர்தல்கள்.

மதிப்பீடு ரூ. 2,55,33,000.

நாடாளுமன்றத்திற்குத் தனியே பொதுத்தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப்பெற்று பின்னர் மைய அரசினால் திருப்பித்தரப்படும்.

1980 ஆம் ஆண்டின் துவக்கத்தில் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே 1984-85 நிதியாண்டில்; 20—1—1985-க்குள் நாடாளுமன்றத்திற்கான அடுத்த பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டு புதிய மக்களவை அமைக்கப்படவேண்டும். எனவே, பொதுத் தேர்தல்களுக்காக நியமிக்கப்படும் தற்காலிக ஊழியர்களின் சம்பளம், பயணப்படி, அலுவலகச் செலவுகள், சிறப்பு ஊதியங்கள், மோட்டார் வாகனச் செலவுகள், எழுது பொருள்கள் வாங்கும் செலவு, வாக்குச் சீட்டுகள், பிற சிறு கையேடுகள், படிவங்கள் முதலியன அச்சிடும் செலவுகள் ஆகிய செலவினங்களுக்காக மேற்குறித்த அளவில் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மத்திய அரசே மேற்கொள்ளுகிறது.

**ஏஇ. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :**

ஏஏ. மாநிலச் சட்டமன்றப் பேரவை :

மதிப்பீடு : ரூபாய் 15,000

தனியாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத்தேர்தலோ இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் அடங்கும்.

சென்ற தடவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற்றது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத்தேர்தல் என்ற முறைப்படி அடுத்த பொதுத்தேர்தல் 1985-86 ஆம் நிதியாண்டில் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தற்பொழுது சட்டமன்றப் பேரவையில் சென்னை அண்ணா நகர், புரசைவாக்கம், உப்பிலியாபுரம், மாயவரம், தஞ்சாவூர் ஆகிய ஐந்து தொகுதிகளின் உறுப்பினர் பதவிகள் காலியாக உள்ளன. இவற்றுள் புரசைவாக்கம் தவிர மற்ற நான்கு சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலும் இடைத் தேர்தல் நடத்த இந்தியத் தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. 1984 மே திங்கள் 20-ம் நாளன்று இடைத் தேர்தல்கள் நடைபெறும். புரசைவாக்கம் தொகுதியிலிருந்து திரு. க. அன்பழகன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கொன்று நிலுவையில் உள்ளதால், அத்தொகுதியில் தேர்தல் நடத்த முடியாது.

தற்போது இக்கணக்குத் தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் மட்டுமே செய்திருந்தாலும் இடைத்தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கம், இவ்வாண்டின் திருத்திய மதிப்பீட்டிலும், இறுதி நிதி ஒதுக்கீட்டின் போதும் கோரிப்பெறப்படும்.

இச்செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசே மேற்கொள்ளுகிறது.

**எஇ. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவுகள் :**

**எபி. சட்டமன்ற மேலவை :**

**மதிப்பீடு : ரூபாய் 10,000.**

மேலவைத் தொகுதிகளுக்கு தேர்தல் நடக்கும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படுகின்றன.

மாநில சட்டமன்ற மேலவை கலைக்கப்படுவதில்லை. ஆனால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் 172(2)-வது பிரிவின்படி அவையின் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாண்டிற்கு ஒரு முறை பதவி ஓய்வு பெறுவர். உள்ளாட்சித் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய 21 இடங்கள் சட்டமன்ற மேலவையில் தற்பொழுது காலியாக உள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே மேற்படி தொகுதிகளிலிருந்து சட்டமன்ற மேலவைக்கு தேர்தல் நடத்தப்படும். மாநில அரசே இதன் மொத்தச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ளுகிறது.



தமிழ்நாடு அரசு

நிதி (ஓய்வூதியம்) துறை.

**கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.**

இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன :—

| | ரூ. |
|---|---|
| 266. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 43,21,88,000 |
| 288. சமூகப் பாதுகாப்பு நலனும் சமூகப் பாதுகாப்பு நலன் குறித்து ஏனைய திட்டங்கள். | 1,96,35,000 |
| | 45,18,23,000 |

அரசுப் பணியாளர்கள், மான்யம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், நகராட்சி பணியாளர்கள், முதலியோர் தொடர்பாக ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை அல்லது அவர்களுடைய குடும்பங்கள் தொடர்பாக குடும்ப ஓய்வூதியம் முதலியவை குறித்த செலவுகளை செய்வதற்காக இக்கோரிக்கை ஏற்பட்டுள்ளது.

**ஓய்வூதியம், இறப்பு-ஓய்வூதியப் பணிக்கொடை.**

தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் 1—7—1960 முதல் செயலுக்கு வந்தன. இந்த விதிகளின்படி 1—10—1979 வரை அரசுப் பணியாளர் ஒருவர் 25 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெற்றார். 25 ஆண்டுகளுக்கு மேல் அவர் தகுதிப்பணி புரிந்திருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு சராசரி ஊதியத்தில் 33/80 வரை அதிக ஓய்வூதியம்

வழங்கப்பட்டது. இந்திய அரசினரிடமிருந்து பெறப்பட்ட நடைமுறைக் கேற்ப, ஓய்வூதியம் கணக்கிடும் நடைமுறையை 1—10—1979 முதல் அரசு பின்வருமாறு மாற்றி அமைத்துள்ளது :—

| | | மாதாந்திர ஓய்வூதியம். |
|---|---|---|
| (1) | ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் சராசரி ஊதியத்தில் முதல் 1,000 ரூபாய் வரை. | 50 சதவீதம். |
| (2) | ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் சராசரி ஊதியத்தில் அடுத்த 500 ரூபாய் வரை. | 45 சதவீதம். |
| (3) | ஓய்வூதியத்திற்காகக் கணக்கிடப்படும் சராசரி ஊதியத்தில் சராசரி ஊதியத்தில் எஞ்சிய தொகைக்கு. | 40 சதவீதம். |

ஓய்வு பெறும் வயது 55 ஆண்டுகள் என்பதிலிருந்து 58 ஆண்டுகள் உயர்த்தப்பட்டதைக் கருத்தில் கொண்டு. மேற்சொன்னபடி நிலைகளில் அடிப் படையில் கணக்கிடப்படும் ஓய்வூதியம், உயர்ந்த அளவு பணிக்கால அளவான 33 ஆண்டுக்குத் தொடர்புடையதாயிருக்கும்.

20 ஆண்டுகளே பணிபுரிந்தாலும் ஓய்வுக்கால கூடுதல் நன்மைகளுடன் அரசுப் பணியாளர்கள் தாங்களாகவே ஓய்வு பெற அரசு அனுமதி வழங்கி யுள்ளது. உயரளவு 5 ஆண்டுகள் வரையில் ஓய்வூதியக் கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறாக, அரசுப் பணியாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து தாமாகவே ஓய்வுபெற்றால், அவர்களும் நிதித்துறை யின் (ஓய்வூதியம்) 2—2—1980 நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் குறிப் பிடப்பட்ட விதங்களில் ஓய்வூதியம் பெறுவர். இத்துடன், முடிவு பெற்ற ஒவ்வோர் ஆறுமாதப் பணிக்கும் ஊதியத்தில் ¼ பங்கு என்ற விதத்தில் இறப்பு ஓய்வூதியப் பணிக்கொடையும் அனுமதிக்கப்படுகிறது. இது ஊதியத் தில் 16½ மடங்கு என்ற உயரளவிற்கு உட்பட்டதாகும். மேலும் உயரளவு பணிக்கொடை ரூ. 30,000 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. 31—5—1982 முதல் இவ்வுயரளவு பணிக்கொடை ரூ. 36,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1—10—1979-க்கு முன்னர் ஓய்வு பெற்ற எல்லா அரசு ஊழியர்களுக்கும் அவர்கள் பெற்றுவந்த ஓய்வூதியத்திற்கான தளர்த்தப்பட்ட ஓய்வூதிய நடை முறை கணக்கின்படி மாற்றியமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.



1—4—1978-க்கு முன்னர், ஓய்வுபெற்ற அரசுப் பணியாளர் ஒருவரின் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயாக இருந்தது. தமிழ்நாடு மூன்றாவது சம்பளக்குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில் 1—4—1978 முதல் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் 1—4—1982 முதல் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்களுக்குக் கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்படும் போதெல்லாம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அவ்வப்போது கூடுதல் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. 1—11—1983-லிருந்து வழங்கப்படும் ஒட்டுமொத்தமாக அகவிலைப்படி விதம் 66 ரூபாயிலிருந்து 248 ரூபாய் வரை உள்ளது.

ஓய்வூதியத்தொகை மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலமாக அரசுச் செலவில் அனுப்பப்படுகிறது. மேற்படி தொகை 300 ரூபாய்க்கு மேற்பட்டால், அவரவர் விரும்புகிற வங்கி மூலமாக அனுப்பப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் சில மருத்துவச் சலுகைகள் பெறவும் தகுதி யுடையவர் ஆவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற உயரளவிற்குட் பட்டு ஆண்டு ஓய்வூதியத்தில் 10 சதவீதமாகும்.

மாதம் ஒன்றுக்கு 750 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்கள் பண்டிகை முன்பணம் ஒரு மாதம் ஓய்வூதியம் அல்லது ரூபாய் 100 இதில் எது குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

28—2—1978 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, தங்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிக் கொடுக்க வேண்டும் என அவர்கள் ஓய்வுபெற்ற நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பித்துக் கொண்டால், மருத்துவச் சோதனை இன்றியே அவர்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதி அவர்களுக்கு மொத்தமாக்கிக் கொடுப்பது அனுமதிக்கப்பட்டு வருகிறது. தாமாகவே முன் வந்து ஓய்வுபெற்று, தங்களுடைய ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்த மாக்கிக் கொடுக்க வேண்டுமென தாம் ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஓராண்டுக் கால அளவிற்குள் விண்ணப்பித்துக் கொண்டால், அவர்களுக்கும் இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. 1—4—1981 முதல் ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவு பெற்றவுடன் அவர்கள் ஓய்வூதியத் தொகையில் முன்பு ஒரு பகுதியை மொத்த மாகப் பெற்றுக் கொண்டதை முழுமையாக்கி முழு ஓய்வூதியம் பெற ஆணை பிறப்பித்துள்ளது.

குடும்ப ஓய்வூதியம்.

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர் இறக்கும்போது ஓராண்டு காலமாவது பணியாற்றியிருக்கவேண்டும். அலுவலர் இறக்கும்போது அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அவர் பெற்று வந்த சம்பளத்தின் அடிப்படையில் இந்த குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இறந்த அலுவலரின் மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். அவர் இறந்த பிறகுகூட உரிய வயதடையாத அவரது குழந்தைகளுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படும். 1—4—1979-க்கு முன்னர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வராத குடும்பங்கள் அனைத்திற்கும் 1—4—1979-லிருந்து அத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வூதியம் கணக்கிடும் அளவை, அலுவலர் ஓய்வுபெறும் நாளில் கடைசியாக பெற்று வந்த சம்பளத்தில் 30 சதவிகிதமாக மேலே குறிப்பிட்ட நாளிலிருந்து மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. இந்த குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-லிருந்து ரூ. 125 ஆக 1—4—1982 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள விதிகளின்படி, தொடர்ந்து ஏழாண்டுகளுக்கு குறையாமல் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போது இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்திற்கு அவர் இறந்த பிறகு ஏழாண்டுக் காலம் அவர் உயிருடன் இருந்திருந்தால் ஆண்டு முதிர்வு காரணமாக அவர் ஓய்வு பெற்றிருக்கலாம் நாள் இவற்றில் எது குறைவோ அக்காலம் வரையில் அதிக வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். அரசுப் பணியாளர் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி, அனுமதிக்கத்தக்க குடும்ப ஓய்வூதியத்தைப் போல் இரு மடங்கு இவற்றில் எது குறைவோ அத்தொகை குடும்ப ஓய்வூதியத்தொகையாக இருக்கும். முன்பு உயர்த்தப்பட்ட உயரளவு குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 300 ஆகும். தமிழ்நாடு மூன்றாவது சம்பளக்குழு பரிந்துரைத்த அடிப்படையில் 1—4—1979-லிருந்து அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 500 என்னும் வரம்புக்குட்பட்டு பணியாளர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவீதமாக இருக்கிறது. உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், பணியிலிருக்கும்போது இறந்த நாளுக்குப் பிறகு ஏழாண்டுக்கால அளவு, ஆண்டு முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றிருக்கலாகும் நாள் இவற்றுள் எது குறைவோ அதுவரையில் அனுமதிக்கப்படும்.

குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து அளிக்கும் சலுகை, அரசுப் பணியாளரின் மகன்கள், திருமணமாகாத மகள்கள் முறையே 18, 21 வயது அடைகின்ற வரையில் என்பதற்குப் பதிலாக, 21, 24 வயது அடைகின்ற வரையில் அவர்களுக்கு அளிக்கப்படலாமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.



ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

தனியார் (மான்யம் பெறும், உள்ளாட்சி மன்றம்) பள்ளிகளிலிருந்து 1—6—1970-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் மான்யம் பெறும் பள்ளிகளிலிருந்து 1—4—1972-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வுப்பெற்ற ஆசிரியல்லாத பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்துகிற தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் பொருந்தும். குறிப்பிட்ட பல்வேறு தேதிகளுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வுப்பெற்ற ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு நிகராக ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை அவர்கள் பெறுகின்றனர்; ஓய்வூதியத்திற்கு இறுதி அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், தற்காலிக ஓய்வூதியம், பணிக்கொடையும் பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

தனியார் (உள்ளாட்சி மன்றத் தனிப்பட்ட) கல்வி நிறுவனப் பணியாளர்களுக்குக் குறிப்பிட்ட பல்வேறு தேதியிலிருந்து குடும்ப ஓய்வூதிய நன்மைகள் அனுமதிக்கப்பட்டன; அதாவது, தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு 1—4—1962-லிருந்தும், தனியார், பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1—4—1972-லிருந்தும் இந்த நன்மைகள் வழங்கப்பட்டன. குடும்ப ஓய்வூதியம் குறித்த நிர்ணயிக்கப்பட்ட தேதிகளுக்கு முற்பட்ட நேர்வுகளிலும் குடும்ப ஓய்வூதிய நன்மைகள் வழங்குவதற்கு 13—3—1980-ல் அரசு ஆணை பிறப்பித்தது.

நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்.

14—1—1970-க்கு முன்னர் ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 தனி ஓய்வூதியம் பெற்று வந்தனர். இந்த ஓய்வூதியத்தை அரசு 16—4—1980-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 ஆக உயர்த்தியுள்ளது. இது மேலும் 1—4—1982 முதல், 125 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வரும் அகவிலைப் படியினையும் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம்—கோரிக்கை எண் 43 பல்வகை-கடல் கடந்த நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும், குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர்தணிப்பும், மறுவாழ்வும்.

பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம் ஆகிய மூன்று நாடுகளிலிருந்து இந்திய வம்சா வழியினர் இந்தியாவிற்கு திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். இந்தியாவும், இலங்கையும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை

யிலிருந்து வருகின்றனர். பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து தொடர்சியாக குடும்பங்கள் வருவதில்லை. குறைந்த அளவில் அவ்வப்போது வருகின்றனர். அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தேசிய பொறுப்பாக இருப்பதால், கடன் கள், மானியங்கள் என்ற முறையில் அதற்காகும் அனைத்துச் செலவுகளையும், மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசின் சார்பாக மாநில அரசு, அதனைச் செயல்படுத்தும் ஒரு அமைப்பாகவே உள்ளது. மறுவாழ்வுத் துறை இயக்குநர், இந்தியாவிற்கு திரும்புபவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடு களைக் கவனிப்பதோடு, இந்தியாவிற்குத் திரும்புபவர்களுக்காகத் தயாரிக்கப் படும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார். இப்பணிகளைக் கவனிக்க மறுவாழ்வுத்துறையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் உள்ளனர் :—

| | ஏ பிரிவு | பி பிரிவு | சி பிரிவு | டி பிரிவு |
|---|---|---|---|---|
| 1 தலைமையக அலுவலர்கள் | 3 | 4 | 55 | 19 |
| 2 மாவட்ட அலுவலர்கள் | 2 | 27 | 146 | 50 |
| மொத்தம் | 5 | 31 | 201 | 69 |

**பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு திரும்புவோர் :**

பர்மா தன் வணிகத்தை நாட்டுடமை ஆக்கியது. அயல் நாட்டினர்கள் மீது சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது. பர்மா அரசின் இத்தகைய கொள்கையினைத் தொடர்ந்து இந்திய மக்களின் வழி வந்தோர் அதிக அளவில் இந்தியாவிற்கு 1—6—1963 முதல் திரும்பி வந்தனர். 31—1—1984 வரை தமிழ், பீகாரி, தெலுங்கு மொழியினத்தவர்கள் சுமார் 2,07,693 பேர்கள் கப்பல் விமானம் மூலமாக பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர் களில் தமிழினத்தவர்களான 1,44,269 பேர்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளன [illegible] 43,419 குடும்பங்களுக்கும் தொடக்க மறுவாழ்வு உதவிகள் அளிக்கப் பட்டுள்ளன. 1974-க்குப் பிறகு கப்பல் வழியாக இந்தியாவிற்கு எவரும் வர [illegible]. 1974 ஆம் ஆண்டிற்குப் பிறகு 266 குடும்பங்களைச் சேர்ந்த 827 [illegible] விமானம் மூலம் கல்கத்தா வழியாக 31—1—1984 முடிய வந்துள்ள



**ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு திரும்பியவர்கள்**

ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வந்த இந்திய மக்களின் வழி வந்தவர்களில் நாடற்றவர்கள் என்று கூறப்படுகின்றன 9.75 இலட்சம் நபர்களின் எதிர்கால வாழ்விடம் பற்றிய பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமருக்கும், ஸ்ரீலங்கா பிரதமருக்கும் இடையே 1964 ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதி ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன்படி, இந்திய அரசு, மேற்கூறிய மக்களில் 5.25 இலட்சம் நபர்களையும் அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளையும் ஏற்றுக் கொண்டு, குடியுரிமை அளிக்க ஒப்புக் கொண்டது. ஸ்ரீலங்கா அரசு மேற்கூறிய மக்களில் 3 இலட்சம் நபர்களையும் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளையும் ஏற்றுக் கொண்டு குடியுரிமை வழங்க ஒப்புக் கொண்டது. 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வொப்பந்தம் சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தம் என்றழைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி, அன்று நாடற்றவர்களாய் எஞ்சியிருந்த 1.5 இலட்சம் நபர்களின் எதிர்கால வாழ்விடம் பின்னர் ஒரு நாளில் முடிவு செய்யப்படவேண்டும் எனவும் வகை செய்யப்பட்டிருந்தது. 1974 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், ஸ்ரீலங்காப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டார நாயகாவும் எஞ்சியுள்ள நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்குவது பற்றிய இரண்டாவது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதன்படி, குடி யுரிமை வழங்குவதுபற்றி பின்னால் முடிவு செய்வதாக இருந்த 1.5 இலட்சம் பேர்களில் ஒரு பாதிப்பேருக்கு இந்தியாவும், மறுபாதிப் பேருக்கு ஸ்ரீலங்காவும் குடியுரிமை வழங்குவதென ஒப்புக்கொண்டு வகை செய்யப்பட்டது. அதாவது இந்தியா 75,000 பேருக்கும், ஸ்ரீலங்கா 75,000 பேருக்கும் குடியுரிமை வழங்கு வது என ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும், 1964 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தில் ஆண்டுதோறும் 35,000 பேரை ஸ்ரீலங்காவிலிருந்து தாயகத்திற்கு (இந்தியா வுக்கு) திருப்பி அனுப்புவதென ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. திருப்பி யனுப்பப்படுபவர்களை விரைவாகத் திருப்பியனுப்பி வைக்கும் பொருட்டு அந்த எண்ணிக்கையை ஆண்டுதோறும் 10 சதவீதம் படிப்படியாக உயர்த்துவ தென்றும் இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தத்தின்படி அவர்களைத் தாயகத்திற்குத் திருப்பியனுப்பும் பணி 1981-ல் முடிவுற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 30—10—1981-ல் ஒப்பந்தக் காலம் முடிவுற்றது.

இவ்வாறாகக் கணக்கிடப்பட்டவர்கள் மொத்தம் ஆறு இலட்சம் பேர் (அதாவது, இரண்டு ஒப்பந்தங்களிலும் கணக்கிடப்பட்டவர்கள்) ஸ்ரீலங்காவி லிருந்து இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படவுள்ளனர். ஆனால், இந்த ஆறு இலட்சம் பேரும், அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளும், சேர்ந்த தொகையில், தாயகம் திரும்ப வகை செய்துள்ளதைக் கணக்கில் கொண்டு

பார்த்தால், மொத்தத்தில் தாயகம் திரும்பிவர இருப்பவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 8.00 இலட்சம் ஆக இருக்கலாம். 1984 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் தேதி வரையில் 4,29,367 பேர்கள் அடங்கிய 1,07,850 குடும்பங்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்புகின்றவர்கள் தங்களுக்குச் சொந்தமான உடைமைகள், சொந்த நகைகள் ஆகியவற்றை, ரூபாய் 16,000 வரைக்கும் வர்த்தக இருப்பினை ரூபாய் 16,000 வரைக்கும் சுங்கவரிக் கட்டாமல் தங்களுடன் கொண்டுவர அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள், இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு முதலில் தேநீரும், பின்பு ஒருவேளை சாப்பாடும், இலவசமாக வழங்கப்படுகின்றன. இராமேஸ்வரம் துறைமுகத்தில் மறுவாழ்வுத்துறைப் பணியாளர்கள் இவர்களைக் குறித்த புள்ளி விவரக் கணக்குகளை எடுக்கின்றனர். சுங்கப் பரிசோதனை முடிந்த பின்னர், ரூபாய் 10,000-க்குக் குறைவாகக் கொண்டு வந்திருந்த குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்லலாம். அங்கிருந்து அவர்கள் பல்வேறு திட்டங்களில் சேருவதற்கு அனுப்பிவைக்கப் படுவர். அல்லது கண்டி உதவித் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர், அவர்களுடைய குடும்ப அட்டைகளில் பரிந்துரை செய்துள்ளவாறு வணிகக் கடன்கள் அங்கு அவர்களுக்கு வழங்கப்படும். ரூபாய் 5,000-க்குக் குறைவாகக் கொண்டு வருகின்ற குடும்பங்களுக்கு அவர்கள் இடைத்தங்கல் முகாமில் சேர்க்கப்பட்டதும் அதிக பட்சம் மூன்று மாத காலத்திற்கு குடும்பத்தின் அளவிற்கேற்ப மாதம் ஒன்றுக்கு ரூபாய் 110 முதல் ரூபாய் 357.50 வரை ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், குறைந்த விலையில், அதாவது ஒரு கிலோ அரிசி 57 காசு விதம் வரையறுக்கப்பட்ட அளவுக்கு அரிசி அவர்களுக்கு வழங்கப்படுகிறது, அங்கே அவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. மத்திய அரசு இந்தியாவிற்கு திரும்புவோருக்கு உதவியளிக்க வகுத்துள்ள திட்ட விதிகளின் கீழ் தாயகம் திரும்புவோர்களில் ரூபாய் 10,000-க்குக் குறைவாகச் சொத்துக்களைக் கொண்டு வருகின்றவர்களுக்கு நிலையான மறுவாழ்வு உதவி அளிக்கப்பட வேண்டும்.

பொதுவாக தாயகம் திரும்பி வருவோர்களில் 90 சதவிகித குடும்பத்தினர் அரசின் உதவியைப் பெறும் தகுதி உடையவராக உள்ளனர். 31—1—1984 வரை மொத்தம் 1,07,850 குடும்பங்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ளன. இவற்றுள் 83,690 குடும்பங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளன. 4,573 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய மாநிலங்களில், அதாவது கேரளம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், அந்தமான், நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.



விவசாய நிலக் காலனித் திட்டம்:

பர்மா மற்றும் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களில் விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களும், அக்குடும்பத்தில் இத்தொழிலில் ஈடுபடத் தகுதியுள்ள இரு நபர்கள் உள்ள குடும்பங்களுக்கும், அதே சமயம் சொந்த நிலமற்றவர்களாக உள்ள குடும்பங்கள், மட்டும் நிலக் காலனித் திட்டத்தில் அமர்த்தப்படுகின்றனர். உயர்ந்த பட்சம் மூன்று ஏக்கர் வரையில் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. இந்த நிலம் மாநில அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் நிலங்களை தாயகம் திரும்பியோர் தக்க முறையில் விவசாயம் செய்ய அதற்காக மத்திய அரசால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விவசாயக் கடனாக ரூபாய் 6,850-ம் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகை, நிலத்தை சீர்படுத்தவும், பாசனக் கிணறு வெட்டவும், உழவு மாடுகள் வாங்கவும், விவசாயக் கருவிகள் வாங்கவும் வழங்கப்படுகிறது.

இவர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தில் விவசாயம் செய்து, அறுவடை செய்து மகசூல் கிடைக்கும் காலம் வரைக்கும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் பராமரிப்புப்படி மாதம் ஒன்றுக்கு ரூபாய் 40 முதல் ரூபாய் 150 வரையில் குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வழங்கப்படுகிறது. இத்தொகை 21 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. முதல் 9 மாதங்களுக்கு வழங்கப்படும் தொகை முழு மானியமாகவும், மீதி ஒரு வருட காலத்திற்கு வழங்கப்படும் தொகையில் பாதி மானியமாகவும், மீதி பாதி கடனாகவும் வழங்கப்படுகிறது.

இதைத் தவிர இத் திட்டத்தில் அமர்த்தப்படும் எல்லோருக்கும், வீடு கட்டகடனும், இவர்கள் இதர தொழில் செய்ய வண்டிமாடும், கோழிப்பண்ணை வைக்கவும், காய்கறித் தோட்டப்பயிர் செய்யவும் கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகை எட்டு ஆண்டுத் தவணைகளில் திருப்பி செலுத்தக்கூடியதாகும்.

இம்மாதிரியான திட்டம் ஒன்றை 1982-83 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கூக்கல் கிராமத்தில், 360 ஏக்கர் நிலப்பரப்பில், ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் 180 குடும்பங்களை இத்திட்டத்தில் குடியமர்த்த திட்டம் மேற்கொள்ளப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவு ரூபாய் 44.58 இலட்சம் ஆகும். இதுவரையில் இத்திட்டத்தில் 117 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீதி குடும்பங்கள் 63-ம், 1984-85 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்படுவர்.

சொந்தமாக விவசாய நிலம் வாங்கும் திட்டம்:

(1) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்கள் அவர்களின் சொத்துக்கள் ரூபாய் 5,000-க்கு மேற்படாத வகையில் இருந்தால் அவர்கள் விரும்பியபடி அவர்களுக்கும். பட்டா நிலங்களையும் கிரயம் பெறவும், இதன்

அளவு மூன்று ஏக்கர் மேற்படாமலும், ஏக்கர் 1-க்கு ரூபாய் 2,000 வரை மதிப்புள்ள நிலங்களை கிரையம் பெறவும் கடன் வழங்கப்பட்டு குடியமர்த்தப்படுகின்றனர். இவர்களுக்கும், விவசாயம் செய்வதற்குரிய பல்வகைக் கடன்களும் வழங்கப்படுவதுடன், பராமரிப்புப்படியும், இதர தொழில் செய்யவும் நிலக் காலனித் திட்டத்தில் அமர்த்தப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படுகிறது. இச்சலுகைகள் எல்லாமே, இவர்கள் கொண்டு வரும் சொத்தின் மதிப்பு ரூபாய் 5,000-க்கு மேற்படாத வகையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது. இவர்களுக்கும் வீடு கட்ட கடன் பெற தகுதியுண்டு.

(2) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் சொத்து ரூபாய் 5,000-க்கு மேற்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் மூன்று ஏக்கருக்கு குறைவாக சொந்தமாக நிலம் வைத்திருந்தாலும் அவர்களுக்கு மொத்தத்தில் 3.00 ஏக்கர் நிலம் உடைமை பெற, தனிப்பட்டவர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு நில மதிப்பீடு ரூபாய் 2.000 வீதம் கிரையம் பெற்றுக்கொள்ளவும், விவசாயக் கடன் வழங்கப்படுகிறது. இதுபோல் அமர்த்தப்படும் குடும்பங்களுக்கும் மேலே தெரிவித்தபடி விவசாயம் செய்யவும் கடன் பெற வசதி உண்டு.

தேயிலைத் தோட்டங்களில் குடியமர்த்தும் திட்டம் :

நீலகிரி மாவட்டத்திலே இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களை தேயிலைத் தோட்டப் பயிர் தொழிலில் குடியமர்த்த பின்வரும் மூன்று திட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

| திட்ட எண். (1) | பரப்பளவு, (2) | குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்கள். (3) |
|---|---|---|
| திட்டம் ஒன்றுக்கு | 3,750 ஏக்கர் | 1,875 |
| திட்டம் இரண்டு | 1,500 ஏக்கர் | 750 |
| திட்டம் மூன்று | 2,500 ஏக்கர் | 1,250 |

திட்டம் ஒன்று :

இந்தத் திட்டம் 1982-83 ஆம் ஆண்டுடன் செயல்படுத்தி முடிக்கப் பெற்றுள்ளது.

திட்டம் இரண்டு :

மொத்தம் 750 குடும்பங்களில், 450 குடும்பங்கள் இதுவரை குடியமர்த்தப் பட்டுள்ளன. மீதமுள்ள 300 குடும்பங்களை அடுத்த மூன்று ஆண்டுகளில் குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.



திட்டம் மூன்று :

1982-83-ல் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. திட்டத்தில் குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்கள் பற்றி அரசு ஆலோசனையில் இருக்கிறது.

கன்னியாகுமரி இரப்பர் தோட்டம் :

கன்னியாகுமரி மாவட்டத்தில் 800 ஹெக்டர் பரப்பளவில் இரப்பர் தோட்டப் பயிர் செய்யும் திட்டம் செயல்முறையில் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் மொத்தம் 285 தாயகம் திரும்பியோர் குடியேற்றப்பட்டுள்ளனர்.

வீட்டு வசதிக் கடன் வழங்கும் திட்டம் :

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்காக வீட்டுவசதி கடன் ரூ. 3,000-லிருந்து ரூபாய் 4,000 வரை கிராமப்புறத்திலும் ரூ. 6,000-லிருந்து ரூ. 8,000 வரை நகர்புறத்திலும் 7-7-1982 முதல் உயர்த்தி வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் :

(1) சுமார் 1,000 தாயகம் திரும்பியோருக்கு வணிகக் கடனாக ரூ. 5,000-மும், வியாபாரத்திற்கு கட்டிடம் கட்ட ரூ. 1,000-மும் மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் வழங்கி தேசிய நூற்பாலை நிறுவனத்தின் விற்பனையாளர்களாக அமர்த்தப்படும் ஒரு புதிய வேலை வாய்ப்புத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 109 நபர்கள் தேசிய நூற்பாலை நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக, தாயகம் திரும்புவோர் நடத்தும் தேசிய நூற்பாலை கடைகளில் விலை கட்டுப்பாட்டின் கீழ் வழங்கப்படும் துணிகளையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

(2) மற்றும், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், மறுவாழ்வு திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வணிகக்கடன் ரூ. 5,000 தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலமாக பெற்று பயன் அடையும் திட்டமொன்றும் 1979-80 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் சிக்கம்பட்டி கிராமத்தில் பால் பண்ணை திட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் 18 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. இது போன்ற திட்டத்தில் சேலம் மாவட்டத்தில் பி. நாட்டமங்கலம் கிராமத்தில் 52 குடும்பங்கள் குடியமர்த்தப்படும், திருச்செங்கோட்டில் 14 குடும்பங்களும், சென்னையில் மின்விசை சைக்கிள் ரிக்ஷா திட்டத்தின் கீழ் 7 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

[1984 ஏப்ரல் 26

தமிழ்நாட்டில் பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்களின்கீழ் குடியமர்த்தப்பட்டுள்ள 83,690 குடும்பங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| திட்டங்கள். | குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| நீலகிரி தேயிலை மலைத் தோட்டம் | 2,326 |
| கன்னியாகுமரி இரப்பர் மலைத்தோட்டம் | 285 |
| ஆனைமலை சின்கோனா மலைத்தோட்டம் | 325 |
| அரசு பண்ணைக் கழகம் | 721 |
| நிலக்குடியேற்றத் திட்டம் | 3,161 |
| கூட்டுறவு நூற்பாலை | 2,710 |
| வியாபாரக் கடன் | 70,439 |
| தாயகம் திரும்பியோர் வங்கியின் திட்டம் | 4,818 |
| விவசாய நிலம் வாங்க கடன் | 140 |
| சுய வேலைவாய்ப்பு (தேசிய நூற்பாலை நிறுவனம் மற்றும் பால்பண்ணை) | |
| கைக்கல் விவசாயத் திட்டம் | 117 |
| மொத்தம் | 83,690 |

**வியட்நாமிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பியவர்கள் :**

பர்மாவிலிருந்தும், ஸ்ரீலங்காவிலிருந்தும் இந்தியாவிற்கு திரும்புவோர் தவிர, வியட்நாமிலிருந்து இந்திய மக்களின் வழி வந்தவர்களும் அவர்களுடைய உறவினர்களுமான 2,055 பேர்கள் அடங்கிய 501 குடும்பங்கள் 1975 ஆம் ஆண்டிலிருந்து வந்துள்ளன. இவற்றுள் 316 குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடும்பங்கள் ஏனைய மாநிலங்களில், பெரும்பாலும் மத்திய அரசு நேரடி ஆட்சிக்குட்பட்ட பாண்டிச்சேரியில் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1975 ஆம் ஆண்டு ஜூலை முதற்கொண்டு வியட்நாமிலிருந்து இந்தியாவிற்கு திரும்புகிறவர்கள் பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு திரும்புகிறவர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற வியாபார, வீட்டுவசதி ஆகியவற்றிற்கான நிவாரண உதவி கடன்கள் பெறத் தகுதியுடையவர் ஆவர்.



1984 ஏப்ரல் 26]

**1984-85 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள் :**

வருகிற ஆண்டில் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோரை குடியமர்த்த 23-க்கும் மேற்பட்ட பல்வகைப்பட்ட புதிய திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்த புதிய திட்டங்களில் மட்டுமே 2,000-க்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தொழில் திட்டங்கள் :**

1. மருத்துவ பஞ்சு தயாரிக்கும் கூட்டுறவு தொழிற்சங்கம், குன்றக்குடி.

2. பிளாஸ்டர் ஆப் பாரீஸ் தயாரிக்கும் கூட்டுறவு தொழிற்சங்கம், குன்றக்குடி.

3. முந்திரி பருப்பு பக்குவப்படுத்தும் கூட்டுறவு தொழிற்சங்கம், பிரான்மலை.

4. முந்திரி பருப்பு பக்குவப்படுத்தும் கூட்டுறவு தொழிற்சங்கம், திருக்கோலக்குடி.

5. நேருஜீ பாலித்தீன் கூட்டுறவு தொழிற் சங்கம், (விரிவு) குன்றக்குடி.

6. பாரதி குளோரைட் கூட்டுறவு தொழிற் சங்கம், (விரிவு) குன்றக்குடி.

7. நாராயண அம்மாள்புரம் பெரிய தொழில் திட்டம், திருநெல்வேலி.

8. ஸ்பிளிண்ட்ஸ் மற்றும் வெணிர் கூட்டுறவு தொழிற் சங்கம், சாத்தூர்.

9. கோவில்பட்டி தீப்பெட்டி தொழிற்சாலையில் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோரை வேலையில் அமர்த்தும் திட்டம்.

10. சாத்தூர் தீப்பெட்டி தொழிற்சாலையில் பயிற்சி.

11. கோவில்பட்டி தீப்பெட்டி தொழிற்சாலையில் பயிற்சி மற்றும் பால்பண்ணைத் திட்டம்.

**நிலக்குடியேற்றம் :**

12. பூம்பாறை நிலக்குடியேற்றத் திட்டம், கோடைக்கானல் வட்டம், மதுரை மாவட்டம்.

13. குன்றக்குடி நிலக்குடியேற்றத் திட்டம்.

14. சோலையார் அணைக்கட்டு நிலக்குடியேற்றத் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

**பால்பண்ணைத் திட்டங்கள் :**

15. குன்றக்குடி பால்பண்ணைத் திட்டம்.

16. குலவாணிகபுரம் பால்பண்ணைத் திட்டம்.

17. கீழநாராயணபுரம் பால்பண்ணைத் திட்டம்.

18. சிறுமலை பால்பண்ணைத் திட்டம்

**நூற்பாலைகள் :**

19. சிறிய கூட்டுறவு நூற்பாலை, குன்றக்குடி.

20. சத்திரப்பட்டி மின்தறி மற்றும் பால்பண்ணையில் வேலையில் அமர்த்தும் திட்டம்.

**பெட்டிக்கடைகள் :**

21. தமிழ்நாட்டில் நகராட்சிகளில் பெட்டிக்கடைகள் வைத்துக் கொடுக்கும் திட்டம்.

22. சென்னை மாநகராட்சியில் பெட்டிக் கடைகள் வைத்துக் கொடுக்கும் திட்டம்.

23. பட்டுப்பூச்சி வளர்ப்பு திட்டம், குன்றக்குடி.

செங்கற்பட்டு மாவட்டம், செங்கற்பட்டு தாலுக்கா, தாழம்பூர் கிராமத்தில் நிறைவேற்றப்பட இருக்கும் "ரிச்சல்" திட்டம் :—

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களை குடியமர்த்தும் பொருட்டு, செங்கற்பட்டு மாவட்டம், தாழம்பூர் மற்றும் பொன்மார் கிராமங்களில் காலியாக இருக்கும் சுமார் 150 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களை சென்னை தொழில் நுட்பக் கல்லூரியினரால் நாராயணபுரத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கிராம வளர்ச்சி திட்ட அடிப்படையில், உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை கிண்டியிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் பல தொழில் அதிபர்களுடன் கலந்து ஆலோசித்து இதற்கு ஒரு திட்டம் தயாரித்து அனுப்பியுள்ளார். அத்துடன் திட்டத்தின் முதல் ஆண்டான 1983-84-க்கு 100 தாயகம் திரும்பிய குடும்பங்களைக் குடியமர்த்த ரூபாய் 6 இலட்சம் செலவு பிடிக்கும் ஒரு திட்ட அறிக்கையும் அனுப்பியுள்ளார். 1984-85-ல் [illegible] குடும்பங்களை குடியமர்த்த [illegible]ப்பட்டுள்ளது.



மற்ற நடைமுறை வழிகள் முடிவு செய்யப்படுவதை எதிர்பார்த்து, இந்த நிலங்களில் பிரவேசித்து திட்ட அமல் ஏற்பாடுகளைச் செய்ய தொழில் நுட்பக்கல்லூரி இயக்குநருக்கு அனுமதி அளித்து மாநில அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. நிலங்களும் ஒப்படைக்கப்பட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இந்த திட்டத்தில் பலவகைப்பட்ட தொழில் துறை மற்றும் விவசாயம் சம்பந்தப்பட்ட மையங்கள் நிறுவப்பட்டு அவைகளில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்குப் பயிற்சியும் வேலை வாய்ப்பும் அளித்து நிரந்தரமாகக் குடியமர்த்தப்படுவர். நல்ல "லே அவுட்" அடிப்படையில் எல்லா அடிப்படை வசதிகளும் கொண்ட ஒரு நவீன வீட்டு குடியமைப்புத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

மேற்கண்ட புதிய திட்டங்களை தவிர, ஏற்கனவே திட்டமிட்டபடி கதர் மற்றும் கிராமத்தொழில் திட்டத்தின் கீழ் செக்கு எண்ணெய், வாசனை சோப்பு, தீப்பெட்டித் தொழில், சாயம் போடுதல், மற்றும் அச்சுவேலை, பாலியஸ்டர் கதர் ஆலை ஆகிய தொழில்களில் சுமார் 2,000 குடும்பங்களை குடியமர்த்தும் திட்டம் மத்திய அரசின் உத்திரவு பெற்றவுடன் செயல்படுத்தப்படும்.

**பாலியஸ்டர் கதர் ஆலைத் தொழில்கள் :**

தாயகம் திரும்பியோரில் ஒரு குடும்பத்திற்கு 2 நபர்கள் வீதம் 240 குடும்பங்களிலுள்ள 480 நபர்களை குடியமர்த்தி வேலை வாய்ப்பளிக்கும் எண்ணத்துடன் நான்கு பாலியஸ்டர் கதர் நூற்பாலைகள் தொடங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 78 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்பாலைக்கும் ரூ. 5.71 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாலிவஸ்த்ரா ஆலையும் 120 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திறன் கொண்டது. ஒரு குடும்பத்திற்கு 2 நபர்கள் வீதம் 60 குடும்பங்களுக்கு ஒவ்வொரு ஆலையிலும் வேலை வாய்ப்பு அளிக்கலாம். தாயகம் திரும்பியோர் இத்திட்டத்தின் கீழ் வேலை பெறுவதற்கு முன்பு அவர்களுக்கு [illegible] மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும்.

**கனரக வண்டி மெகானிக், ஓட்டுநர் பயிற்சி நிலையம், கும்மிடிப்பூண்டி :**

உத்திர பிரதேசத்தில் மானாவில் செயல்பட்டு வந்த கனரக வண்டிகள் மெகானிக் ஓட்டுநர் பயிற்சி நிலையம், கும்மிடிப்பூண்டி இடைத்தங்கல் முகாம் பகுதிக்கு 1978-ல் மாற்றப்பட்டது.

[1984 ஏப்ரல் 26

இந்தியாவிற்குத் திரும்பியவர்களில் முதல் தொகுதிக்கு 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டிலிருந்து பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிலையம் இதற்கு முன்பு மத்திய அரசு மறுவாழ்வுத்துறையின் கீழ் இயங்கி வந்தது. தாயகம் திரும்புவோரின் 15 மாத காலத்தில் 250 நபர்களுக்காவது ஓட்டுநர் (கனரக வண்டியில்) பயிற்சி கொடுக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த நிலையம் மாநில அரசுக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளது. 10-4-1980 முதல் இந்நிலையம் தமிழக சாலைப் போக்குவரத்துக்கழகத்தின் மேற்பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கையில் கண்டியிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனிடம் விருப்பம் தெரிவித்துள்ளதைப் பொறுத்து இக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. விருப்பமுள்ள தகுதி வாய்ந்த குடும்பத்தலைவர் ஒவ்வொருவருக்கும் 32 வாரங்களுக்கு கனரக வண்டி மெகானிக், ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்தவுடன் மாநில போக்குவரத்து கழகங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவர். சென்னையிலுள்ள தாயகம் திரும்புவோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி மேற்படி பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் போக்குவரத்து கழகங்களுக்கு நிதிவசதி தந்து உதவும். ஒவ்வொரு தாயகம் திரும்பிய குடும்பத்திற்காக ரூ. 25,000 வீதம் நிதி கடனாகக் கொடுத்து உதவும். இந்த பயிற்சிக்குரிய 250 இடங்களை புதிதாக வரும் குடும்பத் தலைவர்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில், ஏதேனும் இடங்கள் காலியானால் ஏற்கனவே தாயகம் திரும்பியோரின் குடும்பங்களில் உள்ளவர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்படும்.

**பயிற்சித் திட்டம்:**

இது தவிர, சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணத்துடன் ஏற்கெனவே மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதற்கான மாநில தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 320 இடங்கள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெறும் நபர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 82.50 வீதம் உதவித் தொகை அளிப்பதுடன், கட்டணம் செலுத்தாமல் விடுதியில் [illegible] வசதியும் அளிக்கப்படுகிறது.

தாயகம் திரும்பிய இளைஞர்களுக்கு மீன் பிடித்தல் மற்றும் கோழிவளர்ப்பு, உதவியாளர்கள் சம்பந்தமான பயிற்சியும் அளிக்கப்படுகிறது.



1984 ஏப்ரல் 26]

இது தவிர 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இந்தியாவிற்கு வந்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை 33.521 நபர்கள் கடல் வழியாகவும், விமான மூலமாகவும் இந்தியா வந்துள்ளனர். 1,484 நபர்கள் முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். பெரும்பாலோர் அவர்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தங்கி உள்ளார்கள். மத்திய அரசின் ஆணைப்படி, நிவாரண உதவியாக 31-1-1984வரை ரூ. 4.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

[illegible] ஆவணக்காப்பக [illegible] சென்னை-600 008
136268
D ( N84
V2ıı,31 N84
N84.67.351